1285
27.08.2008

வெளியீடு: 27-3-2008 Issued: 27-3-2008

தமிழ்நாடு ... சென்னை-600 009 எழும்பூர்

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை, ஜனவரி 31, 2008—தொகுதி 41—எண் 1

Thursday the 31st January, 2008—Volume 41—No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

V2n, 31.1.08.
[illegible]
228097

[Price Rs. 3.00

## 31-1-2008

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | iii-viii |
| Governor and Council of Ministers | ix-xiii |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xv-xviii |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xix-xxix |
| **1. வினாக்கள்—விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-56 |
| **2. அரசினர் தனித் தீர்மானம்—** | |
| செம்மொழித் தமிழ் ஆய்வு மையம் சென்னையில்அமைத்திடவும், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை அம்மையத்தின் தலைவராகச் செயல்படவும் மத்திய அரசு அறிவிப்புச் செய்ததற்குப் பாராட்டு | 57-66 |
| *திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் | 58-59 |
| திரு. ஜி.கே. மணி | 59-60 |
| திரு. என். நன்மாறன் | 61 |
| திரு. தி. இராமசாமி | 62 |
| திரு. கு. செல்வம் | 62-63 |
| திருமதி டி. யசோதா | 63 |
| *மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் | 57-58,63-66 |

| | பக்கங்கள் |
|---|---|
| **3. தகவல் கோரல்—** | |
| மதுரை மாவட்டம், சித்தாலை கிராமத்தைச் சேர்ந்த செவிலியர் மர்மமான முறையில் இறந்தது | 66-80 |
| திரு. ஓ. பன்னீர்செல்வம் | 67-73 |
| திரு. சி. ஞானசேகரன் | 74-75 |
| திரு. தி. வேல்முருகன் | 75-77 |
| திரு. என். நன்மாறன் | 77-78 |
| மாண்புமிகு திரு. துரைமுருகன் | 69,78-80 |
| **4. அறிவிப்பு—** | |
| அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைக்கு உறுப்பினர்கள் தேர்வு | 80-81 |
| **5. அறிக்கைகள் அளித்தல்—** | |
| (அ) அரசு உறுதிமொழிக் குழு | 81 |
| (ஆ) மனுக்கள் குழு | 81 |
| **6. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்**—தொடர்ச்சி | 82-161 |
| *திரு. தா. உதயசூரியன் | 111-119 |
| திரு. கு. செல்வம் | 121-127 |
| *திரு. வீர. இளவரசன் | 127-132 |
| திரு. சு. குணசேகரன் | 133-138 |
| திரு. செ. சின்னச்சாமி | 138-142 |
| திரு. சி. கோவிந்தசாமி | 143-150, 154-161 |
| **7. ஆதி திராவிட மாணவர்கள் 60 சதவீத மதிப்பெண்கள் பெற்றால்தான் கல்வி உதவித் தொகை வழங்கப்படும் என்ற மத்திய அரசின் செய்தி—மாண்புமிகு முதல்வரின் விளக்கம்** | 120 |
| **8. அரசினர் தீர்மானம்—** | |
| விதி 32-ஐத் தளர்த்துதல் | 161-162 |
| **9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 162-163 |




## ஆளுநரும் அமைச்சரவையும்

**ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா**

**அமைச்சரவையின் உறுப்பினர்கள்**

**1. முதலமைச்சர்** .. **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், இலஞ்ச ஒழிப்பு, மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல், தொழில்கள், தகவல் தொழில் நுட்பவியல், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, சிறுபான்மையினர் நலன், தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு, கடவுச் சீட்டுகள் மற்றும் சிறப்பு முயற்சிகள்

**2. நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:**

நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை மற்றும் தேர்தல்கள்

**3. மின்சாரத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:**

[illegible], மரபுசாரா எரிசக்தி மேம்பாடு மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம்

4. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்

5. கூட்டுறவுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கோ.சி. மணி:

கூட்டுறவு, புள்ளியியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்

6. வேளாண்மைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

7. பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. துரைமுருகன்:

பொதுப் பணிகள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனம், செயற்திட்டப் பணிகள், சட்டம் மற்றும் நீதிமன்றங்கள்

8. உயர் கல்வித் துறை அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் தொழில்நுட்பவியல், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
228097
சென்னை-600 008
நூலகம்



9. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.என். நேரு:

போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்

10. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

11. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:

குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள்

12. வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், சிறைச்சாலைகள், எடைகள்–அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள், நிறுவனங்களைப் பதிவு செய்தல், வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு

13. சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:

சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், பத்திரப் பதிவு மற்றும் முத்திரைத் தாள் சட்டம்

D
V2"3'08
P08.41.1

14. செய்தித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு, அரசு அச்சகம், நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

15. உணவுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எ.வ. வேலு:**

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு

16. குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:**

குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு

17. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள்

18. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:**

தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, எஃகுக் கட்டுப்பாடு, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு



19. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்

20. கைத்தறித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்

21. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:**

பள்ளிக் கல்வி மற்றும் தொல் பொருளியல்

22. வணிக வரித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:**

வணிக வரிகள்

23. சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு மற்றும் இஸ்லாமிய அறக்கட்டளைகள் (வக்ஃபு)

24. வனத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:**

வனங்கள் மற்றும் சின்கோனா

25. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:**

நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்

26. சமூக நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள்

27. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:**

கால்நடை பராமரிப்பு

28. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:**

ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்

29. மீன்வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:**

மீன்வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்

30. பால் வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

31. கதர்த் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:**

கதர் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR – THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi:**

Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, Prevention of Corruption, District Revenue Officers, Home, Police, Industries, Information Technology, Prohibition and Excise, Molasses, Minorities Welfare, Tamil Official Language & Tamil Culture, Passports and Special Initiatives

2. **Minister for Finance** .. **The Hon. Prof. K. Anbazhagan:**

Finance, Planning, Legislative Assembly and Elections

3. **Minister for Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veeraswami:**

Electricity, Non-Conventional Energy Development and Personnel and Administrative Reforms

4. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru M.K. Stalin:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply

5. **Minister for Co-operation** .. **The Hon. Thiru Ko.Si. Mani:**

Co-operation, Statistics and welfare of Ex-Servicemen

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Wasteland Development

7. **Minister for Public Works and Law** .. **The Hon. Thiru Duraimurugan:**

Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Law and Courts

8. **Minister for Higher Education** .. **The Hon. Dr. K. Ponmudi:**

Higher Education including Technical Education, Electronics, Science and Technology, Mines and Minerals

9. **Minister for Transport** .. **The Hon. Thiru K.N. Nehru:**

Transport, Nationalised Transport and Motor Vehicles Act

10. **Minister for Health** .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:**

Health, Medical Education and Family Welfare

11. **Minister for Rural Industries** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:**

Rural Industries including Cottage Industries and Small Industries



12. **Minister for Revenue and Housing** .. **The Hon. Thiru I. Periasamy:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Prisons, Weights and Measures, Debt Relief including Legislation on Money Lending, Chits, Registration of Companies, Housing, Rural Housing and Housing Development

13. **Minister for Tourism and Registration** .. **The Hon. Thiru N. Suresh Rajan:**

Tourism, Tourism Development Corporation, Registration and Stamp Act

14. **Minister for Information** .. **The Hon. Thiru Parithi Ellamvazhuthi:**

Information and Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing, Government Press, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

15. **Minister for Food** .. **The Hon. Thiru E.V. Velu:**

Food, Civil Supplies, Consumer Protection and Price Control

16. **Minister for Slum Clearance and Accommodation Control** .. **The Hon. Thiru Suba. Thangavelan:**

Slum Clearance Board and Accommodation Control

17. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru K.K.S.S.R. Ramachandran:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees

| | | |
|---|---|---|
| 18. Minister for Labour | .. | **The Hon. Thiru T.M. Anbarasan:**<br>Labour, Population, Employment and Training, Steel Control, Newsprint Control, Census and Urban and Rural Employment |
| 19. Minister for Hindu Religious and Charitable Endowments | .. | **The Hon. Thiru K.R. Periakaruppan:**<br>Hindu Religious and Charitable Endowments |
| 20. Minister for Handlooms | .. | **The Hon. Thiru NKK. P. Raaja:**<br>Handlooms and Textiles |
| 21. Minister for School Education | .. | **The Hon. Thiru Thangam Thenarasu:**<br>School Education and Archaeology |
| 22. Minister for Commercial Taxes | .. | **The Hon. Thiru S.N.M. Upayathulla:**<br>Commercial Taxes |
| 23. Minister for Environment | .. | **The Hon. Thiru T.P.M. Mohideen Khan:**<br>Sports and Youth Welfare, Environment and Pollution Control and Wakfs |
| 24. Minister for Forests | .. | **The Hon. Thiru N. Selvaraj:**<br>Forests and Cinchona |



| | | |
|---|---|---|
| 25. Minister for Highways | .. | **The Hon. Thiru M.P. Saminathan:**<br>Highways and Ports |
| 26. Minister for Social Welfare | .. | **The Hon. Dr. (Tmt.) Poongothai:**<br>Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Homes |
| 27. Minister for Animal Husbandry | .. | **The Hon. Tmt. P. Geetha Jeevan:**<br>Animal Husbandry |
| 28. Minister for Adi Dravidar Welfare | .. | **The Hon. Tmt. A. Tamilarasi:**<br>Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour |
| 29. Minister for Fisheries | .. | **The Hon. Thiru K.P.P. Samy:**<br>Fisheries and Fisheries Development Corporation |
| 30. Minister for Dairy Development | .. | **The Hon. Thiru U. Mathivanan:**<br>Milk and Dairy Development |
| 31. Minister for Khadi | .. | **The Hon. Thiru K. Ramachandhiran:**<br>Khadi and Village Industries Board, Bhoodhan and Gramadhan |

# பேரவைத் தலைவர், துணைத் தலைவர் மற்றும் முக்கிய அலுவலர்கள்

## பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன்

## பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி

## செயலாளர்

திரு. மா. செல்வராஜ்

| | |
|---|---|
| திரு. வெ.சி. சுப்ரமணியன், எம்.ஏ., பி.எல். | - கூடுதல் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. கோவிந்தராசு, எம்.ஏ., பி.எட்., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. எ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி ப. சரசுவதி, எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. மு. பைரவன், எம்.காம். | - குழு அலுவலர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | - குழு அலுவலர் |



| | |
|---|---|
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., பி.ஜி.எல். | - குழு அலுவலர் |
| திரு. து. சீனிவாசன், பி.ஏ. | - குழு அலுவலர் |
| திரு. க. லட்சுமணன், பி.எஸ்சி., பி.எல். | - பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திருமதி து. இராஜேஸ்வரி, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ம. பன்னீர் செல்வம் | - தலைமை நிருபர் |
| திருமதி இரா. சந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கி. மாதவன், எம்.ஏ., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| திரு. இரா. வெங்கடகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | - தலைமை நிருபர் |
| திருமதி ஓ.வி. கல்யாணி, பி.எஸ்சி., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கே. இராமகிருஷ்ணா, பி.எஸ்சி., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி கோ. காயத்ரி, பி.எஸ்சி. | - சார்புச் செயலாளர் |
| திரு. கே. பாலசுப்ரமணியன், எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி கு. இந்துமதி, பி.எஸ்சி., எம்.எட்., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ம.ச. சந்திரமௌலி, எம்.ஏ., பி.காம்., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |

| | |
|---|---|
| செல்வி எஸ். பிலோமினா, எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. பா. அன்பழகன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி வி.வி. ரமா, எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. இரா. பழனிசாமி, பி.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. சு. சந்திரன், பி.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. பா.சி.க. சிங்காரவேலு, எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி மு. சுப்புலட்சுமி, எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |



## பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அங்கையற்கண்ணி, செல்வி ஆ. | - சங்கராபுரம் |
| 2. | அப்துல் பாசித், திரு. எச். | - வாணியம்பாடி |
| 3. | அப்பாவு, திரு. மு. | - ராதாபுரம் |
| 4. | அமரமூர்த்தி, திரு. து. | - அரியலூர் |
| 5. | அரி, திரு. கோ. | - திருத்தணி |
| 6. | அருண்மொழிதேவன், திரு. ஆ. | - சிதம்பரம் |
| 7. | அருள் அன்பரசு, திரு. | - சோளிங்கர் |
| 8. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | - திருச்செந்தூர் |
| 9. | அன்பரசன், திரு. தா.மோ. | - ஆலந்தூர் |
| 10. | அன்பழகன், திரு. எம். | - பழனி (செ.வ.) |
| 11. | அன்பழகன், திரு. கே.பி. | - பாலக்கோடு |
| 12. | அன்பழகன், பேராசிரியர் க. | - துறைமுகம் |
| 13. | அன்பில் பெரியசாமி, திரு. | - திருச்சிராப்பள்ளி—1 |
| 14. | ஆவுடையப்பன், திரு. இரா. | - அம்பாசமுத்திரம் |
| 15. | ஆறுமுகம், திரு. கி. | - செங்கல்பட்டு |
| 16. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | - அண்ணா நகர் |
| 17. | இராசசேகரன், திரு. எஸ். | - ஆலங்குடி |
| 18. | இராணி, திருமதி இரா. | - உப்பிலியாபுரம் (ஆவா.) |
| 19. | இராமகிருஷ்ணன், திரு. நா. | - கம்பம் |
| 20. | இராமசாமி, திரு. சுரி. | - திருவாடனை |

21. இராமசாமி, திரு. தி. - ஸ்ரீவில்லிபுத்தூர்
22. இராமசுவாமி, திரு. கே.பி. - ராசிபுரம்
23. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். - சாத்தூர்
24. இராமச்சந்திரன், திரு. டி. - தளி
25. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். - பள்ளிப்பட்டு
26. இராம்பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
27. இராஜா, திரு. எஸ்.ஆர். - தாம்பரம்
28. இராஜேந்திரன், திரு. ஆ. - வீரபாண்டி
29. இராஜேந்திரன், திரு. இரா. - பனமரத்துப்பட்டி
30. இராஜேந்திரன், திரு. க. - ஜெயங்கொண்டம்
31. இராஜேந்திரன், திரு. சபா. - நெல்லிக்குப்பம்
32. இராஜ்குமார், திரு. ம. - பெரம்பலூர் (செ.வ.)
33. இளமதி சுப்பிரமணியன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
34. இளவரசன், திரு. வீர. - திருமங்கலம்
35. இளவழகன், திரு. கே.எல். - ஆற்காடு
36. உதயசூரியன், திரு. தா. - சின்னசேலம்
37. உதயம் சண்முகம், திரு. - அறந்தாங்கி
38. உபயதுல்லா, திரு. சி.நா.மீ. - தஞ்சாவூர்
39. உலகநாதன், திரு. கே. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
40. எதிரொலி மணியன், திரு. கோ. - பெரணமல்லூர்
41. ஐயப்பன், திரு. கோ. - கடலூர்
42. கணபதி, திரு. ந. - வானூர் (செ.வ.)



43. கணேசன், திரு. ஆர்.டி. - தேனி
44. கண்ணப்பன், திரு. மு. - தொண்டாமுத்தூர்
45. கண்ணன், திரு. பெ. - தாரமங்கலம்
46. கண்ணன், திரு. வே. - செஞ்சி
47. கமலாம்பாள், திருமதி பெ. - காஞ்சிபுரம்
48. கருணாநிதி, கலைஞர் மு. - சேப்பாக்கம்
49. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
50. கருப்பசாமி பாண்டியன், திரு. வீ. - தென்காசி
51. கலியவரதன், திரு. வீ.ஏ.டி. - முகையூர்
52. கலீலூர் ரஹ்மான், திரு. ம.அ. - அரவக்குறிச்சி
53. கலைராஜன், திரு. வி.பி. - தியாகராய நகர்
54. காந்தி, திரு. ஆர். - இராணிப்பேட்டை
55. காமராஜ், திரு. பெ. - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
56. காயத்ரி தேவி, டாக்டர் (திருமதி) கே. - மதுராந்தகம்
57. காவேரி, திரு. வை. - எடப்பாடி
58. கிருஷ்ணமூர்த்தி, திரு. அக்ரி எஸ்.எஸ். - கலசப்பாக்கம்
59. கீதா ஜீவன், திருமதி பி. - தூத்துக்குடி
60. குணசேகரன், திரு. சு. - சிவகங்கை
61. குணசேகரன், திரு. ம. - மானாமதுரை (செ.வ.)
62. குத்தாலம் க. அன்பழகன், திரு. - குத்தாலம்
63. குமரகுரு, திரு. இரா. - திருநாவலூர்

64. குருசாமி, திரு. செ. - அந்தியூர் (செ.வ.)
65. கோபாலன், திரு. போ. - உதகமண்டலம்
66. கோபிநாத், திரு. கே. - ஓசூர்
67. கோவிந்தசாமி, திரு. சி. - திருப்பூர்
68. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)
69. சக்கரபாணி, திரு. அர. - ஒட்டன்சத்திரம்
70. சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன், திருமதி - அச்சரப்பாக்கம் (செ.வ.)
71. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்
72. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை
73. சதன் திருமலைக்குமார், டாக்டர் தி. - வாசுதேவநல்லூர் (செ.வ)
74. சந்திரகாசி, திரு. மா. - வரகூர் (செ.வ.)
75. சந்திரா, திருமதி மு. - ராஜபாளையம் (செ.வ.)
76. சாமி, திரு. ஆர். - மேலூர்
77. சாமி, திரு. கே.பி.பி. - திருவொற்றியூர்
78. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
79. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். - ஆண்டிமடம்
80. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
81. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
82. சிவானந்தம், திரு. ஆர். - ஆரணி
83. சிவாஜி, திரு. இ.ஏ.பி. - திருவள்ளூர்
84. சின்னசாமி, திரு. அ. - பேரணாம்பட்டு (செ.வ.)
85. சின்னசாமி, திரு. ஆர். - சிங்காநல்லூர்



86. சின்னச்சாமி, திரு. செ. - மருங்காபுரி
87. சின்னதுரை, திரு. கு. - தலைவாசல் (செ.வ.)
88. சின்னப்பன், திரு. போ. - விளாத்திகுளம்
89. சின்னராஜ், திரு. ஓ.கே. - மேட்டுப்பாளையம்
90. சீனிவாசன், திரு. கு. - பூங்கா நகர்
91. சுதர்சனம், திரு. டி. - பூந்தமல்லி
92. சுந்தரம், திரு. எம்.ஆர். - ஆத்தூர்
93. சுந்தரம், திரு. ந. - காரைக்குடி
94. சுந்தர், திரு. க. - உத்திரமேரூர்
95. சுப்பிரமணியம், திரு. ஓ. - பவானிசாகர்
96. சுப்புராம், திரு. ராம. - திருமயம்
97. சுப்ரமணியன், திரு. ந. - குளத்தூர் (செ.வ.)
98. சுரேஷ் ராஜன், திரு. என். - கன்னியாகுமரி
99. சூரியகுமார், திரு. என்.கே.ஆர். - நாட்ராம்பள்ளி
100. செங்குட்டுவன், திரு. டி. - கிருஷ்ணகிரி
101. செங்கோட்டையன், திரு. கே.ஏ. - கோபிசெட்டிப்பாளையம்
102. செந்தமிழன், திரு. ஞா. - சைதாப்பேட்டை
103. செந்தமிழ்ச்செல்வன், திரு. பா. - மேல்மலையனூர்
104. செந்தில் பாலாஜி, திரு. வே. - கரூர்
105. செல்வம், திரு. கு. - மங்களூர் (செ.வ.)
106. செல்வராஜ், திரு. என். - முசிறி
107. செல்வராஜ், திரு. து. - ஸ்ரீவைகுண்டம்
108. செல்வி ராமஜெயம், திருமதி - புவனகிரி

109. சேகரன், திரு. கூ.ந. .. திருவெறும்பூர்
110. சேகர், திரு. எஸ்.வி. .. மயிலாப்பூர்
111. சேகர்பாபு, திரு. பி.கே. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
112. சையது கௌஸ் பாஷா, திரு. சை. .. மதுரை மத்தி
113. சௌந்தரபாண்டியன், திரு. அ. .. லால்குடி
114. சௌந்திரபாண்டியன், திரு. அ. .. குன்னூர் (செ.வ.)
115. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
116. ஞானதாஸ், திரு. ஆர். .. சிவகாசி
117. டில்லி பாபு, திரு. ப. .. அரூர் (செ.வ.)
118. தங்கமணி, திரு. பி. .. திருச்செங்கோடு
119. தங்கம் தென்னரசு, திரு. .. அருப்புக்கோட்டை
120. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி
121. தண்டபாணி, திரு. மா. .. வேடசந்தூர்
122. தமிழரசி, திருமதி ஆ. .. சமயநல்லூர் (செ.வ.)
123. தமிழரசு, திரு. அ. .. ஓமலூர்
124. தமிழ்செல்வன், திரு. சி. .. ஏற்காடு (ஆ.வா.)
125. தம்பிதுரை, முனைவர் மு. .. பர்கூர்
126. தர்மலிங்கம், திரு. எல்.பி. .. சத்தியமங்கலம்
127. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு
128. தியோடர் ரெஜினால்டு, திரு. த. .. பத்மநாபபுரம்
129. திருநாவுக்கரசு, திரு. கே. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
130. துரைக்கண்ணு, திரு. இரா. .. பாபநாசம்



131. துரை சந்திரசேகரன், திரு. .. திருவையாறு
132. துரைசாமி, திரு. வீ.பெ. .. சங்கரி (செ.வ.)
133. துரைமுருகன், திரு. .. காட்பாடி
134. துரைராஜ், திரு. சி. .. சேடப்பட்டி
135. தேன்மொழி, திருமதி எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)
136. நன்மாறன், திரு. என். .. மதுரை கிழக்கு
137. நெடுஞ்செழியன், டாக்டர் க. .. கபிலர்மலை
138. நெடுஞ்செழியன், திரு. ரெ. .. புதுக்கோட்டை
139. நேரு, திரு. கே.என். .. திருச்சிராப்பள்ளி–2
140. பதர் சயீத், திருமதி .. திருவல்லிக்கேணி
141. பத்மாவதி, திருமதி பி. .. நன்னிலம் (செ.வ.)
142. பரஞ்ஜோதி, திரு. மு. .. ஸ்ரீரங்கம்
143. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
144. பலராமன், திரு. பி. .. பொன்னேரி (செ.வ.)
145. பழனிசாமி, திரு. ஆர்.எம். .. மொடக்குறிச்சி
146. பன்னீர்செல்வம், திரு. எம். .. சீர்காழி (செ.வ.)
147. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
148. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. பெரியகுளம்
149. பாண்டுரங்கன், திரு. கு. .. அணைக்கட்டு
150. பாபு, திரு. வி.எஸ். .. புரசைவாக்கம்
151. பாரதி மோகன், திரு. ஆர்.கே. .. திருவிடைமருதூர்
152. பாலபாரதி, செல்வி கே. .. திண்டுக்கல்
153. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை

154. பிரபாவதி, திருமதி பெ. .. தாராபுரம் (செ.வ.)
155. பிரேமா, திருமதி ஆர். .. அவினாசி (செ.வ.)
156. பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். .. கடையநல்லூர்
157. புஷ்பராஜ், திரு. செ. .. கண்டமங்கலம் (செ.வ.)
158. பூங்கோதை, டாக்டர் (திருமதி) .. ஆலங்குளம்
159. பெரியகருப்பன், திரு. கே.ஆர். .. திருப்பத்தூர்
160. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
161. பெரியசாமி, திரு. மு.க. .. பூம்புகார்
162. பெரியண்ணன், திரு. பி.என். .. பெண்ணாகரம்
163. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. கோயம்புத்தூர் கிழக்கு
164. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. .. பொள்ளாச்சி
165. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
166. பொன்னுசாமி, திரு. கே. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
167. பொன்னுதுரை, திரு. செ. .. பெருந்துறை
168. போளூர் ம. வரதன், திரு. .. செங்கம் (செ.வ.)
169. போஸ், திரு. ஏ.கே. .. திருப்பரங்குன்றம்
170. மகேந்திரன், திரு. இ. .. உசிலம்பட்டி
171. மகேந்திரன், திரு. கே. .. பெரம்பூர் (செ.வ.)
172. மகேஷ் கிருஷ்ணசாமி, திரு. த. .. திருவோணம்
173. மணி, திரு. எஸ். .. பொங்கலூர்
174. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
175. மணி, திரு. ஜி.கே. .. மேட்டூர்
176. மதிவாணன், திரு. உ. .. திருவாரூர் (செ.வ.)



177. மலரவன், திரு. தா. .. கோயம்புத்தூர் மேற்கு
178. மாணிக்கம், திரு. இரா. .. குளித்தலை
179. மாரிமுத்து, திரு. வே. .. நாகப்பட்டினம்
180. மாலைராஜா, திரு. என். .. திருநெல்வேலி
181. முருகவேல், திரு. கே. .. முதுகுளத்தூர்
182. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
183. மூர்த்தி, திரு. டி. .. திருப்போரூர் (செ.வ.)
184. மூர்த்தி, திரு. பி. .. சோழவந்தான்
185. மேகநாதன், திரு. த.அ. .. காவேரிப்பட்டினம்
186. மோகன், திரு. பெ. .. ஓட்டப்பிடாரம் (செ.வ.)
187. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை
188. யசோதா, திருமதி டி. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
189. ரங்கநாதன், திரு. ப. .. வில்லிவாக்கம்
190. ரங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை
191. ரவிக்குமார், திரு. து. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
192. ரவிச்சந்திரன், திரு. எல். .. சேலம்–I
193. ராணி வெங்கடேசன், திருமதி .. சாத்தான்குளம்
194. ராதாகிருஷ்ணன், திரு. ல. .. கோவில்பட்டி
195. ராமச்சந்திரன், திரு. கா. .. கூடலூர்
196. ராமநாதன், திரு. கே.வீ. .. பவானி
197. ராஜ கண்ணப்பன், திரு. ஆர்.எஸ். .. இளையான்குடி
198. ராஜகுமார், திரு. எஸ். .. மயிலாடுதுறை
199. ராஜசேகரன், திரு. மா. .. தொட்டியம்

| | | |
|---|---|---|
| 200. | ராஜன், திரு. அ. | - நாகர்கோவில் |
| 201. | ராஜா, திரு. என்கேகே.பி. | - ஈரோடு |
| 202. | ராஜா, திரு. தி.க. | - திருப்பத்தூர் |
| 203. | ராஜேந்திரன், திரு. க.சி.க. | - மதுரை மேற்கு |
| 204. | லட்சுமணன், திரு. ச. | - போடிநாயக்கனூர் |
| 205. | லதா, திருமதி ஜி. | - குடியாத்தம் |
| 206. | லீமா றோஸ், திருமதி ரா. | - திருவட்டாறு |
| 207. | வசந்தகுமார், திரு. எச். | - நாங்குநேரி |
| 208. | வரதராஜன், திரு. ரா. | - விருதுநகர் |
| 209. | விசுவநாதன், திரு. இரா. | - நத்தம் |
| 210. | விடியல் எஸ். சேகர், திரு. | - காங்கேயம் |
| 211. | விஜயகாந்த், திரு. | - விருத்தாசலம் |
| 212. | விஜயகுமார், திரு. கே.எஸ். | - கும்மிடிப்பூண்டி |
| 213. | விஜயகுமார், திரு. பெ.சு. | - போளூர் |
| 214. | விஷ்ணுபிரசாத், டாக்டர் எம்.கே. | - செய்யாறு |
| 215. | வீரகபிலன், திரு. எம்.வி.ஆர். | - பேராவூரணி |
| 216. | வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | - சேலம்–2 |
| 217. | வேதரத்தினம், திரு. எஸ்.கே. | - வேதாரண்யம் |
| 218. | வேலு, திரு. எ.வ. | - தண்டராம்பட்டு |
| 219. | வேலுசாமி, திரு. இல. | - தருமபுரி |
| 220. | வேலுசாமி, திரு. செ.ம. | - பல்லடம் |
| 221. | வேலுமணி, திரு. சு.ப. | - பேரூர் |
| 222. | வேல்துரை, திரு. பா. | - சேரன்மகாதேவி |



| | | |
|---|---|---|
| 223. | வேல்முருகன், திரு. தி. | - பண்ருட்டி |
| 224. | வைத்திலிங்கம், திரு. ஆர். | - ஒரத்தநாடு |
| 225. | ஜாண் ஜேக்கப், திரு. எஸ். | - கிள்ளியூர் |
| 226. | ஜாண் ஜோசப், திரு. ஞா. | - விளவங்கோடு |
| 227. | ஜெகன்மூர்த்தி, திரு. மு. | - அரக்கோணம் (செ.வ.) |
| 228. | ஜெயக்குமார், திரு. டி. | - இராயபுரம் |
| 229. | ஜெயக்குமார், முனைவர் கு. | - நாமக்கல் (செ.வ.) |
| 230. | ஜெயபால், திரு. எஸ். | - குளச்சல் |
| 231. | ஜெயராமன், திரு. எஸ்.பி. | - வந்தவாசி (செ.வ.) |
| 232. | ஜெயலலிதா, செல்வி ஜெ | - ஆண்டிப்பட்டி |
| 233. | ஸ்டாலின், திரு. மு.க. | - ஆயிரம் விளக்கு |
| 234. | ஹசன் அலி, திரு. கு. | - இராமநாதபுரம் |
| 235. | ஆஸ்கார் சி. நிக்லி, டாக்டர் | - நியமனம் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. ஜி. மாசிலாமணி - மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2039, தை 17

## 2008 ஜனவரி 31, வியாழக்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை
போற்றி யொழுகப் படும்."*

பொறுமையின் உறைவிடமாக இருப்பவரைத்தான் நிறைவான மனிதர் என்று உலகம் புகழும்.

### 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள், வினா எண் 41, மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி, மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன் ஆகிய இரண்டு பேரும் சேர்ந்து கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**41—**

**துணைக் கருவூலம்**

***31529—திரு. இல. வேலுசாமி:**

**திரு. வ. முல்லைவேந்தன்:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டியில் துணைக் கருவூலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2008 ஜனவரி 31

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், நிதி அமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டியில் துணைக் கருவூலம் அமைக்க அரசாணை நிலை எண் 406, நிதித் (க.க.3) துறை, நாள் 8-11-2005 தேதியிட்ட அந்த ஆணை அரசால் வெளியிடப்பட்டுள்ளது. இத்துணைக் கருவூலம் செயல்படுவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டியில் துணைக் கருவூலம் அமைக்க, அரசாணை பிறப்பித்து ஏறக்குறைய 1½ ஆண்டு காலத்திற்கு மேலாகிறது. அந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், அங்கே வருவாய்த் துறையோ, மற்ற துறையினரோ அரசாங்கக் கட்டடம் கொடுப்பதற்கு மறுத்த காரணத்தினாலே இன்றுவரை அந்த அலுவலகம் இயங்காமல் இருந்து வருகிறது. ஆகவே, அந்த அலுவலகம் இயங்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து இரண்டுவிதமான இடையூறுகள் இருக்கின்றன. ஒன்று, பாப்பிரெட்டிப்பட்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள முதல் தளத்தில் அந்த சார்நிலைக் கருவூலம் அமைப்பதற்கு இசைவு வழங்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கேட்கப்பட்டது. ஆனால், மாவட்ட ஆட்சியர் தனது பதிலில், வட்டாட்சியர் அலுவலகத்தில் சார்நிலைக் கருவூலம் அமைப்பதற்குப் போதிய இடவசதி இல்லை என அவர் தெரிவித்திருக்கிறார். எனவே, பாப்பிரெட்டிப்பட்டி வட்டத் தலைமையிடத்தில் சார்நிலைக் கருவூலம் அமைப்பதற்குத் தகுந்த அரசுக் கட்டடம் ஒன்று கிடைக்கும்வரை தனியார் கட்டடத்தில் சார்நிலைக் கருவூலத்தை இயக்கச்செய்ய போதிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.

சென்னை-600 009



2008 ஜனவரி 31]

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய இந்த அறிவிப்பிற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன், இருக்கையில் இல்லை.

வினா எண் 42, மாண்புமிகு உறுப்பினர் திருமதி இளமதி சுப்பிரமணியன், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**42—**

## துணை மின் நிலையம்

***20588—திருமதி இளமதி சுப்பிரமணியன்:**

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்மாப்பேட்டை ஒன்றியம், மெலட்டூரில் துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அம்மாப்பேட்டை ஒன்றியம், மெலட்டூரில் துணை மின் நிலையம் அமைக்கும் பணி தொடங்கப்படவிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திருமதி இளமதி சுப்பிரமணியன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2002-2007 ஆம் ஆண்டில் 5 ஆண்டுகாலத் திட்டப் பணியாக 735 கோடி ரூபாய் செலவில் 68 துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, அவற்றில் 39 பணிகள் நிறைவு பெற்று, மீதம் 27 பணிகள் நிலுவையில் உள்ளதாக, கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் தேதி மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் பதிலுரையில் குறிப்பிட்டிருந்தார். அதில் ஆர்.கே. நகர் தொகுதி துணை மின் நிலையமும் ஒன்று. கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் இறுதிக்குள் அந்தப்

[2008 ஜனவரி 31

பணி தொடங்கப்படும் என்று கூறியிருந்தார். இதுநாள் வரையில் அது தொடங்கப்படவில்லை என்பதை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வந்து அதை உடனடியாகத் தொடங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பேரவைத் தலைவர்வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 9-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு தினங்களுக்கு முன்னால் தங்களுடைய அறையில் மாண்புமிகு உறுப்பினர் சேகர்பாபு அவர்கள் இதுகுறித்துக் குறிப்பிட்டார்கள். உடனடியாக Member (Distribution) அவர்களிடத்திலே இந்தச் செய்தியைச் சொல்லி உடனடியாக அந்தப் பணிகளை மேற்கொள்ளும்படி கேட்டிருக்கிறேன். அவர் இந்த மாதத்திலேயே அதற்கான பணிகளைத் தொடங்குவதற்கு முயற்சி எடுப்பதாகவும், 4 மாதத்திற்குள்ளாக அந்தத் துணை மின் நிலையத்தைக் கட்டி முடிக்க இருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, அந்தத் துணை மின் நிலையம் நிச்சயமாக இந்த ஆண்டு தொடங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கூ.ந. சேகரன்.

**திரு. கூ.ந. சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்திலே இருக்கின்ற திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதி மிகப் பெரிய ஒரு தொழில் நகரம். BHEL, HIPP, துப்பாக்கித் தொழிற்சாலை போன்ற பெரிய தொழிற்சாலைகளும், நானூறுக்கும் அதிகமான சிறிய தொழிற்சாலைகளும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. நாவல்பட்டு, துவாக்குடி போன்ற பகுதிகளில் துணை மின் நிலையங்கள் இருந்தாலும்கூட அந்தப் பகுதிகளிலே இருக்கின்ற சுற்றுப்புறக் கிராமங்களில் வீடுகளுக்குத் தேவையான மின்னழுத்தம் எப்பொழுதும் குறைவாகவே இருந்து கொண்டிருக்கிறது. அதற்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு திருவெறும்பூரிலோ, அருகிலோ ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்கு அரசு முன்வந்து, அந்த மின்னழுத்தக் குறைவைத் தீர்ப்பதற்கு நிரந்தரத் தீர்வு காணுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.



2008 ஜனவரி 31]

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர் தொகுதியிலே உள்ள அந்தக் குறைபாடுகளை ஒரு கடிதம்மூலமாக எழுதித் தருவாரேயானால் உடனடியாக மின்சார வாரியம் நடவடிக்கை எடுப்பதற்கு உரிய அறிவுரைகள் வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பரஞ்ஜோதி.

**திரு. மு. பரஞ்ஜோதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீரங்கம் தொகுதி, திருவானைக்காவல் பகுதியில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு உரிய இடம் தேர்வு செய்யப்பட்டும் இன்னும் அந்த இடம் ஆர்ஜிதம் செய்யப்படுகின்ற நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் இருக்கின்றன. தற்பொழுது கம்பரசம்பேட்டை, சமயபுரம் துணை மின் நிலையங்களிலிருந்து மின் பகிர்வு அங்கே அளிக்கப்படுகிறது. எனவே, திருவானைக்காவல் பகுதியில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு உரிய நடவடிக்கையை இந்த அரசு விரைவாக எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அங்கே துணை மின் நிலையம் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டு இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அந்த இடத்தை உரியவரிடத்திலே இருந்து எவ்வளவு விலையானாலும் கொடுத்து வாங்கி துணை மின் நிலையம் அமைக்க அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கிராமப்புறங்களில் தென்னை மட்டைகள், கயிறு திரிக்கும் தொழிற்சாலை, மற்ற தொழில்களுக்குப் பயன்பட்டு வருகின்றன. அதை நம்பி பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் கிட்டத்தட்ட 18 மாவட்டங்களில் பணியாற்றுகிறார்கள். மரபுசாரா மின் சக்தி தயாரிக்க தென்னை மட்டைகள் பயன்படுத்தப்படுவதால் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழக்கக்கூடிய அபாயம் இருக்கிறது. எனவே,

எரிசக்தி தயாரிக்க அந்த தென்னை மட்டைகள் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Bio-mass மூலம் மின்சாரம் தயாரிப்பதற்காக இயற்கைத் தாவரங்களைப் பயன்படுத்துகின்ற நேரத்தில், தென்னை மட்டைகளை அதற்காகப் பயன்படுத்தக்கூடாது என்று ஏற்கெனவே அரசாங்கம் ஓர் ஆணை பிறப்பித்து இருக்கிறது. அந்த அரசாணையை மீறி எங்கேயாவது Bio-mass மூலம் மின்சாரம் தயாரிக்க தென்னை மட்டைகளைப் பயன்படுத்துவார்களேயானால் அப்படிப்பட்ட இடங்களிலே உடனடியாக அதைத் தடை செய்வதற்கு அதிகாரிகளுக்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் தொகுதிக்கு உட்பட்ட சயனகுண்டா பகுதி மக்கள் அதிகமாக விவசாயம் செய்து வருகின்ற பகுதி. அந்தப் பகுதியில் மின்சாரப் பற்றாக்குறை இருப்பதால் விவசாயம் செய்ய சிரமமாக இருப்பதால் அதைப் போக்குகின்றவிதத்தில் துணை மின் நிலையம் அமைக்க நம் அரசு முன்வருமா?

அதேபோல குடியாத்தம் தொகுதிக்குட்பட்ட வலக்காசிப் பகுதியில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு திட்டம் வந்திருக்கின்றது. ஆனால் அந்தத் திட்டம் இன்று வரையில் செயலாக்கப்படவில்லை என்பதனை அறிந்து, அதை இந்த அரசு செயல்படுத்த முன்வருமா என்பதனைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

*முற்பகல் 9-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே ஒரு துணை மின் நிலையம் வேண்டுமென்று கேட்டார்கள். எந்த இடத்திலே அந்தத் துணை மின் நிலையம் வேண்டும் என்பதையும், அதற்கான நிலம் தேர்வு செய்வதற்கு வசதியாக,



எங்கேயாவது நிலம் இருந்தால் அதையும் சுட்டிக்காட்டி ஒரு கடிதம் கொடுத்தால் அரசு நடவடிக்கை எடுக்கும். இரண்டாவதாக, துணை மின் நிலையம் தொடங்குவதற்கு எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டு நிலுவையில் இருப்பதாகச் சொன்னார்கள். அதைத் துரிதப்படுத்தி இந்த ஆண்டிலேயே அந்தத் துணை மின் நிலையத்தைத் திறப்பதற்கு அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *43*, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**43—**

## வாய்க்கால்

***12189—திரு. அர. சக்கரபாணி:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதி, அக்கரைப்பட்டியில் தொடங்கி கொத்தயம் வரை சண்முகநதியிலிருந்து புதிய வாய்க்கால் வெட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டன்சத்திரம் தொகுதிக்குட்பட்ட தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியம் மிகப் பெரிய பரப்பளவு கொண்டது. அது வறட்சியான பகுதியும்கூட. அந்தப் பகுதியில் பெரிய அணைக்கட்டுகளோ, சிறிய அணைக்கட்டுகளோ எதுவுமே இல்லை. பழனி பகுதியில் உள்ள பாலாறு, புரந்தலாறு, வரதமாநதி அணைகளிலிருந்து நிரம்பி உபரியாக வருகின்ற நீரும், பச்சையாறு, கல்லாறு, கானாறு ஆகிய

ஓடைகளிலிருந்து வருகின்ற நீரும் இணைந்து சண்முகநதியாக மாறி, தொப்பம்பட்டி ஒன்றியத்தில் 20 கிலோமீட்டர் சென்று, அலங்கியம் என்ற இடத்திலே அமராவதி ஆற்றில் கலந்து பின்பு மாயனூர் என்கிற இடத்திலே காவிரி ஆற்றில் கலக்கிறது. கடந்த டிசம்பர் மாதம் 19 ஆம் தேதி பெய்த பெருமழையின் காரணமாக சண்முகநதியிலே அதிகபட்சமாக 20,326 கன அடி நீர் சென்று உபரியாகக் கடலில் கலந்தது. மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது, அக்கரைப்பட்டியிலிருந்து கொத்தயம் பகுதி வரை வாய்க்கால் வெட்டிச் சென்றால், கொத்தயத்திலுள்ள குயில் குளம், பொருளூரில் உள்ள கருங்குளம், வடபருத்தியர் குளம் ஆகிய குளங்கள் நீர் நிறைய வாய்ப்புள்ளது. அதனால் விவசாயிகளும் பயனடைவார்கள். நிலத்தடி நீர் மட்டமும் உயரும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து அந்த வாய்க்கால் அமைக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதி குறித்த அவருடைய கோரிக்கை நியாயமானதுதான். ஆனால் அவர் கேட்பது சண்முகநதியிலேயிருந்து கால்வாய்மூலம் அக்கரைப்பட்டிக்குக் கொண்டு வந்து, அக்கரைப்பட்டியிலிருந்து ராகைப்பட்டிக்குக் கொண்டு வந்து, பிறகு நேரே கொத்தயத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்கிறார். முதலிலே மிகையாக வருகிற நீர் என்கிறார். பாலாறு, புரந்தரலாறுக்கு வருகிற தண்ணீர், இரண்டையும் ஒன்றாக இணைத்து பாலாறு அணை கட்டியிருக்கிறோம். வரட்டாறு இருக்கிறதே, வரதமாநதி, அங்கே ஓர் அணை கட்டியிருக்கிறோம். மேலும் பாலாறு, புரந்தலாறு, பச்சையாறு, கானாறு, கல்லாறு இந்த ஐந்து நதிகளும் ஒன்றாக இணைந்து சண்முகநதி என்று, பழனிக்கருகே 21 கிலோமீட்டரில் ஓடுகிறது. ஆனால் அதிலே தண்ணீர் வருவதே மிக, மிகக் குறைவு. அதிலே அதிகமான தண்ணீர் வராது. அப்படியே வந்ததாக வைத்துக்கொண்டாலும் அந்த சண்முகநதியிலிருந்து அக்கரைப்பட்டிக்குக் கொண்டு வந்து, அக்கரைப்பட்டியிலிருந்து கொத்தயத்திற்கு கொண்டு வருகிறபோது, கிட்டத்தட்ட 32 கிலோமீட்டர் ஆகிறது. இந்த 32 கிலோமீட்டரின் நிலைமை என்னவென்று கேட்டால் சண்முகநதியினுடைய நில மட்டம் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிற கொத்தயம் நில மட்டத்திற்கும் 15 அடி உயரத்திற்கு மேல் இருக்கிறது. ஆகவே தண்ணீரை அப்படியே வெட்டி, deep cutting –இலே கொண்டு வந்தாலும், அந்த கொத்தயம் பகுதிக்கு அது பயன்படாது.





ஆணையினாலேதான் இது not feasible என்று எங்களுக்கு ஓர் அறிக்கை தந்திருக்கிறார்கள். எனவே, இது சாத்தியக்கூறு இல்லை என்பதற்கு புவியியல் நிலைமை அப்படியிருக்கிறது என்பதைத் தெளிவுபடுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அக்கரைப்பட்டியிலிருந்து கொத்தயம் செல்கின்றவரை நில மட்டம் உயரமாக இருக்கிறது என்று சொன்னார்கள். மேதகு ஆளுநர் உரையில்கூட வருகின்ற காலங்களிலே, வறட்சியான பகுதிகளில், ஆறுகள், ஓடைகளிலே தடுப்பணை கட்டப்படும் என்று சொல்லியிருக்கின்றார்கள். அந்த நேரத்திலே தடுப்பணை கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

அதேபோன்று 1996 முதல் 2001 வரை நமது முதல்வர் நான்காவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற சமயத்திலே, இதே அவையில் நான் பலமுறை கொத்தயம் என்ற இடத்தில் நல்லதங்காள் ஆற்றின் குறுக்கே அணை கட்ட வேண்டுமென்று கோரிக்கை வைத்தேன். என்னுடைய கோரிக்கையை ஏற்று மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அண்ணன் துரைமுருகன் அவர்களும், அதேபோல எங்கள் மாவட்ட அமைச்சர் அண்ணன் ஐ. பெரியசாமி அவர்களும் அந்த இடத்தை நேரடியாக வந்து பார்வையிட்டு 2001ஆம் ஆண்டு அங்கே கூடியிருந்த விவசாயிகள் மத்தியிலே கொத்தயம் என்ற இடத்திலே அணை கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்துவிட்டு வந்தார்கள். வந்துவிட்டு 2001ஆம் ஆண்டு சபை கூடிய சமயத்திலே, அதே வினாவை நான் இந்த மன்றத்திலே கேட்ட சமயத்திலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொத்தயம் என்ற இடத்தில் நல்லதங்காள் ஆற்றின் குறுக்கே அணை கட்டப்படும் என்று சொன்னார்கள். அது அவைக் குறிப்பிலே இருக்கிறது. இன்றைக்கு அது உறுதிமொழிக் குழுவில்கூட இடம்பெற்றிருக்கிறது. ஆட்சி மாற்றம் 2001-ல் ஏற்பட்ட பின்பு ஐந்து ஆண்டு ஆட்சிக் காலத்திலே அந்தத் திட்டத்தைக் கிடப்பிலே போட்டுவிட்டார்கள். ஆனால் மீண்டும் நமது தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஐந்தாம் முறை முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின்பு அந்தத் திட்டத்திற்கு 7 கோடி ரூபாயிலே மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் பரிந்துரை

செய்யப்பட்டு, இப்போது அரசின் பரிசீலனையில் உள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொத்தயம் என்ற இடத்தில் நல்லதங்காள் ஆற்றின் குறுக்கே இந்த ஆண்டு அணை கட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நியாயமானதுதான். காரணம், நல்லதங்காள் அணை கட்டுவதற்கு முன்னாலேயே கடந்த கால கலைஞருடைய ஆட்சியின்போது அது நெடுக்க நான் நடந்து பார்த்தவன். அப்போது நல்லதங்காள் அணை கட்டுவதற்காக கொத்தயம் பகுதியிலே ஒரு அணை கட்டுவதை நாங்கள் தள்ளிப் போட்டிருக்கிறோம். எனவே அதுகுறித்து ஆய்வு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆய்வு நடத்திய பிறகு நிச்சயம் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு பெ. காமராஜ்.

**திரு பெ. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியிலுள்ள மாயனூர் அருகே காவிரியில் கட்டளை தடுப்பணை கட்ட அரசு பரிசீலிக்கும் என்று சென்ற நிதியாண்டில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அது தற்போது எந்த நிலைமையில் உள்ளது? மேலும் வெள்ளக் காலங்களில் கடலில் வீணாகச் சென்று கலக்கும் நீரைத் தேக்கி குடிநீர் ஆதாரத்தைப் பெருக்கும்வகையிலும், விவசாயிகள் பயன்பெறும்வகையிலும் காவிரியாற்றையும் வைகையாற்றையும் இணைக்கும் விதமாக கட்டளையிலிருந்து புதிய கால்வாய் வெட்டி வைகையாற்றில் இணைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாயனூரிலும் கட்டளையில் barrage-ஐ அகலப்படுத்தவும், அங்கிருக்கிற தண்ணீரை குண்டாறு வரையிலும் கொண்டு செல்வதும்தான் Inter State River, உள் நாட்டிலே இருக்கிற ஆறுகளை இணைக்கிற திட்டம். அந்தத் திட்டத்திற்காக அரசு தெரிவித்ததைப்போல் D.P.R. என்று சொல்வார்கள். Detailed Project Report ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கிறது. அது அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. எனவே அறிக்கையை அரசு பெற்றிருக்கிறது. அடுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, எனது கபிலர்மலை தொகுதியினுடைய வாழ்வாதாரமாக விளங்குகின்ற அரசர் காலத்திலே ஏற்படுத்தப்பட்ட அந்த ராஜகால்வாயை, re-modeling செய்துகொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ராஜகால்வாயிலே விவசாயத்திற்குத் தண்ணீர் போதவில்லை என்று அரசுக்குக் கோரிக்கை வரவில்லை. ராஜகால்வாயிலிருந்து தண்ணீரை பம்ப் போட்டு எடுத்துக்கொள்கிறார்களே, அவர்களுக்குப் போதவில்லை என்றுதான் எங்களுக்கு அறிக்கை வந்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் கொள்ளிடத்திலிருந்து குறுவாடி தலைப்பு என்ற வாய்க்கால்மூலம் டி. பழூர் ஒன்றியத்திற்கு தண்ணீர் பாய்கிறது. அந்த குறுவாடி வாய்க்கால் இரண்டு புறமும் மணலாலான கரையாக உள்ளது. அதேபோல, கொள்ளிடத்தில் மணல் மூட்டைகளை அடுக்கி தண்ணீர் தேக்கி விடப்படுகிறது. ஒவ்வொரு வருடமும் 2 இலட்சத்திலிருந்து 5 இலட்சம் ரூபாய் வரைக்கும் செலவு செய்து அந்த வாய்க்காலைச் சரி செய்து தண்ணீர் விடுகின்றார்கள். அதற்கு permanent-ஆக cement concrete போட்டு தண்ணீர் விட்டால் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் தண்ணீர் கிட்டத்தட்ட பத்தாயிரம் ஏக்கர் பாயும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அந்த cement concrete வாய்க்காலை அமைத்துக் கொடுக்கும்படி தங்கள்வாயிலாகக் கேட்டு அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

[2008 ஜனவரி 31

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கோரிக்கையை நானும் அறிவேன். எனவே, அவர் சொன்னதைப்போல அதை concrete கரைகளாக உயர்த்திக் கட்டுவதற்காக ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு நபார்டுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. விரைவில் நமக்கு அனுமதி கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம். உடனடியாக எடுத்துக்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். சுந்தரம்.

**திரு. எம்.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் கல்லாறு அணைத் திட்டம் 1971 ஆம் வருடம் 25 இலட்சம் ரூபாயில் தீட்டப்பட்டது. இப்போது கிட்டத்தட்ட 30 கோடி ரூபாய் ஆகும் என்று சொல்கிறார்கள். 63 ஆயிரம் எக்டேர் நிலத்திற்குத் தண்ணீர் பாயக்கூடியது அந்த அணைத் திட்டம். நான் எனது மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு அண்ணன் மரியாதைக்குரிய வீரபாண்டியாரிடத்திலே இதைச் சொன்னேன், பார்க்கலாம் என்று சொல்லியிருக்கின்றார்கள். அதனால் இரு அமைச்சர்களும் சேர்ந்து செய்துதரக் கேட்டுக்கொள்கிறேன். அதாவது, தலைவாசல் தொகுதியும், ஆத்தூர் தொகுதியும் சேர்ந்து பயனடையக்கூடிய வகையிலே, இந்தக் கல்லாறு அணைத் திட்டம் அமையும். அதற்காக 101 ஏக்கர் நிலம் தேவைப்படுகின்றது. அப்படிப்பட்ட இடம் வனத் துறையிடம் உள்ளது. அதற்கு வேறு ஏதர்வது மாற்று நிலம் கொடுத்தால், இடம் தருவோம் என்று அதிகாரிகள் சொல்கின்றார்கள். எனவே, எப்படியாவது, கல்லாறு அணைத் திட்டத்தை நமது ஆட்சியிலே நிறைவேற்றிக் கொடுக்கவேண்டும். ஏனென்றால், காமராஜர் காலத்திலேதான் பெரும்பாலும் அணைகள் கட்டப்பட்டன. இப்பொழுது நடைபெறுகின்ற ஆட்சியையும், நாங்கள் காமராஜர் ஆட்சி என்றுதான் நினைத்துக் கொண்டிருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதன் காரணமாக, இந்தக் கல்லாறு அணைத் திட்டத்தை எப்படியாவது என் தொகுதியிலே நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களையும், அண்ணன் வீரபாண்டியார் அவர்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 9-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.



2008 ஜனவரி 31]

**மாண்புமிகு திரு. துரைமுருகன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அணைகளைக் கட்டுவதிலே உள்ள சிரமத்தைச் சொல்லி, வனத் துறையிடத்திலே இடமிருக்கிறது; அதை வாங்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். அது லேசான காரியமல்ல. காரணம், அவர்கள் கேட்கிற அளவிற்கு, இரண்டு பங்கு நிலம் தரவேண்டும். அதுவும் அவர்கள் சொல்கிற இடத்திலே தரவேண்டும். பிறகு, அந்தப் பகுதியில் வனத் துறையிடம் எவ்வளவு மரங்கள் இருக்கின்றனவோ, அந்த மரங்களுக்குரிய பணத்தைக் கட்டவேண்டும். இதிலேயே பல ஆண்டுகள் போய்விடுகின்றன. ஆகையினால், கூடுமான வரையில் இப்போது பொதுப் பணித் துறையில், இப்படிப்பட்ட பணிகளில் நில ஆக்கிரமிப்பு, land acquisition and forest land, இரண்டும் இல்லாமல் இருப்பவற்றிற்கு முதலிடம் தருவது என்று முடிவெடுத்து செய்திருக்கிறோம். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினருடைய அந்தக் கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. குருசாமி.

**திரு. செ. குருசாமி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரையில், பருவ காலங்களில் பெய்யும் மழைநீர் வீணாவதைத் தடுத்து, வறட்சியான பகுதிகளுக்கு விடப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மேட்டூர் அணை கடந்த ஆண்டில் 4, 5 முறை நிரம்பி வழிந்து, கடலிலே நீர் வீணாகக் கலந்தது. அந்தியூர் தொகுதியைப் பொறுத்தவரையில், வறட்சியான பகுதி; ஆறு எதுவுமில்லாத ஒரு பகுதியாக இருக்கிறது. ஆகவே, மேட்டூர் அணையில் உபரியாகும் நீரை வாய்க்கால்மூலமாகக் கொண்டுவந்து சேர்த்தால், அந்தியூர், அம்மாப்பேட்டை போன்ற பகுதிகளும், அந்தியூர் தொகுதி முழுவதும் ஒரு நல்ல விளைச்சலான பகுதியாக மாறி, விவசாயத்திற்கும், குடிநீருக்கும் பயன்படும். ஆகவே, இந்தத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்பொழுதாவது ஒருமுறை மேட்டூரிலே மிகையாக வருகிற நீரை, எப்படியும் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்பதற்காக, கட்டளைக் கால்வாயிலிருந்து, குண்டாறு வரையிலே இருக்கிற வறட்சி

மாவட்டத்திற்கு எடுத்துப் போகவேண்டுமென்று ஒரு திட்டமிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் தாரமங்கலத்தில் இருப்பவர்; ஓமலூர், தாரமங்கலம், மேட்டூர் பகுதிகளில், அந்த மிகை நீரைப் பயன்படுத்தவேண்டுமென்று சொல்லியிருக்கிறார். இப்போது அந்தியூருக்கு அந்த மிகை நீரைப் பயன்படுத்தவேண்டுமென்று சொல்லியிருக்கிறார். ஒட்டுமொத்தமாக, எத்தனை தொகுதிக்கு, எவ்வளவு தண்ணீர் தேவை, எவ்வளவு மிகை நீர் வரும் என்பதை அரசு ஆய்ந்து, அதற்கேற்ற வகையில் தன் பணியைச் செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி. (குறுக்கீடு) சோழவந்தான் தொகுதி உறுப்பினர் திரு. பி. மூர்த்தி.

**திரு. பி. மூர்த்தி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுடைய நலன் கருதும் அரசு நம்முடைய அரசு. மதுரை மாவட்டத்திலே இருக்கக்கூடிய ஒரே அணை சாத்தியாறு அணை. அந்த அணைக்கு நீர்வரத்து அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், அந்த அணையினுடைய உயரத்தை உயர்த்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதனை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோளையேற்று, நானே அந்த சாத்தியாறு அணைக்குச் சென்று பார்த்தேன். அணையை உயர்த்துவது பெரிதல்ல. அணையினுடைய உயரத்தை உயர்த்தினால், கொள்ளளவு அதிகமாகும். கொள்ளளவு அதிகமானால், அதனுடைய பிற்பகுதி, water spread area submerge ஆகும். அங்கே இரண்டு கிராமங்கள் இருக்கின்றன. அவருக்கு முன்னாலேயே, 'அணையினுடைய உயரத்தை உயர்த்துங்கள்' என்று ஆயிரக்கணக்கான மக்கள் ஒருபுறம்; 'உயர்த்தாதே; உயர்த்தினால் எங்கள் கிராமமே தண்ணீருக்கு அடியில் போய்விடும்' என்று அவர்கள் எதிர்புறத்தில். இரண்டு தரப்புகளின் அந்தக் கோஷங்களுக்கிடையேயிருந்து, நானும், அவரும், விட்டால் போதும் என்று வெளியே வந்திருக்கிறோம். *(சிரிப்பு)* ஆனாலும், பின்னாலிருக்கிற அந்தக் கிராமத்து மக்களுக்கு, ஏதாவது வழிவகை செய்துவிட்டு—ஏனென்றால், வீடு இருக்கிறது; நிலம் இருக்கிறது; ஆண்டாண்டு காலமாக விளைவித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கு—மாற்று வழி



கண்டபிறகுதான், சாத்தியாறு அணையை உயர்த்துவதுபற்றி, அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். அன்பழகன்.

*முற்பகல் 9-55*

**திரு. எம். அன்பழகன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த டிசம்பர் மாதம் பெய்த மழையில், சண்முகா நதியில் கலக்கக்கூடிய பாலாற்றிலே அ.கலயம்புத்தூர் அருகிலே கட்டப்பட்டுள்ள தடுப்பணை உடைந்ததன் காரணமாக—அது குடிதண்ணீருக்காகக் கட்டப்பட்ட தடுப்பணை. அந்தப் பகுதியிலே குடிநீர்த் தேக்கம் குறைந்துவிட்டது. ஆகவே, அந்தக் குடிநீர்த் தேக்கத்தை—தடுப்பணையைச் சரிசெய்து தரவும், மேலும், இந்தக் கொத்தயம் பகுதியிலே, 2001-லே மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும், எங்கள் மாவட்ட அமைச்சரும் பார்வையிட வந்தபோது பச்சையாற்றையும் பார்வையிட்டார்கள். அந்தப் பச்சையாற்று அணையையும் கட்டித்தர இயலுமா என்ற கேள்வியைக் கேட்டு, பதிலைச் சாதகமாக எதிர்பார்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்**: பேரவைத் தலைவர் அவர்களே, திரு. சக்கரபாணி தன் தொகுதியை முடித்துக்கொண்டு அடுத்த தொகுதிக்கு விஷயதானம் செய்திருக்கிறார். பச்சையாறு அணை கட்டுவது ஆய்வில் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்திற்கு உட்பட்ட கொளத்தூர் ஒன்றியப் பகுதி, விவசாயத்தையே நம்பி வாழக்கூடிய பகுதி. அதிலும், மானாவாரி விவசாயத்தையே நம்பி வாழக்கூடிய மிக வறட்சியான பின்தங்கிய பகுதி. பயிரையே நம்பி வாழக்கூடிய பாசனத் திட்டத்திற்காக நீண்டகாலமாக இந்தப் பகுதியினுடைய தோணிமடுவு திட்டம் நிறைவேற்றிக் நிலுவையில் இருக்கிற மன்றத்திலே நானும் கேட்டேன். கொடுக்கப்படுமா என்று இந்த நிறைவேற்றப்படும் என்று அமைச்சர் அவர்களும் ஆய்வு செய்து

சொன்னார்கள். ஏற்கெனவே ஆய்வு செய்யப்பட்ட திட்டம் அது. மீண்டும் அதை ஆய்வு செய்து, விரைவிலே கட்டி முடிப்பதற்கு ஆவன செய்வீர்களா என்பதை அறிய விரும்புகிறேன். தோணிமடுவுத் திட்டம். அதை நிறைவேற்றுவீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அவர் சொன்னதைப்போல், ஆய்வு செய்து அறிக்கை வந்தால் அது ஆய்வில் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 44, மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயகாந்த், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**44—**

## பட்ட மேற்படிப்பு

***522—திரு. விஜயகாந்த்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருத்தாசலம் கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரியில் பட்ட மேற்படிப்புகள் தொடங்க அரசு துரித நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விருத்தாசலம் கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரியில் இக்கல்வியாண்டில் பட்ட மேற்படிப்புகள் தொடங்குவது தொடர்பான கருத்துரை ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயகாந்த், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டத்தில் இருக்கின்ற விருத்தாசலம், கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரிக்கு அப்பகுதியில் அடங்கியிருக்கின்ற 9 சட்டமன்றத் தொகுதிகளிலிருந்தும், பக்கத்து மாவட்டமான



விழுப்புரம் மாவட்டத்தில் உள்ளடங்கிய 3, 4 சட்டமன்றத் தொகுதிகளிலுருந்தும் நூற்றுக்கணக்கான மாணவர்கள், மாணவிகள் சென்று பயின்று வருகிறார்கள். அங்கு பட்ட மேற்படிப்பு என்று சொல்லக்கூடிய M.A., M.B.A., M.C.A., M.Sc., பொறியியல் போன்ற உயர் படிப்புகளை நம்முடைய உயர் கல்வித் துறை அமைச்சரும், தமிழக அரசும் உருவாக்கித் தந்தால் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, சிறுபான்மை மக்கள் மேல்நிலைக் கல்வியைத் தொடருவதற்கு தனியார் கல்லூரிகளை நாடிச் செல்லவேண்டியது தவிர்க்கப்படும். அந்த அடிப்படையில் அதை அமைத்துத் தருவதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புவதோடு, ஏற்கெனவே இருக்கின்ற அந்தக் கல்லூரிக்குப் போதுமான கட்டட வசதிகளும், ஆசிரியர் பெருமக்களும் துறைத் தலைவர்களும் பற்றாக்குறை இருக்கிறது. அதையும் களைவதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருத்தாசலம், கொளஞ்சியப்பர் அரசினர் கலைக் கல்லூரியில் இப்பொழுது முதுகலை (வணிகவியல்), முதுகலை (கணிதம்), முதுகலை (தமிழ்) ஆகிய மூன்று பட்ட மேற்படிப்புகள் இருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், M.Phil. பயில்வதற்காக தமிழ், Ph.D. (தமிழ்) பயில்வதற்கான வசதிகளும் அந்தக் கல்லூரியிலே இருக்கின்றன. ஆகவே, அந்தக் கல்லூரியிலேயிருந்து வேறு ஏதேனும் முதுகலைப் பட்டப் படிப்பு வேண்டுமென்று அவர்கள் கேட்டிருந்தால் அதை இந்த அரசு பரிசீலனை செய்வதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆனால், இதுவரை அந்தக் கல்லூரியிலிருந்து வரப்பெறவில்லை. தற்போது 27 அரசுக் கலைக் கல்லூரிகளிலேயிருந்து பட்ட மேற்படிப்பு வேண்டுமென்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது உயர் கல்வியில், முதலீடுகளை அரசு குறைத்துக்கொண்டு ஆரம்பக் கல்வி மற்றும் நடுநிலைக் கல்விகளில் அரசு அதிகமான முதலீடுகளைச் செய்ய வேண்டுமென்றும், உயர்

[2008 ஜனவரி 31

கல்வியிலே தனியார்கள் அதிகமாக முதலீடு செய்வதற்கு ஊக்குவிக்க வேண்டுமென்றும், தனியார்கள் செய்கின்ற உயர் கல்வியினுடைய முதலீட்டில் சமூகக் கட்டுப்பாடுகளை விதித்து, அரசு அத்தகைய உயர் கல்வி ஏழையெளிய மாணவர்களுக்குப் பயன்படத்தக்க வகையிலே அதைப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்கிற கல்விக் கொள்கை இன்று உலகளாவிய கல்விக் கொள்கையாக, இந்தியா முழுவதும் வழிகாட்டப்படுகின்ற கல்விக் கொள்கையாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, நம்முடைய மத்திய மனித வளத் துறை அமைச்சரும்கூட அதற்கான முன்னெடுப்புகளைச் செய்யவேண்டுமென்று மாநில அரசுகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அத்தகைய சூழ்நிலையிலே மேலும் மேலும் உயர் கல்வியிலே அதிகமான முதலீடுகளைச் செய்வதை தமிழக அரசு தவிர்த்து, ஆரம்பக் கல்வி மற்றும் நடுநிலைக் கல்வியிலே அதிகமான முதலீடுகளை ஊக்குவிக்கின்ற வகையிலே செயல்பட முன்வருமா என்பதையும், அவ்வாறு உயர் கல்விக்கான முதலீடு செய்ய வருகின்ற தனியார் நிறுவனங்களுக்கு மாநில அரசு தகுந்த ஒத்துழைப்பையும் ஆதரவையும் தருவதற்கு முன்வருமா என்றும் உங்கள்மூலமாகத் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

*முற்பகல் 10-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வித் துறையிலே தனியார் கல்லூரிகள் எப்படிச் செயல்படுகின்றன என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியாதது அல்ல. பல்வேறு பிரச்சினைகள், அளவுக்குமீறிய கட்டண வசூல்கள் எல்லாம் இருப்பதும் அவர்களுக்குத் தெரியாதது அல்ல. அவற்றைக் கட்டுப்படுத்த வேண்டிய கடமையும் பொறுப்பும் அரசுக்கு இருக்கிறது என்ற காரணத்தினால் ஒரு healthy competition-ஐ உருவாக்குகிறவகையிலேதான் அரசும் இதுபோன்ற கல்லூரிகளை உருவாக்கி அதன்மூலமாக இந்தப் போட்டியை வளர்க்கிறவகையிலேதான் இந்த ஆண்டுகூட பொறியியல் கல்லூரிகள் 10 அரசுத் தரப்பிலே தொடங்கப்படும் என்று குறிப்பிட்டிருக்கிறோம். ஆக, உயர் கல்வியைப் பொறுத்தவரையில் ஆராய்ச்சி, மேலும் பட்ட மேற்படிப்புகள் எல்லாம் ஏழையெளிய மாணவர்களுக்குக் கிடைப்பதற்கு அரசுக் கல்லூரிகள்தான் உதவியாக இருக்கின்றன. தனியார் கல்லூரிகளிலே பணம் அதிகமாக வாங்குகிற காரணத்தினால்



2008 ஜனவரி 31]

ஏழையெளிய மக்களுக்கு நிச்சயமாக அவை உதவாது என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் நன்கு தெரியும். ஆகவே அந்தச் சமுதாய உணர்வையும் அரசு பெற்றிருக்கிற காரணத்தால் அரசுத் தரப்பிலேயே பல கல்லூரிகளை உருவாக்குவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோளிங்கர் சட்டமன்றத் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாகும். அந்தத் தொகுதியிலே தனியார் கல்லூரிகள் பல இருந்தாலும் பல்வேறு கட்டணங்கள் அதிகப்படியாக அங்கே வசூலிக்கப்படுகின்ற காரணத்தினால் ஓர் அரசு கலைக் கல்லூரியை நீங்கள் அமைத்துக்கொடுத்தால் அங்கே இருக்கின்ற தொகுதி மக்கள் மிகவும் மகிழ்ச்சியடைவார்கள். 'இல்லை' என்று சொல்லாமல் அமைச்சர் அதற்கு 'ஆம்' என்று சொல்வார் என்று நினைக்கின்றேன். இதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இல்லை' என்று சொல்லவில்லை. படிப்படியாக அதிகத் தேவை இருக்கிற மாவட்டங்களுக்குக் கொடுத்துவிட்டு பிறகு அங்கேயும் வருவோம் என்பதை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கலைக் கல்லூரிக்கு ஐந்து ஏக்கர் நிலம் போதும் என்று இருக்கின்றது. ஆனால், தனியார் கலைக் கல்லூரிக்கு 10 ஏக்கர் நிலம் வேண்டும் என்ற நிபந்தனை இருக்கின்றது. ஆகையால் தமிழகம் எங்கும் நிலத்தின் விலையேற்றத்தைக் கணக்கில்கொண்டு தனியாருக்கும் கலைக் கல்லூரி தொடங்குவதற்கு ஐந்து ஏக்கர் நிலம் போதுமானது என்று இந்த அரசு வரைமுறை கொண்டுவருமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கல்லூரிகளுக்கான இடம்கூட மாநகராட்சி

எல்லைக்குள், நகராட்சி எல்லைக்குள், கிராமப்புற எல்லைக்குள் என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அவர்கள் சொன்ன அந்தக் கருத்தை அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன்.

**திரு. அ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லால்குடி தொகுதியைப் பொறுத்தவரையில் முழுக்க முழுக்க விவசாயத்தை நம்பி வாழ்கின்ற மக்கள் உள்ள பகுதியாகும். எனவே, லால்குடி தொகுதியில் அரசு கலைக் கல்லூரி அமைக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பக்கம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உயர் கல்விக்கு நிதியே தேவையில்லை, செலவு செய்ய வேண்டாம் என்று சொல்லுகிறார். ஒரு பக்கம் எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுமே உயர் கல்வியில் அரசு கலைக் கல்லூரிகள் ஆங்காங்கே தேவை என்றும் கேட்டுக்கொண்டிகிறார்கள். ஆகவே, நான் முன்பே சொன்னதைப்போல ஒவ்வொரு மாவட்டத்திலேயும் தனியார் கல்லூரிகளோ, அரசு கலைக் கல்லூரிகளோ இல்லாத மாவட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்து அவற்றைத் தொடங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. அந்த வரிசைப் பட்டியலிலே லால்குடி தொகுதியைப் பொறுத்தவரையில் அங்கே ஒரு விவசாயப் பல்கலைக்கழகமே இருக்கிறது. ஆக, பொறியியல் கல்லூரிகளாக இருந்தாலும், அரசு கலைக் கல்லூரிகளாக இருந்தாலும் இதுபோன்ற வசதிகள் இல்லாத மாவட்டங்களிலே படிப்படியாக உருவாக்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசினுடைய புள்ளிவிவரத்திலே விழுப்புரம் மாவட்டம், வேலூர் மாவட்டம் கல்வியிலே மிகவும் பின்தங்கியிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கின்றது. என்னுடைய வேலூர் மாவட்டம் குறிப்பாக, திருப்பத்தூர் மிக மிகப் பின்தங்கிய பகுதியாக இருக்கிறது. சுதந்திரம் பெற்று 60 ஆண்டுகாலமாகியும் இன்னும் ஒரு அரசு கல்லூரிகூடக் கிடையாது. கடந்த கூட்டத் தொடரிலே பேசும்போது 5 ஏக்கர் நிலமும்,





1 கோடி ரூபாய் நிதியும் கொடுத்தால் கல்லூரி கொடுப்பேன் என்று சொன்னார்கள். இப்போது 5 ஏக்கர் நிலம், அரசாங்கப் புறம்போக்கு இடம் பார்த்து வைக்கப்பட்டிருக்கிறது. எனவே, நிதியைத் தவிர்த்து பின்தங்கிய பகுதியாகிய எங்கள் பகுதிக்கு முன்னுரிமை அளிக்கின்ற வகையிலே இந்த ஆண்டு கலைக் கல்லூரி கட்ட நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே இந்தக் கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே எழுப்பினார்கள். அந்த மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர்கள் இரண்டுபேரும்கூட நாங்களே அந்த நிதி உதவிகள் எல்லாம் செய்கிறோம் என்று சட்டமன்றத்திலேயே சொன்னார்கள். ஆகவே சட்டமன்ற உறுப்பினர், அவர்களைச் சந்தித்து இதற்கான ஏற்பாடுகளைச் செய்வார்கள் என்று சொன்னால் இந்த அரசு அதற்கான உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ளும்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார்.

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதி, ரொம்பவும் பின்தங்கிய தொகுதி. ஒரு அரசு கல்லூரிகூட அங்கே கிடையாது. பொறியியல் கல்லூரி கிடையாது. அங்கே வாழ்கின்ற மக்கள் ரொம்பக் கஷ்டப்படுகிறார்கள், தங்கள் குழந்தைகளைப் படிக்க வைப்பதற்கு. நமது அமைச்சர் பெருமகனார், பெரிய மனது வைத்து, நாங்குநேரி தொகுதிக்கு ஒரு கல்லூரி கொடுத்தால், அங்குள்ள மக்களெல்லாம் வாழ்நாள் முழுவதும் 'வாழ்க, வாழ்க' என்று வாழ்த்துவார்கள் என்று சொல்லி, அதை நமது பேரவைத் தலைவர் அவர்கள்மூலம் நீங்கள் தெரிவித்தால், மிகவும் கடமைப்பட்ட ஒரு சட்டமன்ற உறுப்பினர் என்று அந்தத் தொகுதி மக்கள் என்னையும் பாராட்டுவார்கள்; நமது டாக்டர் கலைஞர் அவர்களையும் பாராட்டுவார்கள். அமைச்சர் அவர்கள் அதற்கு நல்ல பதிலைத் தருவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

[2008 ஜனவரி 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் கட்சியைச் சேர்ந்த கொறடா அவர்கள்தான், உயர் கல்வித் துறைக்குத் தனியாரே அதிகச் செலவு செய்ய அவர்களை ஊக்குவிக்கலாம் என்று சற்றுமுன்பு சொன்னார்கள். திரு. வசந்தகுமார் அவர்களும் ஒரு சாதாரண தனியார் அல்ல. வியாபாரத்திலேயும் சரி, வணிகத் துறையிலேயும் சரி, மிகப்பெரிய, மிகச் சிறந்த நிறுவனராக இருப்பவர். அவர் கல்வித் துறையிலேயும் இறங்கி, அவர் தொகுதியிலே, அவரே முன்வருவார் என்று சொன்னால், அரசு நிச்சயமாக அதற்கான அனைத்து ஆதரவுகளையும் தரும் என்பதை மட்டும் அவருக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. ஹசன் அலி.

**திரு. கு. ஹசன் அலி:** மாண்புமிகு நற்குணம் கொண்ட பேரவைத் தலைவர் அவர்களே, மற்றவர்களெல்லாம் தங்களுடைய தொகுதியை பின்தங்கிய தொகுதி என்று சொன்னால், என்னுடைய தொகுதி இராமநாதபுரம் மிகவும் பின்தங்கிய தொகுதிதான். இந்த நிதியாண்டில் அங்கே மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கு தமிழக அரசு, தேவையான அறிவிப்பையும், நிதியொதுக்கீட்டையும் வழங்குமா? உதவிபெறும் தனியார் கல்வி நிறுவனங்களுக்குக் கட்டடப் பராமரிப்பு, அடிப்படை வசதிகள் போன்ற செலவினங்களுக்கு, ஏற்கெனவே அரசு வழங்கி வந்து, நிறுத்தப்பட்ட 4 சதவிகித நிர்வாக மானியத்தை மீண்டும் வழங்கிட அரசு முன்வருமா? என்னுடைய தொகுதியில், நாங்கள் நடத்தும் கல்லூரிகளிலே அநேகமாக கட்டணங்களே வாங்காமல், பெரும்பான்மையோருக்கு இலவசமாகவே நாங்கள் கல்வி கொடுக்கிறோம் என்பதையும் இந்த மன்றத்திலே தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்தக் கேள்விகளுக்குத் தங்கள்வாயிலாகப் பதிலறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உதவிபெறும் கல்லூரிகளுக்குக் கொடுக்கிற மானியம் கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அவர் எதை நிறுத்திவிட்டோம்



2008 ஜனவரி 31]

என்று சொல்கிறார் என்று, எனக்குத் தெரியவில்லை. குறிப்பாக, தனியார் கல்லூரிகளுக்கு அரசு எந்தவிதத்திலும் மானியத்தையோ, மற்றவற்றையோ கொடுப்பதில்லை. ஆக, அவர் கோரியிருக்கிற அந்தக் கோரிக்கைகளிலே, உண்மையாக என்ன நிறுத்தப்பட்டிருக்கிறது என்பதை எடுத்துச் சொல்வார் என்று சொன்னால், அதற்கான ஆதாரத்தைக் கொடுப்பார் என்று சொன்னால், அரசு அதைப் பரிசீலிக்கும். ஆனால் இதிலே, மூலக் கேள்வி கேட்ட மாண்புமிகு உறுப்பினரே அந்த விருத்தாசலம் கல்லூரியை விட்டுவிட்டார். ஆனால், மற்ற தொகுதிகளிலே இருக்கிற அனைவருமே அந்தக் கல்லூரிகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழுக்கு முக்கியத்துவம் தந்து, இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. மத்திய அரசும், நம்முடைய தமிழ் மொழியைச் செம்மொழி என்று அறிவித்து, தமிழ் மையம் அமைப்பதற்காக நேற்று மத்திய அமைச்சரவை கூடி, 76.32 கோடி ரூபாயை இதற்காக ஒதுக்கீடு செய்து, 17 ஏக்கரில் தமிழ் மையம் அமைப்பதற்காக ஒப்புதல் தந்திருக்கிற மாண்புமிகு பாரதப் பிரதமர் மன்மோகன் சிங் அவர்களுக்கும், அதேபோல அருமை அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் அர்ஜுன் சிங் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தத் தமிழ் மையத்தை முழுமையாகப் பயன்படுத்துகிற வகையில், அதேபோல—classical language—தமிழினுடைய அந்தத் தொன்மையையும், இலக்கணத்தையும், தொல்காப்பியம் போன்ற இலக்கணத்தையெல்லாம் முழுமையாகப் படித்து ஆராய்ச்சி செய்வதற்கான படிப்புகளை எல்லா அரசு கலைக் கல்லூரிகளிலும் தொடங்குவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன். அங்கேயிருந்து proposal வராவிட்டாலும்கூட, அரசே முனைப்போடு செயல்பட்டு, தமிழினுடைய தொன்மையை ஆராய்வதற்கு, ஆங்காங்கே ஆராய்ச்சிப் படிப்புகளைத் தொடங்க ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர்.

[2008 ஜனவரி 31

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வியிலே கேட்டக்கப்பட்டுள்ள விருத்தாசலம் கலைக் கல்லூரியிலேகூட, தமிழ் ஆராய்ச்சிக்காக அங்கே அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, ஒரு Ph.D. தமிழிலோ, மற்ற பாடங்களிலோ ஆய்வு செய்யவேண்டுமானால், அதற்குரிய பேராசிரியர்கள் அங்கே இருக்கவேண்டும். அப்படி அந்தப் பேராசிரியர்கள் இருப்பார்களென்று சொன்னால், Ph.D. படிப்புக்கு guide செய்கிற அந்த ஆசிரியர்கள் இருப்பார்களென்று சொன்னால், அதை வழங்குவதிலே இந்த அரசுக்கு எந்தவிதமான இடையூறும் இல்லை. அதுபோன்ற கல்லூரிகளிலிருந்து முறையாக விண்ணப்பம் பெற்று, பல்கலைக்கழகங்களிலேயும் அங்கீகாரம் பெற்றால்தான், இதுபோன்ற படிப்புகளை அனுமதிக்க முடியும். அந்த அடிப்படையிலே இந்த அரசு அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறது.

*முற்பகல் 10-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 45, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. எதிரொலி மணியன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**45—**

### பேருந்து வசதி

***24074—திரு. கோ. எதிரொலி மணியன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரணமல்லூர் தொகுதி, சதுப்பேரியிலிருந்து கூடலூர், வடமாதிமங்கலம், போளூர் வழியாக பெங்களூருக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சதுப்பேரி–பெங்களூர், வழி கூடலூர், வடமாதிமங்கலம், போளூர் என்பது ஒரு அண்டை மாநில புதிய வழித்தடமாகும். தமிழ்நாடு மற்றும் கர்நாடகம் ஆகிய இரு மாநிலங்களுக்கிடையில் சமீபத்தில் ஏற்பட்ட ஒப்பந்தத்தில் இந்த வழித்தடம் சேர்க்கப்படவில்லை. இருப்பினும்



2008 ஜனவரி 31]

பொதுமக்கள் சதுப்பேரியிலிருந்து நகரப் பேருந்துமூலம் ஆரணி வந்து, ஆரணியிலிருந்து பெங்களூருக்குச் செல்ல நான்கு புறநகர் பேருந்துகள்மூலம் எட்டு நடைகள் ஏற்கெனவே இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், *4-11-2007* முதல் தடம் எண் *473*, செய்யாறு–பெங்களூர், வழி ஆரணி, வடமாதிமங்கலம், கூட்டுச்சாலை, போளூர் என கோரிக்கை வழித்தடத்திலுள்ள பகுதி மக்கள் பயன்பெறும்வகையில் தினசரி இரண்டு நடைகள் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், திருவண்ணாமலை மண்டலம்மூலமாக இயக்கப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட அந்த சதுப்பேரி என்பது, எனது தொகுதியினுடைய கடைக்கோடியில் இருக்கிற ஒரு கிராமம். இது போளூர் வட்டத்திற்கு உட்பட்ட கிராமம். இந்தக் கிராமம் மற்றும் அதைச் சுற்றியுள்ள மக்கள் போளூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கோ அல்லது திருவண்ணாமலையில் இருக்கிற மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கோ செல்ல வேண்டுமானால் மூன்று பேருந்துகள் மாறிச் செல்ல வேண்டிய நிலையுள்ளது. தற்பொழுது அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட அந்த ஊர் வழியாக இயக்கப்படும், அந்த நகரப் பேருந்து ஆறு நடைகள் மட்டுமே இயக்கப்படுகிறது. அதிலும் மக்கள் வழிய வழிய, இன்னும் சொல்லப்போனால், தொங்கிக்கொண்டு போகிறார்கள், கூரையிலும் பயணம் செய்கிறார்கள். ஆரணி பணிமனையிலேயே அதிகமாக வசூலாகின்ற நகரப் பேருந்து அதுவாகும். எனவே, அந்த மக்கள் *16* கிலோ மீட்டர் ஆரணிக்குச் சென்று, அங்கிருந்து *26* கிலோ மீட்டர் அவர்களுடைய தாலுகா அலுவலகமான போளூர் வரவேண்டும். அங்கேயிருந்து *70* கிலோமீட்டர் திருவண்ணாமலைக்குப் போகவேண்டும். ஒரு வட்டாட்சியர் அலுவலகத்திற்கு இரண்டு பேருந்துகளும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு மூன்று பேருந்துகளும் மாற வேண்டிய சூழ்நிலையுள்ளது. எனவே, அமைச்சர் அவர்கள் இதனைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு, அதே வழித்தடத்தில் வடமாதிமங்கலம் மற்றும் போளூர் வழியாக திருவண்ணாமலை செல்ல ஒரு சாதாரணப் பேருந்து, நகரப் பேருந்துகூட அல்ல, சாதாரண ஒரு வழித்தடத்தையோ அல்லது வேறு வகையிலோ இயக்குவதற்கு ஆவன செய்ய முன்வருவார்களா என்று தங்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

[2008 ஜனவரி 31

அமைச்சர் அவர்கள் கண்டிப்பாக ஆவன செய்வார்கள். ஆனால், அதிகாரிகள்தான் செய்வதில்லை. பேருக்கு ஒரு பஸ் இயக்குவார்கள். அமைச்சர் அவர்கள் ஆணையிட்ட பிறகு என் தொகுதியிலே கிட்டத்தட்ட மொத்தம் ஐந்து பேருந்துகள் இயக்கப்பட்டன. அதிலே, மூன்று பேருந்துகள் காணாமல் போய்விட்டன. பேருக்கு ஒரு நடை இயக்குவார்கள். அது ஒரு மாதம் இயங்கும். நாங்களும் பத்திரிகையிலே செய்திகளைப் போட்டு பெருமையாகச் சொல்லிக்கொள்வோம். ஒரு மாதம் பொறுத்து அந்தப் பேருந்து நின்றுவிடும். பேருக்கு ஒரு நடை இயக்கி, நிறுத்திக்கொள்வார்கள். இதை நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொாண்டுவர விரும்புகிறேன். முக்கியமாக, சேத்துப்பட்டு–ஆற்காடு, ஆரணி–மன்சராபாத் வழித்தடங்களில் ஒரு நடை மட்டும் இயக்கப்பட்டு ஒரே மாதத்திலேயே நிறுத்தப்பட்டுவிட்டன. எனவே, அதையும் மீண்டும் இயக்க ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெங்களூருக்குப் பேருந்து விட முடியுமா என்பது அவருடைய வினா. ஆனால், இப்பொழுது ஆரணி தாலுகா அலுவலகத்திற்கும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கும் ஒரு mofussil பேருந்து மற்றும் நகரப் பேருந்து இயக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். அங்கு பயணிகளுடைய அடர்வு அதிகமாக இருக்குமானால், நாளையே அவர்களுக்கு அந்தப் பேருந்து விடப்படும் என்பதை நான் இங்கு தெரிவித்துக்கொள்கிறேன். இதில் ஒன்றும் மாற்றம் இல்லை.

ஏற்கெனவே, விடப்பட்ட பேருந்துகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். நிறுத்தப்பட்டிருக்குமானால், சாலைகள் பழுதடைந்து, சரியாக இல்லாமலிருந்தால் நிறுத்தியிருப்பார்களே தவிர, நிச்சயமாக அதிகாரிகள் நிறுத்தியிருக்க வாய்ப்பில்லை. அதையும் கவனத்தில்கொண்டு இந்த அரசு செயல்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நான் நன்றிகூற



2008 ஜனவரி 31]

விரும்புகிறேன். அப்படி ஒருவேளை சாலைகள் சீரமைக்கப்பட வேண்டுமென்று சொன்னால், அதற்கான நிதியை மாண்புமிகு அமைச்சர்மூலமாக ஒதுக்கி, மீண்டும் அவற்றை இயக்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொண்டு, நன்றிகூறி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது வேறு அமைச்சரிடம் கேட்க வேண்டும், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன்.

**திரு. குத்தாலம் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டம் நன்னிலம், ஸ்ரீவாஞ்சியம், திருவிடச்சேரி, வடவேர், குடவாசல் வழியாக சென்னைக்கு அரசுப் பேருந்து இயக்கப்படுமா? நான் சொல்லக்கூடிய இந்த வழித்தடம் என்பது நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் 'நெஞ்சுக்கு நீதியிலே' குறிப்பிடுகிறபொழுது ஸ்ரீவாஞ்சியத்திலிருந்து குடவாசலுக்கு நடந்தே சென்றதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய பொற்பாதங்கள் பட்ட அந்த வழித்தடத்தில், நன்னிலமும், குடவாசலும் பயன்பெறக்கூடிய வகையில் சென்னைக்கு அரசுப் பேருந்து இயக்கப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கடந்த வாரம் அந்தக் கோரிக்கையை வைத்து, ஏற்கெனவே இரண்டு பேருந்துகள் திருவாரூரிலிருந்து சென்னைக்கு அந்த வழியாக இயங்கிக்கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் *10-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் தொகுதி, பெரும்பாலும் மலையும் மலையைச் சார்ந்த பகுதியாகவும் இருக்கிறது. மலையிலே பெரும்பாலும் ஆதிதிராவிட மக்கள் மற்றும் மலைவாழ் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் வேலை தேடி அதிகமாக நிலப்பரப்பிற்கு செல்வதற்கு பேருந்து வசதி இல்லாமல்

இருந்துகொண்டிருக்கிறது. அதிலே குறிப்பாக அவர்கள் திருப்பூருக்கு வேலைக்குச் செல்கிற காரணத்தினாலே, கேரளா எல்லையிலே அமைந்திருக்கின்ற கோபனாரியிலிருந்து திருப்பூருக்குச் செல்ல ஒரு புதிய வழித்தடம் உருவாக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சி ஏற்பட்டு இந்த 18 மாத காலத்தில் திருப்பூருக்கு பல்வேறு பகுதிகளிலிருந்து நூற்றுக்கணக்கான புதிய வழித்தடங்களை உருவாக்கித் தந்திருக்கின்றோம். இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்களுடைய பகுதியிலேயிருந்து இயக்க வேண்டுமென்று கேட்டிருக்கிற அந்தப் பேருந்து வசதி தேவைப்படுமானால் நிச்சயமாக விரைவிலேயே அவர்களுக்கு வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் என்னுடைய கோரிக்கையை ஏற்று ஒரே நாளிலே சென்னை மாநகரத்திற்கு செங்கல்பட்டிலிருந்து 10 பேருந்துகளை இயக்கினார்கள். அதற்காக முதலில் பாராட்டினைத் தெரிவித்துக்கொள்வதுடன், இப்போது கல்பாக்கத்திலிருந்து செங்கல்பட்டு, காஞ்சிபுரம் வழியாக பெங்களூருக்குச் செல்ல ஒரு பேருந்து இரவு 9 மணிக்கு இயக்கப்படுகிறது. அந்த ஒரு பேருந்து போதவில்லை. ஏராளமானவர்கள் அதிலே செல்வதாலே கூடுதலாக ஒரு பேருந்து கல்பாக்கத்திலேயிருந்து செங்கல்பட்டு வழியாக பெங்களூருக்கு இயக்க முடியுமா? அதேபோல கல்பாக்கத்திலிருந்து பாண்டிச்சேரி வழியாக திருச்சிக்கு அரசு விரைவுப் போக்குவரத்துக்கழகப் பேருந்து ஒன்றினை இயக்குவதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்பாக்கத்திலேயிருந்து பெங்களூருக்குச் செல்லவேண்டுமென்று சொன்னால், அதிலே அண்டை





மாநிலங்களோடு ஏற்படுகின்ற ஒப்பந்தத்திலே அந்த வழித்தடம் இருக்குமானால்தான் உடனடியாக இயக்க முடியும். அண்டை மாநிலங்களோடு இதுவரை இப்போது இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு தமிழ்நாடும்–கர்நாடகமும்–தமிழ்நாடு போக்குவரத்துக் கழக 315 பேருந்துகள் கர்நாடகாவிற்குச் செல்லலாம்; கர்நாடகா மாநிலத்திலிருந்து தமிழ்நாட்டிற்கு 300 பேருந்துகள் வரலாம் என்றும், தமிழ்நாடு–புதுச்சேரி இரண்டு மாநிலங்களில் ஏற்பட்ட ஒப்பந்தம் தமிழ்நாட்டிலிருந்து 165 புதிய வழித்தடங்களில் பாண்டிச்சேரிக்கும், பாண்டிச்சேரியிலிருந்து தமிழ்நாட்டிற்கு 39 வழித்தடங்களிலும், அதேபோல தமிழ்நாடு–கேரளா ஒப்பந்தப்படி, தமிழ்நாட்டிலிருந்து 39 வழித்தடங்களில் கேரளாவிற்கும், 45 வழித்தடங்களில் கேரளாவிலிருந்து தமிழ்நாட்டிற்கும், தமிழ்நாடு ஆந்திரப் பிரதேசத்திற்கு ஏற்பட்ட ஒப்பந்தப்படி தமிழ்நாட்டிலேயிருந்து ஆந்திராவிற்கு 115 வழித்தடங்களில் பேருந்துகளும், அதேபோல அண்டை மாநிலமான ஆந்திராவிலிருந்து தமிழ்நாட்டிற்கு 172 வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கலாம் என்றும் இப்போது ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. கல்பாக்கத்திலிருந்து பெங்களூருக்குச் செல்வதற்கு அந்த ஒப்பந்தத்தில் அந்த வழித்தடம் இருக்குமானால், அந்த வண்டி விடப்படும். இல்லையென்றால் வண்டி விட இயலாது. ஆனால், கல்பாக்கத்திலிருந்து இப்போது இயக்கப்படும் அநேக் பேருந்துகள் பாண்டிச்சேரி வழியாகத்தான் இயக்கப்படுகின்றன. சேத்தியாத்தோப்பு அருகிலே சாலை சரியாக இல்லாத காரணத்தினால், கும்பகோணத்திலிருந்து வருகின்ற, மாயவரத்திலிருந்து வருகின்ற, திருவாரூரிலிருந்து வருகின்ற அத்தனை பேருந்துகளும் இ.சி.ஆர். ரோடு வழியாகத்தான் இப்போது வந்துகொண்டிருக்கின்றன. அது தேவையென்று சொன்னால் அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அரசுப் போக்குவரத்தைப் போலவே வேகமாகச் செயல்படக்கூடியவர். திருப்பூருக்குக் கொடுத்த கோரிக்கைகளையெல்லாம் நிறைவேற்றிக் கொடுத்திருப்பதற்கு நன்றி. ஏற்கெனவே கேரளாவைச் சேர்ந்த மக்கள் கணிசமாக திருப்பூரிலே வேலை செய்து வருகிற காரணத்தினால் திருப்பூரிலேயிருந்து பாலக்காட்டுக்கும், திருச்சூருக்கும், குருவாயூருக்கும் சில பேருந்துகள் கேட்டிருந்தேன். அதுவும் வழங்குவதாக ஏற்றுக் கொண்டிருந்தார்கள்.

[2008 ஜனவரி 31

கேரளா அரசாங்கத்தோடு ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு அந்த வழித்தடங்களில் இயக்கப்படும் என்று தெரிவித்தார்கள். தற்போது அந்த ஒப்பந்தம் உருவாகி இருப்பதாக அறிகிறேன். ஆகவே, எப்போது அந்த வழித்தடங்களில் பேருந்து இயக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரளாவுடன் ஒப்பந்தம் முடிந்து வெகுவிரைவிலே அந்தப் பணிகள் எல்லாம் தொடங்க இருக்கின்றன. பேருந்துகள் புதியதாக இப்போது body கட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே 7 ஏ.சி. பேருந்துகள் வந்திருக்கின்றன. இன்னும் 43 ஏ.சி. பேருந்துகள் விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கு வர வேண்டியிருக்கின்றன. கோவைப் போக்குவரத்துக் கழகத்திற்கு 25 ஏ.சி. பேருந்துகள் வரவேண்டியிருக்கின்றன. அதைப்போல மதுரைக்கும் வரவேண்டியிருக்கிறது. வெகுவிரைவிலே அந்தப் புதிய வண்டிகள் வந்த பிறகு இந்தப் புதிய வழித்தடங்களிலே பேருந்துகள் இயக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம்.

*முற்பகல் 10-20*

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்கு உட்பட்ட பரங்கிப்பேட்டையிலிருந்து சென்னைக்கு பேருந்து விடப்படுமா என்பதை சென்ற கூட்டத் தொடரிலிருந்தே மாண்புமிகு அமைச்சர் அவர்களை தங்கள்வாயிலாகக் கேட்டேன். அடர்வு அதிகமாக இருந்தால் விடப்படும் என்று சொன்னார். ஆனால் இதுவரைக்கும் எந்த ஒரு நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. எங்கள் பகுதியில் வசிக்கும் முஸ்லீம் மக்கள் மற்றும் வெளிநாட்டுக்குச் செல்லும் அநேக மக்கள் தனியார் வாகனங்களில்தான் சென்னைக்குச் செல்ல வேண்டியிருப்பதால், பரங்கிப்பேட்டைக்கு அவசியம் சொகுசுப் பேருந்தாவது, வேறு பேருந்தாவது விட வேண்டும் என்று தங்கள்வாயிலாக கேட்டுக்கொண்டு அமர்கிறேன். நன்றி.



2008 ஜனவரி 31]

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் நெய்வேலியிலிருந்தும், சிதம்பரத்திலிருந்தும் புதிய பேருந்துகள் இயக்கவேண்டும் என்று கேட்டு, அந்த வேண்டுகோளின்படி சிதம்பரத்திலிருந்து சென்னைக்கு நேரடியாக இப்பொழுது 3, 4 புதிய பேருந்துகள் விடப்பட்டிருக்கின்றன. கடந்தக் கூட்டத்திலே பரங்கிப்பேட்டையிலிருந்து எங்களுக்கு வேண்டும் என்று கேட்டதாக உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அதை கவனத்தில்கொண்டு விரைவிலே அந்தப் பகுதியிலிருந்தும் பேருந்து விடுவதற்கு நிச்சயமாக இந்த அரசு முயற்சி எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். மாலைராஜா.

**திரு. என். மாலைராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலியிலிருந்து கேரளா மாநிலம் மூணாரில் அதிகமான மக்கள் தேயிலைத் தோட்டங்களில் பணிபுரிந்து வருகிறார்கள். அவர்களுக்கு வசதியாக திருநெல்வேலியிலிருந்து தேனி, போடி வழியாக மூணாருக்கு ஒரு விரைவுப் பேருந்து இயக்கப்படுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரள அரசாங்கத்தோடு இப்பொழுது நாம் ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கின்ற அளவில் 6,900 கிலோமீட்டர் நாம் அங்கே இயக்கலாம் என்ற ஒப்பந்தமும், அவர்கள் தமிழ்நாட்டிற்குள் 7,000 கிலோமீட்டர் பயணிக்கலாம் என்ற ஒப்பந்தமும் ஏற்பட்டிருக்கிறது. ஏற்கெனவே அதிகமாக கேரள மாநிலத்திற்குள் நம்முடைய பேருந்துகளை விடுவதற்கு அவர்கள் அனுமதிப்பதில்லை. ஏற்கெனவே இருக்கிற ஒப்பந்தத்தோடு சேர்த்து இப்பொழுது 33 ஆயிரம் கிலோமீட்டர்தான் நாம் அவர்களுடைய எல்லையிலே பயணிக்கவும், அவர்கள் நமது எல்லையிலே பயணிக்கவும் ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற வழித்தடத்தைப் பற்றிப் பரிசீலிக்கலாம். அது தேவை என்று கருதினால், ஏற்கெனவே இருந்த ஒப்பந்தத்தில் அது இல்லை என்றாலும்கூட, double tax கட்டியாவது மாண்புமிகு உறுப்பினர் மாலைராஜா அவர்கள் கேட்ட அந்த வழித்தடத்தில் நிச்சயமாக இயக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

[2008 ஜனவரி 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் தமிழக எல்லைக்குள்ளேயும் சரி, அல்லது அண்டை மாநிலங்களுக்குப் பேருந்து வேண்டும் என்று உறுப்பினர்கள் கேட்கிற நேரத்தில், எல்லா வழித்தடங்களிலும் பேருந்து விடுவதாக அறிவித்துக்கொண்டிருப்பது வரவேற்கக்கூடியது, பாராட்டுகிறேன். அதைப்போலவே, நாங்கள் இருக்கிற மேட்டூர் தொகுதியை ஒட்டி கர்நாடக எல்லைப் பகுதியிலே இருப்பவர்கள் எல்லாம் தமிழர்கள். அங்கே முழுமையாக தமிழர்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் திருமணப் போக்குவரத்து, உறவு முறைகள், குழந்தைகள் கல்விகூட நம்முடைய தமிழ்நாட்டுப் பகுதியிலேதான். ஆகவே, அந்தப் பகுதிக்கு, அந்தப் பகுதியிலே இருக்கிற கொள்ளேகால், மாட்டள்ளி, கூடலூர், கௌதள்ளி போன்ற பல்வேறு ஊர்களுக்கு 2, 3 வழித்தடங்களிலே பேருந்துகள் வேண்டுமென்று நீண்டகாலமாகக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அமைச்சரிடத்திலே கடிதம் கொடுத்துக்கூட கேட்டோம், சொன்னார்கள். ஆகவே, இப்பொழுது அண்டை மாநிலங்களோடு வழித்தடங்களுக்கு ஒப்பந்தங்கள் போட்டுக்கொண்டிருக்கிற இந்த வேளையில், அந்த வழித்தடங்களிலேயும் பேருந்து விடுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக மாநிலத்தோடு இப்பொழுதுதான் ஒப்பந்தம் முடிந்திருக்கிறது. எனவே மாண்புமிகு உறுப்பினர் ஏற்கெனவே கடிதம் கொடுத்திருப்பார்களேயானால், அதைப்பற்றிப் பரிசீலித்து விரைவிலே அந்த வழித்தடத்திலே வண்டி விடுவதற்கு உரிய முயற்சி எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலசப்பாக்கம் தொகுதியினுடைய தலைநகரான கலசப்பாக்கத்திலேயிருந்து சென்னைக்கும், பெங்களூருக்கும் நேரடி பஸ் விடுவதற்கு இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.



2008 ஜனவரி 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்டது கலசப்பாக்கத்திலிருந்து சென்னைக்கு என்றால், உடனடியாக முடிவு எடுத்துவிடலாம். ஆனால் கலசப்பாக்கத்திலிருந்து பெங்களூரு செல்ல வேண்டுமென்று சொன்னால், ஏற்கெனவே அந்த ஒப்பந்தத்தில் அந்த வழித்தடம் இருக்குமானால்தான் விட முடியும். இல்லையென்றால், இரண்டு மாநிலங்களிலும் வரி கட்டக்கூடிய சூழ்நிலை வரும். இரண்டு மாநிலங்களிலேயும் வரி கட்டி வண்டியை இயக்குகின்றபோது, வருகின்ற வருவாய் குறையும் என்ற காரணத்தால், அதை அந்த அரசு ஏற்பதில்லை. ஏற்கெனவே அந்த வழித்தடத்திலே அனுமதி பெற்றிருப்பாரேயானால், அதைப்பற்றி பரிசீலிக்கலாம். ஆனால் கலசப்பாக்கத்திலிருந்து சென்னைக்கு உடனே விடுவதற்கு உரிய ஏற்பாட்டை இந்த அரசு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 46, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள்.

**46—**

**தனி வாரியம்**

***25809—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விசைத்தறிக்காக தனி வாரியம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விசைத்தறிக்காக தனி வாரியம் அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

முற்பகல் 10-25

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தமிழ்நாட்டிலே விவசாயிகளுக்கு அடுத்தபடியாக

நெசவாளர்கள்தான் எண்ணிக்கையில் அதிகம். கைத்தறிக்கு எப்படி திராவிட முன்னேற்றக் கழகம் போன்ற மாநிலக் கட்சிகள் துணையாக இருக்கின்றனவோ, அதேபோல காங்கிரஸ் பேரியக்கமும் துணையாக இருக்கக் கடமைப்பட்டிருக்கிறது. அதேநேரத்திலே பரிணாம வளர்ச்சியை நாம் பார்க்காமல் இருக்கமுடியாது. இப்போது தமிழ்நாட்டிலே இருக்கின்ற கைத்தறிக்கு மேலாக ஏறக்குறைய இரண்டு மடங்குக்கு மேலாக விசைத்தறிகள் வந்துகொண்டிருக்கின்றன. சாதாரணமாக கைத்தறியை கையாளும்போதுகூட, mechanisation என்று சொல்லப்படுகிற சிறு விசைத்தறியின்மூலமாக தங்களுடைய வாழ்க்கையைத் தரம் உயர்த்திக்கொள்ள முடியும். அந்தவகையில் இப்போது ஏறக்குறைய 6 இலட்சம் விசைத்தறிகள் தமிழகத்திலே இருக்கின்றன. எப்படி ஒரு துறை, ஒரு வாரியத்தின்மூலமாக நன்மைபெறும் என்று சொன்னால், உதாரணத்திற்கு நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தலைமை தாங்குகின்ற தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தை நான் உதாரணமாகச் சொல்ல விரும்புகிறேன். அப்படி, விசைத்தறிக்கு என்று ஒரு வாரியம் அமைக்கின்றபோது, அந்த விசைத்தறி பெற வேண்டிய, விசைத்தறியைப் பயன்படுத்துகிற நெசவாளர்கள் பெறக்கூடிய நன்மைகள் ஏராளம். ஆகவே, இதை அருள்கூர்ந்து அரசு பரிசீலித்து விசைத்தறிக்கு என்று தனி வாரியம் அமைத்து தன்னுடைய நடவடிக்கைகளை விரிவுபடுத்துமா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, பட்டு கைத்தறி நெசவாளர்களுக்கு என்று ஒரு தனி வாரியம், இந்த அரசால் அமைக்கப்பட்டுள்ளது. இந்த வாரியத்தின்மூலமாக நெசவாளர்களுக்குத் தேவையான, அவர்களுக்கு இருக்கிற குறைகளை நிவர்த்தி செய்கிற நிலையை இந்த அரசு எடுத்து இருக்கிறது என்பதும், வர இருக்கிற காலங்களில் அரசுக்கு இந்தச் செயற்குறிப்பு வரின் கண்டிப்பாகப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய கைத்தறிக்கு உட்பட்ட நெசவுத் தொழில் மேம்பட வேண்டுமென்று நம்முடைய மத்திய அரசாங்கம் 25 ஆயிரம்





கோடி ரூபாயை, Technical Upgradation Fund என்ற வகையிலே தந்திருக்கிறது. அந்தப் பெருந்தொகையை, 25 ஆயிரம் கோடி ரூபாய் என்று சொல்லக்கூடிய அந்தப் பெருந்தொகையை தமிழ்நாடு அரசு பயன்படுத்தியிருக்கிறதா? அப்படிப் பயன்படுத்தியிருந்தால், மீதி இருந்தால் அதை எந்தவகையிலே பயன்படுத்த உத்தேசித்திருக்கிறது என்பதனைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறிக்கு என்று தனிப்பட்ட முறையிலே இல்லாமல், ஜவுளித் துறையின் வளர்ச்சிக்காக மத்திய அரசு 1999 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை, இந்திய அளவில்—அவர் கூறியது தவறான தகவல்—36,950 கோடி ரூபாயை இதற்காக ஒதுக்கி இருக்கிறது. அதில், நம்முடைய தமிழ்நாட்டிற்கு மட்டும், 10,388 கோடி ரூபாய், அந்த ஒட்டுமொத்தத் தொகையில் 28 சதவிகிதம் நம்முடைய மாநிலத்திலேயே பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதும், அந்தத் திட்டம் 31-3-2007 அன்றே மத்திய அரசின்மூலமாக நிறுத்தப்பட வேண்டிய திட்டம்; ஆனால், நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க நம்முடைய பாரதப் பிரதமரின் உதவியோடு 11-வது ஐந்தாண்டுத் திட்டத்திலேயும், அந்தத் திட்டம் சேர்க்கப்பட்டு இன்றும் ஜவுளித் துறைக்கு ஒரு நல்ல பாதுகாப்பாக இருக்கிறது என்பதையும் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘கைத்தறிக்குக் கை கொடுப்போம்’ என்ற புதிய திட்டத்தின் அடிப்படையிலே கல்லூரிகள் முழுவதும் கைத்தறிச் சேலைகளை அணிந்து, தமிழகம் முழுவதும் கைத்தறிக்கு, கல்லூரி மாணவிகளிடையே ஒரு மோகத்தை ஏற்படுத்தியிருக்கிற இந்த அரசு, கைத்தறியும் விசைத்தறியும் இணைந்திருக்கிற பகுதியாக் இருக்கிற சென்னிமலையில் நேரடியாக ஏற்றுமதி மையம் ஏற்படுத்த அரசிடம் திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். அதோடு, சென்னிமலையில் உற்பத்தியாகின்ற கைத்தறித் துணிகள் கரூருக்குச் சென்று அங்கே ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அதைத் தமிழக கைத்தறித் துறை, கோ-ஆப்டெக்ஸ்மூலம் நேரடியாக சென்னிமலையிலே ஒரு ஏற்றுமதி

மண்டலத்தை அமைத்து ஏற்றுமதி செய்தால் அரசுக்கும் வருமானம் கிடைக்கும், கைத்தறி நெசவாளர்களுக்கும் வாழ்வு கிடைக்கும். எனவே, அரசு பரிசீலிக்குமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு, ஜவுளி ஏற்றுமதி மண்டலங்களாக தமிழ்நாட்டிலே, காஞ்சிபுரம், நாகர்கோவில், திருவள்ளூர், திருவண்ணாமலை, விருதுநகர் மற்றும் நாகப்பட்டினம் பகுதிகளை இந்த ஆண்டு அறிவித்திருக்கிறது. அடுத்தகட்டமாக சென்னிமலைப் பகுதியிலே ஜவுளி ஏற்றுமதி மண்டலம் தேவைப்படும் நிலை இருக்கிறது என்பது உண்மை. அதற்காக நம்முடைய மாநில அரசாங்கத்திலிருந்து, மத்திய அரசுக்கு அதற்குரிய கருத்துரு அனுப்பப்பட்டு, அது செயல்வடிவம் ஆக்கப்படும் என்பதையும், இப்போதும் நெசவாளர்களால், நேரடியாகவே ஜவுளி, கோ-ஆப்டெக்ஸ்மூலமாக ஏற்றுமதி செய்யப்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதையும் இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி.

**திரு. செ.ம. வேலுசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, விசைத்தறி வாரியம் வேண்டும். விசைத்தறி அதிகமாக இருக்கக்கூடிய என்னுடைய தொகுதியில், விசைத்தறித் தொழில் மிகவும் பாதிக்கப்பட்டு, ஏற்றுமதி இல்லாத நிலையில், விசைத்தறிக்குப் போதுமான பாதுகாப்புக் கொடுக்கின்ற அளவில், மின்கட்டணச் சலுகையோ அல்லது வேறு ஏதாவது சலுகையையோ அரசு அளிக்குமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புவதோடு, விசைத்தறி கூட்டுறவுச் சங்கங்கள் தமிழகம் முழுவதும் சுமார் 120-க்கு மேல் இருக்கின்றன. அதில் அதிகமாக உள்ள கோவை மாவட்டத்தில் பல்லடம், திருப்பூர், அவிநாசி போன்ற பகுதிகளில் வேட்டி சேலைக்கான ஆர்டர்கள், அதிகமாக 60 சதவிகிதம் வரை கொடுக்கப்பட்டிருந்தது. தற்போது கடந்த இரண்டு ஆண்டுகளாக 19 சதவிகிதம், 20 சதவிகிதம் விசைத்தறிமூலம் வேட்டி, சேலைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. கூட்டுறவுச் சங்கங்களுக்கு குறைத்துக் கொடுப்பதால், அந்தத் தொழில் பாதிக்கப்பட்டிருக்கின்ற





நிலையில், வரக்கூடிய காலங்களிலாவது அதிகமாக கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுப்பார்களா என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. என்கேகே. பி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களைவிட, தலைவர் கலைஞர் அரசில், இந்த 18 மாத கால ஆட்சியில் விசைத்தறிக்குத் தேவையான அனைத்து வசதிகளும் அளிக்கப்பட்டு, பாதுகாக்கப்படுகின்றது என்பதையும் இந்த நேரத்தில் சொல்லவேண்டும். அதேபோல, விசைத்தறிக்கு உரிய இலவச வேட்டி, சேலைகள் எல்லாம் கூட்டுறவு அடிப்படையில் செயல்படுகின்ற கூட்டுறவுச் சங்கங்களால் மட்டுமே உற்பத்தி செய்து கொடுக்கப்பட்டு வருகின்றன. கடந்தகாலங்களில் ஒருசில நேரங்களில் தனியாரிடமிருந்துகூட அதை வாங்குகின்ற நிலைமை இங்கே இருந்தது. ஆனால், தலைவர் கலைஞர் அரசில் 100 சதவிகிதம், அனைத்து கூட்டுறவுச் சங்கங்கள்மூலமாக உற்பத்தி செய்யப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 47, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**47—**

## நான்கு வழிச்சாலை

***10155—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரையிலிருந்து இராமேஸ்வரம் வரை, மானாமதுரை, பரமக்குடி, இராமநாதபுரம் வழியாகச் செல்லும் தேசிய நெடுஞ்சாலையை நான்கு வழிச்சாலையாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மதுரையிலிருந்து மதுரை, மானாமதுரை, பரமக்குடி, இராமநாதபுரம் வழியாக இராமேஸ்வரம் செல்லக்கூடிய தேசிய நெடுஞ்சாலை எண் 49, சுமார் 188 கி.மீ. நீளம் கொண்டது. தற்போது இரு வழிச்சாலையாக போக்குவரத்துக்கு உகந்ததாக இருக்கின்றது.

[2008 ஜனவரி 31

இருந்தாலும், எதிர்காலத்தை மனதில் வைத்து, தேவைப்படுகின்ற சாலையாக, நான்கு வழிச்சாலையாக மாற்றுவதற்கு உரிய செயற்குறிப்பு, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின்மூலம், பகுதி திட்டம்-3 இல் தேர்வு செய்யப்பட்டு, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது. எதிர்காலத்தில் நான்கு வழிச்சாலையாக மாறுவதற்கு வாய்ப்பு உண்டு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மதுரை மாநகரம், இப்போது, வளர்ந்து வருகின்ற பெரிய நகரமாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. உறங்கா நகரமாகவும், தொழில் நகரமாகவும், கோயில் நகரமாகவும் விளங்கிக் கொண்டிருக்கின்ற மதுரையிலிருந்து மானாமதுரை, பரமக்குடி, இராமநாதபுரம் வழியாக, இராமேஸ்வரம் செல்கின்ற யாத்ரீகர்களும், பொதுமக்களும் இராமேஸ்வரம், உத்திரகோசமங்கை, சேதுக்கரை, திருப்புல்லாணி போன்ற சுற்றுலாத் தலங்களைப் பார்வையிடச் செல்கின்ற நேரத்தில் அதிகமாக போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு, அந்தப் பகுதிகளில் பல விபத்துகள் ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கின்றது. அதனால் இப்போது இருக்கின்ற தேசிய இரு வழிச்சாலையை நான்கு வழிச்சாலையாக மாற்றுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பதிலை சரியாகக் கவனிக்கவில்லை என்று நான் கருதுகின்றேன். அதை நான்கு வழிச்சாலையாக மாற்றுவதற்கு உரிய செயற்குறிப்பு மத்திய அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத்தான் தெரிவித்திருக்கிறேன். மீண்டும் ஒருமுறை தெரிவித்துக்கொள்கின்றேன். மதுரையிலிருந்து மதுரை, மானாமதுரை, பரமக்குடி, இராமநாதபுரம் வழியாக இராமேஸ்வரம் செல்லக்கூடிய தேசிய நெடுஞ்சாலை எண் 49, எதிர்காலத்தில் நான்கு வழிச்சாலையாக மாற்றுவதற்கு உரிய வாய்ப்பு உண்டு.



2008 ஜனவரி 31]

அதேநேரத்தில் இன்றைக்கு நம்முடைய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு மத்தியிலே பொறுப்பேற்றதிலிருந்து, தேசிய நெடுஞ்சாலைகளெல்லாம் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின்மூலம் நேரடிக் கட்டுப்பாட்டில் எடுக்கப்பட்டு, பல சாலைகள் நான்கு வழிச்சாலைகளாகவும், ஆறு வழிச்சாலைகளாகவும் மாற்றப்பட்டு வருகின்றன. தமிழகத்திலே தேசிய நெடுஞ்சாலையின் நீளம் ஏறத்தாழ 4,483 கி.மீ. இதிலே 3,214 கி.மீ. இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் நேரடிக் கட்டுப்பாட்டில் எடுக்கப்பட்டு, அவையெல்லாம் நான்கு வழிச்சாலைகளாக மாற்றுவதற்கு உரிய செயற்குறிப்பு பரிசீலனையில் இருக்கிறது. மேலும், ஆறு வழிச்சாலைகளாகக்கூட சில இடங்களில் மாற்றப்பட்டு வருகின்றன. அந்த அடிப்படையில் எதிர்காலத்திலே இந்த தேசிய நெடுஞ்சாலை எண் 49-ம் நான்கு வழிச்சாலையாக மாற்றப்படுவதற்கு வாய்ப்பு உண்டு என்பதை மீண்டும் மீண்டும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குணசேகரன், சொல்லுங்கள்.

முற்பகல் 10-35

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தரப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். மேலும், வடமாநிலங்களிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும், இராமேஸ்வரம் பகுதிக்கு, பிரதமர், ஜனாதிபதி, அமைச்சர்கள், கவர்னர்கள் போன்ற முக்கியப் பிரமுகர்கள் எல்லாம் வருகின்ற நேரத்தில் அங்கு போக்குவரத்து நெரிசல் ஏற்படுகின்றது. அதனால், அந்தப் பகுதியிலே காலம்தாழ்த்தாமல் வரும் நிதியாண்டிலேயே அந்த இருவழிச் சாலையை நான்கு வழிச் சாலையாக மாற்றித்தர ஆவன செய்வாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்,

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலைகளை அகலப்படுத்துகின்ற நேரத்திலும், புதிய பாலங்களை சில இடங்களில் அமைக்கின்ற நேரத்திலும், நம்முடைய அந்தத் திட்டப் பணிகளை செய்வதற்குரிய நிலம் கையகப்படுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அதே நேரத்திலே, அந்தச் சாலைகளுடைய மதிப்பு, நான்கு வழிச் சாலைகளாக மாற்றுகின்ற நேரத்திலும், அல்லது ஆறு வழிச்சாலைகளாக மாற்றுகின்ற நேரத்திலும்,

புறவழிச் சாலைகள் அமைக்கின்ற நேரத்திலும், புதிய மேம்பாலங்கள் கட்டுகின்ற நேரத்திலும், விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கவேண்டும். அதற்கு கலந்தாய்வாளர்கள் நியமிக்கப்பட்டு அந்தப் பணி மேற்கொள்ளப்படுகிறது. எனவே, அந்த அடிப்படையில்தான் மதுரையிலிருந்து இராமேஸ்வரம் வரை செல்லக்கூடிய தேசிய நெடுஞ்சாலைக்கும், தனியார் கலந்தாய்வாளர்கள் நியமிக்கப்பட்டு, அதற்குரிய மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு வருகின்றன. அவை அரசுக்குக் கிடைக்கப்பெற்றவுடன் மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யப்படும். மேலும், மாநில அரசுமூலம் அதற்கு என்ன செய்ய வேண்டுமோ அதற்குரிய முழு ஒத்துழைப்பும் நடந்து வருகிறது. எனவே, எதிர்காலத்திலே நான்கு வழிச்சாலையாக மாற்றுவதற்கு வாய்ப்பு உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலைகளை நான்கு வழிச் சாலைகளாக மாற்றுகின்றபோது, பயன்படுத்திக்கொண்டிருக்கின்ற சாலைகள் பல இடங்களிலே குண்டும் குழியுமாகப் பல ஆண்டுகளாக அவை பராமரிக்கப்படாத சூழ்நிலை இருக்கிறது. உடனுக்குடன், அந்தப் பழுது ஏற்படுகின்றபோது, பயன்படுத்துகின்ற அந்தச் சாலைகளைப் புதுப்பிப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் அந்தச் சாலைகளை, இருவழிச் சாலைகளாக இருந்து நான்கு வழிச் சாலைகளாக மாற்றுகின்றபோது அந்தச் சாலைகள் பழுதடைய வாய்ப்பு உண்டு. ஏனென்று சொன்னால், தேசிய நெடுஞ்சாலை ஆவதற்குக் காரணமே அதிலே போக்குவரத்து அதிகமாக இருப்பதால்தான் தேசிய நெடுஞ்சாலையாக வகைப்படுத்தப்படுகிறது. எனவே, கன ரக வாகனங்கள், சுமை ஏற்றிச்செல்லக்கூடிய கன ரக வாகனங்கள் செல்லக்கூடிய காரணத்தால் அடிக்கடி பழுது ஏற்படுகிறது. உதாரணத்திற்கு, தேசிய நெடுஞ்சாலை எண் 67, சேலம் முதல் கொச்சிவரை செல்லும் அந்தச் சாலை இப்போது சேலம் முதல் செங்கப்பள்ளி வரை தேசிய நெடுஞ்சாலை விரிவாக்கப்



பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த அடிப்படையில் பணிகள் நடைபெற்றுவருகின்ற நேரத்தில் பழைய சாலை பழுதடைகின்ற நேரத்தில் ஒப்பந்தப்புள்ளி எடுத்தவரே அந்தப் பணிகளைச் செய்து வருகிறார்கள். அதுவும் மாநில அரசுமூலம் உடனுக்குடன், தேசிய நெடுஞ்சாலை அலகின்மூலம் அந்தப் பகுதியினுடைய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தினுடைய அலுவலர்களுக்கு எடுத்துச் சொல்லப்பட்டு அது பராமரிக்கப்பட்டு வருகிறது. அதேபோல் செங்கப்பள்ளியில் இருந்து கொச்சி வரை மீதமிருக்கக்கூடிய சாலையை நான்கு வழிச்சாலையாக மாற்றுவதற்குரிய விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. எனவே, அதுபோன்ற நேரத்தில், நேரடியாக இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் அலுவலர்களிடத்தில், குறிப்பாக, கோவை பகுதியில் இருக்கக்கூடிய திட்ட இயக்குநர் அவர்களிடத்தில் அவையெல்லாம் அறிவுறுத்தப்பட்டு வருகின்றன. எனவே, மாநில அரசும் அதற்குரிய முயற்சியை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விசுவநாதன்.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்லிலிருந்து நத்தம், கொட்டாம்பட்டி, சிங்கம்புணரி, திருப்பத்தூர், காரைக்குடி, தேவகோட்டை வழியாக கிழக்குக் கடற்கரையை இணைக்கின்ற அந்த முக்கிய மாநில நெடுஞ்சாலையை, தேசிய நெடுஞ்சாலையாக மாற்றுவதற்கு, மாநில அரசு, மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்ய முன்வருமா என்பதையும், அதேபோல கோயம்புத்தூர் நகரிலிருந்து, தமிழகத்தினுடைய மேற்குப் பகுதியிலிருந்து கிழக்குக் கடற்கரையை இணைக்கின்ற அந்த மிக முக்கியமான சாலையில், சாலையின் ஒரு பகுதி ஏற்கெனவே கோயம்புத்தூரிலிருந்து திண்டுக்கல் வரை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றப்பட்டிருக்கிறது. அதனுடைய தொடர்ச்சியாக திண்டுக்கல்லிலிருந்து கிழக்குக் கடற்கரையை இணைக்கின்ற அந்தச் சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றுவதற்கு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்ய அரசு முன்வருமா என்பதையும் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற சாலை, திண்டுக்கல்,

[2008 ஜனவரி 31

சிங்கம்புணரி, நத்தம், காரைக்குடி, திருப்பத்தூர் என்னும் மாநில நெடுஞ்சாலையாக இப்போது செயல்பட்டு வருகிறது. எனவே, போக்குவரத்தை மனதில் வைத்து அதை தேசிய நெடுஞ்சாலையாக வகைப்படுத்துவதற்காக மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்ததில் ஒருசில சாலைகளைப் பரிந்துரை செய்து இருக்கிறோம். எனவே, அந்தச் சாலையும் அதில் இடம் பெற்றிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சந்திரகாசி.

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் வரகூர் தொகுதிக்கு உட்பட்ட மருதையான்கோயில்–திட்டக்குடி நெடுஞ்சாலையில், வயலூர் ஆற்றின் தரைப்பாலம் நீண்டநாட்களாகக் கட்டப்படாமல் உள்ளது. மேலும், இது அரியலூரையும், கடலூர் மாவட்டத்தையும் இணைக்கின்ற மிகப் பெரிய நெடுஞ்சாலை. இந்தத் தரைப் பாலத்திற்கு மேம்பாலம் கட்டுவதற்கு 2004-2005 ஆம் நிதியாண்டில் ரூபாய் 3 கோடி நிதியொதுக்கீடு செய்யப்பட்டு, டெண்டர் கோரவில்லை என்ற காரணத்திற்காக இந்தப் பாலம் நீண்ட நாட்களாகக் கட்டப்படாமல் இருக்கிறது. மேலும் மழைக் காலங்களில் இரண்டு பகுதிகளிலும் உள்ள மக்களும் ஒருவருக்கொருவர் தொடர்புகொள்ள முடியாத ஒரு சூழ்நிலையில் எங்கள் தொகுதி துண்டிக்கப்பட்டுவிடுகிறது. இந்த நிகழ்ச்சியை மழைக் காலங்களில் எங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் இரண்டு முறை நேரில் வந்து பார்வையிட்டார்.

முற்பகல் 10–40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மாத்திரம் கேளுங்கள். திரு. மா. சந்திரகாசி, கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்குத் தனிக் கவனம் செலுத்தி இந்தப் பாலத்தை உடனடியாகக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா? மேலும் இந்தச் சாலையைச் சீரமைப்பதற்கும் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.



2008 ஜனவரி 31]

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக அரசு இதற்கு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன்.

**திரு. அ. ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு தமிழகத்தில் ஏராளமான சாலைப் பணிகள் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றன. நாகர்கோவில் நகரைப் பொறுத்தவரையில் சாலைகள் மிகக் குறுகலாகவும், போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருப்பதாலும் அதிகமான விபத்துகள் ஏற்படுகின்றன. ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டம் வந்தபோது, நாகர்கோவில் நகரைச் சுற்றி ஒரு புறவழிச் சாலை அமைக்கக்கூடிய தேவையை வலியுறுத்தி, அமைக்க வேண்டும் என்று குறிப்பிட்டோம். அந்தப் பணி எந்த நிலையில் இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த பொங்கல் பண்டிகைக்குப் பிறகுதான் கன்னியாகுமரி மாவட்டம் சென்று வந்தேன். அந்தச் சலிப்புகூட இன்னும் மாறவில்லை. அதற்குள் அந்தத் திட்டப் பணி என்ன நிலைமையில் இருக்கிறது என்று கேட்டிருக்கிறார். அதற்கு நமது இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின்மூலம் பணியைச் செய்ய கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே டிசம்பர் 17 ஆம் தேதி தேசிய நெடுஞ்சாலை எண் 47-ல் குழித்துறையிலே ஒரு பாலம் திறப்பதற்காக நம்முடைய மத்திய அரசினுடைய தரைவழிப் போக்குவரத்துத் துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் திரு. டி.ஆர். பாலு அவர்கள் வந்திருந்தார்கள். அந்த நிகழ்ச்சியிலேயும் அங்கே இக்கோரிக்கை வைக்கப்பட்டது. அவரும் அதுகுறித்து நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்திருக்கிறார். மாநில அரசும் உரிய நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்.

[2008 ஜனவரி 31

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடியிலிருந்து திருநெல்வேலி செல்கிற நான்கு வழிச் சாலைப் பணிகள், மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சிக் காலத்திலே தொடங்கப்பட்டது. ஆனால், கடந்த ஒன்றரை வருடங்களாக அந்த நான்கு வழிச் சாலைப் பணிகள் நிறுத்தப்பட்டு அந்தச் சாலைகள் எல்லாம் கடுமையாகப் பழுதடைந்திருக்கின்றன. கடந்த ஒன்றரை வருடங்களாக நிறுத்தப்பட்டிருக்கிற அந்தச் சாலைப் பணிகள் எதனால் நிறுத்தப்பட்டன; எப்போது மீண்டும் தொடங்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்ற கேள்வியைக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் ஆற்காட்டிலிருந்து தூத்துக்குடி வரை 11 மாவட்டங்களை இணைக்கக்கூடிய சுமார் 742 கிலோ மீட்டர், சுமார் 2,118 கோடி ரூபாய் மதிப்பிலே அந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. அந்த அடிப்படையிலே அது கடந்த அரசு மூலம்கூட, ஓர் 5 ஆண்டு காலம் அதற்குரிய நிலம் கையகப்படுத்துகின்ற பணி, மின் கம்பங்கள் அகற்றுகின்ற பணி போன்ற பணிகள் காலதாமதம் ஆன காரணத்தினால், அந்தப் பணிகளில் சுணக்கம் ஏற்பட்டது. அது உலக வங்கித் திட்டத்தின் உதவியோடு நடைபெற்று வருகிறது. உலக வங்கி கூட, கடந்த சட்டமன்றத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்பு மார்ச் மாதத்திலே வந்து அந்தக் குழு பார்வையிட்டுச் சென்ற பிறகு அதைக் கண்டித்துக்கூட ஒரு கடிதம் எழுதி அது அரசிடம் இருக்கிறது.

அதற்குப் பிறகு ஒன்றரை ஆண்டு காலமாக உரிய முயற்சி எடுக்கப்பட்டு நிலம் கையகப்படுத்தப்பட்டு, மின் கம்பங்கள் அகற்றப்பட்டு, குடிநீர்க் குழாய்கள் அகலப்படுத்தப்பட்டு அந்தச் சாலைகளில் இப்பொழுது பணிகள் நடைபெற்று வருகின்றன. எனவே இராமநாதபுரத்திலிருந்து தூத்துக்குடி வரை, அது கடற்கரையையொட்டி கிழக்குக் கடற்கரைச் சாலை என்று சொல்லக்கூடிய அளவில் அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அந்தப் பணியை நானே நேரடியாகச் சென்று பார்த்திருக்கிறேன். இப்போது அந்தப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. அந்தச் சாலைப் பணிகளைப் பற்றித்தான் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிறார் என்று கருதுகிறேன். எனவே நாகப்பட்டினம், கட்டுமாவடி, தொண்டி, இராமேஸ்வரம், சாயல்குடி வழியாக தூத்துக்குடி செல்லக்கூடிய அந்தச் சாலைப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதுவும் நான்கு வழிச் சாலை என்று



2008 ஜனவரி 31]

குறிப்பிட்டிருக்கிறார். அது நான்கு வழிச் சாலை அல்ல, இருவழிச் சாலை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 48, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**48—**

## கால்நடை மருத்துவமனை

***33548—திரு. கு. செல்வம்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மங்களூரில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடலூர் மாவட்டம், மங்களூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த மங்களூர் கிராமத்தில் ஏற்கெனவே கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருகிறது. ஆகவே, கால்நடை மருந்தகம்மூலம் அளிக்கும் சிகிச்சைப் பணிகளே போதுமானவையாக உள்ளபடியால், கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த தற்போது அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மங்களூர் பகுதியிலே யாதவ இன மக்கள் பெருவாரியாக வசிப்பதால், அங்கு ஆடுகள் வளர்ப்புத் தொழில் செய்து வருகிறார்கள். ஏற்கெனவே, நம்முடைய அமைச்சர் தொகுதிக்கு வந்தபோது தெரிவித்தோம். திட்டக்குடி மருத்துவமனைக்குத்தான் அங்கு இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் தங்களுடைய கால்நடைகளை சிகிச்சைக்கு அழைத்து வருகிறார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள்.

[2008 ஜனவரி 31

**திரு. கு. செல்வம்:** ஏறக்குறைய ஒரு மணி நேரத்திற்கு மேல் அவர்கள் நேரத்தைச் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. அங்கே அரங்கூரிலும், தொழுதூரிலும் மருத்துவமனைகள் இருக்கின்றன. மருத்துவர்கள் இல்லை. திட்டக்குடியில் உள்ள கால்நடை மருத்துவமனையும் 1969 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. அது எப்போது விழும் என்று தெரியவில்லை. ஆகையால், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அங்கே உடனடியாக மருத்துவமனையைக் கட்டுவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டடம் கட்டுவதற்குக் கூறுகிறாரா, அல்லது மருத்துவமனை அமைக்கக் கூறுகிறாரா என்று தெரியவில்லை. திட்டக்குடி மருத்துவமனைக்கு நிரந்தரக் கட்டடம் கட்ட வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்துள்ளார்கள். அதை நான் வரும் ஆண்டில் செய்து தருவதாக உறுதி கூறியுள்ளேன். ஆகவே, இந்தக் கோரிக்கை அங்குள்ள தேவையை அறிந்து ஆய்வு செய்து அரசு உரிய முடிவை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ராணி வெங்கடேசன்.

**திருமதி ராணி வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சாத்தான்குளம் தொகுதி, ஆழ்வார்திருநகரி யூனியன், பழனியப்பபுரம் கிராமத்தில் உள்ள கால்நடை மருத்துவமனை இயங்காமல் இருக்கிறது. இதன் அருகில் கட்டாரிமங்கலம், அம்பளச்சேரி, சேர்த்தன்குளம் போன்ற 15-க்கும் மேற்பட்ட கிராமங்கள் இருக்கின்றன. இவற்றில் 10,000-க்கும் மேற்பட்ட கால்நடைகள் இருக்கின்றன. மருத்துவ உதவிக்காக பேய்க்குளம்தான் செல்லவேண்டியிருக்கிறது. ஆகையால், மீண்டும் பழனியப்பபுரத்தில் உள்ள மருத்துவமனை இயக்கப்படுமா என்பதைத் தங்களின்வாயிலாக கால்நடைத் துறை அமைச்சரைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



2008 ஜனவரி 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிற பழனியப்பபுரம் கால்நடை மருத்துவமனையில், வரும் திங்கள் முதல் புதியதாக ஒரு கால்நடை மருத்துவரை Deputation-ல் பணியமர்த்திச் செயல்படுத்த அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா ஊர்களிலும் கால்நடை மருத்துவமனை தொடங்குவதற்கு வாய்ப்பு இல்லை என அமைச்சர் அவர்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், காங்கிரஸ் கட்சியினுடைய ஆட்சிக் காலத்திலிருந்து, தமிழகத்திலே 1,400-ம் அதிகமான கால்நடை துணை நிலையங்கள் செயல்பட்டு வந்தன. ஏனென்றால், கால்நடைகளை வெகுதூரம் அழைத்துச் செல்ல முடியாது. எனவே, மருத்துவமனை இல்லாத இடங்களிலே இந்தத் துணை நிலையங்கள் விவசாயிகளுக்கும், கறவை மாடுகளை வைத்து பிழைப்பு நடத்துகின்ற ஏழைத் தாய்மார்களுக்கும் மிகவும் பயன்பாடு உள்ளதாக இருந்தன. ஆனால், கடந்த சில ஆண்டுகளாக ஏறக்குறைய 1,000 துணை நிலையங்களிலே சரியான Man power, அதற்கான பயிற்சிபெற்ற கால்நடை உதவியாளர்கள் இல்லாத காரணத்தினாலே, அந்த நிலையங்கள் எல்லாம் மூடிக்கிடப்பது அரசுக்குத் தெரியுமா? சமீப காலமாக 3,000 கால்நடை பட்டதாரிகள் படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கிறார்கள். கால்நடை பட்டதாரிகள், அந்தக் கால்நடை ஆய்வாளர்கள் சம்பளத்திற்கு நாங்கள் வேலை செய்கிறோம் என்று அரசிடம் கோரிக்கை வைத்து இருக்கிறார்களே, அவர்களை அந்த இடத்திலே பணியமர்த்த வேண்டும் என்று கடந்த 11 ஆண்டுகளாக பல்வேறு மத்திய அரசு நிறுவனங்கள், விவசாயிகள் சங்கங்கள், கால்நடை பராமரிப்புத் துறை அதிகாரிகள்கூட அரசைக் கேட்டு வருகின்றார்கள், அதேபோன்று அந்தப் பணியிடங்களில் அமர்த்தப்படாமல் இருக்கின்ற, ஏறக்குறைய 1,000 துணை நிலையங்களிலே sanctioned post-களுக்கு budgetary provision இருக்கிறது, பணம் இருக்கிறது. இருந்தாலும்கூட, ஒரு நிர்வாகச் சிக்கல் காரணமாக, அல்லது நிர்வாகத் தயக்கம் காரணமாக அந்தக் கால்நடை துணை நிலையங்களில் ஆட்களே பணியமர்த்தப்படாமல் இருக்கின்றன. அந்த நிலையங்களுக்கு, படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கின்ற

[2008 ஜனவரி 31

கால்நடை பட்டதாரிகளை, அந்தக் கால்நடை ஆய்வாளர்களுடைய ஊதியத்திலேயே பணியமர்த்த அரசு முன்வருமா என்று தங்கள்மூலம் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு ஒரு விடையை நான் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். தொடக்கத்தில் தாங்கள் பெறக்கூடிய ஊதியத்தைவிட குறைந்த ஊதியத்தில் வேலையில் எடுத்துக் கொண்டால், நாங்கள் பணியாற்றத் தயார் என்று கால்நடை பராமரிப்புத் துறை மருத்துவர்கள், அதிலே பயிற்சி பெற்றவர்கள் முன் வருவது உண்மை. ஆனால் பணியில் சேர்ந்து முதல் ஆண்டு முடிகிறபோது, அந்தப் பணியிலே உள்ள அத்தனைபேரும் சேர்ந்து எங்களுடைய ஊதியத்தை உயர்த்த வேண்டுமென்று ஒரு பெரிய போராட்டமே தொடங்கி விடுவார்கள். அந்தப் போராட்டத்தை அவர்கள் தொடங்கமாட்டார்கள் என்பதற்கு ஏதேனும் உறுதி சொல்லக்கூடிய வாய்ப்பு பீட்டர் அல்போன்ஸ் அவர்களுக்கு இருக்குமானால் அதுபற்றி ஆலோசிக்கலாம்.

*முற்பகல் 10-50*

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** அத்தகைய உறுதியினை நான் வாங்கித் தருகிறேன். அந்த உறுதியை ஏற்றுக்கொண்டு அவர்களை பணியமர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட பில்ராம்பட்டு பகுதியிலே, கிட்டத்தட்ட நூற்றுக்கணக்கான கால்நடைகள் அங்கே இறந்திருக்கின்றன. கடந்த முறை நான் சட்டமன்றத்திலே, அங்கே ஒரு கால்நடை மருத்துவமனை வேண்டுமென்று கேட்டிருந்தேன். ஆனால் இதுநாள் வரை அரசு பரிசீலிக்கவில்லை. எனவே, பில்ராம்பட்டு பகுதியிலே கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா என தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.



2008 ஜனவரி 31]

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கலியவரதன் அவர்கள் தொகுதியிலே கால்நடை மருந்தகம் வேண்டுமென்று கூறினார்கள். அன்னாருடைய கோரிக்கையை அரசு பரிசீலனை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 49, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**49—**

## மீன் பதப்படுத்தும் நிலையம்

***22509—திரு. எஸ். ஜெயபால்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதியில் ராஜாக்கமங்கலம் துறை, அழிக்கால், முட்டம், கடியப்பட்டணம், பெரியவிளை, கொட்டில்பாடு, குளச்சல், வாணியக்குடி கிராமங்களில் மீன் பதப்படுத்தும் நிலையங்கள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) குளச்சல் தொகுதியில் ராஜாக்கமங்கலம் துறை, அழிக்கால், முட்டம், கடியப்பட்டணம், பெரியவிளை, கொட்டில்பாடு, குளச்சல், வாணியக்குடி ஆகிய கிராமங்களில் பிடிக்கப்படுகின்ற மீன்கள் வெளியிடங்களுக்குக் கொண்டு சென்று விற்பனை செய்யப்படுகின்றன. குறிப்பாக, கேரள மாநிலத்திலிருந்து வியாபாரிகள் நேரில் வந்து பெரும் பகுதி மீன்களை கொள்முதல் செய்து விடுகிறார்கள். பதப்படுத்தத் தேவையான பனிக்கட்டி போன்ற பொருட்களையும் விநியோகம் செய்து விடுகிறார்கள். மேலே குறிப்பிட்ட பகுதிகளுக்கு அருகில் உள்ள தனியார் பதப்படுத்தும் நிலையங்களில் மீன்களைப் பதப்படுத்திக்கொள்ள போதுமான வசதிகளும் அந்தப் பகுதியில் உள்ளன. அவசியம் ஏற்படின் மேற்படி கிராமங்கள் உள்ளடங்கிய ஏதாவது ஒரு குறிப்பிட்ட இடத்தில் மீன் பதப்படுத்தும் நிலையம் அமைப்பது குறித்து அரசு பரிசீலிக்கும்.

[2008 ஜனவரி 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயபால்.

**திரு. எஸ். ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் எனது குளச்சல் சட்டமன்றத் தொகுதியில் மட்டும் சுமார் 75,000 மீனவர்கள் வசித்து வருகிறார்கள். குறும்பனை, வாணியக்குடி, கோடிமுனை, சைமன்காலனி, குளச்சல், கொட்டில்பாடு, மண்டைக்காடு புதூர், பெரியவிளை, சின்னவிளை, கடியப்பட்டணம், முட்டம், பிள்ளைத்தோப்பு, அழிக்கால், ராஜாக்கமங்கலம் துறை ஆகிய 14 மீனவ கிராமங்களில் சுமார் 30,000-க்கும் அதிகமான மீன்பிடித் தொழிலைச் செய்யக்கூடிய தொழிலாளர்கள் தாங்கள் பிடித்துக் கொண்டு வரக்கூடிய அந்த மீன்களைப் பதப்படுத்துவதற்கு எந்தவித வசதியும் இல்லாத ஒரு சூழ்நிலையில் சில வேளைகளில், அதிகமான மீன்கள் கிடைக்கின்ற நேரத்தில் அதிகமான மீன்கள் கிடைத்தும் அவற்றிற்குரிய போதுமான விலை கிடைக்காத நிலையில், மீனவர்களுக்குப் பெருத்த இழப்பு ஏற்படுகிறது. இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு அந்தப் பகுதி மக்களுக்கு மீன்களைப் பதப்படுத்துவதற்கு, பதப்படுத்துகின்ற நிலையங்கள் அமைக்க வேண்டுமென்று ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களிடத்திலும், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களிடத்திலும் கோரிக்கை வைக்கப்பட்டிருந்தது. எனவே, மீனவர்கள் தாங்கள் பிடிக்கக்கூடிய மீன்களுக்குப் போதுமான விலை கிடைக்கின்ற வகையிலே அவற்றைப் பதப்படுத்தி சேமித்து வைக்கக்கூடிய வகையில் மீன்கள் பதப்படுத்தும் நிலையம் அமைக்கப்பட வேண்டுமென்பது அவசியமாக இருந்து கொண்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து இந்த மக்களுக்கு, மீன் பதப்படுத்துகின்ற நிலையத்தை அமைத்துக் கொடுப்பாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் கன்னியாகுமரியில் 2 குளிர்பதன வசதிகள் கொண்ட cold storage மற்றும் பதப்படுத்தும் நிலையம் தனியாருக்குச் சொந்தமானது செயல்பட்டு வருகின்றன. கன்னியாகுமரியைச் சுற்றி 6 தனியார் பனிக்கட்டி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. குளச்சல் பகுதியில் வாணியக்குடி,



2008 ஜனவரி 31]

கொட்டில்பாடு ஆகிய கிராமங்களுக்கு அருகில் 6 தனியார் பனிக்கட்டி நிலையங்கள் செயல்படுகின்றன. முட்டம் பகுதியில் அழிக்கால், கடியப்பட்டணம் ஆகிய அடுத்தடுத்த கிராமங்களில் ஒரு தனியார் பனிக்கட்டி நிலையமும் செயல்பட்டு வருகிறது. மார்த்தாண்டம் அருகே படந்தாலுமூடு என்ற இடத்தில் தனியார் பதப்படுத்தும் நிலையம் செயல்பட்டு வருகிறது. இவை தவிர, தேங்காப்பட்டணம், குளச்சல், ராஜாக்காமங்கலம் துறை மற்றும் முட்டம் ஆகிய இடங்களில் புதிதாக மீன்பிடித் துறைமுகங்கள் அமைய உள்ளன. இவை விரைவில் சுற்றியுள்ள கிராமங்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்துவதோடு, அந்தப் பகுதியிலே இருக்கின்ற கிராமங்கள் பயன்பெறுகின்ற வகையிலே, நிச்சயமாக மீன்வளத் துறை அதிகாரிகளோடு ஆய்வு செய்து அதற்கான ஒரு நல்ல முடிவை தமிழக மீன்வளத் துறை எடுக்கும் என்பதனை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால்.

**திரு. எஸ். ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நான் நன்றி தெரிவிப்பதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அங்கே கிடைக்கின்ற மீன்கள் தமிழக அளவிலே அதிக மதிப்புடைய மீன்களாக இருந்துகொண்டிருக்கின்றன. குறிப்பாக, சீலா, கணவாய், இறால், களவாய், கேரை, சுறா போன்ற மீன்கள் எல்லாம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய நிலையில் இந்த மீன்கள் அதிகமாகக் கிடைக்கின்ற நேரத்திலே, இந்த மீன்களை தூரத்திலே இருந்துகொண்டிருக்கக்கூடிய தனியார் பதப்படுத்தக்கூடிய நிலையங்களுக்குக் கொண்டு செல்கின்றபோது அவை கெட்டுவிடுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. இந்த மீன்களை ஒழுங்காகப் பதப்படுத்தி விற்போம் என்று சொன்னால், சாதாரணமாக 200 ரூபாய்க்கு விற்கக்கூடிய மீன்களை 800 ரூபாய் வரை விற்கக்கூடிய வகையில் அவற்றை விற்பனை செய்ய முடியும். எனவே, இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு நிச்சயமாக குளச்சல் சட்டமன்றத் தொகுதியிலே குறைந்தபட்சம் 4 இடங்களிலாவது மீன் பதப்படுத்தக்கூடிய நிலையங்களை அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாக மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன். நன்றி.

[2008 ஜனவரி 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய நன்றிக்கு நன்றி. கன்னியாகுமரி மாவட்டத்தில் வருகின்ற 5-2-2008 அன்று நம்முடைய வரலாற்று முதல்வர் ஐயா கலைஞர் அவர்கள் பொறுப்பேற்று, முதன் முதலாக ஒரு மீன்பிடித் துறைமுகத்திற்கான அடிக்கல் நாட்டு விழா முதல்வர் அவர்களுடைய ஆசியோடு அந்தப் பகுதியிலே நடைபெறவிருக்கின்றது. அங்கே நான் வருகின்ற அந்த வேளையில், அந்தப் பகுதியில் ஆய்வு செய்து நிச்சயமாக உறுப்பினருடைய கோரிக்கைக்கு ஒரு நல்ல முடிவினை அங்கேயே அறிவிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதெல்லாம் பத்திரிகைகள் வாயிலாக நாம் தெரிந்துகொள்வது என்னவென்றால், மீன்பிடித் தொழிலாளர்கள் அதிகப்படியாக ஆபத்தை எதிர்கொள்கின்ற இந்த வேளையிலே, இயற்கைச் சீற்றத்தாலும், சிங்கள இராணுவத்தாலும் சுட்டுக்கொல்லப்படுகின்ற இந்த வேளையிலே, அவர்கள் உயிருக்குப் பாதுகாப்பாக தகவல் தொடர்பு சாதனங்களும், life jacket–களும் ஒவ்வொரு மீன்பிடித் தொழிலாளர்களுக்கும் அல்லது அந்தப் படகுகளுக்கும் பொருத்தப்படுமா என்பதனை தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நம்முடைய தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்படுவதை வேதனையோடு இங்கே தெரிவித்தார்கள். தமிழக வரலாற்றில் மட்டுமல்ல, உலக வரலாற்றில்கூட ஒரு நாட்டில் இருந்து மீன்பிடிக்கச் செல்பவர்கள் இன்னொரு நாட்டினரால் கைது செய்யப்படுகின்ற நேரத்தில் சமீப காலமாக நம்முடைய வரலாற்று முதல்வர் ஐயா கலைஞர் அவர்கள் எடுத்து வருகின்ற நடவடிக்கையை நம்முடைய சட்டப் பேரவை உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள். தமிழக கடற்கரை மீனவ மக்கள் நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களுக்கு நன்றியைக் காணிக்கையாக்கிக் கொண்டிருக்கின்றார்கள்.



2008 ஜனவரி 31]

*முற்பகல் 11-00*

நேற்றையதினம்கூட நம்முடைய இராமேஸ்வரம் பகுதியிலே கைது செய்யப்பட்ட, இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 12 மீனவர்களையும், 3 விசைப்படகுகளையும் விடுதலை செய்ததை இங்கே மகிழ்ச்சியோடு அறிவித்தார்கள். அதைப்போலவே 11-வது மாதம் தீபாவளிக்கு முன்பாக 17 விசைப்படகுகளையும், 97 மீனவர்களையும் இலங்கைக் கடற்படையினர்—நாகப்பட்டினம் மீனவர்களை—கைது செய்தார்கள். உடனடியாக வரலாறு காணாத அளவுக்கு அன்று இரவு முதல்வரை 10½ மணிக்கு நான் சந்தித்து, நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் ஆற்றல்மிகு ஆற்காட்டார் அவர்கள் முதல்வர் அவர்களிடத்திலே நாகை மீனவர்களுக்கு ஏற்பட்ட பிரச்சினையை எடுத்துச்சொன்னார்கள். மத்திய வெளியுறவுத் துறை இணை அமைச்சரிடத்திலே எடுத்துச் சொல்லி, உடனடியாகவே அவர்கள், இரண்டாம் தேதி கைது செய்யப்பட்டவர்கள், 4 ஆம் தேதி விடுதலை செய்யப்பட்டார்கள் என்பது ஒரு வரலாறு. (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போலவே, கடந்த ஜனவரி மாதம் பொங்கலுக்கு முன்பாகக் கைது செய்யப்பட்ட நாகை மீனவர்களையும் உடனடியாக விடுதலை செய்தது என்பது ஒரு வரலாறு.

ஆகவே, எந்தவொரு பிரச்சினையாக இருந்தாலும் மீனவ மக்களுக்கு ஒரு மிகப்பெரிய வழிகாட்டியாக ஒளி விளக்காக தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு செயல்பட்டு வருகிறது என்பதனை தெரிவிக்க விரும்புகின்றேன். (குறுக்கீடு) நான் சும்மா சொல்லவில்லை, 'கைப் புண்ணுக்குக் கண்ணாடி எதற்கு?' என்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 'செய்வதைச் சொல்கின்றோம், சொல்வதைச் செய்கின்றோம்'. மீனவ மக்களுக்கு ஒரு வழிகாட்டி முதல்வராக வரலாற்றிலே இல்லாத அளவிற்கு உதவிகளைச் செய்து வருகின்ற முதல்வர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவலைப்பட வேண்டியதில்லை. அவர்களுடைய வாழ்வில் ஒரு நம்பிக்கை ஒளியை நம்முடைய முதல்வர் ஏற்றுவார்கள் என்பதனை இந்த மாமன்றத்திற்கு எடுத்துச் சொல்லி அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 50, மாண்புமிகு உறுப்பினர் திரு. த. தியோடர் ரெஜினால்டு, மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள்.

**50—**

## மண்பாண்டத் தொழிற்கூடம்

***33958—திரு. த. தியோடர் ரெஜினால்டு:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்மநாபபுரம் தொகுதி, சுங்கான்கடையில் மண்பாண்டத் தொழிற்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சுங்கான்கடையில் மண்பாண்டத் தொழிற்கூடம் அமைத்துத் தரும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. த. தியோடர் ரெஜினால்டு.

**•திரு. த. தியோடர் ரெஜினால்டு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் என்னுடைய பத்மநாபபுரம் சட்டமன்றத் தொகுதியில் சுங்கான்கடை, முட்டைக்காடு போன்ற பகுதிகளில் மண்பாண்டத் தொழில் செய்கின்ற சுமார் ஆயிரம் குடும்பங்கள் வசித்து வருகின்றன. எங்களுடைய மாவட்டம் தாய்த் தமிழகத்தோடு இணைந்த காலக்கட்டத்திலேயே பல்வேறு பகுதிகளிலிருந்து அவர்கள் குடிபெயர்ந்து வந்து அந்தப் பகுதியில் கலைநயத்தோடு தரமான மண்பாண்டங்களைத் தயார் செய்து அண்டை மாநிலங்களுக்கு அவர்கள் அனுப்பி வந்தார்கள். மாறி வருகிற காலச்சூழலில் அதனுடைய மிகப் பிரதான மூலப் பொருளாகிய களிமண் எடுப்பதற்கான வாய்ப்புக்கள் இப்போது குறைந்து வருகிற சூழலில், அரசு பல்வேறு கட்டுப்பாடுகளை விதிக்கின்ற சூழலில், அந்தத் தொழிலானது இப்போது நலிவடைந்து, தொழிலாளர்கள் அந்தத் தொழில் இல்லாத ஒரு சூழலில் மிகவும் வறுமையில் வாடிக்



கொண்டிருக்கின்றார்கள். ஆக, இந்த வாரம் அவர்கள், மாவட்டத்தினுடைய மண்பாண்டத் தொழிலாளர்கள் மாநாட்டுக் கூட்டத்தைக் கூட்டி பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். இந்தச் சூழலில், அந்த ஏழை மக்களைக் காப்பாற்றுவதற்கு அரசு கனிவோடு ஒரு மண்பாண்டத் தொழிற்கூடம் அமைப்பதற்கு மறுபரிசீலனை செய்யுமா என்பதைத் தாங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கிராமத் தொழில் வாரியத்தின்கீழ் மொத்தம் 27 மண்பாண்டக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் கன்னியாகுமரி மாவட்டத்தில் பொன்மலை-திருமலை மண்பாண்டத் தொழில் கூட்டுறவுச் சங்கம், சுங்கான்கடை மற்றும் தாழக்குடி மண்பாண்டக் கூட்டுறவுச் சங்கம் ஆகிய இரண்டு கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. பொன்மலை-திருமலை மண்பாண்டக் கூட்டுறவுச் சங்கம், சுங்கான்கடையில் மட்டும் 152 உறுப்பினர்கள் உள்ளனர். 30 குடும்பத்தினர் மேற்படி சங்கத்தில் தொழில் புரிந்து வருகின்றனர். இந்தச் சங்கத்தில் 3 தொழிற்கூடங்கள் உள்ளன. மேலும், திரு. பகவதீஸ்வரன் என்ற சுங்கான்கடையைச் சேர்ந்த தனி நபருக்கு மும்பை கதர் கிராமத் தொழில் ஆணையக் குழுவின் ஐக்கிய நாடுகள் தேசிய மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம், UNDP திட்டத்தின் மூலம் மண்பாண்டத் தொழில் அபிவிருத்தி, புதிய தொழில்நுட்பம் மற்றும் உபகரணங்களுக்காக 7 இலட்சத்து 55,000 ரூபாய் மானியமாக வழங்கப்பட்டு அப்பகுதியிலுள்ள மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், கன்னியாகுமரி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின்கீழ் 90,000 ரூபாயும், திரு. பகவதீஸ்வரன் என்பவரின் பங்காக 30,000 ரூபாயும் ஆகமொத்தம் 1 இலட்சத்து 20,000 ரூபாய் அளவிற்கு சுங்கான்கடையில் 3 சூளைகள் நிறுவப்பட்டு அங்குள்ள மக்கள் தொழில் புரிந்து வருகின்றனர். எனவே, பொன்மலை-திருமலை மண்பாண்டக் கூட்டுறவுச் சங்கம், சுங்கான்கடையில் ஏற்கெனவே 3 தொழிற்கூடங்கள் உள்ளதாலும், சுங்கான்கடையைச் சேர்ந்த திரு. பகவதீஸ்வரன் என்ற தனி நபருக்கு மும்பை கதர் கிராமத் தொழில் ஆணையக் குழுவின்

[2008 ஜனவரி 31

ஐக்கிய நாடுகள் தேசிய மேம்பாட்டுத் திட்டத்தில் UNDP திட்டத்தின் மூலமும், மற்றும் கன்னியாகுமரி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின்மூலமும் மானியமும் வழங்கப்பட்டு அப்பகுதியில் 3 சூளைகள் நிறுவப்பட்டு அங்குள்ள மக்கள் தொழில் புரிந்து வருவதாலும், பத்மநாபபுரம் தொகுதி, சுங்கான்கடையில் மண்பாண்டத் தொழிற்கூடம் அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

*முற்பகல் 11-05*

**திரு. த. தியோடர் ரெஜினால்டு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுரையில் சொன்னதைப்போன்று ஒருகாலத்தில் மண்பாண்டத் தொழில் மிகவும் விமரிசையாக நடந்துகொண்டிருந்தது உண்மைதான். ஆனால் தற்பொழுது நலிவடைந்த சூழலில் அந்தத் தொழிலாளர்களைக் காப்பாற்றுவதற்கு மண்பாண்டத் தொழிற்சாலை அமைப்பதற்கு அமைச்சர் மறுபரிசீலனை செய்வாரா என்பதைக் கேட்டு விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் தொகுதியில், சுங்கான்கடையில் மேலும், அங்கு தனிநபர் யாரேனும் மண்பாண்டத் தொழிற்கூடம் அமைக்க முன்வருவார்களேயானால் மத்திய கதர் ஆணையக் குழுவின் விளிம்புத் தொகைத் திட்டத்தின்கீழ் வங்கியில் கடன்பெற்று புதிய தொழில்புரிய 25 முதல் 30 சதவீதம் வரை மானியம் கொடுத்து துறை உதவிடும். இதுகுறித்து சம்பந்தப்பட்ட நபர்கள் கதர் வாரியத்தின் அந்த மாவட்ட உதவி இயக்குநரை அணுகி பயன்பெறலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



2008 ஜனவரி 31]

## 2. அரசினர் தனித் தீர்மானம்

### செம்மொழித் தமிழ் ஆய்வு மையம் சென்னையில் அமைத்திடவும், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை அம்மையத்தின் தலைவராகச் செயல்படவும் மத்திய அரசு அறிவிப்புச் செய்ததற்குப் பாராட்டு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தனித் தீர்மானம். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**தீர்மானம்**

"கடந்த 150 ஆண்டுகளாகத் தமிழ் மொழியைச் செம்மொழியாக அறிவிக்கவேண்டுமென்று பரிதிமாற் கலைஞர் காலந்தொட்டு, பல அறிஞர்களும், தமிழ் ஆர்வலர்களும், புலவர்களும் மத்திய அரசினை வலியுறுத்தி வந்த சூழலில், மத்தியில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி மாண்புமிகு டாக்டர் மன்மோகன் சிங் அவர்களின் தலைமையில் அமைந்த பிறகு தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களின் விடாமுயற்சி மற்றும் தோழமைக் கட்சிகளின் வேண்டுகோளுக்கிணங்க தமிழைச் செம்மொழியாக அறிவிப்புச் செய்தார்கள். முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, 2004 ஆம் ஆண்டு குடியரசுத் தலைவர் அவர்களின் உரையிலேயே தமிழ் மொழியைச் செம்மொழியாக மத்திய அரசு அறிவிப்புச் செய்தது.

இச்சூழலில் நேற்று 30-1-2008 அன்று பாரதப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களின் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், சென்னையில் 17 ஏக்கர் பரப்பளவு நிலத்தில் எழுப்பப்படும் கட்டடத்தில் ரூ.76.32 கோடி செலவில் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் "செம்மொழித் தமிழ் ஆய்வு மையம்" அமைத்திடவும், இந்த ஆய்வு மையத்தின் தலைவராக தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பொறுப்பு வகிப்பார் (மேசையைத் தட்டும் ஒலி) எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த முடிவினை எடுத்த மத்திய அமைச்சரவைக்கும், பாரதப் பிரதமர் மாண்புமிகு டாக்டர் மன்மோகன் சிங் அவர்களுக்கும், இவற்றிற்கு உறுதுணையாக இருந்த காங்கிரஸ் பேரியக்கத்தின் தலைவர்

[பேராசிரியர் க. அன்பழகன்] [2008 ஜனவரி 31

திருமதி சோனியா காந்தி அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) மற்றும் மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் மாண்புமிகு அர்ஜுன் சிங் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பேரவை உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

மேலும், இத்தகைய வெற்றிக்கு முழுமுதற் காரணமாக இருந்த தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) இப்பேரவை பாராட்டுதல்களையும் நன்றியினையும் தெரிவித்துக்கொள்கிறது."

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ்.

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அவைத் தலைவர் அவர்கள் இந்த அவைக்கு தமிழ்ச் சமுதாயத்தினுடைய நெஞ்சமெல்லாம் இனிக்கக்கூடிய நல்லதொரு செய்தியினைத் தந்திருக்கிறார்கள். கடந்த ஓராண்டு காலமாக, அல்லது இரண்டு ஆண்டு காலமாக மத்தியிலே ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியிலே அமர்ந்ததும், தமிழகத்திலே டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையிலே, நல்லாட்சி அமைந்த பிறகு, மத்திய அரசின்மூலமாக தமிழகத்திற்கு நடந்து வருகின்ற பல்வேறு நல்ல பணிகளிலே, நல்ல திட்டங்களிலே, முதன்மையான, முத்தாய்ப்பு வகிக்கின்ற பணியாக, இந்தத் தமிழைச் செம்மொழியாக்குகின்ற மையம் அமைந்திருக்கிறது என்பதிலே யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த சில நாட்களாக ஆளுநர் உரையின்மீது நடந்துவருகின்ற விவாதத்திலே பேசுகின்ற சில எதிர்க்கட்சி நண்பர்கள்கூட, மத்தியிலும் மாநிலத்திலும் ஒரே ஆட்சி நடந்தால் என்ன நடக்கும் என்று, என்ன நடந்தது என்கிற கேள்விகளை மாறி மாறி இந்த அவையிலே வைத்தார்கள். அதற்கெல்லாம் பதில் சொல்கின்ற வகையிலே, மத்தியிலே ஆளுகிற ஆட்சி, மாநிலத்தில் ஆளுகிற ஆட்சிக்கு அனுசரணையாக இருந்தாலும், மாநிலத்திலே ஆளுகின்ற முதலமைச்சருக்கு மத்தியிலே நல்ல செல்வாக்கு இருந்தாலும், மத்தியிலே இருக்கின்ற தலைவர்களுக்கு மாநிலத்திலே இருக்கின்ற முதலமைச்சர்கள்மீது அளவு கடந்த மரியாதையும், அன்பும் இருந்தால், அந்த மாநிலத்திற்கு என்ன அற்புதங்கள் எல்லாம் நிகழும், நிகழ முடியும் என்பதற்கு இந்தச் சம்பவங்கள் ஓர் எடுத்துக்காட்டு. (மேசையைத் தட்டும் ஒலி)



2008 ஜனவரி 31] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

முற்பகல் 11-10

இதைப்போல ஒரு வாய்ப்பு, தமிழகத்திற்கு ஒரு அரசியல் ஏற்பாடு, இனி ஒரு 100 ஆண்டு காலம் கழித்தாலும் வருமா என்று ஐயப்படக்கூடிய அளவிற்கு ஓர் அருமையான அரசியல் ஏற்பாடு. (மேசையைத் தட்டும் ஒலி) The most benevolent political arrangement for Tamil Nadu. அன்னை சோனியா காந்தி அவர்கள், டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள், டாக்டர் கலைஞர் அவர்கள், ஒரு பச்சை முக்கோணமாக இருந்து, தமிழகத்திற்கு வரக்கூடிய நல்ல திட்டங்களுக்கெல்லாம் வழிவிடுகின்ற அந்த மிகப் பிரம்மாண்டமான ஒளிமயமான எதிர்காலத்திலே நாம் வாழ்கிறோம் என்பதுதான் நமக்குப் பெருமை. (மேசையைத் தட்டும் ஒலி) இன்று மத்திய அமைச்சரவை ரூ.76.32 கோடிகளை அள்ளித் தந்திருக்கிறது. எங்களது தலைவர் மாண்புமிகு மத்திய புள்ளியியல் துறை அமைச்சர் மாண்புமிகு வாசன் அவர்கள்கூட ஒரு பட்டியல் தந்தார்கள். இந்த 1½ ஆண்டு காலத்திலே மத்திய அரசு நம்முடைய தமிழக அரசிற்கும், தமிழ்நாட்டிற்கும் ஏறக்குறைய 37,000 கோடி ரூபாய்க்கான திட்டங்களை வழங்கியிருப்பதாக அவர்கள் ஒரு பட்டியல் தந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

எனவே, நான் மத்திய அரசிற்கு, பாரதப் பிரதமருக்கு, வழிகாட்டுகின்ற தலைவராக இருக்கின்ற எங்கள் அன்னை சோனியா காந்திக்கு, இவர்களுக்கெல்லாம் நல்ல ஆலோசகராக இருந்து அற்புதமான தோழனாக இருந்து, உடன் இருக்கின்ற டாக்டர் கலைஞர் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) காங்கிரஸ் கட்சியின் சார்பாக என் நெஞ்சம் நிறைந்த நன்றியினைச் சொல்லி அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு
முன்தோன்றி மூத்தக் குடி"

என்ற தமிழனுடைய தாய்மொழியாக இருக்கின்ற தமிழ் மொழிக்கு, பெருமை சேர்க்கவில்லையே என்று நீண்டகாலம் ஏங்கியிருந்த காலம் எல்லாம் மாறி, மத்தியிலே ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு ஏற்பட்ட பிறகு, மத்திய அரசோடு ஒத்துப்போகிற கூட்டணி

தமிழகத்திலே உருவாகி, கலைஞர் தலைமையிலே ஒரு ஆட்சியும் உருவாக்கப்பட்டு, இங்கே ஆதரிக்கிற கட்சிகளின் பேருதவியோடு, தலைவர் கலைஞர் அவர்கள், நடுவண் அரசு, தமிழை செம்மொழியாக அறிவித்ததற்கு எடுக்கப்பட்ட முயற்சிக்கு, நாம் தொடர்ந்து அவரைப் பாராட்டிக் கொண்டிருக்கிறோம். கலைஞர் அவர்களை வாழ்த்திக் கொண்டிருக்கிறோம். அப்படி வாழ்த்திக்கொண்டிருக்கிற வேளையிலேதான், தமிழகத்திலே இருக்கிற தமிழ் அறிஞர்கள், உலகத்திலே வாழக்கூடிய பல்வேறு நாட்டு தமிழ் அறிஞர்கள் எல்லாம் சொன்னார்கள். தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. நாம் பெருமையோடு பேசிக் கொண்டிருக்கிறோம். ஆனாலும்கூட தமிழுக்கு இருக்கிற தொன்மை, சிறப்பு என்பதிலே ஆண்டுக் கணக்கிலே எண்ணிக்கை குறைத்து சொல்லப்படுகிறதே, இந்த நிலை மாற வேண்டும் என்று சொன்னார்கள். இப்படி ஓர் ஆய்வு மையம், தமிழகத்திலே வருமா, வராதா என்றெல்லாம் கேள்விக் கணையோடு தங்களிடத்திலே பேசிக் கொண்டிருந்தார்கள். அந்த நிலை முற்றிலும் மாறக்கூடிய வகையில், இங்கே செம்மொழி தமிழ் ஆய்வு மையம் தமிழகத்திலே வந்திருக்கிறது. அதற்கு 76.32 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு காரண கர்த்தாவாக இருந்த நம்முடைய தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களை இந்த நேரத்திலே நான் பா.ம.க. சார்பிலே மனதாரப் பர்ராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய தமிழக அரசினுடைய கோரிக்கையை ஏற்று, இந்த ஆணையை வழங்கிய நடுவண் அரசினுடைய பிரதமர் அவர்களுக்கும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் வழிகாட்டித் தலைவியாக இருக்கின்ற அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், நடுவண் அமைச்சரவைக்கும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலேயும், தமிழக மக்கள் சார்பிலேயும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். அதேவேளையில் தமிழகத்திற்கு இதுவரையிலே இல்லாத அளவிற்கு தமிழக வரலாற்றில் நடுவண் அரசினுடைய உதவிகள் நிதியுதவியிலிருந்து, பல்வேறு திட்டங்களிலேயிருந்து அமைச்சரவையினுடைய எண்ணிக்கையிலிருந்து, இதுவரையில் இல்லாத அளவிற்கு தமிழகத்திற்கு நிதி ஒதுக்கீடு முதல் எல்லா வகையிலும் பெருமை சேர்த்துக் கொண்டிருக்கின்ற அரசு, ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு என்பதைச் சொல்லி, நடுவண் அரசையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் மனதாரப் பாராட்டி, வாழ்த்தி அமர்கின்றேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.





**திரு. என். நன்மாறன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய தீர்மானத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நாங்கள் மனப்பூர்வமாக வரவேற்கிறோம்.

..திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதைவணக்கஞ் செய்தல் வேண்டும்.

என்று பாரதியார் குறிப்பிட்டார்.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்குங் காணோம்;

என்றார். ஆனால் வெளி மாநிலங்கள் ஏற்றுக்கொண்டன. மத்திய அரசு ஏற்றுக் கொண்டது. அதற்கான ஆய்வு மையம் அமைகிறது. தகுதிமிகு தலைவர் அதற்குப் பொறுப்பாக வந்திருக்கிறார். ஆனால் செம்மையான மொழி தமிழ் மொழி என்பதால் செம்மொழி என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த உணர்வை வெளிநாட்டாருக்கு உணர்த்துவதைவிட, நம்முடைய மாநிலப் பிள்ளைகளுக்கு அதை உணர்த்த வேண்டிய கடமை இப்போது வந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ் ஏன் செம்மையான மொழி என்பதை இங்கே உள்ள பிள்ளைகளுக்கு உணர்த்துவதற்கு, பிள்ளைகளைப் பெற்ற பெற்றோர்களுக்கு உணர்த்துவதற்கு

..நாமமது தமிழரெனக் கொண்டு இங்கு வாழ்ந்திடுதல் நன்றோ?

என்று பாரதி கண்டதைப்போல, இனம் என்கிற முறை தமிழன் என்று மாத்திரம் போட்டுக்கொண்டு தமிழே படிக்காத ஒரு தமிழினம் வளர்வதைத் தடுக்கக்கூடிய முறையில் தமிழர்கள் மத்தியில் தமிழ் மேலும் வளம்பெறக்கூடிய முறையில் இந்த ஆய்வு மையம் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன், செயல்படும் என்று நம்புகிறேன். உறுதுணையாக இருந்த அனைத்துக் கட்சியினருக்கும் மைய அரசுக்கும், தமிழக அரசுக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்த அவையிலே நமது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தமிழ் செம்மொழி ஆய்வு மையமும், அந்த ஆய்வு மையத்திற்கு நமது தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைவராகப் பொறுப்பேற்றுக்கொள்வதற்கும் நன்றி தெரிவித்துத் தீர்மானத்தை முன்மொழிந்தார்கள். இன்றைக்கு தமிழ் செம்மொழியானது, அதையொட்டி ஆய்வு மையம் ஏற்பட்டது. நமது தலைவர் கலைஞர் அவர்களுக்கு இந்தப் புகழ் சேரும். ஆனால், பொதுவாக கடந்த பி.ஜே.பி. ஆட்சி நடக்கும்போது சமஸ்கிருதம் செம்மொழியாக அறிவிக்கப்பட்ட நேரத்திலேயே கலைஞர் அவர்களும் உடன் இருந்து தமிழ் செம்மொழியாக வேண்டும் என்பதை வற்புறுத்தினார்கள். அப்போது அவர்கள் செவிசாய்க்கவில்லை. இப்பொழுது வந்திருக்கக்கூடிய மத்திய அரசு, உடன் இடதுசாரிகளும் ஆதரவு கொடுத்து ஒரு ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, இன்றைக்கு தமிழ்ச் சமுதாயம் அறிந்துகொள்ள வேண்டியது, ஒரு சரியான அரசியல் அணியைத் தீர்வு செய்வதற்கு கடந்த காலத்தில் தமிழ்நாட்டிலிருந்து கலைஞர் தலைமையில் 40-க்கு 40 நாடாளுமன்ற உறுப்பினர்களும் டெல்லிக்குச் சென்ற காரணத்தால், இன்றைக்கு டெல்லியிலிருந்து தமிழ்நாட்டிற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் பெறுவதற்கான ஒரு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தமிழ்ச் சமுதாயம் புரிந்துகொள்ளவேண்டும். இதெல்லாம் வரக்கூடிய காலத்திற்கு ஒரு முன்னுதாரணமாக தமிழ் மக்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். அந்த அடிப்படையில் இன்றைக்கு ஆய்வு மையத்திற்கு தலைமை ஏற்றிருக்கின்ற தலைவர் கலைஞர் அவர்களை வணங்கி, இந்த ஆய்வு மையம் ஏற்படுத்தி, நிதியும் ஒதுக்கிக் கொடுத்த மத்திய அரசை இந்த நேரத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகப் பாராட்டி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் விடா முயற்சியால் இன்று செம்மொழி ஆய்வு மையம் சென்னைக்குக் கிடைத்திருக்கிறது. இதிலே ஏறக்குறைய ரூ.76.32 கோடி அளவில் இந்தத் திட்டத்தை தமிழகத்திலே செயல்படுத்த இருக்கிறார்கள். 90 ஆண்டுகளுக்கு முன்பு பரிதிமாற் கலைஞர் அவர்கள் முதற்கொண்டு





தமிழ்ப் பெரும் புலவர்கள் எல்லாம் போராடி இப்பொழுது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையில் இது முற்றுப்பெற்று இருக்கிறது, வெற்றி கண்டிருக்கிறது. சமஸ்கிருதத்திற்குக்கூட அர்ஜுன் சிங்தான் தலைவராக இருக்கிறார். ஆனால் இன்று செம்மொழிக்குத் தலைவராக இருக்கின்ற நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு விடுதலைச் சிறுத்தைகள் சார்பாகப் பாராட்டுகளையும், நன்றியையும் தெரிவித்து விடைபெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனையோ ஆண்டுகாலம் தமிழ் செம்மொழியாக வேண்டும் என்று போராடி இன்றைக்கு அது கிடைத்ததோடு மட்டுமல்ல, அதற்கு ஒரு ஆய்வு மையமும் தமிழகத்திலே உருவாவதற்கு இன்றைக்கு மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கத்திற்கு அனுமதி அளித்து இருக்கின்றது. இந்தச் சூழ்நிலையை தமிழ் விரும்புகின்ற அத்தனை பேரும் கட்சிப் பாகுபாடின்றி பாராட்டியே ஆக வேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) இதை பரந்த உள்ளத்தோடு நிச்சயமாக எல்லோரும் பாராட்டவேண்டும் என்கின்றதை வலியுறுத்தி, நானும் இதிலே என்னையும் சேர்த்து மத்திய அரசாங்கத்திற்கும், இதற்குக் காரணகர்த்தாவாக இருந்த, மூலவராக இருந்த முதல்வர் அவர்களையும் வாழ்த்தி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கொண்டு வரப்பட்ட இந்தத் தீர்மானத்தை மத்திய அரசுக்கும், அதனுடைய மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கும், மத்திய அரசினுடைய வழிகாட்டியாக விளங்குகிற திருமதி சோனியா காந்தி அம்மையார் அவர்களுக்கும், மத்திய அரசினுடைய மனித வளத் துறை அமைச்சர் மாண்புமிகு அர்ஜுன் சிங் அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கிற முறையிலேயும், இந்த முயற்சியிலே முன்னிலையிலேயிருந்து தொடர்ந்து பாடுபட்டு, இந்த வெற்றியைப் பெற்றுத் தந்திருக்கிற முதல்வர் கலைஞர் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) நன்றி தெரிவிக்கிற இந்தத் தீர்மானத்தை முழு

[பேராசிரியர் க. அன்பழகன்] [2008 ஜனவரி 31,

மனதோடு ஆதரித்து, பாராட்டி உரையாற்றிய அத்தனைக் கட்சித் தோழர்களுக்கும், கட்சித் தலைவர்களுக்கும் என்னுடைய உளமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த வரலாற்றுக் குறிப்பில் இது ஏறத்தாழ ஒரு 100 ஆண்டு காலம், 110 ஆண்டு கால முயற்சியாக இருந்தாலுங்கூட, தமிழ் எப்படியெல்லாம் வீழ்த்தப்பட்டிருந்தது, எவ்வளவு தாழ்த்தப்பட்டிருந்தது, எவ்வளவு ஒடுக்கப்பட்டிருந்தது, எவ்வளவு ஒதுக்கப்பட்டிருந்தது என்ற அந்த வரலாற்றை எண்ணிப் பார்ப்பவர்களுக்கு இது ஓர் ஆயிரம் ஆண்டு கால வீழ்ச்சியிலேயிருந்து மீட்சிக்கு வழிசெய்த ஒரு நிகழ்ச்சியாகும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

தீண்டாதார் மட்டும் திருக்கோயில்களிலே அனுமதிக்கப்படவில்லை என்பதல்ல; தமிழும் அனுமதிக்கப்படாத ஒரு நிலைதான் தமிழகத்திலே பல ஆண்டுகளாக அமைந்துவிட்டது. இன்னும் ஒரு வகையிலே சொல்லப்போனால், ஓர் இன உரிமை அடிப்படையில் மறுக்கப்பட்டு தமிழ் இனமும் வீழ்த்தப்பட்டது; அதேபோல தமிழ் மொழியும் வீழ்த்தப்பட்டது; தமிழ்க் கலாச்சாரம், பண்பாடு அத்தனையும்கூட ஒதுக்கப்பட்டது. எனவே அந்த நிலையிலியிருந்து மீட்சிக்கு வழி செய்யக்கூடிய முறையில், இன்றைக்கு இந்த வாய்ப்பு கிடைத்துள்ளது. தமிழ் உயர் தனிச் செம்மொழி என்று ஏற்றுக்கொள்ளப்பட்ட அந்த அடிப்படையினாலே தமிழ் எந்த மொழிக்கும் தாழ்ந்த மொழி அல்ல; இறைவழிபாட்டிலேயும் ஒதுக்கப்பட வேண்டிய மொழியல்ல. இன்னும் சொல்லப்போனால், தமிழைவிட உயர்ந்த மொழி என்று எந்த ஒரு மொழியையும் ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயமும் *(மேசையைத் தட்டும் ஒலி)* மொழி அடிப்படையிலே ஏற்பட்ட அடிமைத்தனம் ஓர் இனத்தினுடைய வாழ்வையே மங்கச் செய்துவிடும். எனவே, அந்த அடிமைத்தனத்திலேயிருந்து விடுபடுவதற்கு ஒரு பெரிய வாய்ப்பாக, தமிழ் உயர் தனிச் செம்மொழி என்று, தமிழ்நாடு அரசு ஒத்துக்கொள்வது ஆச்சரியமல்ல. தமிழ்நாடு தமிழ் மொழிக்கு உரிய ஒரு நாடாக, வட்டாரமாக இருக்கிற காரணத்தால் அதிலேயும் தமிழகத்தைப் பொறுத்தவரையில் தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், மறைமலையடிகள் போன்றோரும், புரட்சிக் கவிஞரும், பாரதியாரும்கூடத் தோன்றிய நாடு.

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்குங் காணோம்;



2008 ஜனவரி 31] [பேராசிரியர் க. அன்பழகன்]

என்று பாடிய பாரதியார் முதலாக, இந்த உணர்வை ஏற்படுத்தியதற்குப் பின்னர் தமிழ்நாட்டிலே இதை ஏற்றுக்கொள்வதிலே ஆச்சரியம் இல்லை. ஆனால் ஏற்றுக்கொள்ள மறுப்பவர்கள் உண்டு. ஆனால், அகில இந்திய அளவில் மத்திய அரசாங்கத்தில் இந்த ஒரு கருத்தை ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டது என்றால் அரசியல் சூழ்நிலையிலே ஏற்பட்ட ஒரு சிறந்த மாற்றம்தான் இந்த நல்வாய்ப்பைக் கலைஞர் அவர்களுக்கு வழங்கியது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

இங்கே மாண்புமிகு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் பேசுகிறபோது சொன்னதைப்போல, கடந்த காலத்திலேயும் கலைஞர் அவர்கள் அந்த முயற்சியை எடுத்துக்கொண்டபோது, வாஜ்பாய் அவர்கள் பிரதமராக இருந்தபோது, அவர்கூட அந்தக் கருத்தை வரவேற்கக்கூடிய நிலை இருந்தாலும்கூட, அந்த அரசு இதை ஏற்றுக்கொள்ள மறுத்தது. அந்த ஆட்சியிலே இருந்த பல பேருக்குத் தமிழையும் வடமொழியோடு சமமாக Classical Language என்று ஒத்துக்கொள்வதா என்ற ஓர் எண்ணம் ஏற்பட்டுத் தடை விதித்தார்கள்; அதை ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள். அந்த நிலை மாறக்கூடிய நல்வாய்ப்பு, நம்முடைய பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசுகிறபோது சொன்னதைப்போல, தமிழ்நாட்டிற்கு ஒரு நல்ல சூழ்நிலை ஏற்பட்ட காலகட்டம் இது. இது அரசியல் மாற்றத்தினுடைய விளைவு. அந்த அரசியல் மாற்றத்தினுடைய விளைவாக, அவர்கள் சொன்னார்கள், 37,000 கோடி தமிழ்நாட்டிற்கு இந்த 1½ ஆண்டு காலம், 2 ஆண்டு காலத்திலே நம்முடைய ஆட்சி ஏற்பட்டதற்குப் பின்னர் கிடைத்திருக்கிறது என்று. 37,000 கோடிக்கான திட்டம் கிடைத்திருக்கிறது. திட்டம் நிறைவேற, நிறைவேறத்தான் இந்தத் தொகையைப் பெற முடியுமே தவிர, இப்பொழுது தொடங்கி ஓராண்டு, இரண்டாண்டு காலத்திலே 2,000 கோடி, 3,000 கோடி என்று கொஞ்சம், கொஞ்சமாக வந்து, அது ஏறத்தாழ ஒரு மூன்றாண்டு, நான்காண்டு காலத்திலே அந்தத் தொகையை அடையக்கூடும் என்றும் தெரிவிக்க விரும்புகிறேன்.

*முற்பகல் 11-25*

அதேபோல இந்த ஆட்சி அமைந்த காரணத்தால்தான், நல்வாய்ப்பு அமைந்ததற்கு ஒரு சிறந்த சான்று இது. கலைஞர் அவர்கள், மத்திய அரசினுடைய வழிகாட்டியாக விளங்குகிற காங்கிரஸ் இயக்கத்தினுடைய தலைவர் திருமதி சோனியா காந்தி அம்மையார் அவர்களுக்கு எழுதிய கடிதத்திற்கு *(மேசையைத் தட்டும் ஒலி)* அவர்கள் தந்திருக்கிற அந்த பதில் இது.

"Dear Thiru Karunanidhiji,

I have received your letter of 20th October. I am glad that all the formalities for declaring Tamil as a Classical Language have now been completed. This is an achievement for all the constituents of the UPA Government. But particular credit goes to you and your party." *(மேசையைத் தட்டும் ஒலி)* என்று திருமதி சோனியா காந்தி அவர்கள் கலைஞருக்கு எழுதிய அந்தக் கடிதத்தை நான் இங்கே படித்துக் காட்டியிருக்கிறேன். அதற்கு முக்கியமான காரணம் அவருடைய ஒத்துழைப்பு, அவருடைய வழிகாட்டுதல். இன்னும் சொல்லப்போனால், சமயச் சார்பற்ற ஒரு கொள்கையுடைய ஆட்சியின் தலைவியாக அந்த அம்மையார் இருக்கிற காரணத்தால், *(மேசையைத் தட்டும் ஒலி)* சமயச் சார்பு அடிப்படையிலே தமிழுக்கு ஏற்பட்ட வீழ்ச்சியிலேயிருந்து தமிழ் மொழியை மீட்டிருக்கிறோம். அந்த மீட்சிக்குத் துணை நின்ற எல்லோருக்கும் நான் என்னுடைய நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்து, கலைஞர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டைத் தெரிவித்து, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது. *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

## 3. தகவல் கோரல்

### மதுரை மாவட்டம், சித்தாலை கிராமத்தைச் சேர்ந்த செவிலியர் மர்மமான முறையில் இறந்தது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மதுரை மாநகரில் 27-1-2008 அன்று கற்பகவல்லி என்ற செவிலியர் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டதாகத் தெரிய வருகிறது என்றும், இதுதொடர்பாகக் காவல் துறையின் விரிவான விசாரணை மறுக்கப்பட்டதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்





கழகத்தின் சார்பில் திருவாளர்கள் ஓ. பன்னீர்செல்வம், டி. ஜெயக்குமார், கே.ஏ. செங்கோட்டையன், சி. துரைராஜ், பொள்ளாச்சி வி. ஜெயராமன், அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக திரு. சி. ஞானசேகரன், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக திருவாளர்கள் ஜி.கே. மணி, தி. வேல்முருகன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக செல்வி கே. பாலபாரதி, திரு. என். நன்மாறன், திரு. சி. கோவிந்தசாமி ஆகியோர் அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளார்கள். இதனைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் உறுப்பினர்கள் தங்களது கருத்துகளைத் தெரிவிக்கலாம். முதலில், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகேயுள்ள சித்தாலை கிராமத்தைச் சேர்ந்த இளம் பெண் கற்பகவல்லி என்ற தாழ்த்தப்பட்ட, ஆதி திராவிடர் இனத்தைச் சேர்ந்த இளம் பெண், மதுரையிலுள்ள தனியார் மருத்துவமனையில் செவிலியராக–நர்ஸாகப் பணியாற்றி வந்திருக்கின்றார். கடந்த மூன்று மாத காலமாக, மதுரையிலே இருக்கின்ற திரு. நாகேஷ் என்பவருடைய தாயாருக்கு உடல் நலமில்லாமல் நாகேஷ் என்பவருடைய வீட்டிலேயே தங்கியிருந்து, அவருடைய தாயாருக்கு உதவிகரமாக பணி செய்துகொண்டிருந்த கற்பகவல்லி என்ற அந்த இளம் பெண், 27–1–2008 அன்று மர்மமான முறையில் நாகேஷ் என்பவருடைய வீட்டிலே இறந்து கிடந்திருக்கின்றார். மதுரை காவல் துறையைச் சேர்ந்த காவலர்கள் கற்பகவல்லியினுடைய உடலை மதுரை அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று, பிரேதப் பரிசோதனை செய்து கற்பகவல்லியினுடைய பெற்றோருக்கு ஒப்படைக்க இருக்கின்ற தருணத்தில், கற்பகவல்லியினுடைய பெற்றோர்கள் அந்தப் பிணத்தை வாங்க மறுத்திருக்கிறார்கள். ஏனென்று சொன்னால், கற்பகவல்லியினுடைய பெற்றோருக்குத் தெரியாமல் அந்தப் பிணம் எடுத்துச் செல்லப்பட்டு பிரேதப் பரிசோதனை நடைபெற்ற காரணத்தினால், கற்பகவல்லியினுடைய பெற்றோர்கள் அந்தச் சாவில் மர்மம் இருப்பதாகவும், கற்பகவல்லி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கின்றார் என்ற கருத்து அங்கே நிலவுகின்றது என்பதனையும் தெரிவித்து, பிணத்தை வாங்க மறுத்திருக்கின்றார்கள். ஆனால், காவல் துறையினர்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2008 ஜனவரி 31

கற்பகவல்லியினுடைய பெற்றோரை வற்புறுத்தி, பிணத்தை ஒப்படைத்து, பிணத்தையும் எரிக்கச் செய்திருக்கின்றனர். திரு. நாகேஷ், ** (குறுக்கீடுகள்) சொல்லி முடித்துவிடுகிறேன். (கூச்சல்–குழப்பம்) நான் சொல்லி முடித்துவிடுகிறேன். (கூச்சல்–குழப்பம்)

முற்பகல் 11–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (கூச்சல்–குழப்பம்) உட்காருங்கள், உட்காருங்கள். (கூச்சல்-குழப்பம்) நீங்கள், எதிர்க்கட்சித் துணைத் தலைவர், (கூச்சல்-குழப்பம்) மற்றவர்களை உட்காரச் சொல்லுங்கள், நான் சொல்கிறேன். (கூச்சல்-குழப்பம்) மற்ற எல்லோரையும் உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் பேசுங்கள், முதலிலே அவர்களை உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) முதலிலே அவர்களை உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலிலே எல்லோரும் உட்காருங்கள். (கூச்சல்-குழப்பம்) முதலிலே எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலிலே எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர். (குறுக்கீடுகள்) மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எழுப்புகின்ற பிரச்சினையிலே, அவர் இதுவரையிலே சொல்லி வந்ததை, ஆளுங்கட்சியின் தரப்பிலே அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்தோம். ஆனால், தேவையில்லாமல், எந்தவிதமான சம்பந்தமுமில்லாமல், ** சபைக்குறிப்பிலேயிருந்து நீக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** அவர் சொன்ன வார்த்தைகள் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 28-1-2008 அன்று, 'Indian Express' பத்திரிகையிலும், அதன் தொடர்ச்சியாக கடந்த மூன்று தினங்களாக அனைத்து வாரப் பத்திரிகைகளிலும் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2008 ஜனவரி 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைய 'Indian Express' பத்திரிகையைப் படித்துவிட்டீர்களா?

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நானே, நேரடியாகப் படித்தேன். அப்புறம்தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைக்கு 'Indian Express' பத்திரிகையைப் படித்தீர்களா சார்? இன்றைய 'Indian Express' பத்திரிகையைப் படித்துப் பார்த்தீர்களா?

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நான் படித்தேன். பேப்பர் இங்கேயிருக்கிறது. இந்தாருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகையில் ஆயிரம் செய்திகள் வரும். மாண்புமிகு உறுப்பினர் திரு. பன்னீர்செல்வத்தைப்பற்றி வரும்; என்னைப்பற்றி வரும்; உங்களைப்பற்றியும் வரும். ஆனால், அதைக் கொண்டுவந்து இந்த அவையிலே பேசக்கூடாது. இந்த அவையிலே பேசுகிறபோது, தான் பேசுவதற்கு ஆதாரம் இருந்தால், அதைச் சபாநாயகரிடத்திலே காட்டிவிட்டு, பிறகுதான் பேச வேண்டுமேதவிர, பத்திரிகையிலே வந்தது என்று பேச ஆரம்பித்தால், நாங்களும் திருப்பிப் பேசலாம். அது இந்த மன்றத்தினுடைய மரபாகாது, அவ்வளவுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், பேசுங்கள். (குறுக்கீடு) பேசுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** கற்பகவல்லி இறந்து கிடந்த வீடு, நாகேஷ் என்பவருடைய வீடு. ** என்றுதானே சொல்கிறேன், இதிலே என்ன இருக்கிறது? (குறுக்கீடுகள்) ** என்று சொன்னேன். (குறுக்கீடுகள்) என்ன, அதைக்கூடச் சொல்லக்கூடாதா? (கூச்சல்-குழப்பம்) சொல்லவே கூடாது என்கிறீர்களே, என்ன இது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்பட்ட வார்த்தையை மீண்டும் மீண்டும் சொல்லக்கூடாது. (குறுக்கீடுகள்) அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கப்பட்ட வார்த்தையை... (குறுக்கீடு) நீங்கள் சொல்லுங்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால், அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கப்பட்ட வார்த்தையை, மீண்டும் மீண்டும்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சொல்கிறீர்கள். அதைச் சொல்லக்கூடாது. அடுத்தாற்போல, சம்பந்தமில்லாத subject-ஐ நீங்கள் கொண்டுவரவேண்டிய தேவையில்லை. எது தேவையோ, அதை மாத்திரம் சொல்லுங்கள். *(குறுக்கீடுகள்)*

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** என்ன நியாயம் இது? ** சொல்லக்கூடாது என்றால் எப்படி? நான் ** என்றுதானே சொன்னேன். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** பேரவைத் தலைவர் அவர்களே, நடந்துவிட்ட ஒரு சம்பவத்தை இங்கே எடுத்துச்சொல்வதற்கு உங்களுக்கு உரிமையுண்டு. அதேநேரத்தில், அதன்மீது நடவடிக்கை எடுப்பதற்கு அரசுக்கும் கடமையிருக்கிறது. ஆனால், தேவையில்லாமல், நீங்கள் வார்த்தைகளைப் பயன்படுத்துகிறீர்கள். அதுமட்டுமல்ல; எனக்கு வந்த தகவலைச் சொல்கிறேன். ** *(கூச்சல்–குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* மற்ற எல்லோரும் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* பேசுங்கள், நீங்கள் பேசுங்கள். *(குறுக்கீடுகள்)* பேசுங்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் பேசுங்கள். *(குறுக்கீடுகள்)*

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** சொல்வதைக் கேளுங்கள். நான், என்ன குற்றச்சாட்டா சொன்னேன்? ** என்றுதானே சொன்னேன்; நான் குற்றச்சாட்டாகவா சொன்னேன்? ** என்றுதானே சொன்னேன். *(குறுக்கீடுகள்)*

*முற்பகல் 11-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் இந்த அவையிலே கொண்டுவரப்படுமானால் அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைப்பற்றிப் பேசுகிறவர்கள், ஒத்திவைப்புத் தீர்மானம் சம்பந்தமான கருத்துகளை எடுத்துக்கூறுகிறபோது, ஒரு கிரிமினல் வழக்கையொட்டிய ஒரு செய்தி

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



என்ற அடிப்படையில், அதிலே யார் பெயரை வேண்டுமானாலும் இணைத்துப் பேச அவர்களுக்கு உரிமை கிடையாது. நேரடியாக சம்பந்தப்பட்டவர்களைப்பற்றிப் பேசலாமே தவிர, இன்னும் சொல்லப்போனால் ஒருவேளை அவர் குறிப்பிட்ட அந்த ஏதோ ஒரு குற்றச்சாட்டுக்கு உரியவராகக் கருதப்படுகிறவராக இருப்பவர், அவர் எனக்கேகூட உறவினராக இருக்கலாம். எனக்கு உறவினராக இருக்கிற காரணத்தாலேயே அந்தக் குற்றச்சாட்டுக்கும் எனக்கும் தொடர்பு வராது. *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆகவே, எதைப்பற்றிப் பேசுவதாக இருந்தாலும் அந்தக் குற்றச்சாட்டில் சம்பந்தப்பட்டவரைத் தவிர, அவருக்குப் பக்கத்திலே இருந்தவர்கள், தெருவிலே போனவர்கள், அவருக்கு வேண்டியவர்கள், அவருக்கு வாடகை வீடு கொடுத்தவர்கள், அவர்களை இந்த வழக்கிலே அல்லது குற்றச்சாட்டிலே சம்பந்தப்படுத்திப் பேசுவது இந்த அவை முறையாகாது. எனவே, அவையினுடைய முறையை மீறி எதையாவது இங்கே பேச வேண்டுமானால் அதை பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதிக்க மறுக்கலாம். *(குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுங்கள். திரு. பன்னீர்செல்வம், *(குறுக்கீடுகள்)* எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. பன்னீர்செல்வம், நீங்கள் பேசலாம். *(குறுக்கீடுகள்)* நீங்கள் சப்ஜெக்டுக்குள் வாருங்கள். மற்றதெல்லாம் அப்புறம் பேசலாம்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** சப்ஜெக்டுக்குள்தான் நான் வருகிறேன். நான் யார்மீதும் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லையே!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே, நீங்கள் அரசியலே பண்ணவேண்டாம். *(குறுக்கீடுகள்)*

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இல்லை. யாரையுமே குற்றச்சாட்டு சொன்னேனா நான்? யாரையுமே குற்றச்சாட்டாக நான் பதிவு செய்துகொள்ளவில்லை. நாகேஷ் என்பவருடைய வீட்டைக்கூட, அவரைக்கூட நான் குற்றவாளியாக, குற்றச்சாட்டாகப் பதிவு செய்ய விரும்பவில்லை. உரிய நீதி விசாரணைக் கமிஷன் அமைத்து நீதி விசாரணை செய்யப்படவேண்டுமென்றுதான் நான் கருத்தைச் சொல்லவந்தேனே தவிர, யாரையும் குற்றவாளியாக நான் சித்தரிக்கவில்லை. குற்றவாளியாக நான் யாரையும் சித்தரிக்கவில்லை. சம்பந்தப்படுத்தி பத்திரிகையில் வந்திருக்கின்ற செய்தியைத்தான் நான் இங்கே சொன்னேனேதவிர, யாரையும் நான் குற்றவாளியாக இங்கே குற்றம் சுமத்த முன்வரவில்லை என்பதை முதலில் மாண்புமிகு

முதலமைச்சர் அவர்களும் மற்ற மாண்புமிகு உறுப்பினர்களும் புரிந்துகொள்ள வேண்டும். யாரையாவது நான் ஆரம்பித்தேனா? நான் ஆரம்பிக்கவில்லை. நாகேஷ் என்பவருடைய வீட்டைச் சொன்னேன். ** என்ற கருத்தைச் சொன்னேனேயொழிய, யாரையும் குற்றவாளி என்று சொன்னேனா நான்? சொல்லவில்லை. ஆனால், முறையாக, சந்தேகம் இருக்கின்றது. நடந்த சாவில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒன்று, எதிர்க்கட்சித் துணைத் தலைவர், இன்னாருக்குப் பக்கத்து வீட்டில் இருக்கிறார்; இன்னாருக்கு, அப்படி, இப்படி இதெல்லாம் தேவையா இது? (குறுக்கீடுகள்)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்**: சரி, இருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்வதற்கும் இதற்கும் சம்பந்தம் இருக்கிறதா?

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நான் அந்தக் கதைக்கெல்லாம் போகவேயில்லை. நான் யாராவது ஒரு தனிப்பட்டவரை சம்பந்தப்படுத்தி நீதி விசாரணைக்கு முன்பாகவோ வழக்கு விசாரணைக்கு முன்பாகவோ குற்றவாளி என்று யாரையும் சொல்வதற்கு முன்வரமாட்டேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றவாளி என்று சொல்லவில்லை என்ற வார்த்தை வேறு, குற்றவாளி என்று சொன்னாரா சொல்லவில்லையா என்பது வேறு. ஆனால், ஒரு குற்றச்சாட்டு உள்ள பிரச்சினையைப்பற்றி இங்கே பேசுகிறபோது அதிலே சம்பந்தப்பட்டவராக யாரையும் அவர் சித்தரிக்க அவருக்கு உரிமை கிடையாது. நேரடியாக அதிலே ஈடுபட்டவர்களைத்தான் சொல்லலாமே தவிர வேறு யாரையும் சேர்த்தோ, இணைத்தோ பேசுகிறபோது தவறான எண்ணம் ஏற்படும். அந்தத் தவறான எண்ணம் ஏற்படுகிற முறையில் இந்த அவையைப் பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்கக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, பேராசிரியர் குறிப்பிட்டதைப்போல அத்தகைய தவறான எண்ணம் ஏற்படுகின்ற அளவிற்கு எந்தப் பெயரையும் பயன்படுத்தக்கூடாது என்ற அந்த வழிமுறையைப் பின்பற்றி இங்கே அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் பயன்படுத்திய ** என்ற அந்தப் பெயரையும் அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கிவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த வார்த்தை அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) யாரும் உட்கார்ந்துகொண்டு பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) அங்கிருந்து யார் குரல் கொடுக்கிறார்கள்? (குறுக்கீடுகள்)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தைரியம் இருந்தால் எழுந்து நின்று பேசவேண்டும். (குறுக்கீடுகள்)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட பெயரையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: நீக்கியாகிவிட்டது, நீக்கியாகிவிட்டது.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அந்தப் பெயரைச் சொன்னார். குறிப்பிட்டுச் சொன்னார். அவருடைய உரையிலும் அந்தப் பெயர் இருக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கின்றேன். ஆகவே, மர்மமான முறையில் இறந்திருக்கின்ற கற்பக்வல்லி என்ற இளம் பெண்பற்றி அங்கு பல்வேறு செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன, நடந்தது தற்கொலை அல்ல, கொலை என்றுதான் அங்கே செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே உரிய விசாரணைக் கமிஷன் அமைத்து நீதி விசாரணைக்கு இந்த அரசு உத்தரவிட வேண்டுமென்று இந்தச் சபையின் கவனத்தை ஈர்த்து அமைகின்றேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

முற்பகல் 11-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காங்கிரஸ் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கற்பகவல்லி என்கிற பெண், ஒரு தனியார் மருத்துவமனையில் பணியாற்றிக்கொண்டிருந்த செவிலியர். மதுரையைச் சார்ந்த டி.வி.எஸ். நகர் என்கிற பகுதியில் வாழ்ந்துவந்த நாகேஷ் என்பவருடைய தாயார் தங்கம் என்பவர் உடல்நலம் குன்றியிருந்த காரணத்தினால் மருத்துவமனையில் சில நாட்கள் சிகிச்சை பெற்றார். அந்த நாகேஷினுடைய தாயார் தங்கம் என்பவருக்கு உதவியாளராக இருந்து, பிறகு அவர் வீட்டிலேயே சிகிச்சை பெற்றுக்கொள்ளலாம் என்று 22 ஆம் தேதி தங்கம் என்கிற அந்த அம்மையாரை வீட்டிற்கு அனுப்பியபோது, இந்தச் செவிலியரையும், நாகேஷின் வீட்டிலே இருந்துகொண்டு அவருடைய தாயாருக்கு நீங்கள் பணிவிடை செய்யலாம் என்ற வகையில் தனியார் மருத்துவமனை ஒரு ஏற்பாட்டினைச் செய்து வீட்டிற்கு அனுப்பி, அங்கே ஒரு வார காலம் அந்தச் செவிலியர் தனது பணியைச் செய்து வந்திருக்கிறார். 27ஆம் தேதி அதிகாலை ஒரு குளியல் அறையில் தூக்குப் போட்டுக்கொண்டு கற்பகவல்லி இறந்து போனார் என்று செய்தி தெரிந்து காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்து, பிறகு அவர்கள் பிரேதப் பரிசோதனை எல்லாம் செய்திருக்கிறார்கள். ஆனால், பிரேதப் பரிசோதனை செய்வதற்கு முன்பாக அவர்களுடைய உறவினர்களுக்குத் தகவல் சொல்லப்படவில்லை. காரணம், அவர்கள் மதுரைக்குப் பக்கத்தில் இருக்கக்கூடிய திருமங்கலம் அருகே சித்தாலை கிராமத்தைச் சார்ந்த அவருடைய சகோதரர் கபாலீஸ்வரன், சித்தப்பா ராஜசேகர் ஆகிய இருவரும் அந்த இறப்பில் தங்களுக்குச் சந்தேகம் இருக்கிறது, அது தற்கொலையாக இருக்கமுடியாது, காரணம், தலையில் காயம் இருக்கிறது, கழுத்தில் நெறித்த காயம் இருக்கிறது என்று அவர்கள் அந்த மரணத்தில் மர்மம் இருப்பதாக பத்திரிகைகளுக்குப் பேட்டி அளித்திருக்கிறார்கள். இப்படி இருக்கக்கூடியவேளையில், Indian Express பத்திரிகையிலே இரண்டு நாட்களுக்குமுன் ஒருவிதமாக எழுதினார்கள்; இன்று Indian Express–ல் வந்திருக்கக்கூடிய செய்தியில், துரைராஜ் என்பவருக்கும் இறந்துபோன கற்பகவல்லிக்கும் காதல் இருந்ததாகவும், அந்தக் காதலைப்பற்றி ஏதோ சில பிரச்சினை வந்து அதனுடைய அடிப்படையிலே அவர் இறந்துபோனதாகவும் சில தகவல்கள் இன்றைய





பத்திரிகையில் வந்திருக்கிறது. ஆகவே, நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், உண்மை நிலை என்ன; பிரேதப் பரிசோதனையிலே தலையிலே காயம், கழுத்திலே நெறித்தல் காயம் இருக்கிறது என்றெல்லாம் சொல்லப்பட்டிருக்கிற செய்திக்கு அதிலே ஏதாவது நமக்கு ஆதாரம் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். ஆகவே புலன்விசாரணையை அவர்கள் முழுமையாகச் செய்து, இதிலே இது தற்கொலை இல்லாமல், கொலை என்று இருக்குமேயானால் அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுத்து, தவறு செய்தவர்களைத் தண்டிப்பதற்கு இந்த அரசு உடனடியாக ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் செவிலியர் கற்பகவல்லி அவர்கள் மர்மமான முறையில் கற்பழித்துக் கொலை செய்யப்பட்டிருக்கிறார் என்கிற செய்தியின் அடிப்படையில், அந்தச் சாவு கொலையா, தற்கொலையா; உண்மையிலேயே அவர் கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கிறாரா என்பதெல்லாம் உடற்கூறு ஆய்வு பரிசோதனைக்கு மருத்துவமனையில் post mortem செய்திருக்கின்றபோது, இந்த நாட்களுக்குள்ளாக நிச்சயமாக நம்முடைய அரசுக்கு தெரிய வந்திருக்கும். அப்படி அவர்கள் குடும்பத்தினர் குற்றஞ்சாட்டிச் சொல்லப்படுகின்ற அவருடைய உயிரணுக்களுக்கும், அவரைக் காதலித்து கைவிட்டதால் மனம் உடைந்து தற்கொலை செய்துகொண்டதாக வந்திருக்கிற செய்திக்கு உட்படுத்தப் பட்டிருப்பவ்ருடைய அந்த நபரின் உயிரணுக்களுக்குமுடைய பரிசோதனை, இதன் அடிப்படையில் உண்மையிலேயே தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த அந்தப் பெண் பாலியியல் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு இறந்திருப்பார் என்று சொன்னால் அந்தக் குடும்பத்திற்கு நம்முடைய தமிழக அரசு போதிய நிவாரணமும், ஆறுதலையும் உருவாக்கித்தர வேண்டுமென்று கேட்கிற அதேவேளையில், குறிப்பாக இதுபோன்ற மரணங்கள், ஒரு சந்தேகத்திற்குரிய மரணங்கள் அல்லது காவல் துறையில் ஏற்படுகின்ற இந்த மரணங்களை நம்முடைய காவல் துறையிலே இருக்கின்ற, கீழ்நிலையில் இருக்கின்ற காவலர்கள், உதவி ஆய்வாளர்கள், ஆய்வாளர்கள், D.S.P. என்று சொல்லக்கூடிய

நிலையில் இருக்கின்றவர்கள் கையாளுகிற முறை என்பது மிக வேதனைக்குரிய ஒரு முறையாக இருக்கிறது.

எங்களுடைய கடலூர் மாவட்டத்தில்கூட ஒரு சம்பவம் ஏற்பட்டு, முதலமைச்சருடைய அலுவலகம் தலையிட்ட பிறகு தீர்வு ஏற்படுகிறது. S.P., D.I.G., I.G., A.D.G.P., D.G.P., என்கிற நிலையில் இருக்கின்ற உயர் காவல் துறை அதிகாரிகள், இந்தமாதிரி பிரச்சினையில் இந்த அரசுக்கும் அவப் பெயர் ஏற்படாத அளவுக்கு சுமுகமான முறையில், உயிரைப் பலி கொடுத்துவிட்டு பாதிப்புக்குள்ளாகி தத்தளித்துக்கொண்டு இருக்கின்றவர்களுக்கும் எந்தவிதப் பாதிப்பும் ஏற்படாத வண்ணம் அதை நாசுக்காகக் கையாள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால், வேண்டுமென்றே சில காவல் துறை அதிகாரிகள், அந்த மாதிரி பாதிப்பிற்குள்ளானவர்கள்மீதே வழக்குப் போடுவதும், அந்தப் பிணத்தை வைத்துக்கொண்டு அழுதுகொண்டிருப்பவர்கள்மீது தடியடி நடத்தி, அந்தக் கூட்டத்தை அப்புறப்படுத்த முயற்சிப்பதும் நடக்கிறது. பிரேதப் பரிசோதனைக்கு உறவினர்களிடமிருந்து கையெழுத்து வாங்கிய பிறகுதான் பிரேதப் பரிசோதனை செய்ய வேண்டும் என்ற விதியிருந்தும், அந்த கற்பகவல்லி விஷயத்தில் கடைப்பிடிக்கவில்லை. தமிழ்நாட்டில் ஏற்பட்ட பல்வேறு சம்பவங்களில் இந்த முறைகள் கடைப்படிக்கப்படவில்லை. இரண்டாவது, பரிசோதனைக்குப் பிறகு அந்த உடலை எடுத்துக் கொள்வதற்கு அந்த உறவினர்கள் கையொப்பமிட வேண்டும்; சாட்சிகள் கையொப்பமிட வேண்டும். அதுவும் அங்கு மறுக்கப்பட்டிருக்கிறது.

*முற்பகல் 11-45*

இதுபோன்ற நிலைகளெல்லாம், சந்தேகத்திற்குரிய ஒரு செய்தியாக பத்திரிகைகள்மூலம் நாட்டிலே பரவுகின்ற காரணத்தினால், தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்—கடலூர் மாவட்டம், சமீபத்திலே வேலூர் மாவட்டம், சென்னை போன்ற பல்வேறு இடங்களிலே, இதுபோன்ற மரண நிகழ்வுகள் ஏற்படுகின்றபோது, பயிற்சி இல்லாமல், அனுபவம் இல்லாமல் சில காவல் துறை அதிகாரிகள் கையாளுகின்ற முறையின் காரணமாக, இது மிகப்பெரிய செய்தியாக மாறி, கடலூரிலேகூட மூன்று நாட்கள் அந்த உறவினர்கள் பிணத்தை வாங்க மறுத்த அவலமெல்லாம் ஏற்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கு நிதி கொடுத்தபிறகு அதற்குத் தீர்வு ஏற்பட்டு, அந்தப் பிரச்சினை முடிக்கப்பட்டது.





நான் தமிழக அரசை வேண்டுவது, ஒரு சந்தேகத்திற்குரிய மரணம் என்கிற செய்தி நம்முடைய அரசுக்கு வருகின்றபோது, அதிலே R.D.O. போன்ற அதிகாரிகளையோ, மாவட்ட ஆட்சித் தலைவர்களையோ அனுப்பி, அவர்களின் விசாரணைக்கு உட்படுத்தி, அவர்களிடத்திலே பேசி, ஒரு நியாயமான முடிவிற்கு வரவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, இந்த ஆதி திராவிடப் பெண் உண்மையிலேயே கற்பழிக்கப்பட்டு, கொலை செய்யப்பட்டிருப்பாளென்று சொன்னால், நீதி விசாரணைக்கு உயர் நீதிமன்றத்தினுடைய ஓய்வு பெற்ற நீதிபதியையோ அல்லது நம்முடைய அரசு நியமிக்கின்ற நீதிபதியையோ நியமனம் செய்து, உண்மையிலேயே அந்தப் பெண் கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டிருப்பாளென்று சொன்னால், பாதிப்பிற்குள்ளான அந்தக் குடும்பத்திற்கு ஐந்து இலட்சம் ரூபாய் நிதியை வழங்கி, குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதற்கு அரசு உத்தரவிட வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக திரு. என். நன்மாறன்.*

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சித்தாலை என்கிற கிராமம், மதுரை நகரத்திலிருந்து 25 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. சுந்தர்ராஜன் என்பவருடைய மகள் கற்பகவல்லி, வயது 20, தனியார் மருத்துவமனையில் பணிபுரிந்து, டி.வி.எஸ். நகரிலுள்ள ஒருவருடைய வீட்டிற்கு home nurse என்கிற முறையில் வேலைக்குச் சென்றிருக்கிறார். அப்படி வேலையில் இருந்தபோதுதான் இப்படிப்பட்ட ஒரு மர்மமான மரணம் அவருக்கு ஏற்பட்டிருக்கிறது. இதில், திடீரென்று அவருடைய மரணம் தற்கொலை என்று அவர்கள் தீர்மானித்து, உடனடியாக post mortem செய்திருக்கிறார்கள். ஆனால், அந்தப் பெண்ணினுடைய பெற்றோர்கள் post mortem–க்கு ஒத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. தற்கொலை என்று காவல் துறையே முடிவு செய்து, அங்கேயே post mortem என்பது நடைபெற்றிருக்கிறது. அரசினர் இராஜாஜி மருத்துவமனையில் கூடுதலாக, மிகப் பெரிய அளவிற்கு காவல் துறை பந்தோபஸ்து போடப்பட்டிருக்கிறது. இன்றைக்கு நாளேடுகளில் வந்திருக்கின்ற செய்திகளின் அடிப்படையிலே, அந்தப் பெண்ணினுடைய காதலர்கள் என்று இரண்டு பேரைப்போட்டு, அதிலே ஏதோ நடந்தது மாதிரியாகியிருக்கிறது. ஆனால், அந்தமாதிரியான நபர்களைப் பாதுகாப்பதற்காகத்தான் இவ்வளவு காவல் துறையினர் ஈடுபடுத்தப்பட்டார்களா என்பது, ஒரு கேள்விக்குறியாக அமைந்திருக்கிறது.

இதிலே அந்தப் பெற்றோர், குடும்பத்தின் சார்பாக எங்களுடைய தலைவர் தோழர் என். வரதராஜன் அவர்களுக்கு ஒரு கடிதம் அனுப்பி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் அது fax செய்யப்பட்டிருக்கிறது. இதைப் பொறுத்தவரையில், முறையான விசாரணை என்பது நடத்தப்பட வேண்டும். குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு, தண்டிக்கப்பட வேண்டும். எதிர்வரும் காலங்களில் home nurse என்று வேலைக்குச் செல்பவர்களுக்கு, இளம் பெண்களுக்கு ஒரு பாதுகாப்பு இருக்க வேண்டும். அந்தக் குடும்பத்திலே அந்தப் பெண் மட்டும்தான் வேலைபார்ப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, வாழ்க்கைக்காக இப்படிப் போகிறபோது, தற்கொலை செய்துகொண்டார் என்று சொன்னாலுங்கூட, தற்கொலைக்குத் தூண்டியவர்கள் இருக்கிறார்கள் என்று கருதப்படுகிறது. அந்தப் பெண்ணினுடைய கன்னம் மற்றும் தொடைப் பகுதிகளில் நகக் கீறல்கள் இருப்பதாகத் தெரிகிறது. எனவே, இதுபோன்ற சூழலையும் முறையாக விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். R.D.O. விசாரணை நடத்தப்பட்டதா என்பதையும் அறிய விரும்புகிறேன். அதே சமயத்தில், எதிர்வரும் காலங்களில் மகளிர் ஆணையம் என்பதற்கு ஒரு சட்ட அந்தஸ்து கிடைத்து, அது பலப்படுத்தப்பட்டால், பெண்களுக்கு ஒரு பாதுகாப்பு இருக்கும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட வேண்டும். அந்தக் குடும்பத்தாருக்கு உரிய நஷ்டஈடு வழங்கப்பட வேண்டுமென்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வேண்டுகோளாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குணசேகரன், நீங்கள் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்களா? (குறுக்கீடு) இல்லை. மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

*(முற்பகல் 11-50)*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், சித்தாலை கிராமத்தைச் சேர்ந்த பி. சுந்தர்ராஜன் என்பவரின் மகள் கற்பகவல்லி, வயது 20, ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர். மதுரை நகரம், வடமலையான் மருத்துவமனையில் செவிலியராகப் பணிபுரிந்து வந்தார். கடந்த 22-1-2008 அன்று, மருத்துவமனை நிர்வாகம் கற்பகவல்லியை, மதுரையில் அழகு சாதனப் பொருட்கள் வியாபாரம் செய்து வரும் நாகேஷ் என்பவரின் தாயார் தங்கம் அம்மையாரைக் கவனித்துக்கொள்ள,





பழங்காநத்தம், டி.வி.எஸ். நகரிலுள்ள அவரது வீட்டில் இல்லச் செவிலியராக நியமித்திட, கற்பகவல்லி நாகேஷ் வீட்டிலேயே தங்கி, தங்கத்தைக் கவனித்து வந்துள்ளார்.

27-1-2008 அன்று காலை சுமார் 9½ மணிக்கு அருகில் இருந்த பொதுத் தொலைபேசிக்குச் சென்று, தொலைபேசியிலே பேசிவிட்டு, இல்லம் திரும்பி குளியல் அறைக்குக் குளிக்கச் சென்றுள்ளார். வெகு நேரம் ஆகியும் வெளியே வராததால், வீட்டிலிருந்தவர்கள் கதவைத் தட்டிப் பார்க்க, பதிலேதும் இல்லாததால் கதவை உடைத்து திறந்து பார்த்துள்ளனர். கற்பகவல்லி குளியல் அறையில் மின்விசிறியில் தனது துப்பட்டாவால் தூக்கிட்டுத் தொங்கிக்கொண்டிருந்துள்ளார். உடனடியாக, காவல் துறையினருக்குத் தகவல் தெரிவிக்க, காவல் துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து, பிரேதத்தைக் கைப்பற்றி, மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இதுகுறித்து, நாகேஷின் ஓட்டுநர் நம்பிகுமார் கொடுத்த புகாரின்பேரில், சுப்பிரமணியபுரம் காவல் நிலையக் குற்ற எண் 86/2008, பிரிவு 174, குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டப்படி வழக்குப் பதிவு செய்து விசாரணையை மேற்கொண்டனர்.

மருத்துவமனையில் பிரேதப் பரிசோதனைக்குப் பின்னர், கற்பகவல்லியின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் வடமலையான் மருத்துவமனையின் நிர்வாகத்திடம் இழப்பீடாக ஒரு இலட்சம் ரூபாய் கேட்டு, பிரேதத்தை வாங்க மறுத்துள்ளனர். மாலை ஐந்து மணியளவில் மருத்துவமனை நிர்வாகம் ஒரு இலட்ச ரூபாய் கொடுப்பதற்கு ஒப்புக்கொண்டு 25,000 ரூபாய் கொடுத்ததன் பேரில், கற்பகவல்லியின் பெற்றோர் பிரேதத்தைப் பெற்று சித்தாலைக்கு எடுத்துக் கொண்டு சென்று எரியூட்டியுள்ளனர்.

மருத்துவமனை பிரேதப் பரிசோதனையில், கற்பகவல்லியின் உடலில் தூக்கிட்டுக்கொண்ட அடையாளத்தைத் தவிர வேறு எந்தக் காயமும் இல்லையென்று தெரியவந்துள்ளது.

புலன்விசாரணையின்போது, கற்பகவல்லியின் பெற்றோர் அவரது இறப்பு குறித்து எந்தவிதச் சந்தேகத்தையும் தெரிவிக்கவில்லை. புலன்விசாரணையில், வாடிப்பட்டி காவல் நிலைய சரகம், தனிச்சையத்தைச் சேர்ந்த ஓட்டுநர் துரைராஜ் என்பவருடன் கற்பகவல்லிக்கு கடந்த சில மாதங்களாகப் பழக்கம் ஏற்பட்டிருந்ததாகவும், கற்பகவல்லி துரைராஜிடம் தன்னைத் திருமணம்

[திரு. துரைமுருகன்] [2008 ஜனவரி 31

செய்துகொள்ளுமாறு வலியுறுத்த, துரைராஜ் மறுத்த காரணத்தினால் அவர் மனமுடைந்து தற்கொலை செய்துகொண்டதாகத் தெரியவந்தது. இதன்பேரில், துரைராஜ் கற்பகவல்லியை தற்கொலை செய்துகொள்ளத் தூண்டிய குற்றத்திற்காக 29-1-2008 அன்று கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டுள்ளார். வழக்கு புலன்விசாரணையில் உள்ளது.

மதுரையிலேயே இருவரிடையே ஏற்பட்ட காதல் கைவிடல் காரணமாக நடைபெற்ற சம்பவம் இதுவென்று முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. இதற்கு விசாரணைக் கமிஷன் அமைப்பதென்றால், அன்றாடம் ஒரு விசாரணைக் கமிஷன் அமைக்க வேண்டியதாகிவிடும். உள்ளூர் காவல் துறையினர் இதனை விசாரித்து வருகிறார்கள். இதிலே மேலும் விரிவாகவும், ஆழமாகவும் விசாரித்து, உண்மையை அறிந்துகொள்ள தமிழ்நாடு குற்றப் புலனாய்வுத் துறை Crime Branch C.I.D. பிரிவின்மூலமாக விசாரணை நடத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரச்சினையினுடைய தன்மையை நமது உறுப்பினர்கள் எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். அதிகாரிகளும், நிர்வாகமும் வழங்கிய இந்தத் தகவல்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தரப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. இருந்தாலும். . (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதன்மீது விவாதம் கிடையாது, உட்காருங்கள். (குறுக்கீடு)

## 4. அறிவிப்பு

### அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைக்கு உறுப்பினர்கள் தேர்வு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைக்கு செனட் அலுவல்சாரா உறுப்பினர்களாகப் பணியாற்றுவதற்குக் கீழ்க்கண்ட சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து முறையாக வேட்பு மனுக்கள் வரப்பெற்றுள்ளன:

திரு. தா. உதயசூரியன்

திரு. ஆ. அருண்மொழிதேவன்

திரு. என்.ஆர். ரங்கராஜன்



2008 ஜனவரி 31] [பேரவைத் தலைவர்]

தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையும், முறையாக வரப்பெற்றுள்ள வேட்பு மனுக்களின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால், வேட்பு மனு அளித்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் மூவரும் அந்தப் பதவிக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன்.

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் பதவிக் காலம் 5-12-2010 வரை ஆகும். தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் ஏதாவது ஒரு காரணத்திற்காகப் பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அந்த நாளோடு அவருடைய ஆட்சிமன்றப் பேரவைக் குழுவின் உறுப்பினர் பதவியும் முடிவடையும்.

## 5. அறிக்கைகள் அளித்தல்

### (அ) அரசு உறுதிமொழிக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கை அளித்தல். அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன்.

முற்பகல் 11-55

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007-2008 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவினுடைய பதின்மூன்றாவது முதல் பதினேழாவது வரையிலான ஐந்து அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) மனுக்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மனுக்கள் குழுத் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2007-2008 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் இருபத்து ஒன்பதாவது முதல் முப்பத்து எட்டாவது வரையிலான பத்து அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 6. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது கொடுக்கப்பட்ட திருத்தங்கள் இன்று முன்மொழியப்பட்டு வழிமொழியப்பட வேண்டும். முதலில் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்:

"1. திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு தொகுதியில் கோணசமுத்திரம் கிராமக் கணக்கில் உள்ள உபரி நிலங்களைப் பண்படுத்தி, அப்பகுதியில் புதிதாக தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரம் இந்த ஆண்டு அமைப்பது குறித்தும்;

2. தமிழ்க் கடலாக விளங்கிய திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களின் நூற்றாண்டு நினைவு விழாவினையொட்டி அவருடைய திருவுருவச் சிலை அமைப்பதற்கு அவர் வாழ்ந்த சென்னை மாநகரின் மையப்பகுதி ஒன்றில் அரசு அனுமதி வழங்குவது குறித்தும்;

3. திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டத்தை நிர்வாகச் சீர்திருத்தம் செய்யும் பொருட்டு, இப்பகுதியின் சிறப்பு நிலை கருதி, இரண்டாகப் பிரித்து ஆர்.கே. பேட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் ஒன்று இந்த ஆண்டு அமைப்பது குறித்தும்;

4. ஏரிகளின் மாவட்டம் என்று பெயர்பெற்ற ஒருங்கிணைந்த செங்கல்பட்டு மாவட்டம் பள்ளிப்பட்டு தொகுதியில் பாலாபுரம், பொம்மாரஜீபேட்டை, கிருஷ்ணா குப்பம், பத்மாபுரம் ஆகிய இடங்களில் இந்த ஆண்டு புதிய ஏரிகள் அமைப்பது குறித்தும்;

5. பள்ளிப்பட்டு தொகுதியில் உள்ள உபரி நிலங்களைப் பயன்படுத்தி, அப்பகுதியில் புதிய மின் உற்பத்தி நிலையம் (NEW GENERATION UNIT) ஒன்று இந்த ஆண்டு அமைப்பது குறித்தும்;





6. கல்லூரியோ, பெரிய தொழிற்சாலையோ இல்லாத பகுதியாக விளங்கும் தமிழக வடக்கெல்லை தொகுதியான பள்ளிப்பட்டு தொகுதியில் அரசாங்கத்தின் சார்பில் புதிய கல்லூரி ஒன்று, 'டாக்டர் கலைஞர் பொன்விழா கல்லூரி' என்ற பெயரில் இந்த ஆண்டு தொடங்குவது குறித்தும்;

7. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை புதிய வளாகத்திற்கு மாற்றப்படும்பொழுது, அவ்வளாகத்தில் அமையும் சட்டமன்றப் பேரவைக் கட்டடம் 'கலைஞர் பொன்விழாக் கட்டடம்' என்ற பெயரால் அமைப்பது குறித்தும், மாண்புமிகு முதல்வர் அவர்களின் சீரிய தொண்டினை நினைவில் கொள்ளும் வகையில் குறிப்பிடத்தக்க, சிறப்பு நிகழ்வுகள் மட்டும் அக்கட்டடத்தில் கல்வெட்டுகளாக (Tabloids) பொறிக்கப்படுவது குறித்தும்;

8. திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு தொகுதியில் உள்ள சிவில் (உரிமையியல் நீதிமன்றம்) கோர்ட்டை, இந்த ஆண்டு குற்றவியல் நீதிமன்றத்துடன் கூடியதாக நிலை உயர்த்துவது குறித்தும்;

9. திருவள்ளூர் மாவட்டம், பொதட்டூர்ப்பேட்டை பேரூராட்சி எல்லையில் வருவாய்த் துறைக்குச் சொந்தமான, தாமரைக் குளமும், அதன் பகுதிகளிலும் அறவே நீர்வரத்து அற்ற நிலையைக் கருத்தில் கொண்டு, அரசுக் கட்டடங்கள் அமைய வழிவகை செய்வது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வழிமொழிதல்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்:

[திரு. கோவை தங்கம்] [2008 ஜனவரி 31

12. வால்பாறை நகராட்சியில் இலவச தொலைகாட்சிப் பெட்டிகள், இலவச கேஸ் அடுப்புகள், இலவச சேலை, வேட்டிகள் வழங்குவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட என்னுடைய திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்:

"1. ஏழை விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்ற நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ.1,000/– வீதம் வழங்குவது குறித்தும்;

2. கரும்பு விவசாயிகள் அனைவருக்கும், டன்னுக்கு ரூ.1,500/– வீதம் வழங்குவது குறித்தும்;

3. தமிழகத்தில் உள்ள அனைத்து அரசுப் பள்ளிகளிலும் கல்விக்கண் திறந்த காமராஜர் உருவச் சிலை அமைப்பது குறித்தும்;

4. சோளிங்கர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள காவேரிப்பாக்கம் ஏரியைத் தூர்வாரிச் செப்பனிடுவது குறித்தும்;

5. சோளிங்கர் சட்டமன்றத் தொகுதியில் ஏற்கெனவே அரசு அறிவித்தபடி ரோப் கார் வசதியை உடனடியாக அமைப்பதன் அவசியம் குறித்தும்;

6. சோளிங்கர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள காவேரிப்பாக்கத்தில் ஓர் அரசு பொதுநல மருத்துவமனை அமைப்பதன் அவசியம் குறித்தும்;

7. சோளிங்கர் சட்டமன்றத் தொகுதி காவேரிப்பாக்கத்தில் உள்ள ஆயர்பாடியில் கால்நடை மருத்துவமனை அமைப்பதன் அவசியம் குறித்தும்;



2008 ஜனவரி 31] [திரு. அருள் அன்பரசு]

8. சோளிங்கரைச் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதன் அவசியம் குறித்தும்;

9. சோளிங்கரில் ஒரு புறவழிச் சாலை அமைப்பதன் அவசியம் குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

***திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என் நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட என்னுடைய திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்:

"1. புதிய தொழில்கள் தொடங்கும்போது தொழிலாளர் உரிமைகள் பாதுகாக்கப்படுவது குறித்தும்;

2. நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ.1,000/– வழங்கப்படுவது குறித்தும்;

3. குடும்ப அட்டை வைத்திருக்கும் அனைவருக்கும் வண்ணத் தொலைக்காட்சிப்பெட்டி வழங்குவது குறித்தும்;

4. பயன்படாத நீர்நிலைகளில் வசிப்போரில் பட்டா இல்லாத அனைவருக்கும் உரிய வகைமாற்றம் செய்து பட்டா வழங்குவது குறித்தும்;

5. மதுரை மற்றும் அனைத்து மாநகராட்சி, ஊராட்சிப் பள்ளிகளிலும் ஆசிரியர், அலுவலர் பணி இடங்கள் நிரப்பப்படுவது குறித்தும்;

6. விலைவாசியைக் கட்டுப்படுத்தி அத்தியாவசியப் பொருட்கள் நியாயவிலைக் கடைகளில் அளவு குறையாமல் வழங்குவது குறித்தும்;

7. தமிழகத்தில் மணல் கொள்ளை, அரிசி கடத்தல் ஆகியவற்றைத் தடுப்பது குறித்தும்;

[திரு. என். நன்மாறன்] [2008 ஜனவரி 31

8. மதுரை எல்லீஸ் நகர் – செல்லூர் மேம்பாலப் பணிகளை விரைவில் முடிப்பது குறித்தும்;

9. மதுரை மற்றும் அனைத்து மாநகராட்சிப் பகுதிகளிலும் பூமிக்கு அடியில் மின்வயர்கள் பதிப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

***திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட என்னுடைய திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்:

"1. காஞ்சிபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் ஆங்கிலேயர் காலத்து கட்டடத்தில் பிரசவ வார்டு இயங்கி வருகிறது. கட்டடம் மிகவும் பழுதடைந்துள்ளதால் வேறு புதிய கட்டடம் கட்டுவ்து குறித்தும்;

2. காஞ்சிபுரம் நகரில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ளதால் நகரின் நடுவில் உள்ள பேருந்து நிலையத்தை நகருக்கு வெளியே புறநகர்ப் பேருந்து நிலையம் பொன்னேரிக்கரையில் அமைப்பது குறித்தும்;

3. காஞ்சிபுரம் நகரில் காமராஜர் வீதியில் சுரங்கப்பாதை அமைக்க நிதி ஒதுக்கீடு செய்வது குறித்தும்;

4. காஞ்சிபுரம் தொகுதியில் தனியார் பொறியியல் கல்லூரி உள்ளது. அரசு பொறியியல் கல்லூரிகள் இல்லை. புதிய அரசு பொறியியல் கல்லூரி, அரசு கலைக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

5. நெசவாளர்கள் தொழில் செய்ய வீடு அடமானக் கடன் பெற்று திருப்பிச் செலுத்தாத நிலையில் உள்ளனர். ஆகவே, நெசவாளர்களின் கடன் தள்ளுபடி செய்வது குறித்தும்;



2008 ஜனவரி 31] [திருமதி பெ. கமலம்மாள்]

6. காஞ்சிபுரம் தொகுதியில், படித்த வேலையற்ற மாணவ, மாணவிகள் பயன்பெற சிப்காட் வளாகம் அமைப்பது குறித்தும்;

7. காஞ்சிபுரம் தொகுதியில் படித்த பெண்கள், குடும்பப் பெண்கள் வாழ்க்கைத்தரம் உயரவும், நெசவுத் தொழில், குடும்ப வருமானம் உயரவும், பெண்களுக்கான தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் தொழிற்பேட்டை அமைப்பது குறித்தும்;

8. காஞ்சிபுரத்திற்கு அருகில் உள்ள பாலாற்றிலிருந்து காஞ்சிபுரம் நகருக்கு குடிநீர் வழங்குவது குறித்தும்;

9. காஞ்சிபுரம் தொகுதி, முசரவாக்கம் கிராமத்தில் காய்கறி மற்றும் பழங்கள் பதப்படுத்தும் நிலையம் அமைக்க பூர்வாங்க ஏற்பாடுகள் செய்வது குறித்தும்;

10. காஞ்சிபுரம் நகரில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க நகருக்கு வெளியே பைபாஸ் சாலை, வெளிவட்டச் சாலை அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

***திரு. வை. காவேரி:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட என்னுடைய திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்:

"1. தமிழகத்தில் இந்து ஆலயங்கள், இஸ்லாமிய தர்க்காக்கள், கிறிஸ்தவ தேவாலயங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற அன்னதானத் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிடாதது குறித்தும்;

2. தமிழக விவசாயிகளுக்கு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள்மூலமாகக் கடன் வழங்குவது குறித்தும்;

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2008 ஜனவரி 31

3. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் செலுத்தியுள்ள வைப்புத்தொகை முதிர்வுற்றவுடன் திருப்பி வழங்காதது குறித்தும்;

4. தமிழ்நாட்டில் 69 நகராட்சிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டம் தாமதமாக நடைபெறுவதால் அந்த நகராட்சிகளில் பொதுமக்கள் பாதிக்கப்படுவதால் துரிதமாகப் பணிகள் மேற்கொள்வது குறித்தும்;

5. நதிநீர்ப் பிரச்சினைகளில் அரசு போதிய கவனம் செலுத்தாதது குறித்தும்;

6. தமிழ்நாட்டில் ஏற்பட்ட வெள்ளச் சேதத்திற்கு இதுவரை உரிய நிவாரணம் வழங்காதது குறித்தும்;

7. தமிழ்நாட்டில் அறிவிக்கப்படாத மின்வெட்டைச் சரிசெய்வதற்கான முன்னேற்பாடுகள் பற்றிக் குறிப்பிடாதது குறித்தும்;

8. விலைவாசி உயர்வு கடுமையாக உயர்ந்தபோதும், அதனைக் கட்டுப்படுத்துவது பற்றிக் குறிப்பிடாதது குறித்தும்;

9. கட்டுமானப் பொருட்களின் விலை ஏற்றத்தால் கட்டுமானத் தொழிலாளர்கள், கட்டுமானத் தொழில்கள் பாதிக்கப்படுவது குறித்தும்;

10. தமிழ்நாட்டிலிருந்து அதிக அளவில் ரேஷன் பொருட்கள் கடத்தப்படுவதும், அதனைத் தடுப்பது குறித்தும்;

11. தமிழ்நாட்டில் சாலைகள் அனைத்தும் தகுந்த பராமரிப்பின்றி மிகவும் மோசமான நிலையில் பழுதடைந்துள்ளதால் அவற்றைச் சரி செய்வது குறித்தும்;

12. சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைப்பதற்கு விவசாய நிலங்கள் அரசால் ஆர்ஜிதம் செய்யப்படுவதால் விவசாயிகள் பாதிப்பு அடைவது குறித்தும்;

13. விமான நிலையங்களை விரிவாக்கம் செய்கின்றபொழுது பாதிக்கப்படுகின்ற மக்களுக்கு உரிய நிவாரணம் வழங்குவது குறித்தும்;



2008 ஜனவரி 31] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

14. புதிய குடும்ப அட்டைகள் முறையாக விண்ணப்பித்த தகுதிபெற்ற அனைவருக்கும் வழங்குவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட என்னுடைய திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்:

"1. தமிழகத்தில் இந்து ஆலயங்கள், இஸ்லாமிய தர்க்காக்கள், கிறிஸ்தவ தேவாலயங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற அன்னதானத் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிடாதது குறித்தும்;

2. தமிழக விவசாயிகளுக்கு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள்மூலமாகக் கடன் வழங்குவது குறித்தும்;

3. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் செலுத்தியுள்ள வைப்புத்தொகை முதிர்வுற்றவுடன் திருப்பி வழங்காதது குறித்தும்;

4. தமிழ்நாட்டில் 69 நகராட்சிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டம் தாமதமாக நடைபெறுவதால் அந்த நகராட்சிகளில் பொதுமக்கள் பாதிக்கப்படுவதால் துரிதமாகப் பணிகள் மேற்கொள்வது குறித்தும்;

5. நதிநீர்ப் பிரச்சினைகளில் அரசு போதிய கவனம் செலுத்தாதது குறித்தும்;

6. தமிழ்நாட்டில் ஏற்பட்ட வெள்ளச் சேதத்திற்கு இதுவரை உரிய நிவாரணம் வழங்காதது குறித்தும்;

7. தமிழ்நாட்டில் அறிவிக்கப்படாத மின்வெட்டைச் சரிசெய்வதற்கான முன்னேற்பாடுகள் பற்றிக் குறிப்பிடாதது குறித்தும்;

[திரு. கே.ஏ. செங்கோட்டையன்] [2008 ஜனவரி 31

8. விலைவாசி உயர்வு கடுமையாக உயர்ந்த போதும், அதனைக் கட்டுப்படுத்துவது பற்றிக் குறிப்பிடாதது குறித்தும்;

9. கட்டுமானப் பொருட்களின் விலை ஏற்றத்தால் கட்டுமானத் தொழிலாளர்கள், கட்டுமானத் தொழில்கள் பாதிக்கப்படுவது குறித்தும்;

10. தமிழ்நாட்டிலிருந்து அதிக அளவில் ரேஷன் பொருட்கள் கடத்தப்படுவதும், அதனைத் தடுப்பது குறித்தும்;

11. தமிழ்நாட்டில் சாலைகள் அனைத்தும் தகுந்த பராமரிப்பின்றி மிகவும் மோசமான நிலையில் பழுதடைந்துள்ளதால் அவற்றைச் சரி செய்வது குறித்தும்;

12. சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைப்பதற்கு விவசாய நிலங்கள் அரசால் ஆர்ஜிதம் செய்யப்படுவதால் விவசாயிகள் பாதிப்பு அடைவது குறித்தும்;

13. விமான நிலையங்களை விரிவாக்கம் செய்கின்றபொழுது பாதிக்கப்படுகின்ற மக்களுக்கு உரிய நிவாரணம் வழங்குவது குறித்தும்;

14. புதிய குடும்ப அட்டைகள் முறையாக விண்ணப்பித்த தகுதிபெற்ற அனைவருக்கும் வழங்குவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், திரு. டி. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட என்னுடைய திருத்தத்தை நான் தீவிரமாக முன்மொழிகிறேன்:



2008 ஜனவரி 31] [திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்]

"1. தமிழகத்தில் இந்து ஆலயங்கள், இஸ்லாமிய தர்க்காக்கள், கிறிஸ்தவ தேவாலயங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற அன்னதானத் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிடாதது குறித்தும்;

2. தமிழ்க விவசாயிகளுக்கு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள்மூலமாக கடன் வழங்குவது குறித்தும்;

3. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் செலுத்தியுள்ள வைப்புத்தொகை முதிர்வுற்றவுடன் திருப்பி வழங்காதது குறித்தும்;

4. தமிழ்நாட்டில் 69 நகராட்சிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டம் தாமதமாக நடைபெறுவதால் அந்த நகராட்சிகளில் பொதுமக்கள் பாதிக்கப்படுவதால் துரிதமாகப் பணிகள் மேற்கொள்வது குறித்தும்;

5. நதிநீர்ப் பிரச்சினைகளில் அரசு போதிய கவனம் செலுத்தாதது குறித்தும்;

6. தமிழ்நாட்டில் ஏற்பட்ட வெள்ளச் சேதத்திற்கு இதுவரை உரிய நிவாரணம் வழங்காதது குறித்தும்;

7. தமிழ்நாட்டில் அறிவிக்கப்படாத மின்வெட்டைச் சரிசெய்வதற்கான முன்னேற்பாடுகள் பற்றிக் குறிப்பிடாதது குறித்தும்;

8. விலைவாசி உயர்வு கடுமையாக உயர்ந்தபோதும் அதனைக் கட்டுப்படுத்துவது பற்றிக் குறிப்பிடாதது குறித்தும்;

9. கட்டுமானப் பொருட்களின் விலை ஏற்றத்தால் கட்டுமானத் தொழிலாளர்கள், கட்டுமானத் தொழில்கள் பாதிக்கப்படுவது குறித்தும்;

10. தமிழ்நாட்டிலிருந்து அதிக அளவில் ரேஷன் பொருட்கள் கடத்தப்படுவதும், அதனைத் தடுப்பது குறித்தும்;

11. தமிழ்நாட்டில் சாலைகள் அனைத்தும் தகுந்த பராமரிப்பின்றி மிகவும் மோசமான நிலையில் பழுதடைந்துள்ளதால் அவற்றைச் சரி செய்வது குறித்தும்;

[திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்][2008 ஜனவரி 31

12. சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைப்பதற்கு விவசாய நிலங்கள் அரசால் ஆர்ஜிதம் செய்யப்படுவதால் விவசாயிகள் பாதிப்பு அடைவது குறித்தும்;

13. விமான நிலையங்களை விரிவாக்கம் செய்கின்றபொழுது பாதிக்கப்படுகின்ற மக்களுக்கு உரிய நிவாரணம் வழங்குவது குறித்தும்;

14. புதிய குடும்ப அட்டைகள் முறையாக விண்ணப்பித்த தகுதிபெற்ற அனைவருக்கும் வழங்குவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் அதிதீவிரமாக வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட என்னுடைய திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்:

"1. தமிழகத்தில் இந்து ஆலயங்கள், இஸ்லாமிய தர்க்காக்கள், கிறிஸ்தவ தேவாலயங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற அன்னதானத் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிடாதது குறித்தும்;

2. தமிழக விவசாயிகளுக்கு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள்மூலமாகக் கடன் வழங்குவது குறித்தும்;

3. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் செலுத்தியுள்ள வைப்புத்தொகை முதிர்வுற்றவுடன் திருப்பி வழங்காதது குறித்தும்;

4. தமிழ்நாட்டில் 69 நகராட்சிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டம் தாமதமாக நடைபெறுவதால் அந்த நகராட்சிகளில் பொதுமக்கள் பாதிக்கப்படுவதால் துரிதமாகப் பணிகள் மேற்கொள்வது குறித்தும்;

5. நதிநீர்ப் பிரச்சினைகளில் அரசு போதிய கவனம் செலுத்தாதது குறித்தும்;



2008 ஜனவரி 31] [திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி]

6. தமிழ்நாட்டில் ஏற்பட்ட வெள்ளச் சேதத்திற்கு இதுவரை உரிய நிவாரணம் வழங்காதது குறித்தும்;

7. தமிழ்நாட்டில் அறிவிக்கப்படாத மின்வெட்டைச் சரிசெய்வதற்கான முன்னேற்பாடுகள் பற்றிக் குறிப்பிடாதது குறித்தும்;

8. விலைவாசி உயர்வு கடுமையாக உயர்ந்தபோதும் அதனைக் கட்டுப்படுத்துவது பற்றிக் குறிப்பிடாதது குறித்தும்;

9. கட்டுமானப் பொருட்களின் விலை ஏற்றத்தால் கட்டுமானத் தொழிலாளர்கள், கட்டுமானத் தொழில்கள் பாதிக்கப்படுவது குறித்தும்;

10. தமிழ்நாட்டிலிருந்து அதிக அளவில் ரேஷன் பொருட்கள் கடத்தப்படுவதும், அதனைத் தடுப்பது குறித்தும்;

11. தமிழ்நாட்டில் சாலைகள் அனைத்தும் தகுந்த பராமரிப்பின்றி மிகவும் மோசமான நிலையில் பழுதடைந்துள்ளதால் அவற்றைச் சரி செய்வது குறித்தும்;

12. சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைப்பதற்கு விவசாய நிலங்கள் அரசால் ஆர்ஜிதம் செய்யப்படுவதால் விவசாயிகள் பாதிப்பு அடைவது குறித்தும்;

13. விமான நிலையங்களை விரிவாக்கம் செய்கின்றபொழுது பாதிக்கப்படுகின்ற மக்களுக்கு உரிய நிவாரணம் வழங்குவது குறித்தும்;

14. புதிய குடும்ப அட்டைகள் முறையாக விண்ணப்பித்த தகுதிபெற்ற அனைவருக்கும் வழங்குவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா.

[2008 ஜனவரி 31

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட என்னுடைய திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்:

"1. அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தும் ரேஷன் கடை மூலம் விநியோகம் செய்வது குறித்தும்;

2. சமச்சீர் கல்வியை அமல்படுத்தவும், தரமான கல்வியை உறுதிப்படுத்தவும் சமச்சீர் கல்வி அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ள ஆசிரியர்–மாணவர் விகிதாச்சாரம் 1 : 30 என்று அறிவிப்பது குறித்தும்;

3. வேலூர் மாவட்டம் தொடர்ந்து வறட்சியால் பாதிக்கப்படுவதாலும், வேலூர் மாவட்டத்தில் செல்லும் பாலாறு தோல் தொழிற்சாலைகளால் மாசுபட்டுள்ளதாலும், வேலூர் மாவட்டத்தின் குடிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் வேலூர் மாவட்டத்திற்கும் தொடர்ந்து நீட்டிப்புத் திட்டமாக அறிவிப்பது குறித்தும்;

4. பதிவு பெற்றுள்ள இளைஞர்கள் அனைவருக்கும் நிரந்தர வேலைவாய்ப்பு கிடைத்திட அரசு அலுவலகங்கள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் காலியாக உள்ள பணியிடங்கள் அனைத்தையும் நிரப்பிடுவது குறித்தும், வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள வேலூர் மாவட்டத்தில் தொழில்நுட்பப் பூங்கா (I.T. Park), சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைக்கப்படுவது குறித்தும்;

5. தமிழகத்தில் நிலவிடும் தீண்டாமைக் கொடுமைகளை வேரோடு அழிக்கவும், வேலைவாய்ப்புகளில் காலியாக உள்ள பின்னடைவுப் பணியிடங்களை (Backlog) நிரப்பிடவும், தாழ்த்தப்பட்டோரிடமிருந்து பறிக்கப்பட்டுள்ள பஞ்சமி நிலங்களை மீட்டு அளித்திடவும் சிறப்புத் திட்டத்தை அறிவிப்பது குறித்தும்;

6. மிகவும் பின்தங்கியுள்ள முஸ்லீம் சிறுபான்மையின மக்கள் முன்னேற்றத்திற்காக சச்சார் கமிட்டி பரிந்துரையின் அடிப்படையில் ஒரு சிறப்புத் திட்டத்தை தமிழகத்தில் அறிவித்து, அமல்படுத்திட அறிவிப்புச் செய்வது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."



2008 ஜனவரி 31]

**திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மா. ராஜசேகரன்.

***திரு. மா. ராஜசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட என்னுடைய திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்:

"1. பெருந்தலைவர் ஐயா ஜி.கே. மூப்பனார் அவர்களுக்கு சென்னையில் சிலை அமைப்பது குறித்தும்;

2. தொட்டியம் சட்டமன்றத் தொகுதி ஸ்ரீராமசமுத்திரத்தில் நிரந்தர ஆற்றுக் குறம்பு அமைப்பது குறித்தும்;

3. சத்துணவில் வாழைப்பழம் வழங்குவது குறித்தும்;

4. பெருந்தலைவர் காமராஜ் திருவுருவச் சிலையை தமிழக அரசு பள்ளிகளில் நிறுவுவது குறித்தும்;

5. தொட்டியம் சட்டமன்றத் தொகுதியில் அரசு தொழிற் கல்வி தொடங்குவது குறித்தும்;

6. நெசவாளர்கள் கூட்டுறவுத் துறையில் வாங்கிய கடனைத் தள்ளுபடி செய்வது குறித்தும்;

7. தொட்டியம் சட்டமன்றத் தொகுதியில் முள்ளிப்பாடி வாய்க்காலில் அடிக்கடி ஏற்படும் மண் சரிவைத் தடுக்க சிமெண்ட் வாய்க்கால் அமைப்பது குறித்தும்;

8. முள்ளிப்பாடி பஞ்சாயத்து, கொண்டாம்பட்டி வாய்க்கால்களில் பழுதடைந்த மதகுகளை மாற்றுவது குறித்தும்;

9. மகேந்திரமங்களம் கதர் இலாகாவிற்குச் சொந்தமான கட்டடம் பழுதடைந்ததைப், பழுதுபார்த்து புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜசேகரன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

[2008 ஜனவரி 31

நண்பகல் 12–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பாண்டுரங்கன்.

***திரு. கு. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட என்னுடைய திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்:

"1. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் விவசாயிகள் வாங்கிய கடனைத் தள்ளுபடி செய்வது குறித்தும்;

2. வேலூர் மாவட்டத்தில் நிலத்தடி நீரில் ஃப்ளோரைடு அதிகம் உள்ளதாலும் குடிநீர்த் தட்டுப்பாடு அதிகம் நிலவுவதாலும் இதற்கு நிரந்தரத் தீர்வுகாண ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றுவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பாண்டுரங்கன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. பொன்னுதுரை.

***திரு. செ. பொன்னுதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்:

"1. பெருந்துறை தொகுதியில் அமைந்துள்ள சிப்காட் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் மாசுபட்ட சாயக் கழிவுநீரால் விவசாயப் பாசனக் கிணறுகள், குடிநீர் ஆதாரங்கள் மாசுபடுவதைத் தடுக்க அரசு சுமார் 700 கோடி ரூபாய் திட்டத்தில் குழாய் மூலம் கழிவுநீரை எடுத்துச் சென்று, சுத்திகரிப்புச் செய்து கடலில் கலக்கும் திட்டம் குறித்தும்;

2. பெருந்துறை பேரூராட்சியையும், கருமாண்டி செல்லிப்பாளையம் பேரூராட்சியையும் இணைத்து பெருந்துறை நகராட்சியாக அறிவிப்பது குறித்தும்;



2008 ஜனவரி 31] [திரு. செ. பொன்னுதுரை]

3. பெருந்துறை பகுதியில் நிலத்தடி நீரை உயர்த்தி, குளம் குட்டைகளுக்கு நீர் நிரப்பும் அத்திக்கடவு–அவினாசி நீர்ச் செறிவூட்டும் திட்டத்தை நிறைவேற்றுவது குறித்தும்;

4. பெருந்துறை தொகுதி, கருமாண்டி செல்லிபாளையம் பேரூராட்சி வார்டு எண் 12, திருவேங்கிப்பாளையம் பகுதியில் பேரூராட்சியின் அனைத்துப் பகுதிகளிலிருந்து வரும் கழிவுநீரைப் பாதாளச் சாக்கடைமூலம் அப்புறப்படுத்தும் திட்டம் குறித்தும்;

5. பெருந்துறை தொகுதியில் உள்ள ஊத்துக்குளி காவல் நிலையம் மிகவும் பழுதடைந்துள்ளது. புதிய காவல் நிலையக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

6. பெருந்துறை நகரில் பெருகிவரும் மக்கள் தொகை மற்றும் தொழிற்சாலைகளால் போக்குவரத்து மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. புதிய போக்குவரத்துக் காவல் நிலையம் அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**திரு. ஆர்.கே. பாரதி மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. பொன்னுதுரை அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ராம. சுப்புராம்.

**திரு. ராம. சுப்புராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட என்னுடைய திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்:

"1. பொன்னமராவதியைத் தனி தாலுகாவாக அறிவிப்பது குறித்தும்;

2. திருமயத்தைத் தலைமையிடமாகக் கொண்டு சுற்றுலா மையமாக அறிவிப்பது குறித்தும்;

3. தீரர் சத்தியமூர்த்திக்கு நினைவு மண்டபம் அமைப்பது குறித்தும்;

4. திருமயம் தொகுதியில் ஓர் அரசு கலைக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

[திரு. ராம. சுப்புராம்] [2008 ஜனவரி 31

5. விவசாயிகளுக்கு நெல் குவிண்டாலுக்கு ரூ.1,000/— மற்றும் கரும்புக்கு டன்னுக்கு ரூ.1,500/— வழங்குவது குறித்தும்;

6. பள்ளி மாணவ, மாணவிகள் தங்கிப் படிப்பதற்கு, ஆதி திராவிடர் நலத் துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைமூலம் விடுதி கட்டித் தருவது குறித்தும்;

7. பெருந்தலைவர் காமராஜர் சிலையை ஒவ்வோர் ஆரம்பப் பள்ளியிலும் நிறுவுவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ராம. சுப்புராம் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. தண்டபாணி, இருக்கையில் இல்லை. திரு. வீர. இளவரசன்.

***திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட என்னுடைய திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்:

"1. இந்தியாவில் பாயும் நதிகள் அனைத்தையும் தேசியமயமாக்க மத்திய அரசு உடனடியாக முயற்சிகளை மேற்கொள்ள மாநில அரசு வலியுறுத்துவது குறித்தும்;

2. தமிழகத்தில் விஷம் போல் ஏறியிருக்கின்ற அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வை உடனடியாகக் கட்டுப்படுத்த தமிழக அரசு நடவடிக்கை மேற்கொள்வது குறித்தும்;

3. முதியோர், ஆதரவற்றோர், விதவைகள் மற்றும் ஊனமுற்றோர் ஆகியோருக்கு அளிக்கப்படும் ஓய்வூதியம் தாமதமின்றிக் கிடைத்திடும் வகையில், விண்ணப்பித்து ஒரு மாத காலத்திற்குள் ஓய்வூதியம் கிடைக்க நடவடிக்கை மேற்கொள்வது குறித்தும்;

4. தமிழகத்தில், சிறப்புப் பொருளாதார மண்டலம் மற்றும் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைத்திட நிலம் கையகப்படுத்திடும்போது, விவசாய விளைநிலங்களைக் கவனத்தில் கொண்டு, விவசாய உற்பத்தி பாதிக்காத வகையில் நடவடிக்கை மேற்கொள்வது குறித்தும்;



2008 ஜனவரி 31] [திரு. வீர. இளவரசன்]

5. தமிழகத்தில் இருக்கின்ற ஆரம்பப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகவும், நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்துவதற்கு இந்த அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்வது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீர. இளவரசன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன்.

***திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட என்னுடைய திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்:

"1. புதுக்கோட்டை மாவட்டத்தில் மழைக் காலங்களில் கொள்ளிடம் வழியாக வரும் உபரி நீரைத் திருப்பிவிடுவது குறித்தும்;

2. ஆலங்குடி தொகுதிக்குட்பட்ட கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியத்தைத் தனி வட்டமாக அறிவிப்பது குறித்தும்;

3. ஆலங்குடியில் போக்குவரத்துப் பணிமனை தொடங்க நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

4. ஆலங்குடி தொகுதி, முள்ளங்குறிச்சி ஊராட்சியில் இருக்கும் மேல்நிலைப் பள்ளியை இரண்டாகப் பிரித்து, ஆதி திராவிட நலத் துறையின் சார்பில் ஓர் உயர்நிலைப் பள்ளியை உருவாக்குவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

228097.

[2008 ஜனவரி 31

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்:

"1. காங்கேயம், வெள்ளக்கோவில் நகரப் பகுதிக்கான 30 கோடி மதிப்பீட்டில் தயார் நிலையில் உள்ள காங்கேயம், வெள்ளக்கோவில் காவிரி 2-வது கூட்டுக் குடிநீர்த் திட்டம் குறித்தும்;

2. கைத்தறி நெசவாளர்களுக்கும் மற்றும் கூட்டுறவு நெசவாளர்கள் சங்க ஊழியர்களுக்கும் 10% கூலி உயர்வு மற்றும் நெசவாளர்களின் ஹட்கோ வீட்டு வசதிக் கடன்கள் மற்றும் வட்டிகளைத் தள்ளுபடி செய்வது குறித்தும்;

3. காங்கேயம் நீதிமன்றம் கடந்த 25 ஆண்டுகளாக வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. புதிய நீதிமன்றக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

4. ஈரோடு மாவட்டத் தலைமை நீதிமன்ற வளாகத்தில் அனைத்து நீதிமன்றங்கள் கட்டுவது மற்றும் பெருந்துறையில் புதிய நீதிமன்றம் கட்டுவது குறித்தும்;

5. நீண்டகாலக் கோரிக்கையான பழனி, தாராபுரம், காங்கேயம், சென்னிமலை, ஈரோடு அகல இரயில் பாதைத் திட்டத்திற்கு மாநில அரசின் நிதி ஒதுக்கீடு குறித்தும்;

6. காங்கேயம் மற்றும் சென்னிமலை பேரூராட்சிகளை நகராட்சியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

7. ஈரோடு மாநகரத்தின் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க அரசு மருத்துவமனை, பன்னீர்செல்வம் பூங்கா பகுதியில் மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

8. ஈரோடு மாநகரத்தினைச் சுற்றி உள்வட்டச் சாலை (Ring Road) அமைப்பது குறித்தும்;

9. சென்னிமலை மற்றும் சுற்றுப் பகுதிகளில் உற்பத்தியாகும் கைத்தறி மற்றும் விசைத்தறித் துணிகளை நேரடியாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் திட்டம் குறித்தும்;



2008 ஜனவரி 31] [திரு. விடியல் எஸ். சேகர்]

10. உலகப் புகழ் பெற்ற "கந்தர் சஷ்டி கவசம்" அரங்கேறிய சென்னிமலை பேரூராட்சியை புராதன, ஆன்மீக, தொன்மையான நகரமாக அறிவிக்க வேண்டிய அவசியம் குறித்தும்;

11. அவினாசி – அத்திக்கடவு திட்டத்தை நிறைவேற்றுவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**திரு. ராம. சுப்புராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட என்னுடைய திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்:

"1. நெல்லுக்கான கொள்முதல் விலையை குவிண்டால் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் என வழங்குவது குறித்தும்;

2. அரவாணிகளுக்கு நல வாரியம் அமைக்கப்படுவதுபோல சமூகத்தில் புறக்கணிக்கப்பட்டுள்ள குறவர்கள், கல்லொட்டர்கள் ஆகியோருக்காகவும் நல வாரியங்கள் அமைக்கப்படுவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

***திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார், இருக்கையில் இல்லை. டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும். தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட என்னுடைய திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்:

[டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்] [2008 ஜனவரி 31

"1. விவசாயப் பெருமக்களுக்கு நெல் குவிண்டாலுக்கு ரூ.1,000/- மற்றும் கரும்பு டன்னுக்கு ரூ.1,500/- வழங்குவது குறித்தும்;

2. பெருந்தலைவர் காமராஜர் சிலையை ஒவ்வொரு ஆரம்பப் பள்ளிகளின் முன்பு அமைப்பது குறித்தும்;

3. நெசவாளர்கள் வீட்டுமனை மீது பெற்ற கடனைத் தள்ளுபடி செய்வது குறித்தும்;

4. செய்யாறு தொகுதியில் அரசு பொறியியல் கல்லூரி அமைப்பது குறித்தும்;

5. சிமெண்ட் தட்டுப்பாட்டை நீக்குவது குறித்தும்;

6. விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு விவசாயிகளே விலை நிர்ணயம் செய்வது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்:

"1. விவசாயப் பெருமக்களுக்கு நெல் கொள்முதல் குவிண்டாலுக்கு 1,000/- ரூபாயும், கரும்பு கொள்முதல் டன்னுக்கு 1,500/- ரூபாயும் வழங்குவது குறித்தும்;

2. சாயக்கழிவுநீரை கடலில் கலக்கும் ரூ.700 கோடித் திட்டம் குறித்தும்;

3. தனியார் கையகப்படுத்தியுள்ள அரசு நிலத்தை எடுத்து ஏழை மக்களுக்கு வினியோகிப்பது குறித்தும்;

4. காலவரையறையின்றி வீட்டுமனைப் பட்டா தொடர்ந்து வழங்கிட தனி நிர்வாக அமைப்பை உருவாக்குவது குறித்தும்;



2008 ஜனவரி 31] [திரு. சி. கோவிந்தசாமி]

5. திருப்பூர் மாநகராட்சியில் உள்ள உள் கட்டமைப்பைச் சீர்செய்ய சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்வது குறித்தும்;

6. திருப்பூர் நகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கு வடக்குப் பகுதி அவினாசி ரோடு தொடங்கி தெற்கு பல்லடம் பாதை வரை உயர்த்தப்பட்ட வேக வழித்தடம் (மேம்பாலம்) அமைப்பது குறித்தும்;

7. திருப்பூரின் மையத்தில் ஓடுகின்ற நொய்யலாற்றின் கரையின் இரு பகுதிகளிலும் சாலைகளை அமைத்து திருப்பூர் நகரத்தில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பது குறித்தும்;

8. தொழில் நகரமான திருப்பூரில் தொழிலாளர்கள் வசிப்பதற்கு குடியிருப்புகள் கட்டித் தருவது குறித்தும்;

9. நீலகிரி மாவட்டத்தில் நிலப்பட்டா வழங்குவதற்குத் தடையாக உள்ள சட்டத்தை நீக்குவது குறித்தும்;

10. குடிசை மாற்று வாரியம், வீட்டுவசதி வாரிய வீடுகளில் வசிப்பவர்கள், நெசவாளர்கள் மற்றும் ஏழை மக்களின் வீட்டின் மீதுள்ள கடன் மற்றும் வட்டியைத் தள்ளுபடி செய்வது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

***திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

***திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட என்னுடைய திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்:

"1. மேட்டூர் அணை நிரம்பி வழியும்போது வெளியேறும் உபரி நீரைக் குழாய்மூலம் தாரமங்கலம், எடப்பாடி, ஓமலூர் போன்ற பகுதிகளில் உள்ள ஏரி குளங்களில் நிரப்பி நிலத்தடி நீரையும், விவசாயத்தையும் மேம்படுத்தும் திட்டம் குறித்தும்;

[திரு. அ. தமிழரசு] [2008 ஜனவரி 31

2. ஓமலூர் நகரில் பொதுமக்கள், விவசாயிகளின் நலன் கருதி உழவர் சந்தை அமைப்பது குறித்தும்;

3. ஓமலூர் முதல் தொப்பூர் வரையிலான 4 வழிப் பாதையை விரைந்து முடிப்பது குறித்தும்;

4. ஓமலூர் தொகுதி, வெள்ளாளப்பட்டி புறக்காவல் நிலையத்தை மீண்டும் அமைப்பது குறித்தும்;

5. ஏற்காடு மலையிலிருந்து வரும் மழைநீர் கீழ் சரபங்கா நதியின் வழியாக ஓமலூர், எடப்பாடி, தாரமங்கலம் போன்ற பகுதிகளில் உள்ள ஏரிகளில் நிரப்புவது குறித்தும்;

6. ஏற்காடு மலையிலிருந்து வரும் மழை நீரை சர்க்கரை செட்டிப்பட்டி ஊராட்சியில் குருமச்சி கரடு, பன்றிக்கரடு இடையே சிறு அணை கட்டி தண்ணீரைச் சேமித்து விவசாயத்திற்குப் பயன்படுத்தும் திட்டம் குறித்தும்;

7. ஓமலூர் தொகுதியில் கயிறு உற்பத்தித் தொழிற்சாலை அமைக்க முதல் கூட்டத் தொடரிலேயே அறிவிக்கப்பட்டும், செயலாக்கத் திட்டம் குறித்தும்;

8. ஓமலூர் தொகுதியில் வாழும் கஞ்சம்ரெட்டி, குருமன்ஸ் இன மக்களுக்கு சாதிச் சான்று வழங்குவது குறித்தும்;

9. ஓமலூர் தொகுதி, மேட்டுப்பட்டி பூலா ஏரியிலிருந்து வெளியேறும் நீர் புளியம்பட்டி வாய்க்கால் வழியாக வரும்போது உடைப்பு ஏற்பட்டு மிகுந்த சேதாரம் ஏற்படுகிறது. இதைத் தடுக்க வாய்க்கால் கரையை உயர்த்தும் திட்டம் குறித்தும்;

10. ஓமலூர் இடுகாட்டில் இறந்தோரை எரியூட்ட மின்மயானம் அமைப்பது குறித்தும்;

11. ஓமலூரில் பால் பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் குறித்தும்;

12. ஓமலூர் தொகுதியைச் சார்ந்த சொந்த வீடு இல்லாதோர் அனைவருக்கும் வீட்டுமனை வழங்குவது குறித்தும்;



2008 ஜனவரி 31] [திரு. அ. தமிழரசு]

13. ஏற்காடு மலையிலிருந்து வரும் மழைநீரைத் தேக்க டேனிஷ்பேட்டை அருகில் கோம்பையில் சிறு அணையைக் கட்டுவது குறித்தும்;

14. ஓமலூர் தொகுதி, கணவாய்ப்புதூரிலிருந்து கண்ணப்பாடி வழியாக ஏற்காட்டிற்கு ஒரு பாதை அமைத்தால் தருமபுரி, பெங்களூரு பகுதியிலிருந்து வருபவர்களுக்கு 30 கி.மீ. பயணம் குறையும் இதற்கான திட்டம் குறித்தும்;

15. தொப்பூரிலிருந்து வேப்பிலை ஊராட்சி, V. மோட்டூர் வரையிலான கிராமச் சாலையை தார்ச் சாலையாக மாற்றினால் பயண நேரம், தூரம் 20 கி.மீ. குறையும் இதற்கான திட்டம் குறித்தும்;

16. ஓமலூர் தொகுதி, எண் 43, பாகல்பட்டி தொடக்க வேளாண்மை வங்கி 100 ஆண்டினை நிறைவு செய்துள்ளதையொட்டி நூற்றாண்டு விழாவும், நினைவுக் கட்டடமும் கட்டுவது குறித்தும்;

17. பெருகிவரும் பன்னாட்டு நிறுவனங்களின் சட்டப்பிரச்சினையைக் கையாள, சர்வதேச சட்ட நுணுக்கங்களைக் கற்பிக்கவும், சட்ட வல்லுனர்களை உருவாக்கவும் (School of Law) தமிழகத்தில் அமைப்பது குறித்தும்;

18. ஓமலூர் அரசு மருத்துவமனையில் பிணப் பரிசோதனைக் கூடத்தில் பிணங்கள் அழுகாமலிருக்க குளிர்சாதன பிணவறை கட்டுவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி.

***திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கீழ்க்கண்ட என்னுடைய திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்:

[திரு. வை. காவேரி] [2008 ஜனவரி 31

"1. சேலம் மாவட்டம், எடப்பாடி நகரத்தில் சரபங்கா நதி செல்கிறது. இந்த நதி எடப்பாடி நகரம் கவுண்டம்பட்டிக்கும்–வெள்ளாண்டிவலசுக்கும் இடையே ஓடுகிறது. கவுண்டம்பட்டியில் உள்ள மக்கள் அரசு ஆண்கள் பள்ளி, அரசு மருத்துவமனை, வட்டாட்சியர் அலுவலகம் செல்லவேண்டுமானால் 2 கிலோ மீட்டர் தூரம் சுற்றிவரவேண்டியுள்ளது. எனவே, எடப்பாடியில் கவுண்டம்பட்டிக்கும்–வெள்ளாண்டிவலசுக்கும் இடையே சரபங்கா நதியின் குறுக்கே பாலம் ஒன்று கட்டுவது குறித்தும்;

2. சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் பூலாம்பட்டி என்ற ஊர் காவிரி ஆற்றின் ஓரமாக உள்ளது. இங்கு படகுச் சவாரி செய்வதற்கு வசதி உள்ளது. எனவே, பூலாம்பட்டியை சுற்றுலாத் தலமாக்குவது குறித்தும்;

3. சேலம் மாவட்டம், எடப்பாடி நகரம், எடங்கணசாலை, பேரூர், எளம்பிள்ளை ஆகிய பகுதிகளில் சுமார் 50 ஆயிரம் விசைத்தறிகள் உள்ளன. எடப்பாடியில் ஜவுளிப் பூங்கா அமைப்பது குறித்தும்;

4. சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரத்தில் திருச்செங்கோடு கூட்டுறவு விற்பனைச் சங்கம் (TCMS) உள்ளது. இங்கு அதிகமாக பருத்தி விற்பனைக்கு வருகிறது. எனவே, கொங்கணாபுரத்தில் ஒரு நூற்பு ஆலை அமைப்பது குறித்தும்;

5. சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் புதிய கல்லூரி தொடங்குவது குறித்தும்;

6. சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் அதிகமாக கரும்பு உற்பத்தியாகிறது அங்கு கரும்பு ஆலை அமைப்பது குறித்தும்;

7. சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், இருப்பாளி ஊராட்சி கலர்பட்டியில் மகப்பேறு மருத்துவமனை தொடங்குவது குறித்தும்;

8. சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம் அ.புதூர் ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்குவது குறித்தும்;



2008 ஜனவரி 31] [திரு. வை. காவேரி]

9. சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், மகுடஞ்சாவடியில் உள்ள சார்பதிவாளர் அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் உள்ளது. எனவே, புதிய அரசுக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

10. சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகரத்தில் உள்ள தீயணைப்பு நிலையம் வாடகைக் கட்டடத்தில் உள்ளது. இந்தத் தீயணைப்பு நிலையத்திற்குத் தனி இடம் உள்ளது. அதற்குப் புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

11. கொங்கணாபுரம், பேரூர், குண்டுரசம்பாளையத்தில் புதிய நீர் உந்து நிலையம் ஒன்று கட்டுவது குறித்தும்;

12. சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், வெள்ளாளபுரம் ஊராட்சியில் 10 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்குத் தனியாக நீர் உந்து நிலையம் ஒன்று கட்டுவது குறித்தும்;

13. சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகரத்தில் அதிகமாக சாக்கடை நீர் தேங்குகிறது. இதனைப் போக்க எடப்பாடி நகரத்தில் பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைப்பது குறித்தும்;

14. மேட்டூர் அணையின் உபரி நீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்தும் வகையில் குஜராத் அரசு கொண்டுவந்துள்ள திட்டத்தைப்போல் பாசனத் திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்தும்;

15. சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியத்தில் இதுவரை காவல் நிலையம் இல்லை. எனவே, கொங்கணாபுரத்தில் புதிய காவல் நிலையம் தொடங்குவது குறித்தும்;

16. சேலம் மாவட்டம், எடப்பாடியிலிருந்து கல்வடங்கம், பூலாம்பட்டி பகுதிக்குச் செல்லும் சாலை மிகவும் குறுகிய, நெருக்கடியான சாலையாக உள்ளது. எடப்பாடியில் ஒரு வட்டச் சாலை அமைப்பது குறித்தும்;

17. சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டிக்கும்–பவானி தொகுதி, நெருஞ்சிப்பேட்டைக்கும் இடையே காவிரி ஆற்றின் குறுக்கே பாலம் ஒன்று கட்டுவது குறித்தும்;

[திரு. வை. காவேரி] [2008 ஜனவரி 31

18. சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், தங்காயூர் ஊராட்சிப் பகுதியில் மகப்பேறு மருத்துவமனை தொடங்குவது குறித்தும்;

19. சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், கண்டர்குலமாணிக்கம் ஊராட்சி, குருக்கலாம்பாளையத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்:

"1. சேலம் மாவட்டத்தில், மேட்டூர் அணை நிரம்பி வழியும்போது வெளியேறும் உபரி நீரை குழாய்மூலம் தாரமங்கலம், ஓமலூர், எடப்பாடி போன்ற பகுதிகளில் உள்ள ஏரி, குளங்களில் நிரப்பி நிலத்தடி நீரையும் விவசாயத்தையும் மேம்படுத்தும் திட்டம் குறித்தும்;

2. சேலம் மாவட்டம், தாரமங்கலம் பேரூராட்சியில் சுமார் 25,000 பேர் வசிக்கும் தாரமங்கலம் பேருந்து நிலையம், மாரியம்மன் கோயில் பகுதி, சந்தைப்பேட்டை பகுதி ஆகிய இடங்களில் நவீனக் கழிப்பிடம் அமைக்கும் திட்டம் குறித்தும்;

3. சேலம் மாவட்டம், தாரமங்கலத்தில், பொதுப் பணித் துறை சார்பில் சுற்றுலா ஆய்வு மாளிகை அமைக்கும் திட்டம் குறித்தும்;

4. சேலம் மாவட்டம், மானத்தாள் ஊராட்சியில் சுமார் 300 குடும்பங்கள் வசிக்கின்றனர். மூன்று மேல்நிலைத் தொட்டிகள் உள்ளன. காவிரித் தண்ணீர் காமனேரி ஜம்புவிலிருந்து பைப் லைன் அமைத்து நீர் ஏற்றும் திட்டம் குறித்தும்;



2008 ஜனவரி 31] [திரு. பெ. கண்ணன்]

5. சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியம், மேச்சேரி பேரூராட்சியில் உள்ள ஏரியில் படர்ந்துள்ள படர் தாமரையை அகற்றிச் சுத்தப்படுத்தும் திட்டம் குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

***திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. கண்ணன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது மேலும் விவாதம். 6 உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். ஒவ்வொரு உறுப்பினருக்கும் நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன். 15 நிமிடங்கள் உரையாற்ற வேண்டும்.

***திரு. தா. உதயசூரியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் திரு. வி.பி. துரைசாமி அவர்கள் முன்மொழிந்த மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தில் பேச வாய்ப்பளித்த, தமிழ் மொழியைச் செம்மொழியாக ஆக்கித் தந்தவரும், மத்திய அரசிடமிருந்து இன்றைக்கு அதற்குரிய தொகையையும், ஆய்வு மையத்தையும் ஆணையாகப் பெற்றுத் தந்த தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களையும் (மேசையைத் தட்டும் ஒலி) வணங்கி,

"என்றும் இருக்க உளம் கொண்டாய்
இன்பத் தமிழுக்கு இலக்கியமாய்
இன்றும் இருத்தல் செய்கின்றாய்
என்றும் தமிழோடு வாழ்வாய் நீ"

என்று சொல்லி, எங்கள் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் ஐயா அவர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்கி, எங்களுடைய நிதியமைச்சர் ஐயா பேராசிரியர் அவர்களுக்கும், உள்ளாட்சியில் நல்லாட்சி தரும் எங்களுடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் தளபதியார் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய உயர் கல்வித் துறை அமைச்சர் அண்ணன் டாக்டர் பொன்முடி அவர்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்க விரும்புகிறேன்.

கலைஞரைச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) ஏன் நீங்கள் அந்தப் பெண்களுக்குக் கொடுக்கவில்லை? மீண்டும் தேர்தல் நேரத்தில் எங்கள் கலைஞர் நாடு முழுவதும் சுற்றிச் சுழன்று, தேர்தல் பணி ஆற்றுகின்றபோது சொன்னார்கள், 'நிறுத்தி வைக்கப்பட்ட பணம் 10,000 ரூபாயுடன், 5,000 ரூபாயைச் சேர்த்து அந்த ஏழைப் பெண்களுக்கு திருமண நிதி உதவியாகக் கொடுப்பேன்' என்று சொல்லி, 2006-2007-ல் 46 ஆயிரம் பேருக்கு 69 கோடி ரூபாயும், 2007-2008-ல் 49,700 பேருக்கு 74 கோடி ரூபாயும், ஆக மொத்தம் 95 இலட்சத்து 700 பேருக்கு 143 கோடி ரூபாயை ஏழையெளிய தாய்மார்களுக்கு வழங்கியிருக்கிற பெருமை எங்கள் கலைஞருடைய அரசாங்கத்திற்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) யார் தாய்மார்களைப் பற்றி நினைத்துப் பார்ப்பது? மகப்பேறு காலங்களிலும், கருவுற்ற தாய்மார்களுக்கு, 7, 8, 9 ஆகிய 3 மாதங்களுக்கு ஆயிரம் ரூபாய் வீதம் 3 ஆயிரம் ரூபாயும், குழந்தை பெற்ற பிறகு, பிள்ளையைப் பேணிக் காக்க வேண்டும், தாயும் நலமாக இருக்கவேண்டும் என்று சொல்லி, தாய்-சேய் இரண்டு பேர்களுக்கும் சேர்த்து 6,000 ரூபாயையும் ஒதுக்கிய ஒரே முதலமைச்சர் எங்கள் முதலமைச்சர் கலைஞர் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல எங்களுடைய உள்ளாட்சித் துறை அமைச்சர், அண்ணன் தளபதி அவர்கள் சுழல் நிதித் திட்டமாக இருந்தாலும், மகளிருக்காக 1989 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட திட்டத்தை மேலும் விரிவுபடுத்துவதற்கு பல கோடி ரூபாயை இப்போது ஒதுக்கி, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்காக உருவாக்கித் தந்திருக்கிற அரசுதான் எங்களுடைய கலைஞர் அரசு என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பேசுகின்றபோது சொல்கிறார்கள், சீருடை வழங்கியது எங்களுடைய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், எங்களுடைய தலைவி அவர்களும்; சத்துணவு கொடுத்தது எங்களுடைய எம்.ஜி.ஆர். அவர்கள் என்றும் சொல்லி, செருப்பு கொடுத்ததும், சைக்கிள் கொடுத்ததும், இலவச வேட்டி, சேலை கொடுத்ததும் நாங்கள்தான் என்றும் இங்கே சுட்டிக்காட்டிப் பேசினார்கள்.

பிற்பகல் 12-10

எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் இலவச வேட்டி சேலைகளைக் கொடுத்தார்கள். சுமார் 250 கோடி ரூபாய் செலவில், 3 கோடியே 28 இலட்சம் பேருக்குக் கொடுப்பது என்பது சாதாரண விஷயமல்ல.



நீங்களும் கொடுத்தீர்கள், நாங்கள் மறுக்கவில்லை. ஆனால், எங்கள் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஜனவரி 1 ஆம் தேதியன்று ஆரம்பித்து, 10 ஆம் தேதிக்குள் அந்த இலவச வேட்டி, சேலைகளைக் கொடுத்துவிட வேண்டுமென்றார்கள். என்ன காரணம்? 14 ஆம் தேதி தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாள் வருகின்றது. அந்த பொங்கல் திருநாளில் ஏழை எளிய மக்கள் புத்தாடை அணிந்து பொங்கலைக் கொண்டாட வேண்டுமென்கின்ற தமிழுணர்வின் காரணமாக, 1 ஆம் தேதியிலிருந்து 10 ஆம் தேதிக்குள் கொடுப்பதற்கு ஆணை பிறப்பித்து, இப்போது 3 கோடியே 28 இலட்சம் பேர்களுக்கு வேட்டி, சேலை வழங்கப்பட்டது.

சைக்கிள் வழங்கியதைப் பற்றிச் சொன்னார்கள். நீங்கள் சைக்கிள் கொடுத்ததைப்போல நாங்களும் கொடுக்கின்றோம். ஆனால் ஒன்றை நினைத்துப் பார்க்கவேண்டும். நீங்கள் சைக்கிள் கொடுத்தீர்கள், ஆனால் சைக்கிள் கொடுத்த மாணவ, மாணவிகளுக்கு இலவச பஸ் பாஸ் கொடுக்கவில்லை. எங்களுடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் பரிந்துரையின்பேரில், இலவச சைக்கிள் கொடுத்திருந்தால், அவர்களுக்கு பஸ் பாஸும் வழங்கவேண்டுமென்ற திட்டத்தை உருவாக்கியதுதான் எங்கள் தலைவர் கலைஞரின் ஆட்சி என்பதைப் பெருமையோடு இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படி எந்தவொரு திட்டமாக இருந்தாலும், எந்த ஆட்சியாளர் கொண்டு வந்திருந்தாலும், அந்தத் திட்டம் அரசு அலுவலர்களுக்காக இருந்தாலும், மாணவர்களுக்காக இருந்தாலும், விவசாயிகளுக்காக இருந்தாலும், தொழிலாளர்களுக்காக இருந்தாலும், அனைத்துத்தரப்பட்ட மக்களுக்கும் எந்தவொரு ஆட்சி திட்டத்தைக் கொண்டு வந்ததோ, அதைப் பார்க்காமல், அந்தத் திட்டத்தை வீணடிக்காமல், மேலும் அதற்கு மெருகூட்டிக் கொடுப்பதுதான் எங்கள் முதலமைச்சர் கலைஞருடைய எண்ணம் என்பதைத் தெளிவுபட நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்கள் நலப் பணியாளர்கள் எத்தனை பேரை வீட்டுக்கு அனுப்பினீர்கள், சாலைப் பணியாளர்கள் எத்தனை பேரை வீட்டுக்கு அனுப்பினீர்கள்? ஒரு காலத்தில் மணியக்காரர் என்று சொல்லப்பட்ட Village Munsiff-ஐ ஒரே நாளில் உத்தரவு போட்டு வீட்டுக்கு அனுப்பினீர்கள். அதில் சிலபேர் வேலைக்குப் போனார்கள். ஆனால் வேலைக்குப் போகாத சிலருக்கும் கிராம உதவியாளர் என்ற பணியில் அவர்களை நியமித்து அவர்களை

வாழ வைத்த முதலமைச்சர்தான் எங்கள் கலைஞர் அவர்கள் என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

பள்ளியிலே படிக்கின்ற மாணவ, மாணவிகள் பத்தாவது வரை தமிழ் வழிக் கல்வி படித்து, அவர்களில் ஆயிரம் மாணவர்களில் யார் அதிகமாக மதிப்பெண் எடுக்கின்றார்களோ அந்த ஆயிரம் மாணவர்களுக்கு ஊக்கத் தொகையாக கணினி வழங்குகின்ற திட்டத்தை உருவாக்கித் தந்திருக்கின்றார் என்று சொன்னால், மாணவர்களுடைய வாழ்வாக இருந்தாலும் சரி, அரசு அலுவலராக இருந்தாலும் சரி, அவர்களுக்குப் பல்வேறு வழிகளில், பல்வேறு திட்டங்களை இப்போது உருவாக்கித் தந்திருக்கின்ற இந்தச் சூழலில் எத்தனையோ குறை.

ஒரு கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் co-generation–ல் மின் உற்பத்தி நிலையத்தை உருவாக்க வேண்டுமென்று சொன்னால், முதலமைச்சரிடம் சொல்லி, முதலமைச்சர் அவர்கள் ஓராண்டுக்கு ஒன்றோ, இரண்டோ அல்லது மூன்றோ என்று அங்கு எத்தனால் தயாரிப்பதாக இருந்தாலும், துணை மின் நிலையங்கள் உருவாக்குவதாக இருந்தாலும், இப்படிப்பட்ட நிலையங்களை உருவாக்குகின்றபோது ஓராண்டுக்கு 3 அல்லது 4 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள்தான் உருவாக்குகின்ற நிகழ்வுகள் உண்டு. சென்ற ஆண்டுகூட என் தொகுதியில் அவர்களால் உருவாக்கப்பட்ட கோமுகி கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கு co-generation–ல் மின் உற்பத்தி நிலையத்திற்கு உத்தரவு பிறப்பித்தார்கள். ஆனால் இன்று தமிழகத்தில் உள்ள அனைத்துக் கூட்டுறவு மற்றும் பொதுத் துறைச் சர்க்கரை ஆலைகளில் சுமார் ரூ. 925 கோடி மதிப்பீட்டில் 185 மெகாவாட் மின் உற்பத்தி நிலையங்கள் co-generation–ல் நிறுவப்படும் என்றும், 18 மாத காலத்தில் நிறுவப்படும் என்கின்ற ஒரு assurance–ஐயும் கொடுத்திருக்கின்ற முதலமைச்சரின் தலைமையில் இயங்குகின்ற அரசுதான் இந்த அரசு என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

கூட்டுக் குடிநீர்த் திட்டம். Flouride அதிகமாக இருக்கின்ற தருமபுரி, கிருஷ்ணகிரி போன்ற இடங்களில் எல்லாம் ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் கொண்டு வரப்படும் என்று ஆளுநர் உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. எப்பொழுதெல்லாம் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக வருகின்றார்களோ, அப்பொழுதெல்லாம், எங்கு தண்ணீர் இல்லையோ, எங்கு பற்றாக்குறை இருக்கிறதோ, எங்கு அதிகமாக தண்ணீர்





இருக்கின்றதோ அந்த இடத்திலிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை உருவாக்குவதிலே திராவிட முன்னேற்றக் கழக அரசு என்றைக்கும் சளைத்ததல்ல. இதற்கு உதாரணமாக, 1989, 1990 மற்றும் 1991 ஆம் ஆண்டுகளில் எங்களுடைய உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், அப்போது மக்கள் நல்வாழ்வுத் துறையும், குடிநீர் துறையும் அவர் கையில் இருந்தபோது, எங்கள் பகுதியில் கள்ளக்குறிச்சி, சின்னசேலம் போன்ற பகுதிகளில் நீராதாரம் இல்லாத காரணத்தால், திருக்கோவிலூருக்கு அருகில் இருக்கின்ற சுந்தரேசபுரத்திலிருந்து 40 கோடி ரூபாய்க்கு அதிகமாகச் செலவு செய்து கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைக் கொண்டுவந்த பெருமை கழக அரசுக்கு உண்டு. அதேபோல 1989 மற்றும் 1990 ஆம் ஆண்டுகளில் செஞ்சிக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் கொண்டு வந்த பெருமையும் உண்டு. மீண்டும் இப்போது 2006-2007-ல் அப்போது கொண்டு வந்த திட்டத்தின் அடிப்படையில் மக்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால், அந்தத் தண்ணீர் போதாது என்கின்ற சூழ்நிலையில், எங்களுடைய உயர் கல்வித் துறை அமைச்சருடைய பரிந்துரையின் அடிப்படையில் எங்களுடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மீண்டும் ஒரு திட்டத்தை, செஞ்சி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை இப்போது உருவாக்குகின்ற நிகழ்ச்சியை நான் பெருமையோடு இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

பிற்பகல் 12-15

அய்யா கலைஞர் அவர்கள், நாங்களெல்லாம் பிறப்பதற்கு முன்பு வர்ணாசிரமத்தை எதிர்த்து ஒரு பாடலை எழுதினார்கள். அதற்காக தலைவர் கலைஞர் அய்யா அவர்கள் சிறைவாசம்கூடச் சென்ற நிகழ்வுகள் உண்டு.

“பரணி பல பாடி பாங்குடன் வாழ்ந்த பைந்தமிழ் நாட்டில் சொரணை சிறிதுமிலா சுய நலத்து சோதாக்கள் சிலபேர் கூடி வருணத்தை நிலைநாட்ட கரணங்கள் போட்டாலும், மரணத்தின் உச்சியில் மானம் காக்க மறத்தமிழா என்று போராடு” என்று எழுதினார் எங்கள் தலைவர் கலைஞர். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்தான் எல்லாச் சாதியினரும் கோயில்களில் அர்ச்சகராக ஆகலாம் என்கிற சட்டத்தையும் உருவாக்கிய, தந்தை பெரியாருடைய மாணவன், எங்கள் அறிஞர் அண்ணாவினுடைய உண்மையான தம்பி என்பதைச் சுட்டிக்காட்டி, உடல் ஊனமுற்றோர் என்ற பட்டியலில் ஓரம்

ஒதுக்கிவைக்கப்பட்ட அரவாணிகள், அவர்களுக்கு ஒரு நல வாரியத்தை உருவாக்கி, அவர்கள் அரசு மருத்துவமனைகளில் இலவசமாக அறுவை சிகிச்சை செய்துகொள்வதற்கும், குடும்ப அட்டைகளைப் பெறுவதற்கும், அரவாணிகளுக்காக ஒரு நல வாரியத்தை உருவாக்கித் தந்த பெருமை இன்றைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், இந்த அரசுக்கும் உண்டு என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒன்றே ஒன்று, ஒரே ஒரு நிமிடம். ஒன்றே ஒன்றைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பட்டா வழங்குகின்ற நிகழ்ச்சி. வெள்ளைக்காரர்கள், பிரிட்டிஷ்காரர்கள் காலத்திலிருந்து நத்தத்தில் குடியிருப்பவர்களுக்கு மட்டும்தான் பட்டா கொடுப்பார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உதயசூரியன் குளிர்ச்சியாக இருக்கவேண்டும் துவக்கத்திலேயே. இது உச்சி சூரியனாக இப்போது தகித்துக்கொண்டிருக்கிறது. (சிரிப்பு) தயவுசெய்து உதயசூரியனாகவே உரையாற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உடம்புக்கு ஆகாது, இவ்வளவு உரக்கச் சத்தம்போட்டால்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. தா. உதயசூரியன்:** பிரிட்டிஷ்காரர்கள் காலத்தில், வெள்ளைக்காரர்கள் இருந்த காலத்திலேயே நத்தம் புறம்போக்கில் குடியிருப்பவர்களுக்குத்தான் பட்டா வழங்கமுடியும்,. 10 ஆண்டுகள் இருந்தாலும், 20 ஆண்டுகள் இருந்தாலும், பாட்டன், முப்பாட்டன் தலைமுறையிலிருந்து குடியிருந்தாலும் நத்தம் புறம்போக்கில் இருப்பவர்களுக்குத்தான் அந்தப் பட்டா கொடுக்கமுடியும். மற்ற கல்வெட்டுக்குழி புறம்போக்கோ, ஓடைப் புறம்போக்கோ, குட்டைப் புறம்போக்கோ, தோப்பு புறம்போக்கோ, குளத்துப் புறம்போக்கோ, மந்தைவெளிப் புறம்போக்கோ, இந்த மாதிரி புறம்போக்கில் குடியிருப்பவர்களுக்கெல்லாம் பட்டா வழங்க முடியாது. எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் 2000-2001 ஆம் ஆண்டில் சிறப்பாக ஓர் ஆணையைப் பிறப்பித்து, 10 ஆண்டுகளாகக் குடியிருப்பவர்களுக்குப் பட்டா வழங்குவதற்கு, உத்தரவு பிறப்பித்தார்கள். அதற்குப் பிறகு, இப்போது 2006 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக வந்த பிறகு எத்தனையோ சட்டமன்ற உறுப்பினர்கள் கேள்வி எழுப்பினார்கள். நீங்கள் 2000-2001 ஆம் ஆண்டுகளில் கொண்டு வந்த ஒரு திட்டத்தின் காரணமாக எத்தனையோ ஏழையெளிய மக்களுக்கெல்லாம் புறம்போக்கில் குடியிருந்தவர்களுக்கெல்லாம் பட்டா வழங்கித் தந்தீர்கள், அந்தத் திட்டம் தற்போது ஓராண்டு காலம் முடிவுற்றிருக்கிறது, ஆகவே இப்போது மீண்டும் அந்த 10 ஆண்டுகள் என்று இருப்பதை 5 ஆண்டுகளாகக் குறைத்து அந்தப் பட்டா வழங்கும் நிகழ்ச்சியை உருவாக்குங்கள் என்று வேண்டினார்கள்.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்து விடுங்கள். நேரம் முடிந்துவிட்டது.

**திரு. தா. உதயசூரியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம். என்னுடைய கள்ளக்குறிச்சி தொகுதியில் தாலுகா மருத்துவமனை இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாவட்ட மருத்துவக் கல்லூரியை விழுப்புரத்திற்கு வழங்கியிருக்கிறார்கள். அந்த மாவட்டத் தலைநகரத்தில் இருக்கின்ற மாவட்ட மருத்துவமனையை கள்ளக்குறிச்சிக்கு மாற்றித் தருமாறு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை வைத்துக்கொண்டே விழுப்புரத்தில் கேட்டிருக்கிறேன். அதேபோல, சின்னசேலம், வடக்கனேந்தல் பேரூராட்சிகளைக்கொண்டு மையமாக தலைவாசல், மங்களூர் போன்ற இடங்களெல்லாம் இருக்கின்ற காரணத்தினால் வட்டம் சாரா மருத்துவமனையை சின்னசேலத்திற்கு அறிவிக்க வேண்டுமென்று தங்களை அன்புடன் இந்த நேரத்தில் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

தொலைக்காட்சிப் பெட்டி எந்த வீட்டிலும் இல்லை என்கிற நிலையை உருவாக்கும் வகையில் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அறிவித்திருக்கின்ற அந்தத் திட்டத்தினை வரவேற்று, வாய்ப்பிற்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

[2008 ஜனவரி 31

## 7. ஆதி திராவிட மாணவர்கள் 60 சதவீத மதிப்பெண்கள் பெற்றால்தான் கல்வி உதவித் தொகை வழங்கப்படும் என்ற மத்திய அரசின் செய்தி— மாண்புமிகு முதல்வரின் விளக்கம்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மாணவர்கள் ஒரு முக்கியமான கோரிக்கையை முன்வைத்து கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். குறிப்பாக, மத்திய அரசு 60 சதவீத மதிப்பெண்கள் பெற்றால்தான் ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு, கல்வி உதவித் தொகை வழங்கப்படும் என்று ஓர் ஆணை பிறப்பிக்கப்படப்போவதாக ஒரு செய்தி வந்து, அப்படி ஆணை பிறப்பிக்கக் கூடாது என்றும், பிறப்பித்திருந்தால், அதைத் திரும்பப் பெறவேண்டுமென்று வலியுறுத்தியும் மாணவர்கள், குறிப்பாக ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கின்றார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில், நம்முடைய அரசைப் பொறுத்தவரையில், இந்தத் தகவலை மத்திய அரசுக்கு எடுத்துச்சொல்லி, அப்படி ஒரு கருத்து அங்கே இருந்தால், அதை உடனடியாகத் திரும்பப் பெறவேண்டுமென்று வலியுறுத்தும் என்பதை நான் அந்த மாணவர்களுக்கு உறுதியாக வழங்க விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஒருவேளை, மத்திய அரசு வேறு ஏதாவது காரணங்களைச் சொல்லி இந்த 60 சதவீத மதிப்பெண்கள் பெற்றால்தான் ஆதி திராவிடர்களுக்கு கல்வியிலே உதவித் தொகை அளிக்கமுடியும் என்று கூறுகின்ற சூழ்நிலை இருக்குமேயானால், வழக்கம்போல் இப்போது, தமிழக அரசு வழங்கி வருகின்ற அந்த உதவித் தொகை இப்போது எந்த நிலையிலே வழங்கப்படுகிறதோ அப்படி வழங்கப்படும் என்ற உறுதியையும் அந்த மாணவர்களுக்கு இந்த அவையின்மூலமாகத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 6. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

பிற்பகல் 12-20

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம். பத்து நிமிடங்கள் சார்.



2008 ஜனவரி 31]

திரு. கு. செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக ஆளுநர் அவர்கள் அளித்த உரையை நாம் பார்க்கும்பொழுது நம்முடைய முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் சமத்துவத்தையும், சமூக நீதியையும் இரண்டு விழிகளாகக் கொண்டு தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்கிறார் என்பதை நம்மால் காணமுடிகிறது. தமிழர்களின் பாதுகாவலராக இருக்கிற தமிழினத் தலைவர் நம்முடைய முதல்வர் அவர்கள் தைத் திங்கள் முதல் நாளை தமிழ்ப் புத்தாண்டாக அறிவித்து உலகத்தில் வாழ்கின்ற அனைத்துத் தமிழின மக்களையும் பெரு மகிழ்ச்சிக் கடலிலே ஆழ்த்தியிருக்கிறார்கள்.

1921 ஆம் ஆண்டு பெரும் புலவரும், தனித் தமிழ் இயக்கத்தைத் தோற்றுவித்தவருமான மறைமலை அடிகளார் அவர்கள் உள்ளிட்ட 500-க்கும் மேற்பட்ட தமிழ்ப் புலவர்கள் இந்தக் கோரிக்கையை வைத்தனர். ** தனி ஆண்டு இருக்கிறது என்பதை நம்முடைய முத்தமிழ் அறிஞர் முதல்வர் அவர்கள் தமிழக மக்களுக்கு இந்த ஆண்டு பரிசாக அளித்திருக்கிறார்கள். 1806 ஆம் ஆண்டு நம்முடைய. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ்.

*திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் செல்வம் அவர்கள் பேசுகின்றபோது **அப்படி என்கிற வார்த்தையும் சேர்த்துப் பேசி இருக்கிறார். அந்த வார்த்தையை அனுமதிக்க முடியுமா என்பதை நீங்கள் பரிசீலிக்க வேண்டுகிறேன்.

திரு. கு. செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** நம்முடைய முதல்வர் தனி ஆண்டைக் கொடுத்திருக்கிறார் என்பதைத்தான் நான் சொன்னேன். இதில் எந்தவித மாற்றுக் கருத்தும் இருக்க முடியாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1860 ஆம் ஆண்டு ஆங்கிலப் பேரரசுகளால் திட்டம் தீட்டப்பட்டு அமலாக்க இருந்த சேது சமுத்திரத் திட்டத்தை ஆங்கிலப் பேரரசர்கள் நடைமுறைப்படுத்தாமல் சென்றுவிட்டார்கள். இன்று தமிழக மக்களின் பெருந்தலைவராக இருக்கின்ற. . .

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் செல்வம் அவர்கள் பேசுகின்றபோது ** ஆண்டாவது வாங்கிக் கொடுத்திருக்கிறார் முதலமைச்சர் என்று சொல்கின்றபோது ** ஒரு தோற்றம் வருகிறது. அது நல்லதல்ல. அது ** எனவே அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ரெக்கார்டைப் பார்க்கிறோம். அப்படியிருந்தால் அதை expunge பண்ணிவிடுகிறோம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேது சமுத்திரத் திட்டத்தில் ஆங்கிலேயர்கள் எந்த அளவுக்கு முனைப்புக் காட்டினார்களோ அதே முனைப்போடு நமது முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவோம் என்று அயராது பாடுபட்டு வருகிறார். ஆங்கிலேயர்களுக்கு சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. ஆனால், சில தமிழ் இன விரோதிகள் அந்தத் திட்டத்தை வரவிடாமல் தடுத்துவிட்டார்கள். நம்முடைய அரசு அதை விடாமல், அந்தத் திட்டத்தை நிறைவேற்றி இந்திய அரசு வல்லரசாகப் போகிறது என்று அனைத்துத் தலைவர்களும் சொன்னாலும், அந்த வல்லரசுக்கு முன்னுதாரணமாக முனைப்பாக இருப்பவர் நம்முடைய முதல்வர் என்பதை இந்தக் கூட்டத்திலே நான் பதிவு செய்துகொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இன்று பேரவையிலே கொண்டு வந்த ஒரு தீர்மானத்தின்மூலம் நம்முடைய கலைஞர் முத்தமிழ் அறிஞர் முதல்வர் அவர்களுடைய முயற்சியால் இன்று செம்மொழி ஆய்வு மையம் நம்முடைய தமிழகத்திற்குக் கிடைத்திருக்கிறது என்ற செய்தி மகிழ்ச்சி அளிக்கிறது.

நம்முடைய பரிதிமாற் க்லைஞர் 1955 ஆம் ஆண்டு இதற்கு வித்திட்டவர். ஆனால், நம்முடைய தமிழக முதல்வர் அதற்கு ஒரு வெற்றியை நாட்டி தமிழக மக்கள் வயிற்றில் பால் வார்த்திருக்கிறார்கள். ஆரம்பக் கல்வி முதல் உயர் கல்வி வரை படிக்காமலேயே தமிழை, தாய் மொழியைப் படிக்காமலேயே பட்டம் பெறலாம் என்ற ஒரு நிலை

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



இருந்தது. ஆனால், நம்முடைய முதல்வர் அவர்கள் தமிழைப் படித்தால்தான் பட்டம் பெற முடியும் என்று தமிழின மக்களுக்கு ஓர் இன்பமான அறிவிப்பைச் செய்திருக்கிறார்.

திருக்கோயில்களிலே தமிழில் அர்ச்சனை செய்யப்படும் என்ற ஓர் ஆணையைப் பிறப்பித்திருந்தாலும் இன்றுவரை நமது கோயில்களிலே தமிழில் அர்ச்சனை செய்கிறார்களா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. அதற்குமேல், தாழ்த்தப்பட்ட மக்கள் சில இடங்களிலே கோயில்களிலே வழிபட முடியாத ஒரு நிலை இருக்கிறது. நம்முடைய அரசு அதிதீவிரமாக அதில் தலையிட்டு இப்படிப்பட்ட வன்கொடுமைகளைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

குறிப்பாக, சேலம் மாவட்டத்திலே, திரௌபதியம்மன் கோயிலிலே இன்றுவரை தாழ்த்தப்பட்ட மக்கள் அங்கே ஆலயத்திலே வழிபட முடியவில்லை. நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இதில் தலையிட்டு, அங்கு இருக்கின்ற ஆதி திராவிட மக்களை அந்த ஆலயத்திற்குள் நுழைய ஏற்பாடு செய்ய வேண்டும்.

*பிற்பகல் 12-25*

அதேபோன்று சமத்துவபுரம். தமிழகத்திலே ஜாதிகள் இறுக்கமாக இருந்த காலத்திலே நம்முடைய முதல்வர் அவர்கள் சமத்துவபுரத்தை ஏற்படுத்தி, அந்த ஜாதி இறுக்கத்தைத் தளர்த்தினார் என்பதில் எந்தவித ஐயமும் இருக்க முடியாது.

நீர் நிலைப் பகுதிகளிலே தாழ்த்தப்பட்ட மக்கள், ஒடுக்கப்பட்ட மக்கள் எல்லாம் குடியிருந்து வருகிறார்கள். ஆண்டாண்டு காலமாக இருக்கிறார்கள். ஆனால், இப்போது உச்ச நீதிமன்றத் தீர்ப்பு இருக்கிறது என்று சொல்லி அங்கு அதிகாரிகள் தினந்தினம் மிரட்டி வருகிறார்கள். என்னுடைய தொகுதி பெரியார் நகர்ப் பகுதியிலே, ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடியிருப்புகள் இருக்கின்றன. அங்கு அதிகாரிகள் இரண்டாம் தேதிக்குள் அவற்றை காலி செய்ய வேண்டும் என்று ஒரு notice கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் இதில் தலையிட்டு இந்த மண்ணின் மைந்தர்கள், ஏழை எளிய மக்களை அங்கிருந்து அகற்றக் கூடாது என்பதற்கு அவர் ஆய்வு செய்ய வேண்டும்.

அதேபோன்று மருத்துவமனைகளிலே மருத்துவர்கள் இல்லை என்று சில கட்சிகள் ஆர்ப்பாட்டம் செய்து கொண்டு இருக்கின்றன.

[திரு. கு. செல்வம்] [2008 ஜனவரி 31

உண்மையிலேயே மருத்துவமனையில் மருத்துவர்கள் இருக்கிறார்கள். ஆனால், கிராமப்பகுதிகளிலே வேலை செய்வதற்கு மறுக்கிறார்கள். இதிலே நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் தலையிட்டு, குறிப்பாக திட்டக்குடி மருத்துவமனையிலும், பெண்ணாடம் மருத்துவமனையிலும் மருத்துவர்களை அமர்த்த வேண்டும்.

வெலிங்டன் ஏரிக்கு நம்முடைய முத்தமிழறிஞர் முதல்வர் அவர்கள் ரூ.20 கோடியை வாரி வழங்கினார்கள். ஆனால், அந்தப் பணி இன்னும் தொடங்கப்படாமல் இருக்கிறது.

அதேபோன்று, அயல்நாடுகளிலே பணியாற்றுகின்ற நம்முடைய தமிழர்களுக்கெல்லாம் ஒரு பாதுகாப்பற்ற நிலை இருந்தது. இப்போது நம்முடைய முதல்வர் அவர்கள் தலையிட்டு, அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையிலே அங்கே ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆனால், தமிழகத்திலே சில agent–கள், நான் Visa வாங்கித் தருகிறேன்; Permit வாங்கித் தருகிறேன் என்று ஒவ்வொரு கிராமத்திலும் சுற்றிக்கொண்டு இருக்கின்றனர். நம்முடைய காவல் துறை அதிகாரிகள், யார் இப்படிப்பட்ட குற்றங்களிலே ஈடுபடுகிறார்கள் என்று கண்டுபிடித்து நம்முடைய தமிழ் மக்களை ஏமாற்றுகிறவர்களை அடையாளம் காட்ட வேண்டும்.

அதேபோன்று, நரிக்குறவர்களை இன்றுவரை பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர்களாக நம்முடைய அரசு கணக்கில் எடுத்துக் கொண்டு இருக்கிறது. நரிக்குறவர்கள் எல்லாம் யார் என்று தெரியும். அவர்களை பழங்குடியின மக்கள் பட்டியலிலே நாம் சேர்க்க வேண்டும்.

மொழிப் போர் தியாகி ராஜேந்திரன் 1965 ஆம் ஆண்டு தாய் மொழிக்காக தன் உயிரைத் தந்த தியாகி. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அருகில் கட்டப்படும் பாலத்திற்கு ராஜேந்திரன் பெயரைச் சூட்ட வேண்டும் என்று நான் இங்கே பதிவு செய்கிறேன்.

தமிழகத்திலே, மத்தியப் பல்கலைக்கழகம், I.I.T., I.I.M. போன்ற கல்வி நிறுவனங்களையும் அமைக்க உள்ளதாக நம்முடைய முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இந்தப் பல்கலைக்கழகங்கள் எல்லாம், பிற்படுத்தப்பட்ட மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்த வேண்டும்.



2008 ஜனவரி 31] [திரு. கு. செல்வம்]

நதி நீர்ப் பிரச்சினையிலே நம்முடைய தேசிய நதிகளை இணைக்க வேண்டும் என்று நம்முடைய அரசு குரல் கொடுத்து வந்தாலும், check dam என்று சொல்கிறார்கள். குஜராத்திலே பார்க்கும்போது, இந்தியாவிலே முதன்மை மாநிலமாக குஜராத் விளங்கிக் கொண்டிருக்கிறது. அந்த மாநிலத்திலே தண்ணீர்ப் பிரச்சினை இல்லை என்று சொல்கிறார்கள். கடந்த கூட்டத் தொடரிலே நான் பேசும்போதுகூட சொன்னேன். நம்முடைய ஆளுநர் உரையிலே இதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்—பகுதி வாரியாக, கிராம வாரியாகக் கணக்கெடுத்து எந்தெந்தப் பகுதியிலே நமக்குத் தண்ணீர்ப் பிரச்சினை இருக்கிறதோ அங்கெல்லாம் check dam-களை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

கடந்த மாதம் பெய்த பெருமழையிலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள், இந்த வயதிலும் கடலூர் மாவட்டத்திற்குச் சென்று, பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறி இடைக்கால நிவாரணங்களை வழங்கினார். மத்திய அரசு கொடுக்க வேண்டிய 1,510 கோடி ரூபாயை நாம் பெற வேண்டும்.

11–வது ஐந்தாண்டு திட்டக் காலத்திலே அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் 6,650 நடுநிலைப் பள்ளிகளுக்கும் கணினிகள் அளிக்கப்படும் என்று ஆளுநர் உரையிலே நாம் பார்த்தோம். அதை வரவேற்கிறோம்.

அதுமட்டுமின்றி, தமிழ்வழிக் கல்வியில் பயின்ற 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கும் இந்தக் கணினி வழங்கப்படும் என்று அறிவித்து இருக்கிறார்கள். இதை மாவட்ட அளவிலே கணக்கெடுத்து, ஒவ்வொரு மாவட்டத்திலும் யார் முதலில் வருகிறார்கள் என்ற அடிப்படையிலே தந்தால் அனைத்து மாவட்ட மாணவர்களும் பயன் பெறுவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடிக்க வேண்டும்.

**திரு. கு. செல்வம்:** அதுமட்டுமல்லாமல், இங்கே தமிழகத்திலே, சென்னையை அடுத்த ஸ்ரீபெரும்புதூர் பகுதியிலே, கணினி நிறுவனங்கள் நிறைய ஏற்பட்டு இருக்கின்றன. குறிப்பாக Dell Computers. இந்த கம்ப்யூட்டர் நிறுவனத்தின்மூலம் நம்முடைய மாணவ மாணவிகளுக்கு இலவசமாக அல்லது குறைந்த விலையிலே கணினிகளைக் கொடுக்க முடியுமா என்பதை அரசு பரிசீலிக்க வேண்டும்.

*பிற்பகல் 12-30*

செவிலியர்கள், தமிழக அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் செவிலியர் பயிற்சிப் பள்ளிகளிலே பயின்ற அந்தச் செவிலியர்களை 20 ஆண்டுகாலத்தில் 22,000 செவிலியர்களை பணியில் நியமிக்காமல் நாம் இருக்கிறோம். அவர்களுக்கும் அரசு வேலைவாய்ப்பிலே நாம் இடமளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய முத்தமிழ் அறிஞர் முதல்வர் அவர்கள் சிறிது நேரத்திற்கு முன்பு வரலாற்றுச் சிறப்புமிக்க ஓர் அறிவிப்பைச் செய்தார்கள். மத்திய அரசு, தாழ்த்தப்பட்ட மக்கள் 60 சதவீத மதிப்பெண்கள் பெற்றால்தான் அவர்களுக்கு கல்வி உதவித்தொகை அளிக்கப்படுமென்ற சூழ்நிலை இருக்குமானால், மத்திய அரசு கொடுக்கவில்லை என்றாலும், தாழ்த்தப்பட்ட மக்களுக்காக நான் செய்ய இருக்கிறேன் என்று கூறிய முத்தமிழ் முதல்வர் தலைவர் அவர்களை வணங்குகிறோம், வரவேற்கிறோம்.

ரூபாய் 7,000 கோடியை, விவசாயிகள் கடனைத் தள்ளுபடி செய்து ஆணை வழங்கிய நம்முடைய முதல்வர் அவர்கள், தாட்கோமூலமாக தாழ்த்தப்பட்ட மக்கள் பெற்ற தாட்கோ கடன் 70 கோடியையும் தள்ளுபடி செய்ய வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களின் வயிற்றிலே நீங்கள் பாலை வார்க்க வேண்டும்.

D.C. Land என்று சொல்வார்கள் Dalit Conditional Land இன்றுவரை அவர்களுக்கு எடுத்துக் கொடுக்காமல் இருக்கிறோம். பிற்படுத்தப்பட்ட மக்கள், பிற சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அதை ஆக்கிரமணம் செய்து வைத்திருக்கிறார்கள் என்று வருவாய்த் துறைமூலமாக நாங்கள் அறிகிறோம். நம்முடைய முதல்வர் அவர்கள் தலையிட்டு அந்த மக்களுக்கு, அந்த நிலத்தை வாங்கிக் கொடுக்க வேண்டும்.

என்னுடைய தொகுதியில், நம்முடைய முதல்வர் அவர்கள் சுதந்திரம் பெற்று இவ்வளவு ஆண்டுகளானாலும் முத்தமிழ் அறிஞர் முதல்வர் அவர்கள்தான் வெலிங்டன் ஏரிக்கு 20 கோடி, திட்டக்குடி மேம்பாலம், முருகன்குடி மேம்பாலம், பள்ளித் தரம் உயர்த்துவது போன்ற நடவடிக்கைகளில் அந்த மக்களுக்கு இன்று இறைவனாக காட்சி தந்துகொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தொகுதி மக்களின் சார்பாக நன்றி தெரிவித்து, அங்கே கால்நடை மருத்துவமனை இல்லை; பள்ளிகள் தரம் உயர்த்தப்பட வேண்டும்; வெலிங்டன் ஏரியை உடனே சீரமைக்க வேண்டும்; தீயணைப்புத்



துறையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்; காவல் துறை, காவல் நிலையங்களை upgrade செய்து கொடுக்க வேண்டும். அந்த மக்களுக்கு நீங்கள்தான் முதலமைச்சர், நிரந்தர முதலமைச்சர் என்று அவர்கள் வாழ்த்துச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். முதல்வர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும் மங்களூரை மறந்து விட வேண்டாம். வருகின்ற நிதிநிலை அறிக்கையிலே நீங்களும், அனைத்து அமைச்சர்களும் அந்தத் தொகுதியைப் பார்க்க வேண்டும். உங்களுடைய கருணையால் அந்த மக்கள் வாழ வேண்டுமென்று கூறி விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீர. இளவரசன்.

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் அடிப்படை நோக்கம் ஆளுநர் உரையில் சொல்லப்பட்டுள்ளது பற்றியும், சொல்லப்படாதது பற்றியும் மக்களுடைய பிரதிநிதிகளாகிய நாமெல்லாம் எடுத்துச் சொல்கின்றபோது, ஆளும் தரப்பிலே இருப்பவர்கள் அவற்றை ஆராய்ந்து எதிர்வருகின்ற வரவு செலவுத் திட்டத்திற்கு முன் மாதிரியாக அமைய வேண்டுமென்பதற்காகத்தான் இந்த ஆளுநர் உரை என்பது ஒரு முறையாக அமைக்கப்பட்டிருக்கிறது.

ஆளுநர் உரையிலே உள்ள நிறைகளைப் பற்றியெல்லாம் சில நாட்களாக இங்கே பேசிய நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் சிலபேர் எடுத்துச்சொல்லிப் பாராட்டியிருக்கிறார்கள். அதேபோல ஆளுநர் உரையிலுள்ள குறைகளைப் பற்றியும் எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, எதிர்க்கட்சியாகிய நாங்களெல்லாம் அதிலுள்ள சில குறைகளைச் சொல்கிறோம் என்று சொன்னால் அவற்றை ஆக்கபூர்வமான விமர்சனமாக, கருத்துகளைக் கூறுவதாக constructive criticism என்று சொல்வார்களே அதைப்போல நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த காலங்களில் எதிர்க்கட்சி எப்படி இருக்க வேண்டும், எப்படி இருந்தது என்பதைப்பற்றி இங்கே விளக்கியிருக்கிறார்கள். "குறைகளைச் சொல்லி நிறைவு பெறுவதற்காகத்தான் சட்டமன்றத்திற்கு வந்திருக்கிறோமே தவிர, செய்திருக்கிற காரியங்களைப் பாராட்டி விழாக்கள் எடுப்பதற்காக

இங்கே நாம் வரவில்லை. எனவே, அதற்கு அப்படிப் பாராட்டு விழாக்கள் நடத்துவது என்பது வெளியிலே அத்தகைய காரியங்களால் பயன்பெறுபவர்களால் நடத்தப்படுகின்ற விழாக்களே தவிர, சட்டமன்றத்திற்கு வருகின்றபோது குறைகளை எடுத்துச் சொல்லி நிறைவு செய்வதற்காகத்தான் இங்கே நாம் வந்திருக்கிறோம்" என்று கடந்த காலத்தில் நம்முடைய மன்றத்திலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு விளக்கத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, அந்த அடிப்படையில் எதிர்க்கட்சியாக நாங்கள் சொல்கின்ற கருத்துகளைக் கேட்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இன்னும் சொல்வார்கள், 'Opposition party has its say' என்று சொல்வார்கள். 'Ruling party has its way' என்று சொல்வார்கள். நாங்கள் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆளும் தரப்பிலே இருக்கின்ற நீங்கள் அதைச் செய்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறீர்கள் என்பதை மட்டும் தெரிவித்து, ஒரு சில கருத்துகளை மட்டும் ஆளுநர் உரையின்மீது தெரிவிப்பதை என்னுடைய கடமையாக நான் கருதுகிறேன்.

*பிற்பகல் 12-35*

கடந்த 2006 ஆம் ஆண்டு ஆளுநர் உரையில்கூட, மாநிலத்தில் சுயாட்சி; மத்தியில் கூட்டாட்சி 'Autonomy for the State; Federalism at the Centre' என்ற நிலை உருவாகின்ற வரையிலும் மத்திய, மாநில அரசுகளுக்கிடையே ஒரு சுமுகமான சூழ்நிலை வேண்டுமென்று சொல்லி, அதேபோல மோதல் இல்லாத ஒரு நிலைமை உருவாக வேண்டுமென்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன கருத்தையும் நம்முடைய ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருக்கிறீர்கள். நான் தெரிவிக்க விரும்புவதெல்லாம், அதில் இரு வேறு கருத்துகளுக்கு இடமிருக்க வேண்டியதில்லை. ஆனால், இன்றைக்கு அப்படிப்பட்ட சூழ்நிலையிலும்கூட நம்முடைய தமிழர்களுடைய உரிமைப் பிரச்சினை, முல்லை-பெரியாறு, பாலாறு, காவிரி போன்ற ஆற்றுப் பிரச்சினைகளில் நம்முடைய உரிமைகளை நாம் நிலைநாட்டிக்கொள்ள முடிகிறதா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். எவ்வளவு காலமாக நாம் போராடி வருகிறோம் என்பதையும் அருள்கூர்ந்து நீங்கள் சிந்திக்க வேண்டுகிறேன்.

ஆளுநர் உரையிலே பார்க்கிறோம், தேசிய நதிகள் இணைப்புத் திட்டம் என்பது தீபகற்ப நதி இணைப்புத் திட்டமாக மாறி, அதற்குப் பிறகு இப்போது தமிழகத்தில் பாய்கின்ற ஆறுகளை இணைக்கின்ற திட்டமாக உருமாறி, சுருங்கி ஒரு வட்டத்திற்குள் வந்திருக்கிறது என்று





சொன்னால், ஏன் நிறைவேற்ற முடியவில்லை? தேசிய நதிகளை இணைக்கின்ற காரியம் என்பது இந்தியத் திருநாட்டுக்கு, மத்திய அரசாங்கத்திற்கு ஒரு பெரிய காரியமா என்று நான் கேட்க விரும்புகிறேன். பல்லாண்டு காலமாகப் போராடி வருகிறோம். தேசிய நதிகள் இணைப்புத் திட்டம் என்பது ஒரு முடியாத காரியம் அல்ல.

2000 ஆண்டு வாக்கில் எங்கள் பொதுச் செயலாளர் அண்ணன் வைகோ அவர்கள் நாடாளுமன்றத்திலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். தேசிய நதிகள் அனைத்தையும் நாட்டுடைமை ஆக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். கங்கை, காவிரி என்பது இணைக்கப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, பாட்னாவுக்கு மேற்கே தொடங்கி தொடர்ச்சியாக கால்வாய்களை வெட்டி தண்ணீரை, கங்கையின் உபரி நீரை காவிரிக்குக் கொண்டு வரலாம் என்ற திட்டத்தை எல்லாம் 1960-லே மத்திய நீர்ப்பாசனத் துறை அமைச்சராக இருந்த கே.எல். ராவ் அவர்கள் எடுத்துச் சொன்னதையெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

மத்தியப் பிரதேசத்தில் உருவாகின்ற அந்த மகாநதியை கோதாவரிக்குக் கொண்டுவந்து, கிருஷ்ணா நதிக்குக் கொண்டுவந்து, அங்கே இருக்கின்ற நாகார்ஜுனா சாகர் அணைக்குக் கொண்டுவந்து, அதன் பிறகு பெண்ணாற்றின் குறுக்கே இருக்கின்ற சோமசீலா அணைக்குக் கொண்டுவந்து, திரும்பவும் நம்முடைய காவிரிக்கு அந்த நீரைக் கொண்டுவர முடியும் என்கின்ற திட்டத்தை எல்லாம் அங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். உலக நாடுகளில் பல நாடுகளிலே நீர்த் தகராறைத் தீர்க்க பிரச்சினைகள் ஏற்பட்டு அவையெல்லாம் வெற்றிகரமாக முடிந்திருக்கின்றன என்ற வரலாற்று உண்மைகள் எல்லாம் இங்கே இருக்கின்றன. எனவே, உலக நாடுகள், பல நாடுகளிடையே ஏற்படுகின்ற நீர்த் தகராறைத் தீர்க்கின்றபோது, இந்தியாவிற்குள் ஒருமைப்பாடு நமக்கு எவ்வளவு முக்கியம் என்று நாம் எடுத்துப் பேசிக்கொண்டிருக்கிறோம். எனவே, இந்தியாவிற்குள் இருக்கின்ற ஆற்று நீர்ப் பிரச்சினையில் மாநிலத்திற்கு மாநிலம் விட்டுக்கொடுப்பது என்பது, அதைச் சரிசெய்வது என்பது ஒன்றும் முடியாத காரியம் அல்ல. எனவே, நதி நீர்ப் பிரச்சினைக்கு கடைசியான ஒரு தீர்வு, நிரந்தரமான தீர்வு என்றால், நதிகள் தேசியமயமாக்கப்பட வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்து, அதை மத்திய அரசாங்கம் செயல்படுத்துவதற்கு, நிறைவேற்றுவதற்கு நம்முடைய மாநில அரசாங்கம் முன்வர வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. வீர. இளவரசன்] [2008 ஜனவரி 31

அதேபோல, இங்கே விலைவாசி உயர்ந்ததுபற்றி எல்லாம் பேசினார்கள். இரண்டு ரூபாய்க்கு அரிசி கொடுக்கிறீர்கள், ஒப்புக்கொள்கிறோம். ஆனால், உணவுப் பொருட்களின் விலையேற்றம் எந்த அளவுக்கு இருக்கிறது? குறிப்பாக, அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் எந்த அளவுக்கு இருக்கிறது என்பதைப்பற்றி எல்லாம் இங்கே பேசியவர்கள் எடுத்துச் சொன்னார்கள். எனவே, விலைவாசி ஏறுவதற்கு மிக முக்கியமான காரணம், உற்பத்தி குறைவாக இருப்பதுதான். பொருளாதாரத்திலே சொல்வார்கள், 'A Law of Demand and Supply' என்ற பொருளாதார விதிப்படி பார்த்தால் உற்பத்தி அதிகமானால் அங்கே விலைவாசி உயர்வதற்கான வாய்ப்புகள் மிக, மிகக் குறைவு என்று சொல்வார்கள். உற்பத்தியைப் பெருக்க வேண்டும், தண்ணீர் வசதியை விவசாயிகளுக்கு உண்டாக்கிக் கொடுக்க வேண்டும்; மின் இணைப்பு 'உண்டாக்கிக் கொடுக்க வேண்டும். இப்போது நாம் பார்க்கிறோம், பல்லாண்டு காலமாகக் காத்திருக்கிறார்கள் விவசாயிகள் மின் இணைப்புப் பெறுவதற்காக. அந்த மின் இணைப்பை தமிழக அரசு வழங்கி, உடனடியாக அந்த விவசாயிகளுடைய அவல நிலையைப் போக்குகின்ற வகையில் ஏற்பாடு செய்துதர வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, முதியோர், ஊனமுற்றோர், விதவைகள் ஆதரவற்றவர்களுக்கெல்லாம் வழங்கப்படுகின்ற அந்த உதவித் தொகை என்பது குறித்த காலத்திற்குள் சிரமம் இல்லாமல் கிடைப்பதில்லை. அதில் பல நடைமுறைச் சிக்கல்கள் இருக்கின்றன. மனு விண்ணப்பித்து பல மாதங்களாகி, இன்னும் சொல்லப்போனால், வருடக் கணக்கில்கூட சில இடங்களில் காத்திருக்க வேண்டிய ஓர் அவல நிலை இருக்கிறது. எனவே, நம்முடைய சர்க்கார் உடனடியாக அதில் அக்கறை செலுத்தி, அவர்களுக்கெல்லாம் அந்த உதவித் தொகை விண்ணப்பித்து ஒரு மாத காலத்திற்குள் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-40*

போக்குவரத்துத் துறையைப் பொறுத்தமட்டிலும், போக்குவரத்து என்பது இந்த நாட்டில் மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. எங்கள் தொகுதியில்கூட பல கிராமங்கள் இன்னும் பஸ் வசதியே இல்லாமல் இருக்கின்றன. எனவே, அவற்றையெல்லாம் சரி செய்ய வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன். Lack of adequate transport facilities is the main bottleneck of all progress என்று சொல்வார்கள். அதாவது,



2008 ஜனவரி 31] [திரு. வீர. இளவரசன்]

பொருளாதார வளர்ச்சிக்குத் தடையாக இருப்பது இந்தப் போக்குவரத்து வசதியின்மைதான் என்று சொல்வார்கள். எனவே, அந்த அடிப்படையில் போக்குவரத்து வசதியை எல்லா கிராமங்களுக்கும் ஏற்படுத்தித் தருவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, உயர் நீதிமன்றத்தில்—தமிழ் இப்போது செம்மொழியாக ஆக்கப்பட்டிருக்கிறது. ஆனால்—உயர் நீதிமன்றத்தில் வாதாடவோ, வழக்குகள் தாக்கல் செய்வதற்கோ தமிழில் அதை நாம் செய்வதற்கு உரிமையில்லை என்ற நிலைமைதான் இன்றைக்கும் இருக்கிறது. அதற்காகத் தொடர்ந்து நாம் போராடி வருகிறோம். ஆளுநர் உரைகளில் தொடர்ந்து நாம் சொல்லி வருகிறோம். உயர் நீதிமன்றத்தில் தமிழை வழக்கு மொழியாக ஆக்குவோம் என்று சொல்கிறோம். ஆனால், நடைமுறையில் அது செய்யப்படுவதில்லை. பல மாநிலங்களில் பார்க்கிறோம். உத்திரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், இராஜஸ்தானில் எல்லாம் அவர்கள் தாய்மொழியில் வழக்காட, அங்கே வாய்ப்பிருக்கிறது. அதேபோல, மேற்கு வங்காளத்தில் பெங்காலியில் வாதாடுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. கேரளத்தை எடுத்துக்கொண்டால் மலையாளத்தில் வாதாடுவதற்கும் வழக்குத் தாக்கல் செய்வதற்கும் வாய்ப்பு இருக்கிறது. ஆனால், தமிழ்நாட்டில் தமிழில் வாதாடுவதற்கு, வழக்குத் தாக்கல் செய்வதற்கு இங்கே உயர் நீதிமன்றத்தில் நமக்கு வாய்ப்பு இல்லை. எனவே, உடனடியாக அப்படியொரு நிலைமையை தமிழகத்தில், உயர் நீதிமன்றத்தில் தமிழில் வாதாடவும், வழக்குத் தாக்கல் செய்யவும் இங்கே வழிவகை, ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வோராண்டும் நாம் பார்க்கிறோம். 2006 முதல் 2008 வரையிலான இந்த ஆளுநர் உரைகளில் எல்லாம் தொடர்ந்து நாம் பார்ப்பது என்பது இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையில் சுமுகமான தீர்வு காண வேண்டுமென்று எல்லா உரையிலேயும் நாம் குறிப்பிட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால், என்ன நடக்கிறது? அங்கே இருக்கின்ற அப்பாவித் தமிழர்கள் கொல்லப்படுகிறார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பில்லை. அங்கே பாதிக்கப்பட்ட அந்த அப்பாவித் தமிழர்களுக்கு இங்கேயிருந்து உணவும், உடையும், மருந்துகளும் நாம் அனுப்ப முயன்றால், செஞ்சிலுவைச் சங்கத்தின்மூலமாக, நேரடியாக அல்ல, செஞ்சிலுவைச் சங்கத்தின்மூலமாக அனுப்ப முயன்றால், அதற்கு

[திரு. வீர. இளவரசன்] [2008 ஜனவரி 31

இங்கே அனுமதி மறுக்கப்படுகிறது. எனவே, இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்றுவதில் நாம் வெறும் பேச்சாகப் பேசிக்கொண்டிருந்தால் மட்டும் போதாது, அவர்களைப் பாதுகாக்கின்ற அந்த முயற்சிகளை எடுக்க வேண்டும். அதற்காக இலங்கைத் தமிழர்களைக் கூண்டோடு கருவறுக்கின்ற நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்ற சிங்கள இராணுவத்திற்கு மத்திய அரசாங்கம் எந்தவித உதவியும் செய்யக் கூடாது என்பதை இங்கே ஒரே முகமாக நின்று குரல் கொடுக்க வேண்டுமென்று தமிழக அரசை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

எனவே, ஆளுநர் உரை என்பது பல குறைகளை, குற்றம் குறைகளை இங்கே கொண்டிருக்கின்ற ஓர் உரையாக இருக்கிறது. அதுமட்டுமல்ல, இன்னும் சொல்லப் போனால், மதுரையிலே, (மணியடிக்கப்பெற்றது) ஒரேயொரு நிமிஷம். ஒரேயொரு செய்தியை மட்டும் நான் சொல்லி விடைபெற்றுக்கொள்கிறேன். மதுரையிலே தொழில் பூங்கா அமைப்பதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டிருப்பதாக ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அது எந்த இடம் என்று குறிப்பிடப்படவில்லை. ஆனால், நான் சொல்ல விரும்புவதெல்லாம் என்னுடைய தொகுதியில் இருக்கின்ற அந்த வலையங்குளம்-எலியார்பத்தி என்ற பகுதியில் ஓர் ஆயிரம் ஏக்கர் பரப்பளவு நிலம், அந்த நிலம் கையகப்படுத்தப்படுவதாக ஒரு பேச்சு பரவலாக அடிபடுகிறது. அந்த ஆயிரம் ஏக்கரில் கிட்டத்தட்ட 120 கிணறுகளுக்கு மேலே அங்கே இருக்கின்றன. அனைத்து நிலங்களும் விவசாய விளைநிலங்கள். பல விவசாயத் தோழர்கள் அதையே முழுமையாக நம்பியிருக்கிறார்கள். கிணறுகள் மட்டுமல்ல, 85 மின் இணைப்புகளும் அங்கே இருக்கின்றன. அந்த விவசாயிகள் முழுமையாக நம்பியிருக்கின்ற அந்த நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு முயற்சிப்பதாக ஒரு பேச்சு பரவலாக அங்கே வந்துகொண்டிருக்கிறது. எனவே, அதில் அரசாங்கம் முழுமையாகக் கவனம் செலுத்தி விவசாய விளைநிலங்கள் பாதிக்காத வகையில் இந்தத் தொழில் பூங்காவையோ அல்லது சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைத்தாலோ நல்லது, மக்களுக்கும் நல்லது என்று சொல்லி, இந்த அளவில் பேசுவதற்கு வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 12-45*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. குணசேகரன். சார், பதினைந்து நிமிடம். Sharp–ஆக முடிக்க வேண்டும்.



2008 ஜனவரி 31]

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நாள் உண்மையான தமிழர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியான நாள். மைய அரசு செம்மொழி தமிழ் மொழிக்கு ஆய்வு மையத்தை உருவாக்கி, பொன் மாலையில் விலை உயர்ந்த வைர, வைடூரியங்கள் போன்ற கற்களைப் பதிப்பதைப்போல தமிழர்களின் மூத்த தமிழன், தகுதிவாய்ந்த மாண்புமிகு முதல்வரை ஆய்வு மையத்தின் தலைவராக அறிவித்ததை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வரவேற்கிறேன். அவர் வாழ்நாள் முழுவதும் இவ்வமைப்பின் தலைவராக செயலாற்றி தமிழ்மொழி வளர்ச்சிக்கும் உலகத் தமிழர்களுக்கும் பெருமை சேர்க்கவேண்டும் என்ற என் விருப்பத்தைப் பகிர்ந்துகொள்கிறேன். தமிழக அரசு கொண்டுவந்த, உயர் நீதிமன்றத்தில் தமிழ்மொழிப் பயன்பாட்டை விரைவில் சட்டமாக்க, நடைமுறைப்படுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

2008 ஆம் ஆண்டுக்கான தமிழக அரசின் வரவு செலவுத் திட்டத்தின் முன்னோட்டமாக கொள்கைக் குறிப்பாக வைக்கப்பட்டுள்ள தமிழக அரசின் ஆளுநர் உரையை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வரவேற்கிறேன். தமிழகத்தின் தொழில் மேலாண்மை, நீர்ப் பாசனம், மக்களின் அடிப்படைத் தேவைகள், மக்கள் நலத் திட்டங்கள் உள் கட்டமைப்பு வசதிகள் மற்றும் நீண்டகாலத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டிய அவசியமான காலத்தில் நாம் இருக்கிறோம். இத்திட்டங்களை தமிழக அரசு தொலைநோக்குப் பார்வையோடு கொள்கை அறிவிப்பாக அறிவித்துள்ளது சிறப்புக்குரியது. ஆனால், இத்திட்டங்கள் காலத்தில் நிறைவேற்றப்பட வலுவான நிதியாதாரம் தேவையுள்ள நிலையில், அறிக்கையில் குறிப்பிட்டுள்ள மத்திய அரசின் நிதிக் குழுக்களின் கடந்த கால தமிழகத்திற்கான பரிந்துரைகள் நிறைவளிப்பதாக இல்லை என்பதும், தற்போது பதின்மூன்றாவது நிதிக் குழுவின் பரிந்துரைகள் தமிழகத்தின் திட்டங்களுக்குக் கூடுதல் நிதிப் பகிர்வினை அளிக்கும் என்று நம்பப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளது நிச்சயமற்ற நிலையில் உள்ளது. எனவே, கூடுதல் நிதியைப் பெறுவதில் உறுதியான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். நிதி ஒதுக்கீடுகளில், மாநிலங்களுக்கு நிதி கொடுப்பதில் மத்திய அரசின் செயல்பாடுகள் துரிதப்படுத்தப்படவேண்டும். உதாரணமாக, தமிழகத்தில் கடந்த மாதம் ஏற்பட்ட வெள்ளத்தால் உயிர்ச் சேதம் மற்றும் சொத்துக்கள், பயிர்கள் பாதிக்கப்பட்டு, சேத மதிப்பீடு

[திரு. சு. குணசேகரன்] [2008 ஜனவரி 31

ரூ.1,510 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் உடனடி நிவாரணத்திற்காக மாநில அரசு ரூ.200 கோடி ஒதுக்கியுள்ளது. அதை வரவேற்கிறேன். அதேசமயம், மத்திய அரசு இன்னும் நிதி ஒதுக்காமல் காலம் கடத்துவது பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவமுடியாத சூழ்நிலையை உருவாக்கியுள்ளது. பாதிப்புக் காலங்களில் மத்திய அரசு மிக விரைவாக நிதிகளை ஒதுக்குகிற நடைமுறைகளை உருவாக்கவேண்டும்.

மாண்புமிகு தமிழக முதல்வரின் வழிகாட்டுதலில் அறிவிக்கப்பட்டுள்ள தமிழக நதிகளை முதல் கட்டமாக இணைக்க இருக்கும் திட்டம் தமிழகத்தில் மக்களின் குடிநீர், வேளாண் உற்பத்தியில் மகத்தான சாதனை படைக்கும். இத்திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும். தொடர்ந்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் வலியுறுத்தி வரும் தென்னக நதிகள் இணைப்புத் திட்டத்தை நிறைவேற்ற சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றுவதோடு, சிறப்பு வாய்ந்த நமது மாண்புமிகு முதல்வர் தலைமையில் அனைவரும் ஒன்றுபட்டுச் செயல்படவேண்டும்.

தமிழக மக்களின் நீண்டகாலக் கோரிக்கையான சேது சமுத்திரத் திட்டம் நிறைவுபெறுகிற நிலையில், தமிழக மக்கள் ஏற்றுக்கொள்ளாத, மத உணர்வுகளை முன்வைத்து மனிதன் நேரடியாகப் பார்க்க முடியாத இயற்கையான மணல் திட்டை பாலம் என்று பொய் உரைத்து, குறுகிய அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக தமிழகத்தின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடுபவர்களை அடையாளம் காட்டி, தமிழக மக்களை இத்திட்டம் நிறைவேற்ற ஒருங்கிணைக்கும் நடவடிக்கையில் தமிழக அரசு ஈடுபட வேண்டும். சட்டமன்றத்தில் சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும்.

தமிழகத்தில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் சுகாதாரத் துறையில் பணி நியமனங்கள் மற்றும் மக்களின் நலன் காக்க எடுத்திருக்கும் திட்டங்கள், தொடர் திட்டங்கள், சிறப்புக்குரியவை. ஆனால், தற்போது தமிழகத்தில் பொது சுகாதாரத் துறையில் D.P.H.-ல் 1,417 P.H.C. கள் இயங்கிவருகின்றன. அவற்றின்கீழ் துணை சுகாதார நிலையங்கள் 8,683 நிலையங்கள் சிறப்பாகச் செயல்படுகின்றன. இதில் கிராமப்புறச் சேவை மற்றும் கருவுற்ற பெண்களின் நலத் திட்டங்கள், பிரசவம் போன்றவற்றில் சிறப்பாகப் பயிற்சிபெற்ற V.H.N. என்று சொல்லப்படுகிற பணியாளர்கள் சிறப்பாகப் பணியாற்றுகிறார்கள். இந்தியாவிலேயே சிறப்பாக பணியாற்றி



2008 ஜனவரி 31] [திரு. சு. குணசேகரன்]

விருதையும் பெற்றுள்ளார்கள். அவர்களை de-promote, தகுதியற்றவர்களாக மாற்றுவதற்கு தேசிய கிராமப்புறச் சுகாதார இயக்கத்தின்மூலம் எடுக்கும் நடவடிக்கையை தமிழக அரசு ஏற்காமல் நிராகரிக்க வேண்டும்.

*பிற்பகல் 12-50*

ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் உலக சுகாதார அமைப்பு கூறும் சதவிகிதத்தில் செவிலியர்கள் இல்லாத நிலையில், அங்கு செவிலியர்களைப் பணியமர்த்தும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழகத்தில் வாழ்நிலையில் வறிய நிலையில் உள்ள கோடிக்கணக்கான மக்களின் உணர்வுகளை மதித்து, அவர்களுக்கு உதவும் நோக்கோடு, தமிழக முதல்வர் கோடிக்கணக்கான ரூபாய் நிதி ஒதுக்கீட்டில், நூற்றுக்கணக்கான திட்டங்களை அறிவித்து அவையெல்லாம் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. மிகப் பெரும்பாலான திட்டங்கள், வருவாய்த் துறையின்கீழ் ஒப்படைக்கப்படுவதால், பணிப் பளு காரணமாக திட்டங்கள் செயல்படுத்துவதில் காலதாமதமும், மாவட்டத்தில் ஏற்றத்தாழ்வுகளும் ஏற்படுகின்றன. எனவே, திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்த தனியான நிர்வாகம் மற்றும் கண்காணிப்பு அமைப்புகளை உருவாக்க வேண்டும்.

மேலும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் முன்மொழியப்பட்டுள்ள குடும்பத்திற்கு ஒரு வீடு என்ற கோரிக்கையை நமது முதல்வர் அவர்கள் முதன்மைத் திட்டமாக எடுத்துச் செயல்படுத்த வேண்டும். தனியார் தொழில் நிறுவனங்கள் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை வளைத்துப்போடுகிற சூழலில், தமிழகத்தில் உழைக்கிற மக்கள் தலைசாய்த்துப் படுப்பதற்கு சொந்தமாக வீடு இல்லாத இழிநிலையைப் போக்க வேண்டும்.

5 ஆண்டுகள் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் சிறந்தது. ஆனால், ஏழைகளுக்கு குடிமனைகள், நீர்வரத்து, கோயில் நிலம் என்று பல காரணங்கள் சொல்லி பட்டா கிடைக்காத நிலை தொடர்கிறது. காரணங்களைக் களைந்து, மாற்று வழி கண்டு, பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தமிழகத்திலேயே அதிக ஆண்டு வருமானம் பெற்றுத்தரும் டாஸ்மாக் கடைகளில் பணிபுரியும் இளைஞர்கள் பணி நிரந்தரம், ஊதிய உயர்வு உடன் பரிசீலிக்கப்பட வேண்டும். டாஸ்மாக்கில் 11-12-2007 முதல் விலை உயத்தப்பட்டுள்ளது. விலை உயர்வால் 10-12-2007-ல் அதிக அளவில் பழைய விலையில் மது விற்பனை நடந்துள்ளது. ஆனால், நிர்வாகம் தவறான கருத்தில் பணியாளர்கள் தவறு செய்ததாகக் கூறி, எந்த விசாரணையும் இல்லாமல் அபராதம் விதிக்கிறார்கள். கட்டவில்லை என்றால் பணிவிடுப்பு செய்கிறார்கள். இதை உடன் நிறுத்த தமிழக முதல்வர் ஆணையிட வேண்டும்.

தென் மாவட்டங்களின் தொழில் வளர்ச்சிக்குப் பல திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. ஆனால், நான் தொடர்ந்து வலியுறுத்தும் சிவகங்கை கிராஃபைட் திட்டம் கடந்த ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டும், செயல்வடிவம் பெறாத நிலையில் உள்ளது. சிவகங்கையில் கிராஃபைட் தொழிற்பூங்கா தொடங்கி அம்மாவட்டத்தை தொழில் வளர்ச்சி மாவட்டமாக மாண்புமிகு தமிழக முதல்வர் அறிவிக்க வேண்டுகிறேன்.

மாவட்டத்தின் தலைநகராக இருக்கும் சிவகங்கையில் முழுமையான வசதிகள் அடங்கிய தலைமை மருத்துவமனை இல்லாததாலும், அனைத்து வசதிகளும் உள்ளடங்கிய தனியார் மருத்துவமனைகள் இல்லாததாலும், உடன் மருத்துவ 'வசதி இல்லாமல் ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கான உயிர்கள் பறிபோகிற கொடுமை சிவகங்கை பகுதியில் நிலவுகிறது. தேவையறிந்து உதவும் தாயைப்போல, திட்டங்களை மக்களுக்கு அளித்திடும் மாண்புமிகு நமது முதல்வர் அவர்கள் இந்த ஆண்டு சிவகங்கையில் மருத்துவக் கல்லூரி தொடங்கி அம்மக்களின் உயிர் காத்து உதவும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் இயற்கை வளங்களைப் பாதுகாப்பதிலும், பயன்படுத்துவதிலும் தெளிவான கொள்கை உருவாக்கப்பட வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்கள், நிபுணர்கள் போன்ற குழுமூலம் அறிக்கை சட்டமன்றத்தில் வைக்கப்பட வேண்டும். தமிழகத்தில் நீராதாரம், காட்டு வளம் பிரச்சினையாக உள்ள நிலையில் மணல், கிராவல் மற்றும் கிரானைட்டுகள் பயன்பாடுகள் பற்றி வெள்ளை அறிக்கை வைக்கப்பட வேண்டும்.

கிரானைட்டுகள், குவாரி என்ற வகையில் தமிழக மக்களின் எதிர்காலத் தேவைகளை கணக்கில் எடுக்காமல், பல்லாயிரம் கோடி





மதிப்புள்ள கிரானைட்டுகள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன. பல்லாயிரம் கோடி வருமானம் தனியாருக்குக் கிடைக்கும் குவாரிகள் உள்ள ஊராட்சிகள் எந்த அடிப்படை வசதிகளும் இல்லாமல் பரிதாப நிலையில் இருக்கின்றன.

மதுரைக்கு அருகில், ஒத்தக்கடையில் யானை படுத்திருப்பது போன்ற தோற்றம் உடைய யானைமலை உள்ளது. அந்த மலையை கிரானைட்டுக்காக அறுத்தெடுக்கப் போவதாக செய்தி வருகிறது. அதைத் தடுக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். தமிழகத்தில் இருக்கிற குன்றுகளை எல்லாம் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) ஓரேயொரு விஷயம்.

நிலத்திலோ, நீரிலோ கண்ணி வெடிகள் பதிக்கக்கூடாது என்று ஐ.நா. சபை தீர்மானம் நிறைவேற்றியுள்ள நிலையில், கடந்த காலங்களில் இராணுவ நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்ட கண்ணிவெடிகளில், இராணுவ வீரர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை விட, நூறு மடங்கு அதிகமாக பொதுமக்கள் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள் என்ற புள்ளிவிவரங்கள் உள்ளன.

கம்போடியா நாட்டில் 10 இலட்சம் பொதுமக்கள் கண்ணி வெடியால் பாதிக்கப்பட்டு கறைபடிந்த வரலாறு இருக்கிறது. இலங்கை இராணுவம் நமது கடல் பகுதியில் பதித்திருக்கும் கண்ணிவெடிகளை அகற்றுகிற ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும். இந்தக் கண்ணிவெடிகளால் தமிழகத்திலே இருக்கிற மீனவர்களுக்கு மிகப் பெரிய அபாயம் ஏற்படுகிற சூழ்நிலையில் மைய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

*பிற்பகல் 12-55*

ஓரேயொரு விஷயம், தமிழக அரசினுடைய மக்கள் நல்வாழ்வுத் திட்டத்தில் விதவைத் தாய்மார்களுக்கு வழங்குகிற அந்த நிதி உதவியில் 18 வயது மகன் இருந்தால் உதவித் தொகை வழங்கப்படாது என்ற நிபந்தனையைத் தளர்த்த வேண்டும். 60 வயதடைந்த முதியோர்களுக்கு ஆண் குழந்தைகள் இருந்தால் (மணியடிக்கப்பெற்றது) உதவித் தொகை கிடைக்காது என்ற அந்த நிபந்தனையையும் தளர்த்தி, மத்திய அரசு கொண்டு வந்திருக்கிற மறைந்த இந்திரா காந்தி பெயரிலான விதவை உதவித் திட்டத்தில், முதியோர் உதவித் திட்டத்தில் 65 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு...

[2008 ஜனவரி 31

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மருங்காபுரி சின்னச்சாமி. (குறுக்கீடு) உரையை முடித்துவிடுங்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**திரு. சு. குணசேகரன்:** அந்தத் திட்டத்திலே வறுமைக்கோட்டு பட்டியலில் பெயர் இருந்தால்தான் உதவித் தொகை கிடைக்கும் என்ற நிலை உள்ளது. ஏற்கெனவே தமிழகத்தில் இருக்கிற வறுமைக்கோட்டுப் பட்டியல் கடந்த ஆட்சியில் தவறாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை சட்டமன்றத்திலே நாம் பதிவு செய்திருக்கிறோம். எனவே, அந்தப் பட்டியலை மையமாக வைத்து உருவாக்கப்பட்டிருக்கிற இந்தத் திட்டம் தமிழகத்திலே உண்மையான பயனாளிகளுக்குக் கிடைக்கவில்லை. எனவே அந்த நிபந்தனையைத் தளர்த்தி, 65 வயதுடைய அனைத்து முதியோர்களுக்கும் இந்தத் திட்டத்தில் பயன் கிடைக்கிற வகையில் உதவித் தொகை வழங்க வேண்டும் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் மருங்காபுரி சின்னச்சாமி (குறுக்கீடு) உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சரி, உட்காருங்கள்.

**திரு. செ. சின்னச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையிலே பேசுகிற அரிய வாய்ப்பை எனக்கு வழங்கியிருக்கிற உலகம் போற்றும் உத்தமத் தலைவி, பார் புகழும் வீராங்கனை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி என்னுடைய உரையைத் தொடங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) முதலிலே என்னுடைய தொகுதி கோரிக்கைகளுக்கு வருகிறேன்.

எனது மருங்காபுரி தொகுதியிலே அரசு கலை, அறிவியல் கல்லூரியை அமைத்துத்தர வேண்டும். வையம்பட்டி-கொன்னையூர் சாலையை அகலப்படுத்தி, பலப்படுத்தித் தரவேண்டும். வீராப்பூர் கோயிலுக்கு மணிமண்டபம் கட்டித்தரவேண்டும். ஒரு சென்ட் தொழிற்சாலை அமைத்துத்தர வேண்டும்.

துவரங்குறிச்சியிலே தக்காளி பதப்படுத்துகின்ற குளிரூட்டும் நிலையம் அமைத்துத்தர வேண்டும்.

துவரங்குறிச்சி பணிமனையில் இருந்து சென்னைக்கு அரசு ஏ.சி. பஸ் விட வேண்டும்.



2008 ஜனவரி 31] [திரு. செ. சின்னச்சாமி]

பண்ணாங்கொம்பு, அரசு உயர்நிலைப் பள்ளிகளிலே 10 ஆம் வகுப்பு தேர்விலே 86 விழுக்காடுகள், 92 விழுக்காடுகள், 99 விழுக்காடுகள் வெற்றி பெற்றிருக்கின்றனர். அந்தப் பள்ளிகளையெல்லாம் தரம் உயர்த்துவதற்கு அரசினுடைய சட்டத்தைத் தளர்த்தி இரண்டு இலட்சம் ரூபாய் என்பதை 1 இலட்சம் ரூபாய் என்று நிர்ணயிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல மணப்பாறை தாலுகா மக்களினுடைய நலன் கருதி எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியிலே இருக்கிறபொழுது மாவட்டத் தலைமை மருத்துவமனையாக ஆணையிட்டு, தற்பொழுது உலக வங்கி நிதி ஒதுக்கப்பட்டும் அரசால் இன்னும் அந்தப் பணி செய்யப்படவில்லை. உடனடியாக கட்டுமானப் பணியைத் தொடங்கிடவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியிலே இருக்கிற கிறிஸ்தவ மக்கள் எல்லாம் B.C-யிலேயிருந்து M.B.C.-க்கு போட வேண்டும் என்று கேட்டு இருக்கிறார்கள், அதையும் நிறைவேற்றித் தரவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். இந்து ஊராளி கவுண்டர்கள் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் திருச்சி, புதுக்கோட்டை, கரூர், பெரம்பலூர் மாவட்டத்தைச் சார்ந்தவர்கள் சீர்மரபினர் பட்டியலிலே உள்ளார்கள். தமிழகத்திலே மற்ற மாவட்டங்களில் இருக்கிறவர்களும் அந்தச் சலுகை வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அரசு நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தொட்டில் குழந்தைகள் திட்டம், ஆலயங்களிலே அன்னதான திட்டம், இலவச சைக்கிள் திட்டம், 1 ஆம் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்பு வரை இலவச பாடப் புத்தகத் திட்டம், புதிய வீராணம் திட்டம், உழவர் பாதுகாப்புத் திட்டம், இப்படி ஒப்பற்ற திட்டங்கள் எல்லாம் எங்கள் புரட்சித் தலைவி அம்மா ஆட்சியினுடைய சாதனைகள்.

அரசு அதிகாரிகள் மற்றும் அவர்கள் குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு கண் அறுவை சிகிச்சை செய்கிறபோது கிரிப்டன் லேசர் (Krypton Laser), டை லேசர் (Dye Laser), ஆர்கான் லேசர் (Argon Laser) போன்ற முறையில் செய்தால்தான் அரசு பணம் கிடைக்கிறது, ஏனைய முறைகள் செய்தால் கிடைக்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கும் அது கிடைத்திடுவதற்கு வழி செய்ய வேண்டும் என அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. செ. சின்னச்சாமி] [2008 ஜனவரி 31

தமிழகத்திலே தற்பொழுது இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே இருந்தது மாறி, இன்றைக்கு பத்தி 13, பக்கம் 9–லே அனைத்து மக்களுக்கும் குறைந்த விலையிலே தரமான அரிசி கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், கிராமப்புறத்திலே இருக்கிற கடைகளிலே 60 விழுக்காடுதான் இப்போது அரிசி வழங்கப்படுகிறது. 20 கிலோ அரிசியும் மொத்தமாகக் கொடுத்தால் அவர்களுக்கு வசதியாக இருக்கும். ஆனால், Civil Supplies Corporation-இலே அரசாங்கம் நெல்லைக் கொடுத்து ஊற வைத்து, அரைத்து அதை அவர்கள் மூலமாக ரேஷனுக்கு அனுப்ப வேண்டும். ஆலை அதிபர்கள் அந்த நெல்லை எல்லாம் கொள்ளை இலாபத்திற்கு வெளி மார்க்கெட்டிலே விற்று விடுகிறார்கள். ஆனால், ரேஷன் அரிசியைக் குறைந்த விலைக்கு வாங்கி மக்களுக்குத் தரமில்லாத அரிசியை வழங்குகிறார்கள். இது மணப்பாறையில் நடந்துகொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போல, பத்தி 14, பக்கம் 11-லே விவசாயிகளுக்குக் கூட்டுறவுக் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டு, மீண்டும் கடன் பெறவழிவகை செய்யப்பட்டுள்ளதாகச் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், கூட்டுறவு வங்கிகளிலே சென்று பார்த்தால் விவசாயிகளுக்குக் கடன் கிடைக்கவில்லை, காரணம் அங்கே பணம் இல்லை என்று சொல்லுகிறார்கள். அரசு கூட்டுறவு வங்கிகளுக்குப் பணத்தைக் கொடுத்து விவசாயிகளுக்கு உரிய கடனைக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-00*

அதைப்போல பத்தி 19, பக்கம் 15-இலே அரசு உயர்நிலை, நடுநிலை, மேல்நிலைப் பள்ளிகளுக்கு கணினி வழங்குவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கிற பல்வேறு பள்ளிகளிலே, அந்தப் பள்ளிகளின்சார்பாக மின் கட்டணம் கட்டப்படாத காரணத்தினாலே மின் இணைப்பு துண்டிக்கப்பட்டிருக்கிறது. எனவே, அங்கே மின் இணைப்பு வழங்கி, தொடர்ந்து பள்ளிகள் மின்சாரக் கட்டணத்தைக் கட்ட அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதைப்போல பத்தி 27, பக்கம் 20-இலே வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாதோர் அனைவருக்கும் தருவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். என்னுடைய மருங்காபுரி தொகுதியிலே



2008 ஜனவரி 31] [திரு. செ. சின்னச்சாமி]

71,000 குடும்பங்கள் இருக்கின்றன. ஆனால் 9,728 பேர்களுக்கு மட்டும்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. கேஸ் அடுப்பு என்று சொன்னால் 1,700 பேர்களுக்கு மட்டும்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆக, 12 விழுக்காடு கொடுக்கப்பட்டிருக்கிறது. மீதமிருக்கிற 88 விழுக்காட்டிற்கு எப்போது கொடுக்கப் போகிறீர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

அதைப்போல பத்தி 3, பக்கம் 2-இலே சட்டம் ஒழுங்கு பற்றி, 'தமிழகம் அமைதி தவழும் மாநிலமாக இருக்கிறது' என்று சொல்லியிருக்கின்றீர்கள். எங்கள் அம்மா ஆட்சிக் காலத்திலேதான் தமிழகம் அமைதிப் பூங்காவாக விளங்கியது; ரவுடியிஸம் ஒழிக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) காட்டுக்கொள்ளையன் வீரப்பன் சுட்டு வீழ்த்தப்பட்டான். விடுதலைப் புலிகள் ஊடுருவல் முற்றிலும் ஒழிக்கப்பட்டது. ஆனால், இப்போது விலைவாசிகள் எல்லாம் உயர்ந்துவிட்டன. அதேநேரத்திலே இந்த ஆட்சியிலே கொலை, கொள்ளை, ரிமோட் குண்டு வெடிப்பு, கத்திக் குத்து என்று தமிழகம் வெடிகுண்டு கலாச்சாரமாக மாறிவிட்டது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விழைகிறேன். இதற்காகத்தான் உச்ச நீதிமன்றம் கடந்த தேர்தலில் 99 வார்டுகளிலே மறு தேர்தலை அறிவித்தது என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போல மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பொறுத்தவரை கோட்டைக்கு வேண்டுமானால் நீங்கள் ஆளுகின்ற இயக்கமாக இருக்கலாம்; நாட்டு மக்களுக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் முதலமைச்சராக விளங்கிக் கொண்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொலைநோக்குப் பார்வையோடு தீட்டிய திட்டங்கள்தான் நாட்டு மக்களின் சிந்தனையில் இருந்து கொண்டிருக்கின்றன.

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எல்லாம் நிவாரணம் போய் சேரவில்லை. அந்த மக்களுக்கு உரிய நிவாரணம் கிடைக்க அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல என்னுடைய தொகுதியிலே உடைந்த குளங்கள் எல்லாம் அடைக்கப்படாமல் இருக்கின்றன. ஆறு, குளங்கள் எல்லாம் உடைந்து விவசாயம் செய்கிற பகுதிகள் எல்லாம் பாதிக்கப்பட்டு,

விவசாயப் பயிர்கள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இதற்கு அரசு உடனடியாக நிவாரணம் வழங்க வேண்டுமென இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அதைப்போல, மருங்காபுரி மிகவும் பின்தங்கிய தொகுதி. (மணியடிக்கப்பெற்றது) ஏழையெளிய மக்கள், விவசாய மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அந்த மக்களுடைய நலனுக்காக இந்த அரசு உடனடியாக. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சின்னச்சாமி, இங்கே பார்த்துப் பேச வேண்டும்.

**திரு. செ. சின்னச்சாமி:** எனவே, மருங்காபுரி தொகுதி மக்களினுடைய நலனுக்காக இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அங்கே சாலைகள் எல்லாம் மிக மோசமாக இருக்கின்றன. நான் Question–இலே கேட்டபோது, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் 'சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து செய்ய விரும்பினால் செய்யலாம்' என்று சொல்லியிருக்கின்றார்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், நிறைய பேசிவிட்டீர்கள்.

**திரு. செ. சின்னச்சாமி:** ஆனால், அங்கே 4 கோடி ரூபாய்க்கான திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டு, நிதி வேண்டுமென்று கேட்டால்— சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் கொடுப்பது 1 கோடியே 20 இலட்சம்தான். நாங்கள் எப்படிச் செய்ய முடியும்? எனவே, அரசு தனி நிதியொதுக்கி கிராமப்புறத்திலே இருக்கிற அந்தச் சாலைகளை எல்லாம் மேம்படுத்தித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி. (குறுக்கீடுகள்) போதும், நிறைய நேரம் பேசியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) நன்றாகப் பேசியிருக்கிறீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. செங்கோட்டையன், என்ன? சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் கன்னிப் பேச்சு பேசுகிறார். அவர் தொகுதிப் பிரச்சினைகளை மட்டும் பேச அனுமதி கேட்கிறார். இன்னும் இரண்டு மணித்துளிகள் அவருக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொடுத்தாகிவிட்டது. (குறுக்கீடு) ஏற்கெனவே கொடுத்தாகிவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி, பேசுங்கள். (குறுக்கீடு) அடுத்த வாய்ப்பிலே பேசலாம், உட்காருங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 13–வது சட்டப் பேரவையின் 7-வது கூட்டத் தொடரில், ஆளுநர் அவர்களின் உரையில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு நல்ல திட்டங்கள் குறித்தும், மேலும் சிறப்பாக பல திட்டங்களைச் செயல்படுத்த வேண்டிய தேவைகள் குறித்தும் ஏற்கெனவே எங்கள் கட்சியின் சட்டப் பேரவை உறுப்பினர்கள் இந்த அவையிலே விரிவாக எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அவற்றுக்குள்ளே செல்லாமல் இந்த உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிற சில முக்கியமான பிரச்சினைகளை இந்தச் சபையின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

அதற்கு முன்பாக, நம்முடைய தமிழக அரசின் சார்பில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் கம்யூனிஸ்ட் இயக்கத்தினுடைய மூத்த தலைவர்களில் ஒருவராக விளங்கும், மரியாதைக்குரிய தியாகசீலராக விளங்கும் ஆர். நல்லகண்ணு அவர்களுக்கு, அண்ணல் அம்பேத்கர் விருது வழங்கி, கௌரவித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், தமிழக அரசிற்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக எங்கள் மனப்பூர்வமான நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறோம்.

பிற்பகல் 1-05

அதேபோல, திருப்பூர் நகரம். 90 ஆண்டு காலம் திருப்பூர் நகராட்சியாக விளங்கி வந்த அந்த நகரம், தொடர்ந்து வேகமாக வளர்ந்து வந்த வளர்ச்சியின் விளைவாக, அது மாநகராட்சியாகத் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்று 13-வது சட்டப் பேரவையின் முதல் கூட்டத் தொடரிலேயே கோரிக்கை வைக்கப்பட்டு, அதை இந்த அரசு ஏற்றுக்கொண்டு கடந்த ஜனவரி ஒன்றாம் தேதியிலிருந்து திருப்பூர் நகரம் மாநகராட்சியாகத் தரம் உயர்கிற அந்த அற்புதமான பணியை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களே நேரில் வந்து தொடங்கி வைத்து, திருப்பூர் மக்களுக்குப் பெருமை சேர்த்தமைக்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், இதை மாநகராட்சியாக மாற்றுவதிலே தொடக்கத்திலிருந்து பெரும் அக்கறையும் கவனமும்

[திரு. சி. கோவிந்தசாமி] [2008 ஜனவரி 31

செலுத்தி, இதற்கு அடிப்படை மூலகாரணமாக விளங்கிய நம்முடைய தமிழக அரசின் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய திருப்பூர் தொகுதி மக்களின் சார்பிலே மனமார்ந்த நன்றியை, வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆளுநர் உரையின்மீது சில கருத்துகளை இங்கே மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே குறிப்பிட விரும்புகிறேன்.

ஆளுநர் உரை, பாரா 4-ல், மத்திய மாநில உறவுகள் குறித்து ஆராய நீதியரசர் மதன்மோகன் பூஞ்சி அவர்கள் தலைமையில் மத்திய அரசு குழு ஒன்று அமைத்துள்ளது குறித்து இந்த அரசு தன்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவிக்கிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மத்திய அரசினுடைய குறைந்தபட்ச செயல் திட்டத்தில் சர்க்காரியா கமிஷன் அறிக்கை வெளியாகி 20 ஆண்டுகள் கடந்துவிட்ட சூழலில், இடையில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார நிகழ்வுகளைக் கணக்கில் எடுத்து மத்திய மாநில உறவுகள் தொடர்பான பிரச்சினைகளை ஆய்வு செய்ய புதிய ஆணையம் அமைக்கப்படும் என்று அந்த குறைந்தபட்ச செயல் திட்டத்திலே உறுதியளிக்கப்பட்டது.

2004 மே மாதத்திலே பொறுப்பேற்ற ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு இந்தப் புதிய ஆணையம் தொடர்பான அறிக்கை முடிவை 2005 செப்டம்பர் 30 ஆம் தேதி ஓர் அறிக்கையாக வெளியிட்டது. அந்த அறிக்கையிலே, புதிய ஆணையத்தில் பரிசீலிக்கப்பட வேண்டிய விஷயங்கள் குறித்து மட்டுமே விரிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. அதேநேரத்தில், அதைத் தொடர்ந்து புதிய ஆணையம் நியமனம் செய்யப்படவில்லை. 19 மாத இடைவெளிக்குப் பிறகு, 2007 ஏப்ரல் 27 ஆம் தேதி புதிய ஆணையம் அமைப்பதற்கான அறிக்கை வெளியிடப்பட்டது. நீதியரசர் மதன்மோகன் பூஞ்சி அவர்கள் தலைமையிலான இந்தப் புதிய ஆணையத்தின் பதவிக் காலம் இரண்டு ஆண்டுகள் என்று அதிலே குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, ஐக்கிய முற்போக்குக் கூட்டணி மத்திய அரசினுடைய பதவிக் காலம் மே 2009–லே முடிவடையக்கூடிய ஒரு சூழலில் இந்த ஆணையத்தின் அறிக்கை வெளிவருவதற்கான சாத்தியக்கூறே இல்லை என்பதுதான் இதன்மூலம் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது என்பதை நான் கவனப்படுத்த விரும்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள்கூட பூஞ்சி ஆணையம் காஞ்சி ஆணையமாக அமையட்டும் என்று தன்னுடைய நம்பிக்கையையும் வாழ்த்துகளையும் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால்,



2008 ஜனவரி 31] [திரு. சி. கோவிந்தசாமி]

மத்திய மாநில உறவுகளைச் சீரமைக்க, ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் பதவிக் காலம் முழுவதிலும் அர்த்தமுள்ள அதற்குரிய நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்படமாட்டாது என்பது கவலையளிக்கும் அம்சமாக உள்ளது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த ஆணையத்திற்கான அறிக்கை வெளிவந்த போதே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய தலைமை இது தொடர்பான சில விமர்சனங்களை முன் வைத்தது. குறிப்பாக, இந்த ஆணையத்திலே உறுப்பினர்களாக இருப்பவர்களில் மத்திய மாநில உறவுகளிலே மிகுந்த அக்கறையுள்ள உறுப்பினர்கள் ஒருவர்கூட இடம் பெறவில்லை என்றும், அதேபோல இந்த ஆணையத்தை நியமிக்கும் முன்பு இந்த விஷயத்தில் கடந்த காலங்களில் ஒரு மரபாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்த, மாநில அரசுகளோடு கலந்து, கலந்தாய்வு நடத்துகிற நடைமுறையும் இதிலே கடைபிடிக்கப்படவில்லை. இந்த ஆணையத்தின் பரிசீலனைக்குரிய விஷயங்களாக மத்திய அரசு வரையறை செய்துள்ளவற்றில், மாநில அரசுகளுடைய அதிகார வரம்புக்குட்பட்ட சட்டம்-ஒழுங்குப் பிரச்சினையிலேகூட மத்திய அரசு தலையிடவும், தன்னிச்சையாக நடவடிக்கை எடுக்கவும், வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. எந்த ஒரு மாநிலத்திலும், மத்தியப் பாதுகாப்புப் படைகளை மாநில அரசின் வேண்டுகோள் இல்லாமலேயே தன்னிச்சையாக அனுப்ப அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. சில குறிப்பிட்ட வகை குற்றங்களை நேரடியாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ள மத்திய சட்ட அமலாக்க முகமை ஒன்றை ஏற்படுத்துவது போன்றவை இந்த விமர்சனங்களிலே அடங்கும்.

எங்கள் கட்சியின் மேற்குறித்த விமர்சனங்களுக்குப் பிறகு, மத்திய அரசு இவற்றைப் பரிசீலித்து அந்த மதன்மோகன் பூஞ்சி ஆணையத்தின் உறுப்பினர்களில் கூடுதலாக டாக்டர் கமலேஷ் பாச்சி என்கிற பேராசிரியர் ஒருவர் அதிலே நியமிக்கப்பட்டார். ஆனால் மற்ற பிரச்சினைகளைப்பற்றி அரசு எந்த அக்கறையும் இதிலே காட்டவில்லை என்பது வருத்தத்திற்குரியது. மத்திய மாநில உறவுகள், மத்தியில் கூட்டாட்சி; மாநிலத்தில் சுயாட்சி என்ற சமஷ்டி கோட்பாட்டை அடியொற்றி அமைவதற்கான வாய்ப்பு, இந்த பூஞ்சி ஆணையத்தின்வாயிலாக உருவாக இயலாது என்பதைத்தான் இந்த நேரத்திலே மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி சுட்டிக்காட்ட விரும்புகிறது. எனவே, உண்மையில், மத்திய மாநில உறவுகளைச் சீரமைப்பதற்கான வழிமுறைகளை, மத்திய மாநில உறவுகளிலே மிகுந்த அக்கறை கொண்டிருக்கிற நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், தமிழக அரசும், இதைக் கவனத்திலே கொண்டு, மத்திய

அரசாங்கத்தினிடத்திலே வலியுறுத்தி, மத்திய மாநில உறவுகள் குறித்த ஒரு நல்ல தீர்வுக்கு வழிவகுக்க வேண்டும். அதற்கு மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி பக்கபலமாக, உறுதுணையாக நிற்கும் என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

*பிற்பகல் 1-10*

அதேபோல, para 5-ல், 13-வது நிதிக் குழு குறித்து குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதிலே 'கடந்த ஆண்டுகளில், மத்திய அரசு அமைத்த நிதிக் குழுக்களின் பரிந்துரைகள் அனைத்தும் தமிழ்நாட்டிற்கு நிறைவளிப்பதாக அமையவில்லை. தமிழ்நாடு போன்ற சிறப்பாகச் செயல்படும் மாநிலங்களுக்கான நிதிப் பகிர்வு தொடர்ந்து குறைக்கப்பட்டு வந்துள்ளது. அண்மையில் அமைக்கப்பட்டுள்ள 13-வது நிதிக் குழு, இந்நிலையை மாற்றி, நமது மாநிலத்தின் சிறந்த செயல்பாடு மற்றும் வளர்ச்சித் திட்டங்களுக்கான தேவைகள் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு, சரியான நிதிப் பகிர்வினை அளிக்கும் என நம்புகிறோம்' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான் இந்த நம்பிக்கையைச் சீர்குலைக்க விரும்பவில்லை. ஆனால், அதே நேரத்தில், இந்த 13-வது நிதிக் குழு, தன்னுடைய பரிசீலனைக்குரிய விஷயங்களாக எடுத்துக்கொள்ளப்பட்டிருப்பதன் அடிப்படை, 10-வது, 11-வது, 12-வது நிதிக் குழுக்களுடைய அணுகுமுறையை அடியொற்றியேதான் இதுவும் உள்ளது என்பதை இங்கே கவனப்படுத்த விரும்புகிறோம்.

அரசியலமைப்புச் சட்டத்தின் சான்றுகளுக்கேற்ப அமையும் இந்த நிதிக் குழுவின் பரிசீலனையை மத்திய அரசு, மாநிலங்களின் நிதியாதாரங்களைப் பலப்படுத்துவதற்கான நோக்கத்தையே சீர்குலைக்கும் வகையில் சுருக்கி வைத்துள்ளது. நிதிக் குழு, மத்திய அரசினுடைய எல்லாச் செலவினங்களையும் கணக்கில் எடுத்துக்கொண்டு, அவற்றிற்கான வழிவகைகளையும், நிதியாதாரத்தையும் உத்தரவாதம் செய்த பின்னர், எஞ்சியுள்ள நிதியாதாரங்களை, மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிப்பது பற்றிய பரிந்துரைகளைச் செய்ய வேண்டுமென்பதே மத்திய அரசின் நோக்கமாக உள்ளது. ஆகவே, இதை நாம் கவனத்திலே கொள்ள வேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே, மாநிலங்களின் நிதி ஒதுக்கீடுகளை, மத்திய நிதிக் குழு பின்பற்றிய அணுகுமுறையையொட்டி, மத்திய அரசினுடைய தாராளமய





பொருளாதார நடவடிக்கைகளை, மாநிலத்தில் அமல்படுத்துவதற்கான நிபந்தனைகளோடு இணைந்தே பகிர்ந்தளிப்பது என்பதில் மாற்றம் இல்லாத நிலை தொடர்கிறது என்பதையும் நான் கவனப்படுத்த விரும்புகிறேன்.

மத்திய மாநில அரசுகளுடைய நிதிக் குழுக்களின் செயல்பாடும் சரி, மாநில அரசுகளின் நிர்வாக பட்ஜெட்டுக்கான ஒதுக்கீடு செய்கிற பட்ஜெட்டும் சரி, பற்றாக்குறை பட்ஜெட்களாக அமையக்கூடாது என்று அதிலே வலியுறுத்தப்பட்டு வருகிறது. ஆகவே, பற்றாக்குறை பட்ஜெட்டே அமைக்க வேண்டுமென்பது அல்ல. ஆனால், மக்களுடைய பல்வேறு அடிப்படைத் தேவைகளுக்கான பல நல்ல திட்டங்களை உருவாக்குகின்றபோது, குறிப்பாக, நம்முடைய தமிழக அரசு இப்போது இரண்டு ரூபாய்க்கு, ஏழையெளிய மக்களுக்கு ரேஷன் கடைகளிலே அரிசி போடுவதற்காக ரூ.300 கோடிக்கு மேல் நிதியொதுக்கியிருக்கிறது. ஆகவே, இதுபோன்ற மக்கள் நலத் திட்டங்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்கிறபோது, அந்த பட்ஜெட்டிலே பற்றாக்குறை வந்தாலும், அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை என்ற முறையில் அதைப் பார்க்கவேண்டும். இல்லையென்றால், பல மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்தமுடியாத நிலை உருவாகும் என்பதைக் கவனப்படுத்த விரும்புகிறோம். (குறுக்கீடு) அதேபோல, நம்முடைய ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4-வது பக்கத்திலே, 5-வது para-வைப் படித்தார்கள். அதிலே, 'கடந்த ஆண்டுகளில், மத்திய அரசு அமைத்த நிதிக் குழுக்களின் பரிந்துரைகள் அனைத்தும் தமிழ்நாட்டிற்கு நிறைவளிப்பதாக அமையவில்லை' என்று இருக்கிறது என்று சொன்னார்கள். 8-வது பக்கத்தை அவர்கள் படித்திருப்பார்கள் என்று சொன்னால், அதிலே, 10-வது para-விலே, "கடந்த பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் திட்ட ஒதுக்கீடான, ரூ.40 ஆயிரம் கோடியை, இரு மடங்குக்கும் மேலாக உயர்த்தி, ரூ.85,344 கோடி அளவில், வரும் பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், திட்டப் பணிகளை மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது" என்பதையும், அவர் கவனத்திலே கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1-15

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டத்திற்காக ஒதுக்கப்படுகிற தொகை என்பது நிதியொதுக்கம் அல்ல. இந்த அளவு நிதிக்குத் திட்டமிட்டுச் செயல்படுவதற்கு அனுமதி என்றுதான் பொருள். அதற்கு மத்திய அரசினுடைய பங்கு மிகக்குறைவு. திட்டத்திலே மிகப்பெரிய பங்கு மாநில அரசுக்குத்தான். (மேசையைத் தட்டும் ஒலி) திரு. கோவிந்தசாமி அவர்கள் எடுத்துக்காட்டிய அந்த முதல் பகுதி, இந்த மூன்று ஆண்டுகளாக ஏறத்தாழ பத்தாவது, பதினோராவது நிதிக் குழுவிலே எல்லாம், மாநிலங்களுக்கு Devolution of the Central Fund என்ற முறையில் மத்திய நிதியை மாநிலங்களுக்குப் பங்கிட்டு வழங்குகிற முறையில், விகிதாச்சாரத்திலே இவ்வளவு percentage என்ற முறையிலே மாநிலத்திற்குப் பங்கு வருகிறது. மொத்தம் ஒரு 300 கோடியைப் பங்கிடுவதாக இருந்தால், இவர்களுக்கு 10 விழுக்காடு, அவர்களுக்கு 15 விழுக்காடு என்று பங்கிட்டு வரும். அது, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் கடந்த 3 முறையாகத் தொடர்ந்து குறைந்துகொண்டே வந்திருக்கிறது. அதையும் மத்திய அரசுக்கும், மத்திய நிதிக் குழுவிற்கும் அந்த அடிப்படையில் ஏற்படுகிற குறைபாடுகளை எடுத்துக்காட்டி அந்தக் குறையைப் போக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம்.

**திரு. சி. கோவிந்தசாமி:** நம்முடைய காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் அவர்களுக்கு நம்முடைய மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் அளித்த விளக்கமே மிகப் பொருத்தமானது என்று கருதி, நான் அதற்குள் செல்ல விரும்பவில்லை.

ஆகவே, அடுத்ததாக நான் இங்கே கவனப்படுத்த விரும்புவது, 2005 ஆம் ஆண்டு மாநில நிதிக் குழு ஒன்று கடந்த ஆட்சிக் காலத்திலே அமைக்கப்பட்டது. அநேகமாக அதனுடைய பதவிக்காலமும் நிறைவு பெற்றிருக்கும் என்றே கருதுகிறோம். ஆகவே, அந்த மாநில நிதிக் குழு உள்ளாட்சி அமைப்புகளோடு மாநில அரசினுடைய நிதிகளைப் பகிர்ந்துகொள்வதற்காக அமைக்கப்பட்டதாக அது அறிவிக்கப்பட்டது. ஆகவே, அந்தக் குழுவால் தற்போது அதற்குரிய ஆய்வு அறிக்கைகள் ஏதாவது சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றனவா? அதிலே என்ன தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது அல்லது அந்தக் குழு இன்னும் தொடருகிறதா என்பதை இங்கே தெளிவுபடுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.





அடுத்து, ஒரு முக்கியமான பிரச்சினையை நான் கவனப்படுத்துவது, பாரா 8-ல் குறிப்பிடப்பட்டிருக்கிற சேது கால்வாய்த் திட்டம் சம்பந்தமாக, 150 வருட எதிர்பார்ப்பு இப்போது செயல்வடிவம் பெறக்கூடிய ஒரு நல்ல சூழ்நிலை உருவாகி, பணிகளும் தொடங்கி, பாதிக்குமேல் நடைபெற்று வருகிற நிலையில், வகுப்புவாத சக்திகள் தங்களின் அரசியல் ஆதாயங்களுக்காக இந்தத் திட்டத்தை முடக்கக்கூடிய முயற்சிகள் இப்போது நடைபெற்று வருகின்றன. அந்த முயற்சிகளுக்கு நம்முடைய தமிழகத்தில் ஏற்கெனவே ஆளுங்கட்சியாக இருந்த, அடுத்து நாங்கள் ஆளப்போகிறோம் என்று சொல்லுகிற நமது மரியாதைக்குரிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் அதற்கு (குறுக்கீடு) உட்காருங்கள், நான் சொல்லுவேன், உட்காருங்கள். (குறுக்கீடு) நான் சொல்லுவேன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஏன் சொல்லக்கூடாது? ஊரெல்லாம் நீங்கள் பேசுவீர்களா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி.வி. சண்முகம், (கூச்சல்-குழப்பம்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. சி. கோவிந்தசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, எந்த அரசியல் கட்சியையும் விமர்சிப்பதற்கு உரிமையுண்டு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி.வி. சண்முகம், (குறுக்கீடுகள்) அவரை உட்காரச் சொல்லுங்கள். நீங்கள் பேசலாம், முதலில் அவரை உட்காரச் சொல்லுங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** ஆனால், அவர்கள் எதை வேண்டுமானாலும் பேசுவார்கள். (குறுக்கீடு) இது தமிழ்நாடு சம்பந்தப்பட்ட பிரச்சினை. பேசுவது எங்களுடைய உரிமை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: முதலில் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. சி.வி. சண்முகம், உட்காருகள் (குறுக்கீடுகள்)

(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர் திரு. சி.வி. சண்முகம் அவர்கள் உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமியை நோக்கி கையை நீட்டி ஏதோ பேசிக் கொண்டிருந்தார்.)

**திரு. சி. கோவிந்தசாமி:** என்ன? (குறுக்கீடுகள்) இந்தமாதிரியான வார்த்தையையெல்லாம் பேசினால், (குறுக்கீடுகள்) நீங்கள் உறுப்பினராகப் பொறுப்பாகப் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

[2008 ஜனவரி 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடுகள்) என்னங்க, திரு. சி.வி. சண்முகம், நீங்கள் அனுமதியில்லாமல் எழுந்து நின்று பேசுவது முறையல்ல. (குறுக்கீடுகள்) நான் எச்சரிக்கையாகச் சொல்கிறேன். யாரைக்கேட்டு நீங்கள் எழுந்து பேசுகிறீர்கள்?

*(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர் திரு. சி.வி. சண்முகம் அவர்கள் உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமியை நோக்கி கையை நீட்டி தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தார்.)*

**திரு. சி. கோவிந்தசாமி:** நான் என்ன பேசினேன் என்று சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சண்முகம் யாரைக்கேட்டு எழுந்து பேசுகிறீர்கள்? திரு. சண்முகம், முதலில் நீங்கள் உட்காருங்கள். நான் எச்சரிக்கையாகச் சொல்கிறேன்.

**திரு. சி. கோவிந்தசாமி:** என்ன வரம்பு மீறினேன் என்று அவர்கள் சொன்னார்கள் என்றால் பரவாயில்லை. என்ன வரம்புமீறி நான் பேசினேன் என்று சொல்லுங்கள். சும்மா கத்தக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி.வி. சண்முகம், என்னுடைய அனுமதியைப் பெற்றுதான் நீங்கள் எழுந்து நின்று பேசவேண்டும், தெரியுமல்லவா? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) One minute, திரு. பீட்டர் அல்போன்ஸ் பேசட்டும்.

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர், தான் சார்ந்திருக்கிற இயக்கத்தின் சார்பாக, தமிழகம் சம்பந்தப்பட்ட ஒரு பிரச்சினை குறித்து ஒரு கருத்தை அவர்கள் பார்வையிலே அவையிலே முன்வைக்கிறார். அதைப் பிரதான எதிர்க்கட்சியாக இருக்கின்றவர்கள் கொள்கைரீதியாகத் தவறு என்று சொல்வதிலோ அல்லது அவர்களுக்கு வாய்ப்பு வருகின்றபோது அதை மறுப்பதிலோ எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை. ஆனால், முன்னாள் அமைச்சராக இருந்த ஓர் உறுப்பினர், அவரைப்பார்த்து 'சொல்லய்யா', 'உட்காருய்யா' என்று ஒருமையில் பேசுவது இந்த அவையிலே இருக்கின்ற எங்களுக்கு உடன்பாடில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் அமைதியாக இருங்கள்.



2008 ஜனவரி 31]

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** இதிலே தாங்கள் தகுந்த நடவடிக்கை எடுத்து, அவர் அதற்காக மன்னிப்புக் கேட்கவேண்டும் இந்த அவையிலே. (குறுக்கீடுகள்) அவர் மன்னிப்புக் கேட்கவில்லையென்றால், நாங்கள் இந்த விவாதத்திலே கலந்துகொள்ளப்போவதில்லை. நாங்கள் வெளிநடப்புச் செய்வோம். அவர் அதை பகிரங்கமாக—இன்றைக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டும்.—எங்களின் பின்னால் உட்கார்ந்துகொண்டு ஒருமையில் அழைப்பதற்கு அவர் மன்னிப்பு தெரிவித்தாலொழிய, நாங்கள் இந்த அவையினுடைய நடவடிக்கைகளில் தொடர்ந்து பங்கேற்பது என்பது—எதிர்க்கட்சியிலே இருக்கின்ற மற்றவர்களுக்கும் சற்று சிரமமாக இருக்கின்றது. எங்களுக்கு அந்தப் பாதுகாப்பு தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 1-20

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறபோது ஓர் இயக்கத்தைச் சார்ந்தவர்களை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைக் குறிப்பிட்டுப்பேசி 'மதவாத கட்சிகளோடு ஒன்று சேர்ந்து' என்பதைப்போல கொச்சைப்படுத்திப் பேசியதை (குறுக்கீடுகள்) என்ன பேசினாரா? பேசியதைச் சொல்கிறேன் அல்லவா? என்ன பேசினார் என்றால் எப்படி? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன்...

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** இருங்கள், சொல்லி முடிப்பதற்குள் அவர்கள் பேசிக்கொண்டே இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள், சொல்லுங்கள், (குறுக்கீடு) சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மதவாதக் கட்சிகளோடு சேர்ந்து நல்ல திட்டங்கள் வருகிறபோது எதிர்ப்புத் தெரிவிப்பதாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைக் குற்றம்சாட்டுவதைப்போல குற்றம்சாட்டுகிற நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நீங்கள் உங்கள் கருத்துகளைப் பரிமாறிக்கொள்ளுங்கள்; உங்கள் கொள்கைகளைச் சொல்லலாம் என்று வலியுறுத்துவது எப்படித் தவறாக இருக்கும்? மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேண்டுமென்றே ஏதாவது ஒரு பிரச்சினையைக் கிளப்ப

[திரு. கே.ஏ. செங்கோட்டையன்] [2008 ஜனவரி 31

வேண்டுமென்கிற முறையில் காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் அவர்கள் இங்கு குறிப்பிட்டதை (குறுக்கீடுகள்) மன்னிப்புக் கேட்க வேண்டுமென்று சொல்வது, அப்படியென்றால் இங்கே எத்தனையோபேர், எவ்வளவோ வார்த்தைகளை அமைச்சர்கள் எல்லாம் பேசியிருக்கிறார்கள். 'வா', 'போ' என்றெல்லாம். அதற்கெல்லாம் அவர்கள் மன்னிப்புக் கேட்பார்களா என்பதை உங்கள்மூலமாக நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன் (குறுக்கீடு) மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இருக்கக்கூடிய அமைச்சர்கள் யாரும் 'போய்யா, உட்காருய்யா' என்று யாரையும் சொன்னதில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசிக் கொண்டிருக்கிறார்கள் இல்லையா, உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஆற்காடு. நா. வீராசாமி:** இந்த அவையிலே யாராக இருந்தாலும் அது கம்யூனிஸ்ட் கட்சியாக இருந்தாலும், காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும் ஒருவருக்கொருவர் மரியாதை கொடுக்க வேண்டுமென்றுதான் நம்முடைய பீட்டர் அல்போன்ஸ் கேட்டுக்கொண்டார். அதை உணர்ந்துகொண்டு, அப்படித் தவறாகப் பேசியிருந்தால் வருத்தம் தெரிவிக்கிறேன் என்று சொல்வதிலே ஒன்றும் குறைபாடு கிடையாது. (குறுக்கீடுகள்)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கின்றவர்களைப்பற்றிக் குற்றம்சாட்டுவதற்கு முன்னால், ஆளுங்கட்சியிலே இருக்கிற அமைச்சர் என்ன சொன்னார் என்பதை நான் குறிப்பிட்டேன். அவர் பெயரைச் சொல்ல நான் விரும்பவில்லை. இதுபோன்ற நடவடிக்கைகளை நாங்கள் ஆதரிக்கிறோம் என்பதல்ல; இதுபோன்ற நடவடிக்கைகளைத் தவிர்ப்பது எல்லோருக்கும் நலம் என்பதைத்தான் நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே, ஆளுங்கட்சியாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சிகளாக இருந்தாலும் சரி, வார்த்தைகளைச் சொல்லுகின்ற நேரத்தில் சபைக்குக் குந்தகம் ஏற்படுகின்ற வார்த்தைகளையோ மற்றவர்களுடைய மனதைப் புண்படுத்துகிற வார்த்தைகளையோ சபையிலே குறிப்பிடாமல் இருப்பதற்கு அவர்களும் முன்வர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.



2008 ஜனவரி 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர். (குறுக்கீடு) மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தின் கண்ணியத்தையும் கௌரவத்தையும் காப்பாற்றுகின்ற கடமை இங்கு இருக்கின்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் உண்டு. குறிப்பாகத் தங்களுக்கு அதிகமாக இருக்கிறது. எனவே, மற்ற உறுப்பினர்கள் மனம் புண்படுகின்றவகையில் ஒருமையில் பேசுவதை எப்படி நீங்கள் அனுமதிக்கிறீர்கள்? மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் எழுப்பிய அந்தப் பிரச்சினைக்கு உறுதியான, தெளிவான தீர்ப்பினை நீங்கள் வழங்க வேண்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர், சொல்லுங்கள், சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. சண்முகம், திரு. கோவிந்தசாமி அண்ணன் அவர்கள் பேசுகின்றபொழுது ஏதோ அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக இயக்கத்தைக் குறிப்பிட்டு 'வகுப்புவாத சக்திகளோடு சேர்ந்துகொண்டு' என்று அவர்கள் சொன்னதற்குப் பின்னால்தான், பின்னால் இருந்து குரல் எழுப்பினார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சண்முகம் பேசியது முறையா? (குறுக்கீடு) நான் என்ன சொல்கிறேன்?

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** 'வகுப்புவாத சக்திகளோடு சேர்ந்துகொண்டு'—அவரவர் இயக்கத்திற்கு என்று தனியாகக் கொள்கைகள் இருக்கின்றன. ஆகவே,—எங்களுடைய இயக்கத்தினுடைய கொள்கையைக் கொச்சைப்படுத்துகிறவகையில் மாண்புமிகு உறுப்பினர், மார்க்சிய கம்யூனிஸ்ட் உறுப்பினர் பேசியதினால்தான் வந்தது. (குறுக்கீடு) அதற்குப் பின்னாலே விளக்கம் தருவதற்காக எழுந்த நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் ஏதோ மிகப் பெரிய ஒரு பூதாகரமான செயல் இந்த அவையில் நடந்துவிட்டதைப்போல மன்னிப்புக் கேட்க வேண்டுமென்ற கருத்தை இங்கே சொன்னார்கள். நான் பேசுகின்றபோதுகூட காலையில் எதிர்வரிசையில் இருக்கின்ற அத்தனை உறுப்பினர்களும் எழுந்து மிகவும் தரக்குறைவான வார்த்தைகளைச் சொல்லி (குறுக்கீடு) என் காதில் கேட்டது, நீங்கள் என்ன பேசினீர்கள் என்பது காதில் கேட்டது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மற்றவர்கள் அமைதியாக இருங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்**: இல்லை, இல்லை. நீங்கள் என்னென்ன பேசினீர்கள் என்பது என் காதில் கேட்டது. ஆனால், நான் இதுவரைக்கும் யாரையும் இந்த அவையில் தகாத வார்த்தை, ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை, நீங்கள் உச்சரித்ததற்குப் பின்னாலும், நான் அதைச் சொல்லவில்லை. அப்படி சபையினுடைய மரபை அனைத்து உறுப்பினர்களும் கடைப்பிடிக்க வேண்டுமென்று நான் உங்களை மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 1-25*

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி.வி. சண்முகம், உங்களை நான் கடுமையாக எச்சரிக்கிறேன். எதுவாக இருந்தாலும், நீங்கள் என்னிடம் கேட்டுக்கொண்ட பிறகுதான் பேசவேண்டும். அதை விட்டுவிட்டு, நீங்களாகவே எழுந்து நின்று, தெருவிலே சண்டை போடுகிறமாதிரி அவரிடம் பேசினால் என்ன அர்த்தம்? இது சபை, தெரிகிறதா? இந்தமாதிரித் தவறை இனிமேல் செய்யாதீர்கள். உங்களைக் கடுமையாக எச்சரிக்கிறேன், உட்காருங்கள். திரு. கோவிந்தசாமி, பேசுங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சபையில் இரண்டு முறை உறுப்பினராக இருந்திருக்கிறேன். கண்ணியக்குறைவாக எந்தக்காலத்திலும் நடந்து கொள்ளவில்லை. கையில் செருப்பைத் தூக்கிக் காட்டுவது, அல்லது சேர்மேலே ஏறி நின்று கொண்டு ஆடுவது போன்ற பழக்கங்களெல்லாம் என்னிடம் கிடையாது. ஆகவே, ஒரு அரசியல் கடமை என்ற முறையில், ஒரு கட்சி என்ற முறையில், இந்தச் சபையில் ஒரு கட்சியினுடைய பெயரையே பயன்படுத்தக் கூடாதா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கலைராஜன், அவருக்குச் சொன்னதையே உங்களுக்கும் சொல்கிறேன், நான். நீங்கள் முதலிலே உட்காருங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சபையில் ஒரு கட்சியின் பெயரையே குறிப்பிடக்கூடாதா? என்ன சொன்னேன், நான். தயவுசெய்து, எதிர்க்கட்சித் துணைத் தலைவர்



அவர்களும், நண்பர் செங்கோட்டையன் அவர்களும், நான் பேசியது என்ன என்று தெரிந்துகொண்டு சொல்ல வேண்டும். அண்ணா தி.மு.க. என்ற பெயரைச் சொன்னதே தப்பா? அதற்கே எழுந்துநின்று சத்தம்போட்டால், நான் சொல்வதை. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில், சட்டமன்றத்தில் இருக்கிறோம் என்ற உணர்வு உறுப்பினர்களுக்கு வரவேண்டும். பேசும்போது அனுமதி வாங்கிக் கொண்டு பேசவேண்டும். பேரவைத் தலைவரைப் பார்த்துப் பேச வேண்டும். அதைவிட்டுவிட்டு, நீங்களாகவே எழுந்து நின்று பேசினால் என்ன அர்த்தம்?

**திரு. சி. கோவிந்தசாமி:** அதாவது, நான் திரும்பவும் அதையே சொல்கிறேன், தப்பிருந்தால் நீங்கள் சொல்லுங்கள். திரும்பவும் நான்பேசியதையே உங்களுக்கு நினைவுபடுத்துகிறேன். நீங்கள் கேட்டுவிட்டுச் சொல்லுங்கள். நீங்கள் வெளியேயிருந்து வந்தீர்கள்; கேட்கவில்லை. நான் சொல்வதைக் கேட்டுவிட்டுப் பேசுங்கள், தயவுசெய்து. நான் என்ன குறிப்பிட்டுச் சொன்னேன் என்றால், நான் எழுதி வைத்திருக்கிறேன், ஒன்றும் மாற்றிப் பேசவேண்டிய அவசியம் இல்லை. அதாவது, இவ்வளவு முக்கியமான இந்தத் திட்டத்தை, வகுப்பு வாத சக்திகள் தங்கள் அரசியல் ஆதாயத்திற்காக தடுக்க முயற்சி செய்கிறபோது, தமிழ்நாட்டில் ஏற்கெனவே ஆண்ட கட்சியாக இருந்த அ.இ.அ.தி.மு.க., மீண்டும் ஆட்சிக்கு வருவதாகச் சொல்கிற தாங்கள், அதுபோன்ற சக்திகளுக்குத் துணை போகக்கூடாது என்ற வேண்டுகோளைத்தான் நான் விடுக்க வந்தேனேயொழிய, உங்களையொன்றும் வகுப்புவாத சக்திகள் என்று நான் சொல்லவில்லை. ஆகவே, அதற்கு நீங்கள் பதில் சொல்லுங்கள். நாளைக்கு நீங்கள் பேசும்போது பதில் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவிந்தசாமி, நீங்கள் பேச்சைத் தொடருங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** ஆகவே, அந்தவகையிலேதான் அவர்களுடைய இந்த அணுகுமுறையை மாற்ற வேண்டும்; தமிழ்நாட்டினுடைய நலன், தமிழ்நாட்டினுடைய வளம், தமிழ்நாட்டினுடைய எதிர்காலம் குறித்து, பிரதான அரசியல் கட்சி என்ற முறையிலே, உங்களுடைய அணுகுமுறையை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்ற வேண்டுகோளை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி முன்வைக்க விரும்புகிறது. நான் மட்டுமல்ல, உச்ச நீதிமன்றமே அதைச்

சொல்லியிருக்கிறது என்பதை நான் இங்கே கவனப்படுத்த விரும்புகிறேன். அப்படி இல்லையென்றால், நாளை துணைத் தலைவர் பேசுகிறபோது விளக்கம் சொல்லட்டும். ஆகவே, இந்தத் திட்டம் தமிழ்நாட்டினுடைய எதிர்காலம் சம்பந்தப்பட்டது என்ற முறையிலேதான், அரசியல் காரணங்களுக்காக இதை எந்தவகையிலும் தடுத்துவிடக்கூடாது; இது தொடர்ந்து நடைபெறுவதற்கு எல்லாத் தரப்பும் ஒத்துழைக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இல்லாத ஒன்றை, அங்கே ஒரு இராமர் பாலம் இருப்பதாக, இன்றைக்கு உருவாக்கப்படுவது என்பது, உண்மையிலேயே இந்தத் திட்டத்தைக் கெடுப்பதற்கான, முடக்குவதற்கான ஒரு நோக்கமேயொழிய வேறல்ல. நான் இந்தச் சந்தர்ப்பத்திலே ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். தேவைப்பட்டால் அதற்கான புத்தகத்தைக்கூட வாங்கித்தரத் தயாராக இருக்கிறேன், அந்த நண்பர்கள் படிக்கட்டும். அதாவது, பரமசிவ ஐயர் என்ற ஒருவர், இராமரைப் பற்றி, 'இராமரும் இலங்காவும்' என்கிற ஒரு புத்தகம் எழுதி வெளியிட்டிருக்கிறார். அவர், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர் அல்ல. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர் அல்ல. இந்து மதத்திலே மிகச் சிறந்த நம்பிக்கையுள்ளவர். சமஸ்கிருத ஆய்வாளர். அவர் எழுதியிருக்கிற அந்தப் புத்தகத்திலே என்ன குறிப்பிடுகிறார் என்றால், 'இராமரும் இலங்காவும்' என்று தலைப்பிட்டு எழுதியிருக்கிற புத்தகத்தில், இராமர் தென்பகுதிக்கே வந்ததில்லை என்பது ஒன்று. ஆகவே, அவர் சொல்கிற இலங்கா என்பது இந்த ஸ்ரீலங்கா அல்ல. மத்தியப்பிரதேச மாநிலத்திலே விந்திய மலைகளுக்கு அருகிலே, நீர் சூழ்ந்த ஒரு குன்று. அங்கேதான் இராமர் இருந்தார். ஆகவே, அங்கிருந்து தன்னுடைய படைகளைப் போருக்குத் தயாரித்துச் செல்கிறபோது, அந்தக் குன்றுகளைச் சுற்றி நின்ற நீரோடைகளைக் கடந்து செல்வதற்காக, இராமர் அங்கே ஒரு பாலம் அமைத்தார் என்று பரமசிவ ஐயர் என்கிற ஒரு சமஸ்கிருத ஆய்வாளர் குறிப்பிட்டு எழுதியிருக்கிறார். இதுவரை அதை யாரும் மறுக்கவில்லை. ஆகவே, இப்படிப்பட்ட பல வரலாற்றுச் சான்றுகள் இருக்கின்றன. நான் அதற்குள்ளே போக விரும்பவில்லை. ஆகவேதான், இதுபோன்ற உண்மைக்குப் புறம்பான, அறிவியல் ரீதியான கருத்துக்கு மாறான, கருத்துகளைச் சொல்லி இதை முடக்குவது சரியல்ல என்பதை நான் இந்த நேரத்திலே வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.





அதேபோல, இந்தத் திட்டத்தைப்பற்றி, நமது ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருப்பது மிகமிகப் பொருத்தமானது. ஆகவே, இதுபோன்ற சிலருடைய அரசியல் காரணங்களுக்காக முன்வைக்கக்கூடிய கருத்துகளுக்கு இரையாகி, மத்திய சர்க்கார் இதில் ஊசலாடக்கூடாது. இந்தத் திட்டத்தை உறுதியாக, ஊசலாட்டம் இல்லாமல் நிறைவேற்றுவதற்கு மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏன் இதைச் சொல்ல விரும்புகிறேன் என்றால், ஏற்கெனவே உச்ச நீதிமன்றத்தில் மத்திய தொல்லியல் துறை தாக்கல் செய்த மனு, மத்திய அரசாங்கத்தாலே திரும்பப் பெறப்பட்டிருக்கிறது. ஆகவே, மாற்றுப் பாதையை ஆய்வு செய்வதற்காக எங்களுக்குக் கால அவகாசம் வேண்டுமென்று கோரப்பட்டு அதற்கான கால அவகாசம் கொடுக்கப்பட்டு, இந்தப் பணி இப்போது நிறுத்தப்பட்டிருக்கிறது. அதற்கு மாற்று ஆலோசனையாக மத்திய அரசு இன்று வரையில் ஒரு affidavit தாக்கல் செய்கிற பணி பின்னுக்குத் தள்ளப்பட்டே வருகிறது. இப்பொழுதுகூட, நான்கு வார காலம், மேலும் அவகாசம் வேண்டும் என்று மத்திய அரசு கோரியிருக்கிறது.

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. சி. கோவிந்தசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, இது முக்கியமான ஒரு பணி. தயவுசெய்து கொஞ்சம் நேரம் ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது என்றுதான் சொன்னேன்.

**திரு. சி. கோவிந்தசாமி:** ஆகவே, இதிலே ஊசலாட்டம் இல்லாமல், தயக்கமில்லாமல் ஏற்கெனவே ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஏற்றுக்கொண்டிருக்கிற இந்த சேது கால்வாய் திட்டத்தை அமலாக்க மத்திய அரசு உரிய முறையில் முன்வர வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு மத்திய தகவல் தொடர்பு இணை அமைச்சர் (குறுக்கீடு) பண்பாட்டுத் துறை இணை அமைச்சர் மரியாதைக்குரிய திருமதி அம்பிகா சோனி அம்மையார் அவர்கள் இதைப்பற்றி ஒரு கருத்து வெளியிட்டிருக்கிறார்கள். அதாவது, இந்த

மணல் திட்டு இயற்கையாக அமைந்ததா இல்லை மனித முயற்சியால் கட்டப்பட்ட பாலமா என்ற விஞ்ஞான ரீதியான உண்மையைவிட, இது மக்களின் நம்பிக்கை சார்ந்த பிரச்சினை என தன்னுடைய கருத்தை அவர் வெளிப்படுத்தியிருக்கிறார். ஒரு பொறுப்பான அமைச்சர் என்ற முறையில் அப்படிச் சொன்னார். ஏற்கெனவே, சிலர் இதைத்தான் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய வாதங்களுக்கு வலுச் சேர்ப்பதாக இது அமைந்துவிடும் என்கிற ஓர் அச்சத்தை இந்த நேரத்திலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். ஆகவே, மத்திய அரசாங்கம் தன்னுடைய குறைந்தபட்ச செயல்திட்டத்திலே குறிப்பிடப்பட்டிருக்கிற இந்த சேது கால்வாய் திட்டத்தை தமிழ்நாட்டின் நலன் கருதி எந்த ஊசலாட்டமும் இல்லாமல் நிறைவேற்றுவதற்கு முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும், தமிழக அரசும் உண்மையிலேயே மிகச் சிறப்பாக இதற்கான முயற்சிகள் எடுத்து வருவதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பாராட்டுகிறது.

அதே நேரத்தில், நான் இங்கே கேட்க விரும்புவது, தமிழ்நாட்டின் சார்பிலே 13 அமைச்சர்கள்—பன்னிரெண்டா? பன்னிரெண்டோ, பதின்மூன்றோ சரியாகக் கணக்கில்லை, எது சரியோ அதை வைத்துக்கொள்ளலாம். ஆகவே, அமைச்சர்கள் இன்றைக்கு—மத்திய அமைச்சரவையிலே இடம் பெற்றிருக்கிறார்கள். 40 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த அணியைச் சார்ந்தவர்களாக இன்றைக்கு இருக்கின்ற இந்தச் சூழலில், இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு இதைவிட வலிமையான நிர்ப்பந்தம் கொடுப்பதற்கு வேறு வலிமை இனிமேல் நமக்குக் கிடைக்காது.

ஆகவே, நம்முடைய அமைச்சர் பெருமக்கள், அமைச்சரவையில் இந்தத் திட்டம் சம்பந்தமான பிரச்சினைகள் வருகிறபொழுது தமிழ்நாட்டைச் சேர்ந்த அமைச்சர்கள் அங்கே என்ன முறையிலே செயலாற்றினார்கள் என்பதையும் தமிழ்நாட்டு மக்களுக்குத் தெரிவிக்கவேண்டும். இவ்வளவு அமைச்சர்கள் இருந்தும், இந்த அரசே தமிழ்நாட்டினுடைய மக்களின் பேராதரவோடு செயல்படுகிற ஓர் அரசு என்ற நிலையில், இந்தத் திட்டம் செயல்படுவதிலே இப்படிப்பட்ட ஊசலாட்டங்களும், தடங்கல்களும் வருகிறபொழுது அதை உறுதியாகச் செயலாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, திராவிட



முன்னேற்றக் கழக அரசு, இங்கே தமிழக அரசு மட்டுமல்ல, தமிழ்நாட்டைச் சேர்ந்த காங்கிரஸ் நண்பர்கள், பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் அனைவருமே இந்த அரசிலே இடம் பெற்றிருக்கக்கூடியவர்கள் என்ற முறையில் இந்தத் திட்டம் நிறைவேறுவதற்கு தங்களுடைய முழு சக்தியையும் பயன்படுத்தி, தடையில்லாமல், ஊசலாட்டம் இல்லாமல் இதை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்ததாக, நான் ஒன்றிரண்டு செய்திகளைச் சொல்லி முடிக்க விரும்புகிறேன். இப்போது நம்முடைய தமிழக அரசின் சார்பில் பல்வேறு சலுகைகள் அறிவிக்கப்பட்டு வருவது தமிழ்நாட்டு மக்களாலே வரவேற்கக்கூடிய நிகழ்வாக இருக்கிறது. நான் நேரத்தின் அருமை கருதி அதற்குள்ளே செல்லவில்லை. ஆகவே, அந்த வரிசையிலே குடிசைமாற்று வாரியத்தின்மூலமாக சாதாரண தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட ஏழை மக்கள் ஒரு 5,000 ரூபாய் கடன் வாங்கியிருப்பார்கள். அந்த 5,000 ரூபாய்க்கு வட்டி, அபராத வட்டி, பிறகு அந்த வட்டியெல்லாம் அசலோடு சேர்ந்து அதற்கு வட்டி என்றெல்லாம் போட்டு ரூ.75,000, ரூ.80,000 என்று இப்போது தொகை தீர்மானிக்கப்பட்டு நோட்டீஸ் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே, மொத்தமாக 300 கோடி ரூபாய் வரையில் மாநிலம் முழுவதும் அந்தக் கடனும், வட்டியெல்லாம் சேர்த்து இருக்குமென்று நினைக்கிறேன். ஆகவே, அதை அரசு பரிசீலித்து ஏழைகள்—விவசாயிகளுக்கு தள்ளுபடி செய்திருக்கிறார்கள், சிறிய ஏழை விவசாயிகள், நடுத்தர விவசாயிகள் பணக்கார விவசாயிகள் பலரும் உண்டு. ஆனால்,—குடிசைமாற்று வாரியத்திலே கடன் பட்டிருப்பவர்களெல்லாம் மிகமிக ஏழைகள், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சாதாரண மக்கள். அந்த மக்களுக்கு அந்தக் கடன், வட்டி உட்பட தள்ளுபடி செய்ய அரசு முன்வர வேண்டும். அடுத்த வரவு செலவுத் திட்டத்திலே அதற்கான நல்ல செய்தி கிடைக்க வேண்டுமென்று நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

வீட்டுவசதி வாரியத்தின்மூலமாகக் கடன் பெற்றவர்களுக்கும் இதுபோன்ற பலவகையான வட்டிகள் போடப்பட்டு மொத்தத் தொகை இலட்சக்கணக்கிலே வருகிறது. ஆகவே, அந்த வட்டி, அபராத வட்டியை மட்டும் அவர்களுக்குத் தள்ளுபடி செய்து அவர்களுடைய நீண்டநாள் கோரிக்கையாக இருக்கின்ற அந்த வீட்டுவசதி வாரியத்திலே கடன் பெற்றுள்ள அந்த மக்களின் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. சி. கோவிந்தசாமி] [2008 ஜனவரி 31

பிற்பகல் 1-35

அதேபோல, இங்கே காலையிலே நடந்த நிகழ்ச்சிதான், மதுரையிலே ஒரு செவிலியர் மர்மமான முறையிலே மரணமுற்ற நிகழ்ச்சி. ஏற்கெனவே அதைப்பற்றியெல்லாம் விளக்கியிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களும் அதற்கு விளக்கம் அளித்திருக்கிறார்கள். ஆனால், அந்தப் பகுதியில் நடைபெறுகிற பிரச்சினை குறித்து இன்னமும் கொஞ்சம் ஆழமாகக் கவனம் செலுத்தி, உண்மையிலேயே அங்கு என்ன நிகழ்ந்திருக்கிறது என்பதை, காவல் துறை கொடுக்கிற தகவலை மட்டுமே நாம் எடுத்துக்கொள்ளாமல், உண்மை நிலைமைகளைக் கண்டறிந்து உரியவர்களின்மீது உரிய தண்டனை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்க வேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன். அவர் சாதாரண, தாழ்த்தப்பட்ட குடும்பத்தைச் சார்ந்தவர். அவர்களுக்கு ஏதாவது இந்த அரசின் சார்பிலே ஓர் உதவித் தொகை வழங்கி அந்தக் குடும்பத்தைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால், அந்தப் பெண்ணினுடைய வருமானத்தை நம்பித்தான் அந்தக் குடும்பம் இருக்கிறது. ஆகவே, அதற்குரிய நடவடிக்கையினை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். இந்த விளக்கத்தோடு, முடிந்ததாக தயவுசெய்து எடுத்துக்கொள்ளக்கூடாது என்பதை நான் இங்கே மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, நம்முடைய தேசிய நெடுஞ்சாலைகளை இரு வழிச் சாலைகளை நான்கு வழிச் சாலைகளாக மாற்றுவதற்காக ஆங்காங்கே விவசாய நிலங்கள் எல்லாம் கையகப்படுத்தப்படுகின்றன. அதிலே, சேலத்திலே ஒரு விலை, நாமக்கல்லிலே ஒரு விலை. சேலம் சங்ககிரியினுடைய அடுத்த பகுதி, சேலம் மாவட்டம். இந்தப் பகுதி, படவீடு பேரூராட்சி, நாமக்கல் மாவட்டம். அங்கே square feet அடிப்படையிலே, கணக்கிடப்படுகிறது. ஆனால், அங்கே அவர்கள் ஏக்கர் கணக்கிலே கணக்கிட்டுக் கொடுக்கிறார்கள். சங்ககிரி ரிஜிஸ்டர் ஆபீசில், ஒரு ஏக்கர் நிலம் ரூபாய் ஒரு கோடி வரை சமீபத்திலே பதிவாகியிருக்கிறது. ஆனால், அந்த விவசாயிக்கு அவர்கள் கொடுப்பது இரண்டேகால் இலட்சம். ஆகவே, இப்படி ஒரு மிகக் குறைந்த விலையிலே செய்கிறார்கள். மத்திய அரசுதான் அதைச் செய்வதாக தகவல் சொல்கிறார்கள். ஆனால், நம்முடைய வருவாய்த் துறைதான் அந்த நிலங்களைக் கையகப்படுத்துவது, விலை நிர்ணயம்



2008 ஜனவரி 31] [திரு. சி. கோவிந்தசாமி]

செய்வது என்று அறிகிறேன். ஆகவே, அப்படியிருந்தால் நாம் அதில் தலையிடவேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஏன் என்றால், விலை நிர்ணயத்தை நம்முடைய துறை செய்து கொடுப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே, அதைச் சரியாக ஆய்வு செய்து, அந்த சேலம் மாவட்ட விவசாயிகளுக்குக் கிடைத்த அந்த நியாயம், நம்முடைய நாமக்கல் மாவட்டத்திலே படவீடு பேரூராட்சிக்கு உட்பட்டிருக்கிற அந்த விவசாயிகளுக்கும், நிலத்தை இழக்கிற அவர்களுக்கும் நியாயம் கிடைக்க நம்முடைய அரசு உரிய நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, இந்த ஆளுநர் உரையின்மீது, இந்தச் செய்திகளைச் சொல்ல வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம் அவர்கள் பேசும்போது, ** என்கிற வார்த்தை இருந்தது. அந்த ** என்கிற வார்த்தை அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

## 8. அரசினர் தீர்மானம்

### விதி 32-ஐத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1–2–2008 வெள்ளிக்கிழமை அன்று வினாக்கள்–விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32–ஐ 1–2–2008 வெள்ளிக்கிழமை அன்று தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்”

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[பேரவைத் தலைவர்] [2008 ஜனவரி 31

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

1-2-2008 வெள்ளிக்கிழமை அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (1-2-2008) வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-38 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

30. 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறைக் கைதிகள் அடையாளங்கள் விதிகள் இயற்றியது குறித்து உள் (சிறை.1)த் துறையின் 13-11-2007 ஆம் நாளிட்ட 1068 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1920 ஆம் ஆண்டு சிறைக் கைதிகள் அடையாளங்கள் சட்டத்தின் [மத்தியச் சட்டம் 33/1920) 8 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

51. அரசு உறுதிமொழிக் குழுவின் பதின்மூன்றாவது அறிக்கை. (2007-2008)

52. அரசு உறுதிமொழிக் குழுவின் பதிநான்காவது அறிக்கை. (2007-2008)

53. அரசு உறுதிமொழிக் குழுவின் பதினைந்தாவது அறிக்கை. (2007-2008)

54. அரசு உறுதிமொழிக் குழுவின் பதினாறாவது அறிக்கை. (2007-2008)



2008 ஜனவரி 31]

55. அரசு உறுதிமொழிக் குழுவின் பதினேழாவது அறிக்கை. (2007-2008)

56. மனுக்கள் குழுவின் இருபத்து ஒன்பதாவது அறிக்கை. (2007-2008)

57. மனுக்கள் குழுவின் முப்பதாவது அறிக்கை. (2007-2008)

58. மனுக்கள் குழுவின் முப்பத்து ஒன்றாவது அறிக்கை. (2007-2008)

59. மனுக்கள் குழுவின் முப்பத்து இரண்டாவது அறிக்கை. (2007-2008)

60. மனுக்கள் குழுவின் முப்பத்து மூன்றாவது அறிக்கை. (2007-2008)

61. மனுக்கள் குழுவின் முப்பத்து நான்காவது அறிக்கை. (2007-2008)

62. மனுக்கள் குழுவின் முப்பத்து ஐந்தாவது அறிக்கை. (2007-2008)

63. மனுக்கள் குழுவின் முப்பத்து ஆறாவது அறிக்கை. (2007-2008)

64. மனுக்கள் குழுவின் முப்பத்து ஏழாவது அறிக்கை. (2007-2008)

65. மனுக்கள் குழுவின் முப்பத்து எட்டாவது அறிக்கை. (2007-2008)

D
V211,31 N09
N08.41.1
228097.